

# பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி

**(வேதத்தின் அடிப்படையில் ஆய்வு)**

Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன்
A. லயணல்

# பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி

(வேதத்தின் அடிப்படையில் ஆய்வு)

Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன், M.Sc., M.Phil., Ph.D.

Bro. A. லயணல், B.E.

வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

சென்னை

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி

© Dr. Alfred Devadason

First Edition 1996

Second Edition 2008

*All rights reserved. Written permission must be secured from Dr. Alfred Devadason to use or reproduce any part of this book, except for brief quotation in critical reviews or articles.*

Published by

WORD OF CHRIST MINISTRIES
No.100/3, Nirmala Apartments, Medavakkam Tank Road,
Kellys, Chennai - 10.

# முகவுரை

பிரியமானவர்களே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை ஆரம்பமுதல் வேத வசனத்தில் ஒப்புவித்தபடியே அவைகளைக்குறித்து பலவிதமான விளக்கங்கள் கொடுக்க அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்து அனுபவத்தில் பெற்றுக் கொண்ட நாங்களும் உங்களுக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீங்கள் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உங்களுக்கு எழுதுவது எங்களுக்கு நலமாய்க் கண்டது.

எப்படியெனில் ஆவியானவரைக்குறித்து ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற, அனுபவத்திற்கு ஒவ்வாத அநேக உபதேசங்கள் ஏற்பட்டிருக்கின்றபடியினால் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆவியானவரின் ஆசீர்வாதங்களைப் பற்றி வேதத்தின் அடிப்படையில் கிரமமாக உங்களுக்கு எழுதி உணர்த்துவது எங்களுக்கு அவசியமாகக் கண்டது.

பெரோயா பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்து நற்குணசாலிகளாயிருந்தது போன்று (அப்.17:11), இந்நூலில் சொல்லப்பட்டவற்றை வேதத்தில் சரிபார்த்து, ஆராய்ந்து, வசனத்தை ஏற்றுக்கொள்வதின் மூலம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

திறந்த மனதுடன் வேத வாக்கியங்களை இந்நூலின் வாயிலாக ஆராய்ந்து பார்க்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கருத்துகள், கேள்விகள், சந்தேகங்கள், இந்நூலினால் பெற்றுக்கொண்ட விளக்கங்கள் போன்றவற்றை எங்களுக்கு எழுதுங்கள். இந்நூலை வாசிப்பவர்கள் யாவரும் ஆவியின் அபிஷேகத்தினாலும் வரங்களினாலும் நிரம்பி, நற்கனி கொடுக்கும் தேவ பிள்ளைகளாகத் திகழவேண்டும் என்ற ஜெபத்துடன் இந்நூலினை வெளியிடுகிறோம்.

*ஆசிரியர்கள்*

## அர்ப்பணம்

எங்களை இரட்சித்து, ஊழியப் பாதையில் வழிநடத்தி, இந்நூலை எழுதி முடிப்பதற்குக் கிருபை தந்த, பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவராகிய திரித்துவ தேவனுக்கு எங்களையும் இந்நூலையும் சமர்ப்பிக்கின்றோம்.

தொடர்பு முகவரி

Dr. Alfred Devadason

**E-58, 15th Street, 2nd Cross**
**Periyar Nagar**
**Chennai – 600 082**
**Phone : 044 - 25502283**

# பொருளடக்கம்


முகவுரை iii

**பகுதி 1 ஆவியானவரின் அருள்மாரி (அபிஷேகம்)**

1. பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்கு 1
2. ஆவியின் திருமுழுக்கு எவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது 9
3. அந்நிய மொழிகளைப் பேசுதல் 11
4. அபிஷேகத்தைக்குறித்த சில கேள்விகளுக்குப் பதில்கள் 20
5. ஆவியினால் திருமுழுக்குப் பெறுவது எப்படி 25
6. ஆவியானவருக்கு எதிரான பாவங்கள் 29
7. முதல்முறை நிகழ்ந்த அருள்மாரி 33

**பகுதி 2 ஆவியின் வரங்கள்**

8. வரம் என்றால் என்ன 40
9. பொதுவான வரங்கள் 44
10. ஆவிக்குரிய வரங்கள் 47
11. வரங்களைப் பயன்படுத்துதல் 56
12. ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் 59
13. ஆவிகள் 63
14. அசுத்த ஆவிகளின் கிரியைகள் 67
15. ஆவிகளைப் பகுத்தறியும் வரம் 71
16. பிசாசுகளைத் துரத்துதல் 76
17. அசுத்த ஆவியின் பிடியினின்று மீண்டவர் செய்ய வேண்டியவை 83
18. விசுவாச வரம் 86
19. அற்புதங்களைச் செய்யும் சக்தி 91
20. குணமாக்கும் வரம் 99
21. தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் 104
22. பற்பல மொழிகளைப் பேசும் வரமும் விளக்கும் வரமும் 115
23. சபைச் சரித்திரத்தில் வரங்கள் 118

பகுதி 3 ஆவியின் கனி


24. கனியென்றால் என்ன 122
25. ஆவியின் கனி – அன்பு 126
26. ஆவியின் கனி – மகிழ்ச்சி 130
27. ஆவியின் கனி – சமாதானம் 142
28. ஆவியின் கனி – நீடிய பொறுமை 145
29. ஆவியின் கனி – தயவு 148
30. ஆவியின் கனி – நற்குணம் 150
31. ஆவியின் கனி – விசுவாசம் 152
32. ஆவியின் கனி – சாந்தம் 154
33. ஆவியின் கனி – இச்சையடக்கம் 156



## பகுதி 1

# ஆவியானவரின் அருள்மாரி

## (அபிஷேகம்)

## அதிகாரம் 1

# பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்கு

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி (அபிஷேகம்) என்ற கருத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறோம். எந்த ஒரு போதகத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்வது நமது கடமையாகும் (1 தெச.5:21). இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகளை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு கருத்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வேத வசனத்தின்படி சரியானதாக அமைகின்றதா என்று பார்த்துக்கொள்வது உங்கள் கடமையாகும். உங்கள் மனதில் இருப்பதற்கு எதிரான கருத்து கூறப்பட்டிருப்பினும் வேதத்தின்படி அது சரியென்றால் உடனடியாக அக்கருத்தைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியுங்கள்.

ஆவியானவரின் அருள்மாரியைப்பற்றி ஆராய்வதற்கு முன்பாக ஆவியானவரைப்பற்றி ஒருசில காரியங்களைத் தெரிந்துகொள்வோம்.

### ஆவியானவர் ஆள்தத்துவம் கொண்டவர்

ஆவியானவரைத் தேவனுடைய வல்லமையாக மாத்திரம் கருதுபவர்கள் உண்டு. அவர் வெறும் வல்லமையோ அல்லது பொருளோ அல்ல. அவர் ஆள்தத்துவம் கொண்டவர். அதாவது 'ஆவியானவர்' என்ற சொல் ஒரு நபரைக்குறிக்கும் சொல்லாகும். கர்த்தராகிய இயேசு ஒரு நபர் என்பதைப் போன்றே ஆவியானவரும் ஒரு நபர் ஆவார்.

### ஆள்தத்துவம் கொண்டிருப்பது என்றால் என்ன?

உயிரோடு உடலும் உருவமும் இருந்தால் மட்டுமே ஆள்தத்துவம் இருப்பதாக நாம் கருத இயலாது. குறிப்பிட்ட ஓர் உருவம் இல்லாவிடினும் உணர்ச்சிகளும் உள்ளமும் கொண்டிருப்பதோடு, தானாகச் சிந்திக்கும் திறனும், செயல்படும் திறனும், ஆலோசனை சொல்லும் மனப்பக்குவமும், வழிநடத்தும் ஆற்றலும் இருப்பவரை ஒருநபர் என்கிறோம். மேலும், தன்னை

'நான்' என்று கருதும் அளவு மனஆற்றல் கொண்ட ஒவ்வொருவரும் ஒரு நபர்தான்.

லூக்.8:26–33 ஐத் தியானித்தால் அநேகம் பிசாசுகள் ஒரு மனிதனுக்குள் புகுந்திருந்தன. 'நாங்கள்' என்று தங்களை அழைத்தன. அவை புகுந்திருந்த மனிதன்மூலம் பல செயல்கள் செய்தன. இயேசுவைப் பணிந்துகொண்டன; இயேசுவை அறிக்கையிட்டன; அவரிடம் வேண்டிக்கொண்டன என்று அறிகிறோம். இப்பிசாசுகளுக்கு உடல், உருவம் இல்லாதபோதிலும் இவை ஆள்தத்துவம் உடையனவாயிருந்தன என்று நாம் காண்கிறோம்.

**ஆவியானவர் ஒரு 'நபர்' என்பதற்கு ஆதாரங்கள்**

கீழ்க்கண்டவற்றை ஆராய்ந்து பாருங்கள். ஆவியானவருக்கு உணர்ச்சி உண்டு. ஏனெனில் அவரைத் துக்கப்படுத்த முடியும் (எபே.4:30). அவரை விசனப்படுத்த முடியும் என்பதை ஏசா.63:10 இலிருந்தும் காணலாம். மனிதர் மூலம் பேசும் வல்லமை அவருக்கு உண்டு (2 சாமு.23:2; மத்.22:43). மனிதருக்குக் கட்டளையிடுகிறார் (1 நாளா.28:12); வெளிப்படுத்துகிறார் (1 கொரி.2:10); போதிக்கிறார் (யோவா.14:26); அறிவை உணர்த்துவார் (நெகே.9:20); சாட்சி கொடுப்பார் (யோவா.15:26; 1 யோவா. 5:6); ஞானம், உணர்வு, ஆலோசனை, பெலன், அறிவு, கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகியவற்றை அருளுவார் (ஏசா.11:2); நினைப்பூட்டுவார் (யோவா.14:26); மனிதரை நியாயந்தீர்ப்பார்; சுத்திகரிப்பார் (ஏசா.4:3); உலகைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா.16:9–11); மனிதருடன் பேசுவார் (அப்.8:29; 10:19,20); நற்செய்திப் பணியை வழி நடத்துவார் (அப்.11:12; 13:2); பயணத்தைத் தடை செய்வார் (அப்.16:7). மனிதர்களை இடம் விட்டு இடம் கொண்டுசெல்ல அவரால் முடியும் (அப்.8:39; எசே.3:12–14; 8:3; 11:1,24; 43:5). பரிசுத்த ஆவியானவரைச் சோதிக்க முடியும் (அப்.5:9). அவரிடம் பொய் சொல்ல முடியும் (அப்.5:3). நம் சத்துருவை அடையாளம் காணவும் அவனுக்கு எதிராகச் செயல்படவும் செய்கிறார் (ஏசா.59:19). அவருக்குச் சித்தமும் சிந்தையும் உண்டு (ரோம.8:27). அவருக்குச் சித்தம் உண்டு (1 கொரி.12:11). தமது சித்தப்படி வரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு (1 கொரி.12:11).

மேலே கூறப்பட்ட ஆதாரங்களினின்று ஆவியானவர் ஆள்தத்துவம் உடையவர் (ஆவியானவர் ஒரு நபர்) என்பதைத் தெளிவாகக் காணலாம்.

## ஆவியானவர் கர்த்தர், தேவன்

ஆவியானவர் கர்த்தத்துவம் வாய்ந்தவர் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகின்றது. உலகத்தை உருவாக்குவதில் அவர் ஈடுபட்டிருந்தார் (ஆதி.1:2). கர்த்தராகிய ஆண்டவரோடு (பிதாவோடு) சேர்ந்து கிறிஸ்துவை ஆவியானவர் அனுப்பினார் என்பதை ஏசா.48:16 இல் வாசிக்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் திருமுழுக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கட்டளை யிட்டுள்ளார் (மத்.28:19,20). பிதாவோடும், குமாரனோடும் சேர்ந்து நம்மை ஆசீர்வதிப்பவராக ஆவியானவர் விளங்குகின்றார் (2 கொரி. 13:14). மேலும், கர்த்தரே ஆவியானவர் என்ற ஆதாரமும் நமக்கு உண்டு (2 கொரி.3:17).

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவனில் உள்ள பரிசுத்த ஆவியானவர் கர்த்தர் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆவியானவர் தேவன் என்பதை அப்.5:3–4 கூறுகிறது.

## பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குப் பெறுதல் என்றால் என்ன?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் தேவன் அருளிச்செய்யும் பரிசுத்த ஆவியானவரை என்றென்றும் கூடவே இருக்கும்படிப் (யோவா.14:16) பெற்றுக்கொள்தல் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குப் பெறுதல் என்று கூறப்படும். இதை உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் அனுபவம் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிட்டார் (யோவான் 7:37–39). இது ஆவியானவரின் அருள்மாரி, அபிஷேகம், ஆவியானவரைப் பொழிந் தருளுதல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற பிதாவின் வாக்குத்தத்தம் இதுவே (லூக்.24:49; அப்.1:5, 2:33; ஏசா.44:3).

## ஆவியினாலும் அக்கியினாலும் திருமுழுக்குப் பெறுதலும், ஆவியினால் திருமுழுக்குப் பெறுதலும் ஒன்றுதானா?

முதல் முறையாகப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு நடைபெற்றபோது அக்கினிமயமான நாவுகள் வந்து சீடர்கள்மேல் அமர்ந்ததை அப்.2:3 இல் வாசிக்கிறோம். மேலும் மத்.3:11 இல் 'பரிசுத்த ஆவியினாலும் அக்கினி யினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்' என்று யோவான்ஸ்நானன் கூறியதை மாற்.1:8 இல் 'பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்:' என்று எழுதியிருப்பதைக் கவனியுங்கள். எனவே ஆவியினால் திருமுழுக்குப்

பெறுதல் என்பதும் ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குப் பெறுதல் என்பதும் ஒன்றுதான் என்று கருதவேண்டும். மேலும் பரிசுத்த ஆவியானவரின்றி, தனியாக அக்கினித் திருமுழுக்கு என்று எதுவும் வேதத்தின் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. எனவே, தனியாக அக்கினி ஸ்நானம் பெற்றேன் என்று யார் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ளவியலாது.

**பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் அனுபவங்கள்**

கர்த்தராகிய இயேசு மகிமைப்படுவதற்குமுன் ஆவியானவரின் அருள்மாரி அருளப்படவில்லை என்பதை யோவான் 7:37–39 இல் காண்கிறோம். ஆனால் இதற்கு முன்னரே அநேக பரிசுத்தவான்கள் ஆவியானவரைப் பெற்றிருந்தனர் என்பதை ஆதி.41:38; எண்.27:18; தானி.4:8 போன்ற பகுதிகளினின்று காணலாம். சிலர் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தனர் (யாத்.31:5; மீகா 3:8; லூக்.1:15–17,41,67). எசேக்கியேலுக்குள் ஆவியானவர் வந்தார் என்பதை எசே.2:2; 3:24 இல் காண்கிறோம். பல தேவனுடைய தாசர்கள்மேல் ஆவியானவர் இருந்தார் என்பதை எண்.11:25,26; நியா.3:10; 6:34; 11:29; 14:6,19; 15:14 இலிருந்து காணலாம். கர்த்தருடைய ஆவியானவர் தீர்க்கதரிசிகளை ஏவினார் என்பதை 2 பேதுரு 1:21 இலிருந்து அறிகிறோம்.

ஆனால் இவர்கள் யாரும் பரிசுத்த ஆவியினால் முழுக்குப்பெறும் அனுபவத்தை அடையவில்லை. ஏனெனில் கிறிஸ்து மகிமைப்படும்வரை இந்த அனுபவம் மக்களுக்கு அருளப்படவில்லை (யோவா.7:39). பரிசுத்த ஆவியின் வல்லமையால் கர்ப்பந்தரித்து கர்த்தராகிய இயேசுவைப் பெற்றெடுத்த மரியாளும் இந்த அனுபவத்தைப் பெந்தெகொஸ்தே நாளன்றுதான் பெற்றுக்கொண்டதை அப்.1:14; 2:1–4 இல் காண்கிறோம். தன் தாயின் கர்ப்பத்திலிருந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்த யோவான் ஸ்நானனும் இந்தத் திருமுழுக்கைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் பெற வாஞ்சித்தார் (லூக்.1:15; மத்.3:14). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மீது ஆவியானவர் தேவைக்கேற்ப அவ்வப்போது இறங்கினார் (நியா.3:10; 6:34; 14:6,19; 15:14). ஆனால் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின்னர் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்களிடம் அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார் (யோவா.14:16).

**பரிசுத்த ஆவியானால் திருமுழுக்கு எவ்வாறு நடைபெற ஆரம்பித்தது?**

கர்த்தராகிய இயேசு தண்ணீர்த் திருமுழுக்குப் பெற்றுக் கரையேறின போது (தண்ணீர்த் திருமுழுக்குப் பெற்றபோது அல்ல, கரையேறினபோது) இதைப் பெற்றுக்கொண்டார் என்பதை மத்.3:16,17; யோவா.3:34; அப்.10:38

என்ற வசனங்களைச் சேர்த்து ஆராய்ந்தால் கண்டுகொள்ளலாம். கிறிஸ்து என்ற சொல்லின் பொருள் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்பதாகும்.

கிறிஸ்து மகிமைப்படும்வரை (உயிர்த்தெழுந்து பரமேறும்வரை) வேறு யாரும் இதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது யோவா.7:39 இல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலரும் கர்த்தரைப் பின்பற்றிய வர்களுமான ஏறக்குறைய 120 பேர் இதை, கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறியதற்குப் பின்வந்த பெந்தெகொஸ்தேநாளில் பெற்றுக்கொண்டனர் (அப்.1:13,14; 2:1–4). இதுவே கிறிஸ்துவைத் தவிர மற்றவர்கள் இதைப் பெற்றுக்கொண்ட முதல் தடவையாகும். அதன் பின்னர் சமாரியரும் (அப்.8:14–17) சவுலும் (அப்.9:17) கொர்நேலியு வீட்டாரும் (அப்.10:44–48) எபேசு பட்டணத்து விசுவாசிகளும் (அப்.19:6) இத்திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டனர். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று சொன்ன தேவன் (யோவேல் 2:28), அதன்பின்பு இன்றுவரை, ஆவலாய்க் கேட்கும் தமது பிள்ளைகள்மீது ஆவியைப் பொழிந்தருளிக்கொண்டிருக்கின்றார்.

**இதைக்குறித்த தீர்க்கதரிசனங்கள்**

ஏசாயாவும் யோவேலும் இதைக்குறித்துக் கூறியிருக்கின்றனர். (ஏசாயா 44:3; யோவேல் 2:28,29). யோவான்ஸ்நானன் இதைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார் (மத்.3:11). கர்த்தராகிய இயேசுவும் முன் அறிவித்தார் (லூக்.24:49; யோவான் 14:16; 15:26; 16:7; அப்.1:4,5).

**ஆவியானவரை அருளிச்செய்வது யார்? முழுக்குத் தருவது யார்?**

பிதாவாகிய தேவன் ஆவியானவரை அருளிச்செய்கிறார் என்பதை லூக்.11:13; யோவா.14:16; 1 தெச.4:8 போன்ற வசனங்களினின்று அறிகிறோம். அவ்வாறு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்குள் நம்மை முழுக்குவது (ஞானஸ்நானம் கொடுப்பது) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே (மத்.3:11).

**இரட்சிப்பு, திருமுழுக்கு, அபிஷேகம் வெவ்வேறானவை.**

அப்.8:12–17 ஐக் கவனமாகப் படியுங்கள். சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டனர் (இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டனர் என்பது இவ்விதம் கூறப்பட்டுள்ளது). அதன் பின்னர் தண்ணீர்த் திருமுழுக்குப் பெற்றார்கள். இதற்குப் பின்பு பேதுருவும் யோவானும் எருசலேமிலிருந்து அவர் களிடத்திற்கு அனுப்பப்பட்டனர். பேதுருவும் யோவானும் சமாரியாரைச் சந்தித்தபோது அவர்கள் இரட்சிப்பைப் பெற்று, தண்ணீர்த்திருமுழுக்கு

பெற்றிருந்ததையும் அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வில்லை என்பதையும் கண்டார்கள் (அப்.8:15). இரட்சிப்புப் பெறுவதும் பரிசுத்த ஆவியைப் பெறுவதும் ஒன்றுதான் என்று கூறுவது முற்றிலும் தவறு என்பதை இது நிறுவுகிறது. மேலும் தண்ணீர்த் திருமுழுக்குப் பெறுவதும் ஆவியினால் திருமுழுக்குப் பெறுவதும் ஒன்றுதான் என்று கூறுவதும் தவறு என்று இது நிறுவுகிறது.

அப்.19:6 ஐக் கவனமாகப் படியுங்கள். இதில் வரும் எபேசு பட்டணத்து மக்கள் விசுவாசிகள். இவர்கள் தண்ணீர்த் திருமுழுக்குப் பெற்றனர். ஆனால் இவர்கள் விசுவாசிகளானபோதும் திருமுழுக்குப் பெற்றபோதும் அல்லாமல் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோதுதான் பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வந்தார். திறந்த மனதுடன் படிக்கும் யாராயினும் இரட்சிப்பு, தண்ணீர்த் திருமுழுக்கு, பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு என்பவை வெவ்வேறானவை என்பதைப் புரிந்துகொள்வது நிச்சயம். அப்.2:38 ஐக் கவனித்துப் படித்தாலும் இவ்வுண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

எபே.1:13 ஐப் பயன்படுத்தி 'யாவரும் விசுவாசிகளாகும்போது ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்' என்று சிலர் விளக்கம் அளிக்கின்றனர். இது தவறு ஆகும். ஏனெனில் இதில் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள் முத்திரையிடப்படுவதைக்குறித்து எழுதப்பட்டுள்ளது. அதாவது 1 கொரி.12:13 இன்படி ஆவியானவரால் கிறிஸ்துவுக்குள்ளும் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளும் (சபை) நாம் இணைக்கப்படுவதான இரட்சிப்பைக் குறிக்கிறது. ஆவியானவரால் கிறிஸ்துவுக்குள் முத்திரையிடப் படுவது வேறு, கிறிஸ்துவால் பரிசுத்த ஆவிக்குள் திருமுழுக்கு (அபிஷேகம்) பெறுவது வேறு.

**ஒன்றல்ல**

ஒரிசா மாநிலத்திலுள்ள ஒரு கிராம சபைக்கு நான் சென்றிருந்தபோது சபையின் மூப்பர் என்னைப் போதகரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். மறுநாளில் போதகர் என்னை அந்த மூப்பரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். மூப்பர் போதகரின் வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் போதகர் மூப்பரின் வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் வெவ்வேறானவை. இதைப்போன்றே, கிறிஸ்து நமக்குப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குத் தருவதும் (மத்.3:11), ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் திருமுழுக்குத் தருவதான இரட்சிப்பும் (1 கொரி.12:13) ஒன்றல்ல.

**இரட்சிப்பு, கிறிஸ்தவத் திருமுழுக்கு, ஆவியினால் திருமுழுக்கு என்பவை ஒன்றுதானா?** கீழ்வரும் அட்டவணையை நன்கு படிக்கவும்.

| நிகழ்ச்சி | முழுக்குத் தருபவர் | எதற்குள் அல்லது யாருக்குள் | நோக்கம் |
|---|---|---|---|
| இரட்சிப்பு (கிறிஸ் துவுக்குள்ளும் அவருடைய சரீரத்திற்குள்ளும் முழுக்கு) | பரிசுத்த ஆவி யானவர் (1 கொரி.12:13) | கிறிஸ்துவின் சரீரத்திற்குள் (உள் ளான மனிதனில் இது நடக்கிறது) | கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கமாதல் |
| கிறிஸ்தவத் திருமுழுக்கு (தண்ணீர் ஞானஸ்நானம்) | தேவனுடைய ஊழியக்காரர் ஒருவர் (மத்.28: 19; அப்.2:38; கொலோ.2:12). | தண்ணீரினால் கிறிஸ்துவுக்குள் (வெளியான சரீரத் தில் இது நடக் கிறது). | நல்மனச்சாட்சியி –ன் உடன்படிக்கை (1 பேது.3:21). கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழு தலில் ஐக்கியம் (கொலோ.2:12). |
| ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்கு (அபிஷேகம்) | கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (மத்.3:11) | ஆவியானவருக் குள் (உள்ளான மனுஷனில் இது நடக்கிறது). | சாட்சியாக இருக்க பெல னடைய (அப்.1:8) சகல சத்தியத்திற் குள்ளும் நடத்தப் பட(யோவா.16:13). |

இவ்வட்டவணையை நன்கு கவனித்தால் இதிலுள்ள மூன்று நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவை என்பதைக் காணலாம்.

**இரட்சிப்பும் அபிஷேகமும் ஒரே சமயத்தில் நடக்குமா?**

கொர்நேலியு வீட்டார் இரட்சிப்பைப் பெற்றபோதே அபிஷேகம் பெற்றுக் கொண்டதை அப்.10:44–48 இல் வாசிக்கிறோம். இது எப்போதாவது ஒருமுறை நடக்கும் நிகழ்ச்சியாகும். தங்களுக்கும் இதுபோன்று நடந்து விட்டது என்று தங்களையே ஏமாற்றிக்கொள்பவர்கள் உண்டு. அப்படி நினைப்பவர்கள் இந்த வசனங்களில் உள்ள அடையாளங்களைப் பெற்றிருக் கிறோமா என்று சோதித்துப்பார்க்கவேண்டும்.

**பெறவில்லை**

ஆவியினால் திருமுழுக்குப் பெறாதவர்களை ஆவியைப் பெறாதவர்கள் என்று வேதம் குறிப்பிடுகிறது. அப்.8:14–17 இலிருந்து இதை அறியலாம். இரட்சிப்பும், தண்ணீர்த் திருமுழுக்கும் பெற்றிருந்தாலும் சமாரியர் ஆவியைப் பெறாதவர்களே. சரீர சுகத்தையும் மகிழ்ச்சியையும் இவர்கள் பெற்றிருந்த போதிலும் (அப்.8:7,8,17) பேதுருவும் யோவானும் கைகளை வைத்த போதுதான் ஆவியைப் பெற்றார்கள். அப்.19:1–2 ஐயும் கவனித்துப் பாருங்கள். "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" என்று பவுல் கேட்டது ஏன்? விசுவாசிகளில் சிலர் பரிசுத்த ஆவியைப் பெற்றும் சிலர் பெறாமலும் இருப்பதுதான் காரணம். (இக்காலத்திலும் விசுவாசிகளில் சிலர் பரிசுத்த ஆவியினைப் பெறவில்லை. சிலர் பெற்றிருக்கின்றனர்). பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறாதவர்களைப் பரிசுத்த ஆவியைப் பெறாதவர்கள் என்று வேதம் இவ்விடங்களில் கூறுகிறது அல்லவா? எனவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் (இக்காலத்தில்) பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை வேதத்தின்படி பெறாதவன் பரிசுத்த ஆவியைப் பெறாதவன் ஆவான்.

**ஜெபிக்க**

(i) கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல (ரோமர் 8:9). நீர் பெற்றிருக்கிறீரா? இல்லையென்றால் இன்றே ஜெபித்துப் பெற்றுக்கொள்வீராக.

(ii) உலகெங்கும் ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படும்படி ஊக்கமாக வேண்டிக்கொள்ளுங்கள் (சக.10:1).

(iii) ஆவியினால் திருமுழுக்குப் பெறுவதைக்குறித்த கள்ளப் போதகங்கள் ஒழியவும் உண்மைப் போதகத்தை மக்கள் அறிந்து ஏற்றுக்கொள்ளவும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

**செயல்பட**

இரட்சிப்பும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் ஒன்றுதான் என்று, அல்லது தண்ணீர்த் திருமுழுக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் ஒன்றுதான் என்று இனி கூறாதீர். அப்படிக் கூறுபவர்களை நம்பாதீர். ஏனெனில் வேதம் அதற்கு எதிராகக் கூறுகிறது என்பதை அப்.8:12–17; 19:1–6; 2:38 இலிருந்து தெரிந்துகொண்டிருக்கிறீர். இவ்வாறு வேதத்திற் கெதிரான கருத்துகளைப் போதிப்பவர்களை விட்டு விலகுவீராக.

## அதிகாரம் 2

# ஆவியின் திருமுழுக்கு எவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது

**1. ஆகாரம் பெறுதல் :**

லூக்.11:11–13 இல் அப்பம், மீன், முட்டை ஆகியவற்றை ஒரு தகப்பனிடம் பிள்ளை கேட்டுப் பெற்றுக்கொள்வது, பிதாவாகிய தேவனிடத்தில் அவருடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

நம் இவ்வுலக வாழ்க்கைக்கு ஆகாரம் எவ்வளவு தேவையோ, அதேபோன்று நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆவியானவரின் திருமுழுக்கு தேவை என்பதை இதிலிருந்து நாம் உணரலாம்.

மேலும் ஒரு குழந்தைக்குத் தன் வீட்டில் உணவு எவ்வளவு நிச்சயமாகக் கிடைக்குமோ அதைவிட அதிக நிச்சயமாகத் தேவனுடைய பிள்ளைக்குப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குக் கிடைக்கும் என்பதையும் அறிந்து கொள்ளுகிறோம்.

**2. எண்ணெயால் (தைலத்தால்) அபிஷேகம் பண்ணப்படுதல் :**

அப்.10:38 ஐயும், எபி.1:9 ஐயும் சேர்த்துப் படித்தால் ஆவியானவர் ஆனந்த தைலத்துக்கு ஒப்பிடப்பட்டிருப்பதை நாம் காணலாம். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை அபிஷேகம் என்றும் வேதம் கூறுகிறது (1 யோவா.2:27).

**3. தண்ணீரைப் பருகுதல் :**

தாகமுள்ளவர்கள் தண்ணீரைப் பருகுவதைப்போல, வாஞ்சையுள்ள யாராயினும் கிறிஸ்துவிடம் வந்தால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை யோவா.7:37–39 இல் காணலாம். இதையே கர்த்தர் தாம் அளிக்கும் ஜீவத்தண்ணீர் என்று யோவா.4:10 இல்

குறிப்பிட்டார். இயேசு தருகிற இந்தத் தண்ணீரைப் பருகுகிறவனுக்குத் தாகமுண்டாகாது. அது அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் (யோவா.4:14). அதாவது, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவன் ஆவிக்குரிய தாகம் தீர்ந்தவனாய் இருப்பது மட்டுமல்ல, அநேகருக்கு அவன் மூலமாய் ஆவியானவரின் செயல்கள் நடக்கும். இதையே அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று கர்த்தர் குறிப்பிட்டார்.

**4. அச்சாரம் பெறுதல் :**

(எபே.1:14; 2 கொரி.5:4–5) அச்சாரம் என்பது முன்பணம் (**advance, earnest**) போன்ற பொருள்படும். ஆவியினால் திருமுழுக்குப் பெறுவது, தேவன் நமக்குப் பரலோக பாக்கியங்களை நிச்சயம் தருவார் என்பதற்கான முன் அடையாளம் (முன்னுறுதி, **guarantee**) ஆகும்.

ஆவியானவர் எதற்கு அச்சாரமாயிருக்கிறார் (எபே.1:14)? கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப் படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் அச்சாரமாயிருக்கிறார். அதாவது இறுதி மீட்பாகிய பரலோகம் சேருவதற்கு ஆவியானவரின் அபிஷேகம் அச்சாரமாக அமைகிறது. இந்த அச்சாரம் (**guarantee**) ஒவ்வொருவருக்கும் தேவையன்றோ?

**5. முத்திரை பெறுதல் :** (எபே.4:30)

(i) முத்திரை பெற்றவர்கள் முத்திரையிட்டவருக்குச் சொந்தம் என்பதை முத்திரை குறிக்கிறது. தன்னுடையவர்களை அடையாளம்கண்டு காப்பாற்ற இவ்விதம் தேவன் முத்திரையிடுதல் வேதத்தில் கூறப்பட்டுள்ளது (வெளி.7:3).

(ii) முத்திரை பாதுகாப்பைக் குறிக்கிறது. முத்திரை பெற்றவர்கள் மீட்கப்படும் நாள்வரை தேவனால் காக்கப்படுவார்கள் என்பதை எபே.4:30 இலிருந்து புரிந்துகொள்ளலாம்.

(iii) முத்திரையிடுதல் என்பது ஓர் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துகிறது. பொதுவாக ஓர் ஒப்பந்தத்தின் இறுதியில்தான் முத்திரையிடுவது நடைபெறும். எனவே ஒரு மனிதனின் இறுதி இரட்சிப்பானது அவன் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறும்போது உறுதிப்படுத்தப்படுகிறது என்று காண்கிறோம்.

**குறிப்பு** : இது தவிர ஆவியானவர் காற்றுக்கும், அக்கினிக்கும், ஒப்பிடப்பட்டுள்ளார் என்பதையும், அவர் புறாவின் உருவத்தில் இறங்கினார் என்பதையும் தியானித்துப் பார்க்கவும்.

# அதிகாரம் 3

# அந்நிய மொழிகளைப் பேசுதல்

**அடையாளம் :** அப்.8:15 ஐக் கவனித்துப் படியுங்கள். மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை எளிதில் கண்டுகொள்ள ஓர் அடையாளம் உண்டு என்பதைக் காணலாம். இவ்வாறே மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதையும் கண்டுகொள்ள இந்த அடையாளம் உதவிற்று என்பதை அப்.8:18 இல் இருந்து புரிந்துகொள்ளலாம்.

இந்த அடையாளம் எது? அப்.2:33 ஐ உற்றுக் கவனித்தால் இந்த அடையாளத்தைக் காணவும், கேட்கவும் முடியும் என்பதை உணரலாம். இந்த அடையாளம் அந்நிய மொழிகளைப் (அந்நிய பாஷைகளை) பேசுவதாகும். கொர்நேலியு வீட்டில் இதே அடையாளத்தைக் கேட்க முடிந்தது (அப்.10:44–46).

வேதத்தில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை மக்கள் பெற்ற ஐந்து நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. இதில் மூன்று இடங்களில் இந்த அடையாளம் வெளிப்படையாக எழுதப்பட்டுள்ளது (அப்.2:4; 10:44–46; 19:6). சவுல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதை அப்.9:17 இல் பார்க்கலாம். பவுல் என்று அழைக்கப்படும் இந்த சவுல் அந்நிய மொழிகளில் பேசியதை 1 கொரி.14:18 இல் இருந்து அறிகிறோம். ஐந்தாவது இடமான அப்.8:18 இல் சீமோன் காணத்தக்கதாக நடந்தது இந்த அடையாளம் என ஊகிக்கலாம். எனவே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் அந்நிய மொழிகளைப் பேசியதை அறிகிறோம்.

விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் இதுவும் ஒன்று என்பதை மாற்.16:17 இல் காண்கிறோம்.

(குறிப்பு : அந்நியமொழி (பாஷை), வேற்று மொழி, நவமான பாஷைகள், பல பாஷை, பற்பல பாஷை என்பது யாவும் ஒன்றுதான்)

## அந்நிய மொழிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம்

அந்நிய மொழிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் ஏசா.28:11,12 இல் உள்ளது. அந்நிய மொழிகளில் பேசுவது இளைத்தவனுக்கு இளைப்பாறுதல் என்று இது கூறுகிறது. மத்.11:28 இல் இளைப்பாறுதல் தருவதாக இயேசு கூறியதை இதனுடன் ஒப்பிடலாம்.

ஒருவன் அந்நிய மொழிகளைப் பேசும்போது அவனது கருத்து பயனற்றதாகிறபடியால் (1 கொரி.14:14), அவனுடைய உள்மனம் இளைப்பாறுதல் அடைகிறது. மனதில் போராட்டங்கள் இருக்கும் வேளைகளில் அந்நிய மொழிகளைப் பேசுவதால் இளைப்பாறுதலை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

## அந்நிய மொழி பேசுதல், யாருக்கு, எப்படி அடையாளம்?

நவமான மொழிகளில் பேசுதல் விசுவாசிகளால் நடக்கும் அடையாளம். இது விசுவாசிகளுக்கே உரியது (மாற்.16:17). இது அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (1 கொரி.14:22). அவிசுவாசிகளால் நடக்கும் அடையாளம் அல்ல; அவிசுவாசிகளுக்கே அடையாளமாயிருக்கிறது. ஏனெனில் அவர்களால் இவ்வாறு பேச இயலாததால் தாங்கள் அவிசுவாசிகள் என்று அவர்கள் புரிந்துகொள்ள இது அடையாளமாக உள்ளது.

கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் மிகவும் ஆவலாய் அவரிடம் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று உணர்த்துவதே இவ்வதிகாரத்தின் நோக்கம். எனவே இதுவரை இந்த அனுபவத்தைப் பெறாதவர்கள் இதற்காக ஜெபித்து இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

## பல மொழிகளைப் பேசுவதில் இருவகை உண்டா?

ஆம். ஒன்று தேவனிடத்தில் பேசுதல்; மற்றொன்று மனிதரிடம் பேசுதல்.

### 1. தேவனிடத்தில் அந்நிய மொழியில் பேசுதல்

பரிசுத்த ஆவியின் அருள்மாரி (அபிஷேகம்) பெற்ற யாவரும் இவ்வாறு பேச முடியும். தேவனிடத்தில் வேற்று மொழியில் பேசுதல் என்பதற்கு 1 கொரி.14:2 இல் விளக்கம் காணலாம். இந்த வசனத்தினின்று நாம் புரிந்து கொள்வதென்ன?

அந்நிய மொழிகளைப் பேசுகிறவன்:

(i) ஆவியினால் பேசுகிறான்

(ii) இரகசியங்களைப் பேசுகிறான்

(iii) அவன் பேசுவது ஒருவருக்கும் புரியாது
(iv) மனிதரிடத்தில் பேசவில்லை
(v) தேவனிடத்தில் பேசுகிறான்
(vi) தான் புரிந்துகொள்ளாமல் பேசுகிறான் (அவனுடைய கருத்து பயனற்றதாயிருக்கும் 1 கொரி.14:14).

இப்பகுதியை ரோமர் 8:26,27 உடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆவியானவர் நம் மூலமாக எப்படி ஜெபிக்கிறார் என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம். நமக்குச் சரியாக ஜெபிக்கத் தெரியாது; தேவனுடைய சித்தப்படி ஜெபிக்கவும் தெரியாது. ஆனால், ஆவியானவருக்கு நன்றாக ஜெபிக்கத் தெரியும். எனவே, நாம் அந்நிய மொழியில் ஜெபிக்கும்போது ஆவியானவர் நமக்காகத் தேவனுடைய சித்தத்தின்படி வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபிக்கிறார். இது மனிதர் யாருக்கும் புரியாது; புரியவும் தேவையில்லை. தேவனுக்கு எல்லா மொழிகளும் புரியும். எனவே, அவர் ஜெபத்தைக் கேட்டுப் பதிலளிக்கிறார்.

தேவனுக்கு எல்லா மொழிகளும் புரியும் என்பதால் அந்நிய மொழியில் தேவனிடத்தில் பேசுவதை அவருக்கு வியாக்கியானம் (மொழி பெயர்ப்பு) செய்யவேண்டிய அவசியம் இல்லை (1 கொரி.14:2). பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தேவனிடத்தில் அந்நிய மொழியில் பேச முடியும்.

## 2. மனிதரிடத்தில் அந்நிய மொழியில் பேசுதல்

சில சமயங்களில் தேவன் சில செய்திகளை அந்நிய மொழியில் ஒரு மனிதன் மூலமாகக் கூறவும், அதை அம்மனிதனோ அல்லது இன்னொருவரோ மொழி பெயர்க்கவும் செய்கிறார். இதுவே மனிதரிடத்தில் பேசுதல். இவ்வாறு பேசும் மனிதர் (1 கொரி.12:10 இல் கூறப்பட்டுள்ள) பற்பல மொழிகளைப் பேசும் வரத்தைப் பெற்றவர் ஆவார். இதை வியாக்கியானம் செய்பவர் பல பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரத்தைப் பெற்றவராவார்.

பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்ற யாவரும் தேவனிடத்தில் அந்நிய மொழிகளில் பேசலாம். ஆனால் மனிதருக்குப் பற்பல மொழிகளில் பேசுதல் ஒரு வரமாகும். இவ்வரத்தைப் பெற்றவர்களே சபையில் அந்நிய மொழிகளில் உரத்த சத்தமாய் சபைக்குப் பேசுவார்கள். இவ்வாறு இவர்கள் பேசும்போது இவர்களோ அல்லது இன்னொருவரோ பொருளைக் கூற வேண்டும். இல்லையெனில் இந்த வரத்தைப் பயன்படுத்துதல் முறையன்று!

அந்நிய மொழியில் பேசி அதற்கு விளக்கம் கூறப்படுவதை இந்நூலை எழுதிய நான் பலமுறை பார்த்திருக்கிறேன் (ஆ.தே).

**பற்பல மொழி பேசுதல் என்ற வரம் எது?**

வரம் என்பது ஆங்கிலத்தில் 'gift' என்று கூறப்படும். அப்.2:4 இல் 'gift' என்ற சொல் இல்லை. 'Utterance' என்று கூறப்பட்டுள்ளது. மூலமொழியிலும் இப்பொருளிலேயே எழுதப்பட்டுள்ளது. எனவே அப்.2:4 இல் ஆவியானவர் தங்களுக்குத் தந்த ஏவுதலின்படியே அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள் என்று தமிழாக்கம் செய்திருக்கவேண்டும்.

தேவ ஆவியானவரைப் பெறுதல் ஒரு வரம்தான் (அப்.2:38). ஆனால், தேவனிடத்தில் வெவ்வேறு மொழிகளில் பேசுதல் ஒரு வரம் (gift) என்று கருத முடியாது. ஏனெனில் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறும் ஒவ்வொருவரும் இவ்வாறு பேசுகிறார்கள்.

தேவன் மனிதரிடத்தில் பேசுவதற்குச் சிலரைப் பயன்படுத்துகிறார். அவர்கள் பற்பல மொழிகளில் தேவனுடைய செய்திகளைக் கூறுகிறார்கள். அதை மக்கள் புரிந்துகொள்ளும்படியாக ஒருவர் மொழிமாற்றம் செய்கிறார் என்று பார்த்தோம். இவ்வாறு பேசுதல் ஒரு வரம் ஆகும் (1 கொரி.12:10). இதை வியாக்கியானம் செய்வதும் (தெரிந்த மொழியில் மாற்றம் செய்து கூறுதல்) ஒரு வரமாகும் (1 கொரி.12:10). இவ்வாறு பல மொழிகளில் பேசும் வரம் பெற்றவர்கள் இதை விளக்கும் வியாக்கியான வரமும் பெறும்படி வேண்டிக்கொள்ளவேண்டும் (1 கொரி.14:13) என்று வேதம் கூறுகிறது.

'எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா?' என்று பவுல் கேட்டது (1 கொரி.12:30) 'இந்த வரம் பெற்றிருக்கிறார்களா?' என்றே பொருள்படும். ஏனெனில் இது எழுதப்பட்டுள்ள அதிகாரத்தில்தான் வரமாகிய அந்நிய மொழிகளைப் பேசுதல் வருகிறது. வரங்களைப் பற்றிச் சொல்லும் இடத்தில் இதைக் கூறுகிறார் (1 கொரி.12:30). எல்லோருக்கும் மனிதரிடத்தில் அந்நிய மொழிகளைப் பேசும் வரம் கிடையாது. ஆனால் ஆவியினால் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் தேவனிடத்தில் அந்நிய மொழிகளில் பேசும் கிருபை உண்டு (1 கொரி.14:2).

**ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுதல்: தொழுதுகொள்ளுதல்**

அந்நிய மொழியில் நாம் விண்ணப்பம்பண்ணுதல் ஆவியோடு விண்ணப்பம்பண்ணுதல் என்று 1 கொரி.14:14 இல் காண்கிறோம். இவ்வாறு செய்யும்போது நமது கருத்து பயனற்றதாகிறது. ஆனால் நாம் ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பம்பண்ணவேண்டும் என்று வேதம் கூறுகிறது.

செய்யவேண்டியதென்ன? சிறிது நேரம் ஆவியோடு (அந்நிய மொழியில்) விண்ணப்பம்பண்ணவேண்டும். சிறிது நேரம் கருத்தோடு (நமக்குத் தெரிந்த மொழியில்) விண்ணப்பம்பண்ணவேண்டும் (1 கொரி. 14:14,15). தன்னைத் தொழுதுகொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகின்றார் (யோவா.4:23). எப்படித் தொழுதுகொள்ளவேண்டும் (யோவா.4:24)? ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

மேலும் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்யவேண்டும் என்பதையும் ஆவியினாலே ஜெபம்பண்ணவேண்டும் என்பதையும் பிலி.3:3; எபே.6:18; யூதா 20 இல் காணலாம். இவைகளிலிருந்து ஆவியினாலே (அந்நிய மொழியில்) ஜெபிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணரலாம்.

**ஆவியினால் பேசுதல் ஆவியினால் விண்ணப்பம் செய்தல்**

அந்நிய மொழிகளில் தேவனிடத்தில் பேசினால் ஆவியினால் பேசுகிறோம் என்று 1 கொரி.14:2 இலிருந்து காண்கிறோம். நான் அந்நிய மொழியில் விண்ணப்பம் செய்தால் என் ஆவி விண்ணப்பம் செய்கிறது என்று 1 கொரி.14:14 கூறுகிறது. ஆவியில் பேசுவதற்கும் ஆவியில் விண்ணப்பம் செய்வதற்கும் வேறே விளக்கம் ஏதும் வேதத்தில் தரப்படவில்லை. எனவே, ஒருவன் தேவனிடம் ஆவியில் விண்ணப்பம்பண்ணவோ, தேவனை ஆவியோடு தொழுதுகொள்ளவோ வேண்டுமென்றால் அவன் அந்நிய மொழிகளில் பேசுவதே சரியானது. வேறு எந்த முறையும் வேதத்தில் கூறப்படவில்லை. (வேறு விளக்கம் இருந்தால் வேத வசன ஆதாரத்துடன் எங்களுக்கு எழுதுங்கள்). திறந்த மனதுடன் இவ்வுண்மையை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்.

**தேவனிடத்தில் அந்நிய மொழியில் பேசுவதால் பயன் என்ன?**

(i) தேவனிடத்தில் இரகசியங்களைப் பேசுவதற்குப் பயன்படுகிறது (1 கொரி.14:2).

(ii) ஆவியோடு விண்ணப்பம்பண்ணுவதற்கும் பயன்படுகிறது (1 கொரி.14:14).

(iii) நம்மை பக்தி விருத்தி அடையச்செய்கிறது (1 கொரி.14:4). தேவனுடைய அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறது என்பதற்கு (1 யோவா. 3:24) அவர் அருளிய பற்பல மொழிகளைப் பேசும் திறன் சாட்சியாயிருக்கிறது. இவ்வாறு அந்நிய மொழியில் பேசுதல்

நம்மைச் சோதனைகள், போராட்டங்கள், சந்தேகங்கள் மத்தியில் உற்சாகப்படுத்துகிறது.

அதாவது போராட்டங்கள் சோதனைகள் மத்தியில், தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டாரோ என்று எண்ணிக் கலங்கும்போது நாம் ஜெபத்தில் அந்நிய மொழிகளில் பேசினால், ஆவியானவர் நமக்குள் இருப்பதை நாம் உடனடியாக உணர்ந்துகொள்ளலாம். தேவன் நம்மைக் கைவிடவில்லை என்ற விசுவாசம் உண்டாகிறது. இதனால் நமது பக்தி விருத்தியடைகிறது. இதைப்போன்று அநேக விதங்களில் பக்தி விருத்தியடைவதற்கு அந்நிய மொழி பேசுதல் பயன்படுகிறது.

(iv) பிறரிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காண்பிக்கும் ஓர் அடையாளமாக இருக்கிறது (மாற்கு 16:17).

(v) அந்நிய மொழிகளில் நாம் பேசும்போது நமது கருத்து பயனற்ற தாவதால் நமது மனம் இளைப்பாறுகிறது. இதுவே இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல் (ஏசா.28:11,12).

**அந்நிய பாஷை ஒழிந்துபோயிற்றோ?**

அந்நிய பாஷைகள் ஒய்ந்துபோகும் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது (1 கொரி.13:8). எப்போது ஒழியும் என்பதையும் அது சுட்டிக்காட்டுகிறது (1 கொரி.13:10). நிறைவானது வரும்போதுதான் குறைவான அந்நிய மொழி பேசுதல் ஒழிந்துபோகும். இப்போது கண்ணாடியில் பார்ப்பது போன்று நிழலாட்டமாகப் பார்க்கிறோம் அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம் என்பதும்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன். அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வேன் என்பதும் அந்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளதல்லவா (1 கொரி.13:12)? இதிலிருந்து நிறைவானது இன்னும் வரவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஒருநாள் வரும்; அன்றைக்கு நாம் யாவற்றையும் முகமுகமாய்க் காண்போம்; அப்போது வெவ்வேறு மொழிகள் தேவையிருக்காது. ஏனெனில் நேரிடையாகவே பேசிக்கொள்ள முடியும். இரகசியங்கள் தேவைப்படாது. இப்படிப்பட்ட நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். முகமுகமாய்க் காணும் நாள் வரும்வரை அந்நிய மொழிகள் ஒய்ந்து போகாது. இப்பொழுது நமக்குப் பல காரியங்களைப் பற்றித் தெரியாது. ஒரு நாள் வரும் அப்பொழுது அறிந்து கொள்வோம். அதுவரை அந்நிய பாஷை உண்டு.

**அந்நிய மொழி யாவருக்கும் புரியுமா?**

அந்நிய மொழி என்றாலே அம்மொழியை அறியாதவர்களுக்குப் புரியாது என்பது தெளிவு.

ஆனால், ஆவியினால் நிரப்பப்பட்ட மக்கள் பேசியது அப்.2:7–11 இல் யாவருக்கும் புரிந்தது என்பதை நாம் காண்கிறோம். இந்த இடத்தில் இப்படி நடந்ததின் காரணம் என்ன? உலகத்தின் பல பகுதிகளிலுமிருந்த மக்கள் அங்கு கூடியிருந்தார்கள். எனவே, ஆவியினால் பற்பல மொழிகளைச் சீடர்கள் பேசியதில் அவரவர் தங்கள் மொழியில் உள்ள சொற்களைப் புரிந்துகொண்டனர். இப்பொழுதும் உலகின் பற்பல பாகங்களில் உள்ள பலமொழிகளைச் சேர்ந்தவர்கள் கூடியிருக்கும் இடத்தில் ஆவியினால் நிரம்பி அந்நிய மொழியில் பேசினால் அதைப் பலர் புரிந்துகொள்ள முடியும்.

ஆவியினால் பேசுவது மனிதரின் மொழிகளில் அல்லது தூதரின் மொழிகளில் ஒன்றாக இருக்கலாம் (1 கொரி.13:1). மனிதரின் மொழியாயிருந்து அந்த மொழி தெரிந்தவர் இருந்தால் அது அவர்களுக்குப் புரியும். இல்லையேல் புரியாது. இந்தக் காலத்திலும் ஆவியினால் வேற்று மொழியில் பேசுவதை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் பல நடந்துள்ளன.

**நமக்கும் பிறருக்கும் புரியாவிட்டால் அந்நிய மொழியை ஏன் பேச வேண்டும்?**

தேவனுக்கு எல்லா மொழிகளும் புரியும். அவரே ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார். எனவே தேவனிடத்தில் பேசும்போது அந்நிய மொழிகளில் பேசலாம். இவ்விதம் தொழுதுகொள்வதைத் தேவன் விரும்புகிறார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். தேவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது நமது கடமை. நாமெல்லாரும் அந்நிய மொழிகளில் பேசுவதைத் தேவன் விரும்புவதைப் பவுல் மூலமாகவும் அவர் நமக்குத் தெரிவித்துள்ளார் (1 கொரி. 14:5).

நமக்கு சரியாக ஜெபிக்கத் தெரியாது. எனவே, ஆவியில் நிரம்பி அந்நிய மொழிகளில் ஜெபிக்கும்போது ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சு களுடன் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம.8:26–27). இந்த ஜெபம் தேவனுடைய சித்தத்தின்படி அமைகிறது என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிப்பது சிறந்தது அல்லவா!

மேலும் யோவா.4:24 இல் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்பது கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுக்குக் கீழ்ப்படிவது நமது கடமையல்லவா?

**ஒழிந்துபோகக் கூடிய அந்நிய மொழி எதற்கு?**

நமது வாழ்க்கையில் பக்தி விருத்தி அடைவதற்காகத் தரப்பட்ட கிருபையை எதற்கு என்று கேட்பது சரியல்ல. ஒழிந்துபோகக் கூடிய எதையும் வேண்டாம் என்றால் உணவு உண்ணுதல் சரியா? நிறைவானது வரும்வரை, முகமுகமாய்க் காணும்வரை, நாம் அறியப்பட்டிருக்கிறபடி அறிந்து கொள்ளும்வரை அந்நிய மொழிகளைப் பேசுதல் நிச்சயமாகத் தேவை.

**நாம் விரும்பும் நேரத்தில் வேற்று மொழிகளில் பேச முடியுமா?**

ஆம், ஆவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறபடியால் எந்த நேரத்திலும் அந்நிய மொழிகளில் பேச முடியும் என்பதை இந்நூலை எழுதிய எங்களைப் போன்ற பலர் அனுபவத்தில் இருந்து நிச்சயமாகக் கூறமுடியும். அது மட்டுமல்ல. வாயைத் திறவாது மனதிற்குள்ளாகவே வேற்றுமொழியில் தேவனை ஆராதிக்கவும் அந்நிய மொழியில் பாடவும் முடியும் (1 கொரி.14:15).

**பற்பல மொழி பேசுபவர்களின் வாழ்க்கை சரியில்லையே**

ஒரு சிலரின் வாழ்க்கை சரியில்லை என்பது உண்மையாக இருப்பினும் தேவன் அருளும் கிருபைகளைப் புறக்கணித்தல் சரியல்ல. கிறிஸ்தவர்கள் சிலரின் வாழ்க்கை சரியில்லை என்று சொல்லி அதற்காக வேறு மதத்திற்குச் செல்வது சரியா? ஓர் ஊரில் இருக்கும் சிலரின் வாழ்க்கை சரியில்லை என்பதால் அந்த ஊரில் வசிக்க மாட்டேன் என்பது எவ்வாறு சரியாகும்? இவ்விதம் கூறினால் வாழவே முடியாது. அதேபோல சிலருடைய வாழ்க்கை சரியில்லை என்று சாக்குப்போக்குச் சொல்வது சரியல்ல.

**அன்பு போதும்; அந்நிய மொழி பேசுதல் தேவையில்லையோ?**

அன்பில்லாமல் அந்நிய மொழி பேசுதல் நமக்குப் பயனுள்ளதல்ல என்று அறிகிறோம். ஆனால், அன்போடு வாழவேண்டும் என்பதால் மற்றதைப் புறக்கணித்தல் தவறு. அன்போடு இருக்கவேண்டும்; அந்நிய மொழிகள் பேசுதலும் வேண்டும்.

விசுவாசம், அன்பு, நம்பிக்கை என்பவற்றில் அன்பே பெரியது என்பதால் மற்றதைவிட்டுவிடலாம் என்பது தவறல்லவா? அவ்வாறே அந்நிய மொழி பேசுதல்வேண்டாம் என்பதும் தவறு. தேவனிடத்திலிருந்து வரும் எதையும்

நாம் தடைபண்ணாமல் விருப்பத்தோடு பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு எதிர்த்து நிற்காமல் தேவன் நம்மைக் காப்பாராக.

'அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாமலிருங்கள்' என்கிறது வேதம் (1 கொரி.14:39).

**சிந்திக்க**

(i) வேதத்தில் இருவகை அந்நிய மொழிகளைப் பேசுதலைப் பற்றியும் (தேவனிடத்தில், மனிதரிடத்தில்) கூறப்பட்டுள்ளது. வேதத்தில் அந்நிய மொழிகளைப் பேசுவதைக்குறித்துக் கூறப்படும் இடங்களைப் படிக்கும்போது எதைக்குறித்துக் கூறப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு விளங்கிக்கொள்ளவேண்டும். இந்த அதிகாரத்தை மீண்டும் மீண்டும் வாசித்து ஆராய்ந்து புரிந்து கொள்ளுங்கள். வேதத்தைப் போதிக்கும்போதும் இதைக் கருத்திற்கொண்டு போதிக்கவேண்டும்.

(ii) 1 கொரி.14:22 இல் இரண்டாம் பகுதியில் அடையாளம் என்ற சொல் **Sign** என்பதைக் குறிக்காமல் **serves** என்ற பொருளில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தைப் பார்த்து இதைப் புரிந்துகொள்ளலாம்.

**ஜெபிக்க**

தீர்க்கதரிசனம் சொல்லுதல் அந்நிய மொழிகளைப் பேசுவதைக் காட்டிலும் மேன்மையுள்ளது. ஆனால் நாம் அந்நிய மொழிகளைப் பேசவும் வேண்டும். தீர்க்கதரிசனம் சொல்லவும் நாட வேண்டும். இதற்காக ஜெபிப்பது நமது கடமை (1 கொரி.14:5). இக்குறிப்பிற்காக ஜெபிக்கவும்.

**தியானிக்க: 1 கொரி.14:1–37.**

**செயல்பட**

அந்நிய மொழிகள் பேசுவதின் பயன்களை அறிந்த சகோதரனே அனுதினமும் அந்நிய மொழிகளால் ஆண்டவருடன் பேசுவீராக.

அதிகாரம் 4

# அபிஷேகத்தைக்குறித்த சில கேள்விகளுக்குப் பதில்கள்

**ஆவியினால் நிரப்பப்படுதலும் ஆவியினால் திருமுழுக்குப் பெறுதலும் ஒன்றுதானா?**

ஒரு தம்ளரின் விளிம்புவரை தண்ணீர் ஊற்றப்படுதலைப்போன்றது ஆவியினால் நிரப்பப்படுதல். தம்ளர் தண்ணீருக்குள் முற்றிலும் மூழ்கடிக்கப்படுவதைப்போன்றது (அமிழ்ந்து போவதைப்போன்றது) ஆவியினால் திருமுழுக்குப் (அபிஷேகம்) பெறுதல். இது ஒரு நிரம்பி வழியும் அனுபவம் என்றும் கருதலாம்.

ஆவியினால் திருமுழுக்குப் பெறும்போது நிரப்பவும் படுகிறோம். ஆனால் நிரப்பப்படும்போதெல்லாம் திருமுழுக்குப் பெறுவதில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும், அதற்குப் பின்னும் (இக்காலம் வரை) ஒரு மனிதன் முதல்முறையாக ஆவியானவரைப் பெறுதலை ஆவியினால் திருமுழுக்குப் பெறுதல் என்று கூறுகிறோம். அதன் பின்னர் அந்த மனிதன் மீண்டும் மீண்டும் ஆவியானவரால் நிரப்பப்படலாம். அப்.2:4 இல் ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்கள் மீண்டும் நிரப்பப்படுவதை அப்.4:31 இல் காண்கிறோம். எப்பொழுதும் ஆவியினால் நாம் நிரம்பியிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (எபே.5:18,19).

சீடர்கள்மேல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஊதியபோது (யோவா.20:22) அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அப்பொழுது பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அதைப் பெறுவதற்காக எருசலேமில் காத்திருக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டார் (லூக்.24:49; அப்.1:4,5). அவ்வாறு காத்திருந்த அவர்கள் பெந்தெகொஸ்தே நாளன்றுதான் ஆவியினால் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டார்கள். ஆகவே, ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதலும் ஆவியினால் திருமுழுக்கைப் பெறுதலும் வெவ்வேறு நிகழ்ச்சிகளாக இருந்து வந்தன.

ஆனால், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது ஆவியினால் திருமுழுக்குப் பெறுதலின் மூலமாகவே அமைந்திருந்தது. எனவே, ஆவியானவரைப் பெற்றுக் கொண்டீர்களா என்று இதற்குப் பின்னர் கேட்டது (அப்.19:1,2) ஆவியினால் திருமுழுக்கைப் பெற்றீர்களா என்று கேட்பதையே குறிக்கும். இவ்வாறு பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் நிரப்பப்படும் அனுபவத்தை அடைவது தேவையானது.

**தண்ணீர்த் திருமுழுக்குப் பெறாதவர்கள் ஆவியினால் திருமுழுக்குப் பெற முடியுமா?**

முடியும் என்பதை வேதம் காண்பிக்கிறது. கொர்நேலியு வீட்டார் அவ்விதம் பெற்றுக்கொண்டார்கள் (அப்.10:44–48). இக்காலத்திலும் அநேகர் தண்ணீர்த் திருமுழுக்குப் பெறும் முன்பே ஆவியினால் திருமுழுக்குப் பெறுகிறார்கள். இவர்கள் கொர்நேலியு வீட்டாரைப் பின்பற்றித் தண்ணீர்த் திருமுழுக்கைச் சீக்கிரத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**ஏன் பலர் இதைப் பெறவில்லை?**

தேவனுடைய கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்பாதவர்களுக்கு இது கிடைக்காது என்று நீதி.1:23 இலிருந்து புரிந்துகொள்ளலாம். அதாவது பாவத்திலிருந்து மனந்திரும்பாதவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படமாட்டார்.

மனந்திரும்பியதாகக் கூறியபோதிலும் ஜென்ம சுபாவம் கொண்டிருப்பவர்கள் ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் (1 கொரி.2:14). இவர்களுக்கும் ஆவியின் அருள்மாரி கிடைக்காது. ஆவியானவரின் அருள்மாரியின் உண்மையை ஏற்றுக்கொள்ள இவர்கள் மறுப்பார்கள். வேதத்தைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் சுபாவத்திற்கு ஏற்ப, திரித்துக் கூறுவார்கள். இப்படிப்பட்டவர்களின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளுதல் சரியல்ல.

மனந்திரும்பியபோதிலும், பின்னர் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருப்போர் ஆவியின் அருள்மாரியை அடையாமற்போகலாம். அப்.5:32 இலிருந்து இதை அறிகிறோம்.

ஆவியானவரைக்குறித்துச் சரியாக அறியாமையால் பலர் அவரைப் பெற்றுக்கொள்வதில்லை (அப்.19:1,2).

விசுவாசிப்போருக்கே ஆவியானவர் அருளப்படுகிறார் (கலா.3:14). எனவே விசுவாசிக்காததால் ஆவியின் அருள்மாரியைப் பெறும் வாய்ப்பைச் சிலர் இழக்கிறார்கள்.

கள்ளப் போதகங்களால் இழுப்புண்டு, ஆவியானவரின் அருள் மாரியைக்குறித்துத் தவறான எண்ணமுடையவர்களுக்கு அது கிடைக்காது. வேதத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இக்கள்ளப் போதகங்களினின்று தப்ப ஏதுவாகும். வேதமே நமக்கு ஆதாரம்.

மேற்கண்டதைப் போன்ற ஏதேனும் ஒரு காரணத்தால் பெற்றுக் கொள்ளாத சிலர் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறும் அனுபவத்தை மறுக்கவும் குறைகூறவும் முற்படுகின்றனர். இவ்வாறு செய்வது மிகவும் தவறான செயல் ஆகும்.

**பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறுவதற்குக் கைகளை வைத்தல் சரியா?**

அப்போஸ்தலராகிய பேதுருவும், யோவானும் ஜெபம்பண்ணி, கைகளை வைத்தபோது சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள் (அப்.8:16,17). அப்போஸ்தலனாகிய பவுல் கைகளை வைத்தபோது எபேசு சபையின் விசுவாசிகள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்தார் (அப்.19:6). எனவே இவ்வாறு கைகளை வைப்பது வேதத்தின்படி சரிதான்.

இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் அருளப்படும்படி ஜெபித்துக் கைகளை வைப்பது ஒரு வரம் என்பதை அப்.8:17–20 இல் காண்கிறோம். இந்த வரம் அப்போஸ்தலருக்கு மட்டுமன்றி சாதாரண சீடர்களில் சிலருக்கும் அருளப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக சவுல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அனனியா என்ற சீடர் சவுலின்மீது கைகளை வைத்ததை அப்.9:17 இல் காண்கிறோம்.

இவ்விதம் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரிக்குள் நடத்தும் வரம் பெற்றவர்கள் கைகளை வைத்து ஜெபித்தல் முறையானதுதான்.

**ஆவியில் நிறையும்போது உடல் அசைவு, கூச்சல் ஏன்?**

அந்நிய மொழிகளில் பேசும்போது சிலர் சிறிது ஆடுகிறார்கள், சிலர் கைகளை அசைக்கிறார்கள், சிலர் கைகளைத் தட்டுகிறார்கள், சிலர் மிகவும் சத்தமாகப் பேசுகிறார்கள். இது வேதத்தின்படி சரியானதே. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியினால் நிறைந்தவர்களை மற்றவர்கள் பார்த்தபோது அவர்கள் குடித்திருக்கிறார்களோ என்று கருதுமளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்தன (அப்.2:13).

ஆனால் உடல் அசைவு இல்லாதவாறும் ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்பவர்கள் உண்டு. உணர்ச்சி வசப்படும் அளவானது மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது அல்லவா?

**அந்நிய மொழியில் பேசுவதைக் கட்டுப்படுத்த முடியுமா?**

முடியும். நாமாக நிறுத்தத் தீர்மானித்தால் உடல் இயக்கத்தையும், அந்நிய மொழி பேசுவதையும் நிறுத்த முடியும். கைகளை அசைக்கும்போது ஆவியானவரின் வல்லமையை உணர்ந்துதான் அசைக்கிறோம். நாமாகக் கைகளை ஆட்டுவதில்லை. எனினும் நாம் நிறுத்தத் தீர்மானித்தால் நிறுத்த முடியும். இதுவும் வேதாகமத்தின்படியே உள்ளது. ஏனெனில், தீர்க்க தரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது என்று வேதம் கூறுகிறது (1 கொரி.14:32).

**போலியாக அந்நிய மொழிகளைப் பேசுகிறவர்கள் உண்டா?**

தேவனுடைய பிள்ளைகள் தேவனிடம் கேட்டுப் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியைப் பெற்று, பின்னர் அந்நிய மொழிகளில் பேசுவது நமக்குத் தெரிந்ததே.

இதேவிதமாக ஏமாற்றுக்காரர்கள் பேச முயற்சிப்பது சாத்தியம்தான். அவ்விதம் பேசுமாறு பிசாசு மக்களை ஏவுவதும் நடக்கக்கூடியதே. கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப் போதகர்களும், கள்ளக் கிறிஸ்துக்களும் இருக்கும் இக்காலத்தில் இது நடைபெற ஏதுவுண்டு. வானத்திலிருந்து அக்கினியை இறக்கும்படியான அற்புதம் செய்யத் துணியும் பிசாசு எந்தப் போலி அற்புதத்தையும் செய்ய முடியும் அல்லவா (வெளி.13:13)?

ஆனால், போலிகள் இருக்கின்றன என்பதற்காக உண்மையானதைப் புறக்கணித்தல் தவறு. கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியினால் நிரம்பி அந்நிய மொழிகளில் பேசுவது வேதத்தின்படி சரியானதே.

**அந்நிய மொழிகளைத் தவறாகப் பயன்படுத்துகிறார்களே!**

சிலர் ஒரு காரியத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக அதை மறுப்பதும் வெறுப்பதும் சரியல்ல. நாம் சரியாகப் பயன்படுத்துவதே சரியான முறையாகும்.

“தவறாகப் பயன்படுத்துதலுக்கும், குறை கூறுதலுக்கும் பரிகாரம் பயன்படுத்தாமை அல்ல. சரியாகப் பயன்படுத்துதலே பரிகாரம் ஆகும்” **(The cure for misuse and abuse is not disuse but proper use).**

நாம் சரியான முறையில் அந்நிய மொழிகளைப் பயன்படுத்தத் தீர்மானிப்போம்.

**செயல்பட**

அந்நிய மொழிகளைப் பேசுதலைக்குறித்த கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளோம். இவை தவிர வேறு ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் எங்களுக்கு எழுதுங்கள்.

**ஜெபிக்க**

அந்நிய மொழிகளைப் பேசுவதைக் குறை கூறுபவர்களுக்காக ஜெபியுங்கள்.

பரிசுத்த ஆவியின் அருள்மாரி உலகெங்கும் ஊற்றப்படும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.

**தியானிக்க :** மத்.12:22–37; அப்.10:44–48

# அதிகாரம் 5

# ஆவியினால் திருமுழுக்குப் பெறுவது எப்படி?

**1. எதற்காக நாம் அபிஷேகம் பெறவேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.**

a) **தேவனைச் சரியானவிதத்தில் தொழுதுகொள்ள :** தேவன் விரும்புகிறபடி அவரைத் தொழுதுகொள்வதற்கு அபிஷேகம் நமக்குத் தேவை. ஆவியினால் அபிஷேகம் பெறாதவன் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள இயலாது (யோவா.4:23,24).

b) **மீட்கப்படும் நாளுக்கென்று :** ஆவியானவர் நமது இறுதி மீட்பின் நாளுக்கென்று அச்சாரமாகவும், முத்திரையாகவும் இருப்பதை ஏற்கனவே படித்திருக்கிறோம். கர்த்தரின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் நமக்கு ஆவியானவரின் அபிஷேகம் மிக அவசியம் என்பதை இது நன்கு உணர்த்து கிறது (எபே.1:13,14; 4:30).

c) **சாட்சிகளாயிருப்பதற்குப் பெலன் அடைவதற்காக :** கர்த்தருடைய பிள்ளைகளாயிருக்கும் ஒவ்வொருவரும் அவருக்குச் சாட்சியாக வாழ்வது அவசியம். இவ்வாறு சாட்சியாக வாழ்வதற்குப் பெலன் தேவைப்படுகிறது. ஆவியானவரின் அருள்மாரியைப் பெற்றுக்கொள்ளும்போதுதான் இந்தப் பெலனை அடைகிறோம் (அப்.1:8). பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறாமல் பெலன் பெற்றிருக்கிறேன் என்று கூறுவது வேதத்திற்குப் புறம்பானது.

d) **சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தப்படுவதற்காக :** கிறிஸ்துவைப் பின்பற்றுகிற எவனும் அவருடைய சகல சத்தியத்திற்குள்ளும் நடக்க வேண்டும். அவ்வாறு நடப்பதற்கு வழி நடத்துபவர் ஒருவர் மிகவும் தேவை. எந்தப் போதகரும், எந்த அப்போஸ்தலரும், எந்தத் தீர்க்கதரிசியும் இதைச் சரிவரச் செய்ய முடியாது. பரிசுத்த ஆவியானவர் ஒருவரே நம்மைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தமுடியும் (யோவா.16:13). எனவே, ஆவியானவரின் அருள்மாரி ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் நிச்சயம் தேவை.

**2. நமக்குத் தகுதி உண்டு என்று தெரிந்துகொள்ளுதல்**

யூதர்கள் மட்டுமல்லாது புற இனத்தாரும் ஆவியினால் திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அப்.10:46; 11:15,16 இலிருந்து காணலாம். ஆண்களும், பெண்களும், ஊழியரும் இதைப் பெற்றுக்கொண்டதை அப்.1:13–15; 2:4 இல் காணலாம். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று கர்த்தர் உரைத்திருப்பதால் (யோவேல் 2:28) ஆவியின் அருள்மாரி உலக மக்கள் யாவருக்கும் உண்டு. இந்த வாக்குத்தத்தமானது தேவன் தூரத்திலிருந்து வரவழைக்கும் யாவருக்கும் உள்ளது (அப்.2:38,39).

ஒரு குறிப்பிட்ட சபையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் ஆவியின் அருள்மாரி உண்டு என்று நினைப்பது தவறு. எந்தச் சபைப்பிரிவைச் சேர்ந்தவருக்கும் உண்டு.

ஆனால் லூக்.11:11–13 ஐயும், யோவா.7:37 ஐயும் கவனித்துப் பார்த்தால், பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கான நிபந்தனைகளைக் காணலாம். அவையாவன:

(1) தேவனுடைய பிள்ளையாயிருக்கவேண்டும். அதாவது இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

(2) ஆவியினால் திருமுழுக்குப் பெற வாஞ்சையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (தாகமுள்ளவர்களாக இருக்கவேண்டும்).

(3) தேவனிடம் விசுவாசத்தோடு கேட்கவேண்டும்.

தேவனோடு ஐக்கியம் வைத்திருப்பவர்களுக்கு வேறு நிபந்தனைகள் இல்லை.

**3. உரிமையை உணர்ந்துகொள்ளவேண்டும்**

எந்த ஒரு குழந்தைக்கும் தன் வீட்டில் உணவைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு. அவ்வாறே தேவனுடைய பிள்ளையான ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு என்பதை லூக்.11:11–13 இல் காணலாம்.

**4. உடனே கிடைக்கும் என்று அறிதல்**

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் முதன்முறையாக அருளப் படுவதற்கு முன்பு, அவ்வாறு அருளப்படும் நாள்வரை காத்திருக்குமாறு கர்த்தர் கூறினார் (லூக்.24:49; அப்.1:5). அதன் பின்னர் இவ்வாறாகக் காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை.

லூக்கா 11:9 ஐக் கவனித்துப் பாருங்கள். கேட்கிறவர்களுக்கு எப்பொழுது கொடுக்கப்படும்? அப்பொழுதே கொடுக்கப்படும். எனவே இக்காலத்தில் கேட்டால் உடனே கிடைக்கும்.

**5. அதிக நிச்சயம் என்று உணர்தல்**

தன் குழந்தைக்கு ஆகாரம் அளிக்க வசதி படைத்த ஒரு தகப்பனிடம் அவனுடைய குழந்தை ஆகாரம் கேட்டால் 'நாளைக்குத் தருகிறேன்' என்று சொல்வானா? உடனடியாக ஆகாரம் தருவான் அல்லவா? அவ்வாறே, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பது அதிக நிச்சயம் (லூக்.11:11–13).

**இவ்வதிகாரத்தை எழுதியவரின் சாட்சி :** ஒருமுறை பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரிக்காகக் கூட்டம் நடத்தியபோது ஒரு வயோதிபர் தவிர மற்றவர்கள் யாவரும் ஆவியானவரைப் பெற்றுக்கொண்டனர். நான் அவரிடம் சென்று "பரம பிதாவானவர் பரிசுத்த ஆவியைத் தருவது அதிக நிச்சயம் அல்லவா?" என்று நினைவுபடுத்தினேன். உடனே அவர் "அதிக நிச்சயம் அல்லவா. அதிக நிச்சயம் அல்லவா. அதிக நிச்சயம் அல்லவா..." என்று மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தார். ஒரிரு நிமிடங்களுக் குள்ளாக அவரும் ஆவியினால் நிரம்பி அந்நிய மொழிகளைப் பேச ஆரம்பித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைத் தருவது அதிக நிச்சயம்.

**6. கேட்க வேண்டும்**

பசியாயிருக்கிற ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் ஒருமுறை கேட்டாலே அதற்கு ஆகாரம் கிடைக்கும் அல்லவா! அதுபோலவே உள்ளத்தின் ஆழத்தில் வாஞ்சையோடு, உரிமையோடும், விசுவாசத்தோடும் ஒருமுறை பிதாவினிடத்தில் கேட்டாலே போதும்.

## பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறுவது எப்படி?

**படி 1:** நீர் இதுவரை இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்காவிட்டால் அதற்காக ஜெபித்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வீராக. (கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தியானித்து உமது பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டு உமது வாழ்க்கையை அவரிடம் ஒப்படையும். உம் இருதயத்தில் வந்து தங்குமாறு அவரை அழையும். உடனடியாக அவர் உம் உள்ளத்தில் வந்து உம்மை மன்னிக்கிறார் என்று நம்பும். அவருடைய இரட்சிப்பின் சந்தோஷம் உம்மேல் இறங்கும்).

**படி 2:** பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் உமக்கு மிகவும் தேவை என்பதை உணர்ந்து அதற்காக உள்ளத்தின் வாஞ்சையோடு ஊக்கமாக ஜெபிப்பீராக. உடனடியாக நீர் நிரப்பப்படுவீர்.

**படி 3:** உம்மை நிரப்புவதாக அதிக நிச்சயமான வாக்குத்தத்தம் இருக்கிறபடியால், கர்த்தர் உம்மைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பிவிட்டார் என்பதைச் சந்தேகப்படாமல் விசுவாசியும். கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் அல்லவா? (லூக்.11:10).

**படி 4:** உடனே வாயைத் திறந்து பேசுவீராக. நீர் பேசுவது உளறல் போலத் தோன்றினாலும் தைரியமாகப் பேசுவீராக. தேவன் அருளும் சொற்களுக்குப் பொருள் உண்டு. அவர் அதை அறிவார். எனவே, உற்சாகமாகப் பேசும்.

**சுருக்கமாகச் சொன்னால்**

நீர் தேவனுடைய பிள்ளையானால், வாஞ்சையோடு பரம பிதாவிடம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பரிசுத்த ஆவியின் அருள்மாரிக்காகக் கேளும்; கேட்டவுடன் தந்துவிட்டார் என்று விசுவாசியும்; வாயைத் திறந்து அந்நிய மொழிகளில் பேசும் (கேள், விசுவாசி, பேசு – **Ask, Believe and Speak**).

**பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கும்போது வேறு ஏதேனும் வந்துவிடுமா?**

தேவனுடைய பிள்ளைகள் யாருக்கும் இது நடக்க முடியாது. லூக்.11:11–13 ஐத் தியானித்துப் பாருங்கள். தேவனிடத்திலிருந்து அப்பம், மீன், முட்டை போன்ற நல்லவை மட்டுமே கிடைக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது அல்லவா? நீர் தேவனுடைய பிள்ளையானால், தேவனிடத்தில் பரிசுத்த ஆவியானவரைக் கேட்டால் வேறு எதையும் தரமாட்டார். பரிசுத்த ஆவியானவரையே தருவார். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர். விசுவாசத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்வீராக.

**அருள்மாரி கூட்டம் நடத்துபவர்களுக்கு ஒரு ஆலோசனை**

பரிசுத்த ஆவியின் அருள்மாரி கூட்டம் நடத்துகின்ற யாராயினும் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே அந்தகார சக்திகள் எதுவும் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வராதபடி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கடிந்து ஜெபித்து, பின்னர் கூட்டத்தை நடத்துவது நல்லது. இரட்சிப்புப் பெறாதவன் யாராயினும் வஞ்சக ஆவியின் தூண்டுதலால் மக்களை ஏமாற்றும் வாய்ப்பு இதினிமித்தம் முறியடிக்கப்படுகிறது. எனவே, முதலாவது வஞ்சக ஆவிகள் முதலான அசுத்த ஆவிகளைக் கடிந்து ஜெபிக்கவேண்டும்.

# அதிகாரம் 6

# ஆவியானவருக்கு எதிரான பாவங்கள்

ஆவியானவரை விசனப்படுத்துதல் ஒரு பாவமாகும் (ஏசா.63:10). இதன் விளைவு என்ன? விசனப்படுத்தியவர்களுக்குத் தேவன் சத்துருவாக மாறி அவர்களுக்கெதிராக யுத்தம் செய்வார்.

பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுதல் ஒரு பாவமாகும். அனனியாவும் சப்பீராளும் இப்பாவத்தில் ஈடுபட்டனர் (அப்.5:1–11). இதன் விளைவாக அவர்களுக்கு உடனடி மரணம் ஏற்பட்டது.

ஆவியானவரைத் துக்கப்படுத்துதலும் பாவமாகும் (எபே.4:30). நம் வாழ்க்கையில் அசுத்தங்கள் காணப்பட்டால் அவர் துக்கப்படுவார் அல்லவா? எனவே நாம் கவனமாக இருக்கவேண்டும்.

ஆவியானவரை அவித்துப்போடுதலும் தவறு (1 தெச.5:19). அடிக்கடி பரிசுத்த ஆவியினால் ஜெபம்பண்ணி, ஆவிக்குரிய ஊழியம் செய்தால் இப்பாவத்திற்குத் தப்பலாம். ஆவிக்குரியவற்றைச் சிந்திக்கிறவர்களாக வாழ்வதும் அவசியம் (ரோம.8:5).

கிருபையுள்ள ஆவியை நிந்தித்தல் ஒரு கொடிய பாவமாகும் (எபி.10:29). இதற்கான தண்டனை கொடிதான ஆக்கினை என்று எழுதப்பட்டிருக்கிறது. எபி.6:4–8 ஐயும் காண்க. இதில் கூறப்பட்டுள்ள கருத்து என்ன? மறுதலித்துப் போகிறவர்களை மீண்டும் புதுப்பிப்பது கூடாத காரியம். ஆவியானவருக்கு எதிர்த்து நிற்பதும் பாவமே (அப்.7:51).

ஆவியானவரை ஏளனம் செய்தலும் அவரைப்பற்றி அவதூறு கூறுவதும் மிகவும் கொடிய பாவங்களாகும் (மத்.12:32; மாற்.3:28–30). இப்பாவங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு இல்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்த்தராகிய இயேசு பிசாசுகளைத் துரத்தியதைப் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினால் செய்வதாகப் பரிசேயர்

கூறியபோது கர்த்தராகிய இயேசு இந்த வசனங்களைக் கூறினார். இவ்வாறே, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்த்தருடைய பிள்ளை ஒருவன் நடப்பிக்கும் அற்புதங்களையும் தகாதவிதமாகக் குறை கூறுபவர்கள் இதே பாவத்தைச் செய்கிறார்கள் அல்லவா? இவர்களுக்கும் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு இல்லை.

பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும் அவர் மனிதரின் மூலமாக நடப்பிக்கும் எந்தக் கிரியையைப்பற்றியும் பேசுவதற்கு எச்சரிக்கையாக இருப்போமாக. உமக்குப் புரியாவிட்டால் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாதீர். உமது வாயை மூடிக்கொண்டிருப்பது உமக்கு நலமாயிருக்கும். வேதத்திலிருந்து அதைப் புரிந்துகொள்ள வழிதேடி, தேவனை நோக்கி ஜெபித்தால், அவர் உமக்கு வெளிப்படுத்துவார். கவனமாக இருந்து ஆவியானவருக்கு விரோதமான பாவத்துக்குத் தப்பித்துக்கொள்வீராக.

ஆவியானவரைக்குறித்தும் அவருடைய செயல்களைக்குறித்தும் தவறாகப் போதிப்பவர்கள் உண்டு. அவர்களின் போதனைகளை வேதத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். வேதத்தை நேரிடையாகப் போதிக்காமல் சாத்தானைப்போலத் தவறாகப் பயன்படுத்துபவர்களை விட்டு விலகி வேதத்தை நிதானமாகப் பகுத்துப் போதிப்பீராக. ஆவியானவரைக் குறித்துத் தவறாகப் போதிப்பவர்களைச் சந்தித்தால் இந்த எச்சரிப்பை அவர்களுக்கும் கூறுவீராக.

**பற்பல மொழிகள் பேசுவதைக் குறை கூறுதல் :**

(i) அந்நிய மொழிகளில் பேசுவதைக் குறைகூறுதல் முதன் முதலில் அது ஆரம்பித்த நாளிலிருந்தே நடைபெற்று வருகிறது. அப்.2:13 இல் பரியாசம்பண்ணுதல் தொடங்கியதை நாம் காண்கிறோம். இன்றும் குறைகூறுபவர் உண்டு.

(ii) ஆவியானவரின் ஏவுதலின்படி பற்பல மொழிகளைப் பேசுகிறவர்களைப் பிசாசு பிடித்தவர்கள் என்று சிலர் கூறுகின்றனர். கர்த்தராகிய இயேசுவையும் 'பிசாசு பிடித்தவன்' என்று கூறினார்கள் (யோவா.8:48). தேவனுடைய ஆவியினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தினார் (மத்.12:28). இவ்வாறு அவர் செய்ததைப் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறார் என்று பரிசேயர் கூறினார்கள் (மத்.12:24). இதற்குக் கர்த்தர் கூறிய பதிலைக் கவனித்துப் பார்த்தால் இவ்வாறு கூறுவது பரிசுத்த ஆவியானவருக்கு

விரோதமான பாவம் என்பதையும், அப்பாவத்திற்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு இல்லை என்பதையும் அறிகிறோம் (மத்.12:31,32).

இவ்வாறே பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் பல மொழிகள் பேசுகின்றவரைப் பிசாசு பிடித்தவன் என்று கூறுகின்றவன் பரிசுத்த ஆவியானவருக்கு விரோமாகப் பாவம் செய்கிறான். அந்தப் பாவத்திற்கு மன்னிப்பு இல்லை.

(iii) பற்பல மொழிகளைப் பேசுகிறவனைப் பைத்தியக்காரன் என்றும், உளறுகிறவன் என்றும் கூறுகிறவர்கள் உண்டு. இவ்வாறு கர்த்தருடைய பிள்ளைகளை உலகத்தார் பல காலமாகக் கூறுகின்றனர். நானோ கர்த்தருக்காகப் பைத்தியக்காரன் என்று கூறப்பட வெட்கப்படேன் என்று நாம் எண்ணவேண்டும். அவ்வாறு நம்மை மற்றவர்கள் கூறும்போது கர்த்தரின் வார்த்தை நம்மில் நிறைவேறுவதை உணர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும். அவ்வாறு நம்மைக் குறைகூறுபவர்களைக் கர்த்தர் சந்திக்கும்படி அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.

**ஓர் எச்சரிக்கை**

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் என்று கர்த்தர் உரைத்தவைகளில் ஒன்றான 'நவமான மொழிகளில் பேசுவதைக்' குறைகூறும் எவன்மேலும் குற்றம் சுமராமல்போகாது (மாற்.16:17).

**விசுவாசிகளின் அடையாளங்கள்**

'விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன : என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்' என்று இயேசு கூறியிருக்கிறார் (மாற்.16:17–18). 'நீங்கள் ஒரு விசுவாசியென்றால், இயேசு கூறிய அடையாளங்களில் ஒன்றேனும் உங்களிடம் உண்டா?' என்று உங்களையே ஆராய்ந்து பாருங்கள்.

**ஏன் சாவுக்கேதுவானதைக் குடிக்கக்கூடாது?**

மாற்.16:17–18 ஐ மேற்கோள்காட்டிய ஒருவர் 'அந்நிய மொழிகளைப் பேசுகிறவர்கள் ஏன் சாவுக்கேதுவானதைக் குடிக்கக்கூடாது?' என்று

கேட்டார். இவ்வாறு கூறுவது தேவாலயத்தின் உச்சியிலிருந்து குதிக்குமாறு இயேசுவைச் சாத்தான் கேட்டுக்கொண்டதைப்போன்றது. வேண்டுமென்று சாவுக்கேதுவானதைக் குடிப்பது முறையன்று. அறியாமல் நஞ்சைக் குடித்தும் உயிருடனிருந்த தேவதாசர்கள் உண்டு. சாத்தானைப்போன்று பேசாதீர்.

**செயல்பட**

(i) ஆவியானவரின் ஏவுதலால் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செய்கிற எச்செயலையும் குறைகூறாதீர்.

(ii) ஆவியானவருக்கு எதிரான பாவம் செய்யாதபடி இருக்கச் சிறந்த வழி என்ன? எப்பொழுதும் ஜெபத்திலும், குறிப்பாக ஆவிக்குள் ஜெபித்தலிலும், நல்ல ஐக்கியத்திலும், ஆத்தும ஆதாய ஊழியத்திலும், வேதத்தியானத்திலும் நிலைத்திருக்கவேண்டும். இவ்வாறு செய்ய இன்றே தீர்மானியும்.

# அதிகாரம் 7

# முதல்முறை நிகழ்ந்த அருள்மாரி

### பெந்தெகொஸ்தே என்னும் நாள் (அப்.2:1)

தேவன் சீனாய் மலையில் மோசேயின்மூலம் இஸ்ரவேலருக்குக் கற்பனைகளை அளித்தது ஒரு பெந்தெகொஸ்தே நாளில்தான் என்று வேத வல்லுநர்கள் கருதுகிறார்கள். அதை நினைவுகூரும் நாளில் புதிய வழிநடத்துதலுக்கென்று (ரோம.8:14; யோவா.16:13) பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டது மிகவும் பொருத்தமானதே.

பெந்தெகொஸ்தே என்ற பெயர்கொண்ட நாள் பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே உள்ள பண்டிகை நாள் ஆகும். கிறிஸ்து பரமேறுதலுக்குப் பின் சில நாட்கள் கழித்து இந்தப் பண்டிகை நாள் வந்தது. அந்த நாளில் தான் ஆவியானவர் ஊற்றப்பட்டார்.

இக்காலத்தில் சில சபைப்பிரிவுகள் பெந்தெகொஸ்தே என்ற சொல்லைத் தங்கள் சபைப்பிரிவுகளின் பெயர்களில் சேர்த்துள்ளன. ஆவியானவரின் அருள்மாரியைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தச் சபைப்பிரிவினருக்கு மட்டுமன்றி உலகிலுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

### ஒரு மனமும் ஜெபமும் (அப்.1:13,14)

ஏறத்தாழ நூற்று இருபதுபேர் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தனர் (அப்.1:13–15). ஜெபத்தினால் ஒருமனப்படுதல் உண்டாயிற்று எனலாம்.

ஆவியானவரின் திருமுழுக்குக்காக எருசலேமில் காத்திருக்கும்படி கர்த்தர் அவர்களுக்குக் கூறியிருந்தார் அல்லவா (அப்.1:4,5)? எனவே, அந்த நோக்கத்திற்காக அவர்கள் கூடி வந்திருந்தார்கள். அதற்காக அடிக்கடி ஜெபித்துக்கொண்டிருந்திருப்பார்கள். இக்காலத்திலும் உலகெங்கும் பின்மாரி ஊற்றப்படும்படி ஆவியின் அருள்மாரிக்காக அடிக்கடி ஊக்கமாக

ஜெபிப்பது நமது கடமை (சக.10:1). நீர் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும் ஜெபக் கூட்டங்களிலும் இதைக்கூறி ஜெபிக்கத் தூண்டுவீராக.

பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தருளுவதற்காகக் கர்த்தர் ஏற்படுத்தியிருந்த இடம் ஒரு மேல்வீடு என்பதை அப்.1:13 இல் காண்கிறோம். கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தரைப் பின்பற்றும் நோக்கத்தோடு ஆவியானவரைப் பெற்றுக்கொண்டு பெலனடைவதற்கு வாஞ்சையோடு காத்திருந்தவர்கள் நூற்று இருபதுபேர் மட்டுமே. பல்லாயிரம் பேர் அற்புதங்களைப் பெற்றிருந்தனர் என்று நாம் அறிவோம். எனினும் இயேசுவிடம் அற்புதங்களைப் பெற்றவர்களில் பலர் இறுதிவரை பின்பற்றவில்லை. இன்றைய நாட்களிலும் ஆவியானவரின் அருள்மாரியை வாஞ்சித்து, அதைப் பெற்றுக்கொள்பவர்கள் குறைவாகவே உள்ளனர். இந்நிலை மாறும்படியும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டவர்களாக ஆகும்படியும் ஜெபிக்கவேண்டும்.

மேல்வீட்டறையில் ஆவியானவரின் அருள்மாரிக்காகக் காத்திருந்தவர்களில் முக்கியமானவர்களின் பெயரை அப்.1:13,14 ஆம் வசனங்களில் காண்கிறோம். ஊழியங்கள் பல செய்து, அற்புதங்களை நடத்தி, பிசாசுகளைத் துரத்திய அனுபவங்கள் சீடருக்கு இருந்தது (லூக்.10:17; மத்.10:1). கர்த்தர் நேரிடையாக அவர்கள்மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தார் (யோவா.20:22). ஆனால் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்று கூறப்படும் அருள்மாரியை (அபிஷேகத்தை) அவர்கள் அதுவரை பெற்றுக்கொள்ளவில்லை. எனவே, சீடர்களும் இந்த அனுபவத்திற்காகக் காத்திருந்தனர். பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து கர்த்தராகிய இயேசுவைப் பெற்றெடுத்த மரியாளுக்கும் பரிசுத்த ஆவியின் அருள்மாரி அதுவரை கிடைக்கவில்லை. எனவே, மரியாளும் தன் பிள்ளைகளுடன் ஆவியானவரின் அருள்மாரிக்காக ஆவலுடன் காத்திருந்ததை அப்.1:14 தெளிவுபடுத்துகின்றது. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் அனுபவமும், பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கும் அனுபவமும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் அனுபவமும் (மத்.1:20; லூக்.1:15,35,41,67) பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும் அனுபவத்திற்கு வேறுபட்டவை என்று நாம் காண்கிறோம். கர்த்தர் மகிமைப்படும்வரை (மரித்து, உயிர்த்து, வானத்துக்கு ஏறிப்போகும்வரை) அந்த அனுபவம் யாருக்கும் அருளப்படவில்லை (யோவா.7:38,39).

## ஆவியானவரின் அருள்மாரி (அப்.2:1–4)

முதன்முறை மனிதர்கள்மேல் ஆவியானவரின் அருள்மாரி பொழியப் பட்டதை இப்பகுதியில் காண்கிறோம். அப்போது அந்த அறையில் யாவரும் உட்கார்ந்திருந்தார்கள் (வச.2). இப்பகுதியை வாசித்துப்பாருங்கள்.

## முழக்கம் உண்டாயிற்று

காலை ஒன்பது மணி அளவு இருக்கும் (அப்.2:15). திடீரென ஒரு முழக்கம் உண்டாயிற்று. பூமியிலிருந்து உண்டாகும் நிலநடுக்கம் அல்ல, கட்டடத்தில் உண்டானதும் அல்ல. வானத்திலிருந்து உண்டாயிற்று. திடீரென உண்டான இம்முழக்கம் சீடர்கள் இருந்த அறையை மட்டுமன்றி வீடு முழுவதையும் நிரப்பிற்று. அந்த வீட்டிற்குள் பெரிய ஓசை வானத்திலிருந்து வந்து, தொடர்ந்து சற்று நேரம் முழங்கிக்கொண்டிருந்தது. ஓசையை வீட்டிற்கு வெளியே இருந்தவர்களிலும் அநேகர் கேட்டார்கள். அந்த வீட்டில் தொடர்ந்து முழக்கம் இருந்ததைக் கவனித்து, அவ்வீட்டிற்கு அநேகர் வந்து "என்ன நடக்கிறது?" என்று உற்றுப் பார்த்தார்கள்.

ஆவியானவரின் அபிஷேகம் முதன்முறையாக படிப்படியாக அருளப்பட வில்லை. திடீரென, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் அருளப்பட்டது என்று காண்கிறோம். அதன் பின்னர் மற்ற இடங்களில் நடைபெற்றது என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஒரு நிமிட நேரம் இக்காட்சியைக் கற்பனைசெய்துபாருங்கள்.

சடுதியிலே பலத்த காற்று (சூறாவளி) அடிப்பதைப்போன்ற முழக்கத் தோடு ஆவியானவர் முதன்முறை அருளப்பட்டார். பரிசுத்த ஆவியான வரைக் காற்றோடு ஒப்பிட்டுக் கர்த்தர் பேசியதை யோவா.3:8 இல் காண்கிறோம். எசே.37:9; யோவா.20:22 இலும் ஆவியானவருக்கும் காற்றுக்கும் உள்ள சில ஒருமைப்பாடுகளைக் காணலாம்.

## அக்கினிமயமான பிரிந்திருக்கும் நாவுகள் அறையில் இருந்தவர்கள் மீது அமர்ந்தன

ஆவியானவரின் அபிஷேகத்தை அக்கினியினாலும் அபிஷேகம் என்று வேதம் கூறுகிறது (மத்.3:11). பூமியின்மேல் அக்கினியைப்போட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன் என்று கர்த்தர் கூறியிருக்கின்றார் (லூக்.12:49). அக்கினியைப்போன்று ஆவியானவர் மக்களின் பாவங்களைக் கண்டித்து உணர்த்தி, தீவினைகளைச் சுட்டெரிப்பார் (யோவா.16:7–11). ஆவியானவர் அக்கினியைப்போன்று இதயத்தை உருக்குகிறார். களிம்புகளைச் சுட்டெரிக்கிறார். ஆத்துமாவில் பரிசுத்த, பக்தியுள்ள காரியங்களை அனல்மூட்டி எழுப்புகிறார்.

**பிரிந்திருக்கும் நாவுகள்**

நாவு பேசுவதற்கு உதவும் உறுப்பு. எனவே, கிறிஸ்துவைக்குறித்துப் பேசி அவரை மகிமைப்படுத்துவதற்காக ஆவியானவர் அருளப்பட்டதை நாவுகள் குறிக்கின்றன எனலாம் (யோவா.15:26; 16:14).

ஒரு மொழியில் மட்டுமன்றி உலகின் எல்லா மொழிகளிலும் கிறிஸ்துவின் நற்செய்தி பரவுவதைக் குறிக்கும் வண்ணமும், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியில் பல வரங்கள் இருப்பதைக் குறிக்கும் வண்ணமும் பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டன என்று கருதலாம் (1 கொரி.12:4–11). ஆவியானவரின் அருள்மாரி அருளப்பட்ட நோக்கங்களில் பிரசங்கங்களின் மூலம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதலே முக்கியமானது என்று நாம் காண்கிறோம் (1 கொரி.1:21).

**அக்கினி**

கர்த்தர் சீனாய் மலையில் இறங்கியபோது அக்கினியும் பலத்த சத்தமும் இருந்தன (யாத்.19:18,19). தேவன் எலியாவைச் சந்தித்தபோதும் அக்கினியும், பலத்த காற்றும் கடந்து சென்றதை 1 இராஜா.19:11,12 இல் காண்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் அக்கினி காணப்படும் (2 தெச.1:8).

**அப்.2:4 ஐப் பகுத்துப் படிப்போம்**

**அவர்கள்** : எவர்கள்? கர்த்தரைப் பின்பற்றிய 120 பேர். இவர்களைப் போலாவதற்கு என்ன செய்யவேண்டும்?

**எல்லாரும்** : எத்தனை பேர்? ஒவ்வொருவரும். விதிவிலக்கு உண்டா? இல்லை.

**பரிசுத்த ஆவியினாலே** : யார் இந்தப் பரிசுத்த ஆவியானவர்?

**நிரப்பப்பட்டு** : யார் நிரப்பப்பட்டனர்? எல்லாரும். நிரப்பியது யார்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (மத்.3:11).

**ஆவியானவர் தந்த வரத்தின்படியே** : (மூலமொழியில் இது ஆவியானவர் தந்த ஏவுதலின்படியே Utterance) – ஏவுதல் தந்தது யார்? பரிசுத்த ஆவியானவர்.

**வெவ்வேறு பாஷைகளிலே** : என்ன மொழிகளில்? பற்பல மொழிகளில்

**பேசத் தொடங்கினார்கள்** : யார்? என்ன செய்தார்கள்? அவர்கள் பேசத் தொடங்கினார்கள். ஆவியானவர் ஏவுதல் தந்தார். அவர்கள் பேசினார்கள்.

தேவன் மாறாதவர். அவருடைய வரங்களும் அழைப்புகளும் மாறாதவை. இன்றும் தம்மை நோக்கிக் கேட்கும் தம் பிள்ளைகளை இந்த வசனத்தின்படி அபிஷேகிக்கிறார். இதற்கு இந்நூலை எழுதுகிற நாங்களும் சாட்சிகள்.

**ஆவியானவரும் அந்நிய மொழிகளும்**

தாம் பொழிந்தருளப்பட்டவுடன், அந்நிய மொழிகளில் பேசுவதற்குச் சீடர்களுக்கு ஆவியானவர் அருளிச்செய்தார். அவர்கள் உலகின் பல மொழிகளைப் பேசும் மக்களிடத்திற்குச் சென்று கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சி சொல்ல வேண்டியதை உணர்த்துமாறு இச்செயல் அமைந்துள்ளது என்று வேத வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று அந்நிய மொழிகளில் பேசுகின்ற சகோதரனே, சகோதரியே, கர்த்தரைக் குறித்துச் சாட்சி சொல்லி வருகிறீரா?

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்று அந்நிய மொழிகளில் சீடர்கள் பேசியது என்ன? அவர்கள் பேசியது உளறல் அல்ல; பொருளில்லாத, கருத்துகளில்லாத சொற்கள் அல்ல. அவர்கள் அந்நிய மொழிகளில் தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் (அப்.2:11). இவ்விதம் பேசுவது ஒரு மாபெரும் கிருபையாகும். எனவே அந்நிய மொழிகளில் பேசுவதற்கு நாம் வாஞ்சிக்கவேண்டும். அனுதினமும் ஆவியானவரின் ஏவுதலால் அவர் தரும் அந்நிய மொழிகளில் தேவனுடைய மகத்துவங்களைப் பேசுவதற்குக் கவனமாக இருக்கவேண்டும்.

**ஆவியானவரின் பொழிந்தருளுதலைப் பார்க்கும் மற்றவர்களின் நிலை (அப்.2:5–13).**

அந்நாளில் எருசலேமில் பல நாடுகளிலிருந்து வந்த பலமொழிகளைப் பேசும் திரளான ஜனங்கள் என்ன செய்தார்கள்?

(i) கூடி வந்தார்கள்
(ii) தங்கள் தங்கள் மொழிகளிலே சீடர்கள் பேசுவதைக் கேட்டார்கள்
(iii) அவ்விதம் கேட்டதால் கலக்கமடைந்தார்கள்
(iv) பிரமித்துச் சந்தேகப்பட்டனர்
(v) பிரமித்து ஆச்சரியப்பட்டனர்.

உலகின் பல மொழிகளை அறியாத கலிலேயராகிய மனிதர் பலமொழிகளில் பேசுவதைக்குறித்து மக்கள் ஆச்சரியப்பட்டது இயற்கையான ஒன்றுதான். இந்தக் கட்டத்திலும், சீடர்கள் மதுபானம் குடித்திருக்கின்றனர் என்று கூறி ஏளனம் செய்தவர்களும் மக்களுக்குள் இருந்தார்கள் (வச.13).

இக்காலத்திலும் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரிக் கூட்டங்கள் நடத்தப்படும்போது ஆச்சரியப்படுகிறவர்களும், ஏளனம் செய்கிறவர்களும் உண்டு. ஏளனம் செய்யப்பட்டதைக்குறித்துச் சீடர்கள் ஆச்சரியப்படவோ, ஆத்திரப்படவோ இல்லை. நிந்தைகளை அவர்கள் சகித்தார்கள். ஏளனம் செய்யப்படவும் பயித்தியக்காரன் என்று எண்ணப்படவும் நீர் ஆயத்தமா? தேவனுக்காக நிந்தைகளைச் சகிப்பீரா?

சிலர் இந்தப் பகுதியை மேற்கோள்காட்டி அந்நிய பாஷையென்பது மற்றவர்களுக்குப் புரிவதாக இருக்கவேண்டும் என்று போதிக்கிறார்கள். அந்நாளில் கூடியிருந்ததுபோன்று வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து மக்கள் கூடியிருந்தால் இப்பொழுதும் இவ்வாறு நிச்சயம் நடைபெறும். அவ்விதம் கூடிவராத இடத்தில் மற்றவர்களுக்குப் புரியும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல.

### அருள்மாரியைப் பெற்ற சபையின் முதல் பிரசங்கம்


தேவனால் பெந்தெகொஸ்தே நாளன்று சபை உருவாக்கப்பட்டவுடன், அது உருவாக்கப்பட்ட நோக்கத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தது. தேவன் சபையை உருவாக்கிய ஒரு முக்கியமான நோக்கம் உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கவேண்டும் என்பதுதான் (லூக்.24:47; மத்.28:19,20; மாற்.16:15,16). சபை இந்த வேலையைத் தான் பிறந்தவுடன் செய்ய ஆரம்பித்தது. கிறிஸ்தவரல்லாதவருக்கு, மனந்திரும்புதலும் கிறிஸ்துவின் நாமத்தில் பாவ மன்னிப்பும் உடனடியாகப் பேதுருவால் பிரசங்கிக்கப்பட்டது. இயேசு தனக்குத் தந்த திறவுகோல்களில் ஒன்றை (மத்.16:17–19) பேதுரு இங்கு பயன்படுத்திச் சபையின் நற்செய்திப் பணியைத் தொடங்கினார். அன்று தொடங்கிய பணி இன்றும் நடந்து வருகிறது.

### ஜெபிக்கவும் செயல்படவும்

(i) ஆவியானவரின் அருள்மாரியைப் பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த அத்தனைபேரும் பெற்றுக்கொண்டனர். இப்பொழுதும் கிறிஸ்தவர் அனைவரும் பெற்றுக்கொள்ளும்படி ஜெபியுங்கள்.

(ii) அந்நிய மொழிகளைப் பேசுபவரை ஏளனம் செய்பவர்கள் இக்காலத்திலும் உண்டு. அவ்விதம் ஏளனம் செய்வோர் சத்தியத்தைக் கண்டுகொள்ளும்படி ஜெபியுங்கள்.

(iii) இக்காலத்தின் பல சபைப்பிரிவுகள் ஆத்தும ஆதாயம் செய்யாமல் இருக்கின்றன. சபை மக்களும் அவ்வாறே இருக்கின்றனர். நீர் எப்படி? ஊழியம் செய்வீராக. சபைகள் ஆத்தும ஆதாயப் பணியில் ஈடுபடுவதற்காக ஜெபிப்பதோடு, உங்கள் சபையை ஆத்தும ஆதாயப் பணிசெய்யும்படி ஏவுவீர்களாக.



# பகுதி 2

# ஆவியின் வரங்கள்

## அதிகாரம் 8

# வரம் என்றால் என்ன?

**வரம் என்றால் என்ன?**

வரம் அல்லது ஈவு என்ற சொற்கள் ஆங்கிலத்தில் **gift** என்று எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் "தத்தம்" என்றும் தமிழ் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருள் இலவசமாக அளிக்கப்படும் பொருள் அல்லது அன்பளிப்பு அல்லது வெகுமதி என்பதாகும். விலை கொடுத்து அல்லது ஏதேனும் அதற்குப் பிரதிபலனாகச் செய்து பெறுவது அன்பளிப்பு அல்ல. வேலை ஏதேனும் செய்து பெறுவதும் அன்பளிப்பு அல்ல. எனவே, வரங்கள் இலவசமாக அளிக்கப்படும் அன்பளிப்புகள் எனலாம்.

**தேவன் அருளும் வரங்கள் இலவசம்**

தேவன் தாம் அருளும் வரங்கள் (ஈவுகள், அன்பளிப்புகள்) யாவற்றையும் இலவசமாகத் தருகிறார். அவர் தாமே அதற்கான கிரயத்தைச் செலுத்தி விட்டார். அவர் செலுத்திய கிரயம் என்ன? தம்முடைய குமாரனையே கிரயமாகத் தந்தார். குமாரன் தமது இரத்தத்தையும், சரீரத்தையும், ஆவியையும், ஆத்துமாவையும் கிரயமாகச் செலுத்தினார்.

**வரங்களைத் தருவது யார்?**

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து **(Father of Lights)** இறங்கி வருகிறது என்று வேதம் கூறுகிறது (யாக்.1:17). வேறு எங்கிருந்தும் எவரிடமிருந்தும் இவை வராது.

இவ்வரங்களை மனிதர்களாகிய நமக்குத் தருவதற்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவற்றைப் பெற்றுக்கொண்டார் (சங்.68:18). துரோகிகளாகிய

மனிதர்களுக்காகப் பெற்றுக்கொண்டார் என்று எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்க. எப்படி, எப்பொழுது, எதற்காகப் பெற்றுக்கொண்டார்? உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோய், தேவனாகிய கர்த்தர் மனிதருக்குள் வாசம்பண்ணும்பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டார். ஆனால் இவ்வசனத்தைப் பவுல் எழுதும்போது வரங்களை அளித்தார் என்று எழுதியிருப்பதைக் காணலாம் (எபே.4:8). இதிலிருந்து நாம் அறிகிறது என்ன? தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காருவதற்காகப் பரலோகத்திற்குச் சென்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (மாற்.16:19) துரோகிகளாகிய மனிதர்களுக்காக வரங்களைப் பெற்று அவற்றை நமக்கு அளிக்கிறார் என்று புரிந்துகொள்ளலாம்.

மேலும், இரட்சிப்பு, ஆவியானவரின் அருள்மாரி, ஆவியின் வரங்கள் போன்றவற்றை அருளுவதில் பரிசுத்த ஆவியானவரும் ஈடுபடுகிறார் என்பதையும் நாம் உணரலாம். ஆவியின் வரங்களும், வேதத்தில் கூறப்பட்டுள்ளன. எனவே, வரங்களை அருளுவதில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் செயல் இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும்.

**வரங்களின் மாறாத தன்மை**

தேவனுடைய கிருபை வரங்கள் மாறாதவை ஆகும் (ரோம.11:29) **(The gifts and calling of God are irrevocable)**. மேலும், தேவனிடம் வரம் பெற்ற ஒருவன் பின்வாங்கிப்போய் மீண்டும் தேவனிடம் வந்தால் அவன் பெற்ற வரம் மீண்டும் செயல்படும் என்று கருதலாம். ஆனால் வரம் பெற்றவர்கள் பின்வாங்கும் போது தேவனுடைய நாமம் அவதூறாகப் பேசப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால் அவர்கள் பல இன்னல்களை அடைகிறார்கள். வரம் பெற்றவர்கள் பின்வாங்கிப்போகாதபடி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீர்க்கதரிசியாக இருந்த யோனா, கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், அவர் சொன்ன இடமான நினிவேக்குப் போகாமல் தர்ஷீசுக்குப் போனார் (யோனா 1:1–3). அவர் சென்ற கப்பல் புயலில் சிக்கும்படி கர்த்தர் செய்தார். கடைசியில் அவர் தண்ணீருக்குள் எறியப்பட்டு, ஒரு மீனால் விழுங்கப்பட்டு, அதின் வயிற்றுக்குள் இருந்தார். அங்கிருந்து ஜெபித்தபோது, தேவன் யோனாவை விடுவித்தார். மீன் அவரைக் கரையிலே கக்கிவிட்டது (யோனா 2:10). ஆனால், யோனாவுக்கிருந்த தீர்க்கதரிசன வரத்தைக் கர்த்தர் எடுத்துப் போடவில்லை. மீண்டும் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாயிற்று. அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பதை யோனா 3:1–4 இலிருந்து காண்கிறோம்.

இவ்வாறே பேதுரு மறுதலித்த போதிலும் மீண்டும் ஊழியத்தைத் தேவன் அருளிச் செய்ததையும் பேதுருவின் மூலமாய் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அநேகரை இரட்சிப்பிற்குள் நடத்தியதையும் நாம் வாசிக்கிறோம்.

தேவனுடைய கிருபை வரங்களும், அவர் அழைத்த அழைப்பும் மாறாதவை என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள்.

வரம் பெற்ற தேவதாசர்கள் பின்மாற்றமாயிருக்கும்போதும் வரங்கள் மூலம் சில செயல்களைச் செய்வதை நாம் காண்கிறோம். இதைக்குறித்து நாம் ஆச்சரியப்படக்கூடாது. இவ்வாறு நடக்கக்கூடும்.

**வரங்களால் கிரியை நடப்பித்தல் வேறு, பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வது வேறு**

வரங்களைப் பெற்று அவ்வரங்களின் மூலம் பெரிய கிரியை செய்யும் சிலர் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளாததை நாம் காண்கிறோம். எனவே, வரங்களைப் பெற்று அவற்றின்மூலம் கிரியை நடப்பிப்பதும் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதும் வெவ்வேறு காரியங்கள் என்று காண்கிறோம். வரங்களைப் பயன்படுத்துவது நல்லதுதான். அதினினும் நல்லது பரிசுத்தத்தைக் காத்துக்கொள்தல். பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளாவிடில் வரங்களின் செயல்பாடு குன்றிப்போகும்; பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளாததற்கான தண்டனைகளையும் அடைய நேரிடும்.

அவர்களுடைய வரங்களினாலே அவர்களை அறிவீர்கள் என்று கர்த்தர் கூறவில்லை. ஆனாலும் உலகம் வரங்களையே பெரிதாகக் கருதுகிறது. தேவனோ, 'அவர்கள் கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்' என்று கூறியுள்ளார் (மத்.7:20). எனவே, நாம் நல்ல கனிகளைக் கொடுப்பது மிகவும் அவசியம். வரம் பெற்ற சகோதரரே, உம் வாழ்க்கையில் ஆவியின் கனி இருக்கும்படி மிகவும் கவனமாயிருப்பீராக.

**தேவனிடமிருந்து வரங்கள் பெறுவதற்கு நிபந்தனைகள் உண்டா?**

தேவன் தமது வரங்களை இலவசமாகத் தந்தபொழுதிலும் அவற்றைப் பெறுவதற்குச் சில நிபந்தனைகளை வைத்துள்ளார். நிபந்தனைகள் மிகச் சிறியவை, எளிதானவை. ஆனால் வரங்களோ மிகவும் சிறந்தவை. வரங்களைப் பெறுவதற்கு நமக்குத் தகுதி ஒன்றும் இல்லாதபோதிலும், சில நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியே தீர வேண்டும்.

எடுத்துக்காட்டுகளாக, பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிட்டால் மன்னிப்பு அளிக்கிறார்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் இரட்சிப்பைத் தருகிறார்; இரட்சிப்புப் பெற்றவர்கள் கேட்டால் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைத் தருகிறார்.

நிபந்தனைகள் எளிது, வரங்கள் சிறந்தவை. ஆயினும் நிபந்தனைகளை நிறைவேற்றாதவர்களுக்கு வரங்கள் இல்லை.

**வரம் பெற்றவர்கள் மேன்மை பாராட்டலாமா?**

வரத்தைப் பெறுவதற்கான நிபந்தனையை ஒரு மனிதன் நிறைவேற்றிய போதிலும் தேவனுடைய கிருபையினாலேதான் அவன் வரங்களைப் பெறுகிறான். எனவே அவன் மேன்மைபாராட்டுவதற்கு ஒன்றுமில்லை. மேலும், இலவசமாகப் பெற்றதைக்கொண்டு பெருமைப்படுதல் தவறன்றோ!

தன்னுடைய தகுதியின்மையிலும் வரம் கிடைத்ததை நினைத்து, தேவனுக்கு நன்றியோடு ஊழியம் செய்வதே சரியாகும். மேலும், தன் தகுதியின்மையை உணர்ந்து தாழ்மையோடு நடந்துகொள்ளவேண்டும்.

தாழ்மையோடு நடந்துகொள்ளவேண்டும் என்பதற்காக வரத்தைப் பயன்படுத்தாமல் சும்மா இருக்கக்கூடாது. தேவன் தரும் தாலந்திற்குக் கணக்குக் கேட்பார். எனவே, வரம் பெறுகிற தேவதாசர்கள் தாங்கள் பெறும் வரத்தைத் தாழ்மையோடு பயன்படுத்தியே ஆகவேண்டும்.

**சிந்திக்க**

(i) வரம் என்றால் என்ன?
(ii) வரங்களைத் தருவது யார்?
(iii) வரங்களால் கிரியை நடப்பித்தலும் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வதும் ஒன்றுதானா?
(iv) வரம் பெறுவதற்கு நிபந்தனை உண்டா?
(v) வரம் பெற்றவர்கள் என்ன செய்ய வேண்டும்?

**தியானிக்க :** மத்.7:1–27; யாக்.1:17.

## அதிகாரம் 9

# பொதுவான வரங்கள்

### ஆரோனுக்கும் அவன் சந்ததிக்கும் ஈவு

பழைய ஏற்பாட்டில் ஆசாரிய ஊழியம் ஆரோனுக்கும் அவருடைய சந்ததிக்கும் ஈவாக (தத்தமாக) அளிக்கப்பட்டது (எண்.18:7). மேலும், ஆசாரிப்புக் கூடார வேலைகளைச் செய்வதற்கு அவர்களின் தலைமையில் வேலை செய்யும்படியாக லேவியரை அவர்களுக்கு ஈவாக (தத்தமாக) அளித்தார் தேவன் (எண்.8:19; 18:6).

இக்காலத்தில் தேவன் நம் யாவரையும் ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தியுள்ளார் (1 பேது.2:9; வெளி.1:6). எனவே, இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இது தேவன் நமக்கு அளித்துள்ள ஓர் ஈவு.

### தன் உழைப்பின் பலனை அனுபவிப்பதும் ஓர் ஈவுதான்

அநேகர் தங்கள் உழைப்பின் பலனை அனுபவிப்பதில்லை. சிலர் மட்டும் அனுபவிக்கிறார்கள். பலருடைய உழைப்பின் பலனை அவர்கள் சந்ததியார் அனுபவிக்கிறார்கள். சிலருடைய உழைப்பின் பலனை அவர்களுடைய சந்ததியாரும் அனுபவிப்பதில்லை. மேலும், சிலருடைய உழைப்பின் பலனை அவர்களின் எதிரிகள் அனுபவிப்பதும் உண்டு. தங்களின் உழைப்பின் பலனைத் தாங்கள் அனுபவிப்பதும் தேவன் அருளும் ஈவுகளில் ஒன்றாகும் (பிர.3:13; 5:18–19). இவ்வாறு அனுபவிப்பது தானாக நடக்கும் ஒன்று என்று பலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் தங்கள் முயற்சியின் பலனை அபகரிக்கும் போது அவர்கள் மிகவும் மனம் நொந்து தங்கள் வாழ்க்கையையே வெறுக்கும் அளவிற்கு வருகிறார்கள். தேவனுடைய ஈவைத் தானாக நடக்கிறது என்று எண்ணக்கூடாது. நாம் உழைப்பதற்கும், அதில் பலன் உண்டாவதற்கும் அதை நாம் அனுபவிப்பதற்கும் தேவனுடைய அருள் முக்கியமாகும். எனவே இவற்றிற்காக நன்றி செலுத்துவோம்.

இதைக்குறித்து தேவனுடைய வாக்குறுதி ஒன்று உண்டு. அந்த வாக்குறுதி என்ன? உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் (சங்.128:2). இந்த வாக்குறுதி யாருக்குச் சொந்தம்? கர்த்தருக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடக்கிறவனுக்கு இந்த வாக்குறுதி உரிமையாகும் (சங்.128:1). நமக்கு இந்த வாக்குறுதி சொந்தமாக வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் என்று ஆராய்ந்துபார்த்து நம் வாழ்க்கையைச் சரி செய்யக்கடவோம். நிபந்தனைகளை நிறைவேற்றும் ஒவ்வொருவருக்கும் இந்த ஈவு சொந்தமாகும்.

**தேவனுடைய வரங்களில் மிகவும் சிறந்தது எது?**

தேவனுடைய வரங்களில் மிகவும் சிறந்தது இரட்சிப்பு ஆகும். எபே.2:8 இல் மிகவும் தெளிவாக இது எழுதப்பட்டுள்ளது. ரோமர் 5:15–18; 6:23, இலிருந்து இந்த ஈவின் கூறுகளை ஆராய்ந்துபாருங்கள்.

இது கிருபை வரம் என்று மீண்டும், மீண்டும் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்க. கிருபையில் பூரணராகிய நம் தேவனுக்கு அனுதினமும் இதற்காக நன்றி செலுத்துவது நமது கடமை.

மனந்திரும்பிக் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவருக்கும் இந்த வரம் நிச்சயம் உண்டு (மாற்.16:16).

**ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும் வரம்**

அப்.2:38,39; 10:46; 11:17 என்ற பகுதிகளைக் கவனித்துப் படித்தால் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியும் (அபிஷேகமும்) தேவனுடைய வரம் என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்த வரமும் சிறந்ததொன்றாகும். ஆனால் இரட்சிப்பு என்னும் கிருபை வரத்தைப் பெற்றிருக்கும் மக்களுக்கே இந்த வரம் அருளப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் அல்லவா (மத்.25:29)?

இந்த வரத்தையும் யாவரும் பெற்றுக்கொள்ள முடியும். இரட்சிப்பைப் பெற்றபின்னர் திறந்த மனதுடனும், மிகுந்த வாஞ்சையுடனும் விசுவாசத்துடனும் இவ்வரத்தை (பரிசுத்த ஆவியின் அருள்மாரியை) அருளுமாறு தேவனிடத்தில் கேட்கும் ஒவ்வொருவருக்கும் இது தரப்படுவது அதிக நிச்சயமாகும் (லூக்.11:9–13). இவ்வரத்தைப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறுதல் என்று அழைக்கிறோம்.

**கைகளை வைத்து ஆவியானவரின் திருமுழுக்கிற்கு வழிநடத்தும் வரம்**

கைகளை ஒரு மனிதன்மேல் வைப்பதின்மூலம் ஆவியானவரின் திருமுழுக்கிற்கு அவனை நடத்துவது ஒரு வரம் என்பதை அப்.8:18–20 இல் இருந்து புரிந்துகொள்கிறோம். இந்த வரம் பெற்றவர்கள் இதற்காகக் கைகளை வைத்து ஜெபிக்கலாம். ஆனால் இவர்கள் கைகளை வைத்த போதிலும், பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குத் தருவது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே (மத்.3:11). மேலும், தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றியவர்களுக்கே இத்திருமுழுக்குக் கிடைக்கும். எனவே, இவ்வரம் பெற்றவர்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும் முன்பு அவர்கள் இரட்சிப் படைந்திருக்கிறார்களா என்பதைக் கவனிக்கவேண்டும். ஆவியானவரின் திருமுழுக்கைப்பற்றி எடுத்துக்கூறவேண்டும். கிடைப்பது நிச்சயம் என்பதை லூக்.11:9–13 போன்ற பகுதிகளிலிருந்து விளக்கவேண்டும். இதற்காக ஜெபிக்கத் தொடங்குவதற்கு முன்பே அந்தகார சக்திகளைக் கடிந்து ஜெபிப்பது நல்லது.

இரட்சிப்பையும் ஆவியானவரின் திருமுழுக்கையும் பெற்றிருக்கிற வர்களில் சிலருக்கு மட்டும் கைகளை வைத்து ஆவியானவரின் திருமுழுக்கிற்கு நடத்தும் வரம் அருளப்பட்டிருப்பதை நாம் அனுபவத்தில் இருந்து காணலாம். அப்போஸ்தலரல்லாத சில சாதாரண சீடர்களுக்கும் இந்த வரம் அருளப்பட்டிருக்கிறது என்பதை அனனியா என்ற சீடன் பரிசுத்த ஆவியானவரைப் பெறும்படி சவுலின்மேல் கைகளை வைத்ததிலிருந்து அறிகிறோம் (அப்.9:17).

இக்காலத்திலும் இந்த வரம் பெற்ற தேவ பிள்ளைகளான சகோதர, சகோதரிகள் உண்டு. அவர்களைப் பயன்படுத்துதல் நல்லது. இந்நூலின் ஆசிரியர்கள் இருவரும் தேவ கிருபையால் இதைப் பெற்று ஆயிரக்கணக் கானோரைப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு வழிநடத்தி வருகிறோம்.

**தியானிக்க :** எபே.2:1–22; பிர.3:13.

## அதிகாரம் 10

# ஆவிக்குரிய வரங்கள்

### ஆவிக்குரிய வரங்கள் (Spiritual Gifts)

சென்ற அதிகாரத்தில் நாம் படித்த வரங்கள் தவிர பல வரங்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும், ஆவிக்குரிய வரங்கள் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒன்பது வரங்கள் இருக்கின்றன. இவற்றைக் குறித்து நாம் படிக்கப்போகிறோம். இந்நூலின் எஞ்சிய பகுதிகளில் வரங்கள் என்று எழுதுவது இந்த ஒன்பது வரங்களையே குறிக்கும். இவற்றை ஆவிக்குரிய வரங்கள் அல்லது ஆவியின் வரங்கள் என்று குறிப்பிடுவோம் **(Spiritual gifts or gifts of the Spirit)**. இந்த வரங்களைக்குறித்த பொதுவான காரியங்களை நாம் முதலில் காண்போம். பின்னர் ஒவ்வொரு வரத்தையும் சற்று விளக்கமாகக் காணலாம்.

### ஆவியின் வரங்கள் என்றால் என்ன?

ஆவியானவரால் ஒரு கிறிஸ்தவனுக்கு அருளப்படும் 'இயற்கைக்கு மேலாகச் செயல்படும் ஒரு குறிப்பிட்ட வல்லமை, அல்லது திறமை' ஆவியின் வரம் ஆகும். இயற்கைக்கு மேற்பட்ட கிரியைகள் இல்லாதவை ஆவிக்குரிய வரங்கள் அல்ல. '**ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாச வரம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல மொழிகளைப் பேசுதல், மொழிகளை வியாக்கியானம் பண்ணுதல்**' என்ற இந்த ஒன்பது வரங்களும் ஆவியானவரால் அருளப்படுகின்றன **(1 கொரி.12:8-11)** என்பதால் இவற்றை ஆவியின் வரங்கள் என்று கூறுகிறோம். பொதுவாக ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்களே இவ்வரங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

### ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கே வரங்கள்

ஒரு சபைப்பிரிவிற்கென்று அல்லது குழுவிற்கென்று ஒட்டுமொத்தமாக ஒரு வரத்தை ஆவியானவர் அருளிச்செய்வது இல்லை. சபையிலுள்ள

தனிப்பட்ட மனிதர்களுக்கே வரங்கள் அருளப்படுகின்றன **(A gift is not given to the whole church as such, but to individuals in the church)**. ஆனால், வரம் பெற்ற தனிமனிதர் யாராயிருந்தாலும், தனது புகழுக்கென்றும் தனக்குப் பொருளீட்டுவதற்கென்றும் வரத்தைப் பயன்படுத்தாமல், தேவனுடைய நாம மகிமைக்கென்றும் சபைமக்களுக்குப் பயனளிப்பதற்கென்றும் நற்செய்திப் பணிசெய்து மக்களைக் கிறிஸ்துவிடம் சேர்ப்பதற்கென்றும் பயன்படுத்த வேண்டும்.

**ஆவியின் வரங்கள் இயற்கையான திறமைகள் அல்ல**

ஆவியின் வரங்கள் என்பது ஒரு மனிதனின் இயற்கையான திறமைகளைக் குறிக்காது. எடுத்துக்காட்டாக, ஓர் ஊழியக்காரனுக்குக் கம்பீரமான குரல் இருப்பது தேவன் அருளிய கிருபைதான். ஆனால் அது ஆவிக்குரிய வரமல்ல. இசைக்கருவிகளை நன்றாக இயக்கும் திறமையும், தேவனுடைய கிருபையினால் கிடைத்ததுதான். ஆனால், இது ஓர் ஆவிக்குரிய வரம் ஆகாது.

**ஆவியின் வரங்களும் ஆவியின் கனியும்**

ஆவிக்குரிய வரங்களும் ஆவியின் கனியும் வெவ்வேறானவை. கலா.5:22,23 இலிருந்து ஆவியின் கனி

(i) அன்பு (ii) சந்தோஷம் (iii) சமாதானம் (iv) நீடிய பொறுமை (v) தயவு (vi) நற்குணம் (vii) விசுவாசம் (viii) சாந்தம் (ix) இச்சையடக்கம் என்று காணலாம். வரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவை வரங்கள் அல்ல என்று காணலாம். விசுவாசம் என்பது மட்டும் வரங்களின் பட்டியலிலும் கனியிலும் வருவதைக் கவனிக்கவும். இதற்கான விளக்கத்தை விசுவாச வரத்தைத் தனியாகத் தியானிக்கும்போதும் ஆவியின் கனியாகிய விசுவாசத்தைத் தியானிக்கும்போதும் காண்போம்.

**ஆவியின் வரங்களும், ஊழியங்களும்**

பொதுவாக ஐந்து ஊழியங்கள் சபையில் இருப்பதாக வேதவல்லுநர்கள் கருதுகிறார்கள். இவற்றை எபே.4:13 இல் காண்கிறோம். இவையாவன (i) அப்போஸ்தலர் (ii) தீர்க்கதரிசிகள் (iii) சுவிசேஷகர் (iv) மேய்ப்பர் (v) போதகர். இவை வேறு, ஆவிக்குரிய வரங்கள் வேறு என்பதை வரங்களின் பட்டியலையும் இதையும் ஒப்பிட்டால் புரிந்துகொள்ளலாம். சில ஊழியங்களுக்கும் சில வரங்களுக்கும் தொடர்பு இருக்கலாம்; சில ஊழியருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வரங்கள் இருக்கலாம். ஊழியர்

வரங்களைப் பெற்றிருப்பது மிகவும் நல்லது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், பொதுவாக ஊழியங்களும் வரங்களும் வேறுபட்டவை. சபையில் மூப்பர்களும் ஊழியரும் ஆவிக்குரிய வரங்கள் பெற்றிருப்பது நல்லதுதான். ஆனால் இப்பொறுப்புகள் வேறு, ஆவிக்குரிய வரங்கள் வேறு.

**ஆவியின் வரங்களும் அடையாளங்களும்**

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் எவை? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துதல், நவமான மொழிகளைப் பேசுதல், சர்ப்பங்களை எடுத்தல், சாவுக்கேதுவானவற்றைக் குடித்தும் சேதமின்றி இருத்தல், வியாதியுள்ளோரின்மேல் கைகளை வைப்பதினால் அவர்கள் குணமடைதல் (மாற்.16:17,18). இவ்வடையாளங்கள் எல்லா விசுவாசிகளுக்கும் (இவற்றை முழுமையும் விசுவாசிக்கிற யாவருக்கும்) உண்டு. இவை அடையாளங்களாகச் செயல்படுகின்றன. ஒருவர் மூலம் பெரிய அளவில் செயல்படும்போது வரம் செயல்படுகிறது என்று கருதுகிறோம்.

**வரம் பெற்றவர் என்பது யாரைக் குறிக்கிறது?**

ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரின் மூலமும் ஆவிக்குரிய அத்தனை வரங்களும் செயல்பட முடியும். ஆனால் சில குறிப்பிட்ட வரங்கள் ஒரு சிலர் மூலம் பெரிய அளவில் வெளிப்படுத்தப் படுகின்றன. இவர்களை வரம் பெற்றவர்கள் என்று கூறுகிறோம். ஆனால், மக்களின் தேவைகளைச் சந்திப்பதற்காக, அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவர் மூலமும் தேவன் தமது வரங்களைச் செயல்படுத்துகிறார்.

**ஆவியின் வரங்கள் யாருக்குக் கிடைக்கும்?**

ஆவியானவரின் சித்தத்தின்படியே இவ்வரங்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. அவனவனுடைய பயன்படுத்துதலுக்கென்று அளிக்கப் படுகின்றன (1 கொரி.12:7,11). வரத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கேற்ப ஆவியானவரின் வரங்கள் வெளிப்படுகின்றன. யாருக்கு எந்த வரத்தைக் கொடுப்பது என்று தீர்மானிப்பது ஆவியானவரே.

**வரங்களுக்காகப் பணம் கொடுக்க முடியுமா?**

ஆவிக்குரிய வரங்களைப் பணம் கொடுத்து வாங்க முடியாது. அவ்வாறு முயற்சிப்பது கொடிய பாவம் (அப்.8:18–20).

**வரங்களுக்காக ஜெபிக்கலாமா?**

ஆவியானவர் தமது சித்தத்தின்படி வரங்களைப் பகிர்ந்தளிக்கிறார் என்று பார்த்தோம். ஆயினும் வரங்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். குறிப்பிட்ட வரங்களை நாடவேண்டும் என்றும், ஜெபிக்கவேண்டும் என்றும் வேதம் கூறுகிறது (1 கொரி.12:31; 14:1,13). இது முரண்பாடு அல்ல. நாம் ஒரு குறிப்பிட்ட வரத்தை நாடுகிறவர்களானால் (அதற்கு வாஞ்சையுள்ளவர் களானால்) அதற்காக ஜெபிக்க ஆரம்பிக்கிறோம். அதன் தேவையை உணருகிறவர்களாகவும் அதைப் பயன்படுத்தும் விதத்தைச் சிந்திக்கிறவர் களாகவும் இருப்போம். இந்நிலையை அடையும்போது நமது ஊழியத்தில் அது அதிகமாகத் தேவைப்படுகிறது. இது, நமது பயன்படுத்துதலுக்கென்று அவர் அளிக்கச் சித்தம்கொள்ள ஏதுவாகிறது. எனவே, இவ்வாறு ஜெபித்தல் ஆவியானவரின் சித்தத்தை மாற்றுகிறது என்று கருதாமல் அவ்வரத்தைப் பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்துகிறது என்று கருதுவதற்கு இடமுண்டு. வரங்களுக்காக ஊக்கமாக ஜெபிப்போமாக.

**ஒரு கிறிஸ்தவனுக்குப் பல வரங்கள் இருக்குமா?**

ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வரங்கள் இருக்கலாம். பவுலின் மூலமாக பல வரங்கள் செயல்பட்டதை, பவுலின் வாழ்க்கையின் பல கட்டங்களைத் தியானித்தால் புரிந்துகொள்ளலாம். ஆனால் பொதுவாக, ஒரு மனிதன் மூலமாக ஒன்பது வரங்களும் ஒருங்கே செயல்படுவது அரிது.

**வரங்களில் வித்தியாசங்கள், மேன்மையானவை உண்டா?**

வரங்களில் வித்தியாசம் உண்டு என்று வேதம் கூறுகிறது (1 கொரி.12:4, 31; 7:7). வரங்களின் மேன்மையிலும் வித்தியாசங்கள் உண்டு என்று நாம் 1 கொரி.14:5 இலிருந்து புரிந்துகொள்கிறோம். ஆனால், எல்லா வரங்களும் தேவை என்பதையும் வரம் பெற்றவர்கள் ஒருவருக்கொருவர் இன்றியமையாத வர்கள் என்பதையும் நாம் உணரவேண்டும்.

**வரங்கள் ஒழிந்துபோய்விட்டனவா?**

பரிசுத்த வேதாகமம் எழுதி முடிந்தவுடன் அந்நிய பாஷைகளும், தீர்க்கதரிசனங்களும், அற்புதங்களும், வரங்களும் ஒழிந்துபோயின என்று கருதுபவர்கள் உண்டு. இதற்கு ஆதாரமாக 1 கொரி.13:8–12 ஐக்

காட்டுகிறார்கள். இதில் 'நிறைவானது' என்பது வேதாகமம் முற்றுப் பெற்றதைக் குறிக்கிறது என்று கூறுகிறார்கள். இதற்குக் கர்த்தருடைய வேதம் குறைவற்றது (சங்.19:7 **Perfect**) என்ற வசனத்தை ஆதாரமாகக் கூறுகிறார்கள். ஆனால் **Perfect** என்பது 1 கொரி.2:6 இல் தேறினவர்கள் என்றும் மத்.5:48 இல் பூரணசற்குணர் என்றும் இருப்பதுபோன்ற பல பகுதிகளைப் பார்க்கும்போது இப்பகுதியானது வேதம் முற்றுப்பெற்றதை மட்டும் குறிப்பிடுகிறது என்று எடுத்துக்கொள்ள முடியாது.

மேலும், இப்பகுதியில் கூறப்பட்டபடி முகமுகமாய்ப் பார்ப்பதும் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வதும் (1 கொரி.13:12) இன்னும் வரவில்லை. எனவே, இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவானது கர்த்தரின் இரண்டாம் வருகையின்போது அல்லது புதியவானம் புதிய பூமியில் இருக்கும் என்று அறிந்துகொள்கிறோம். நாம் முகமுகமாய் இயேசுவைக் காணும்போது வரங்கள் தேவையிருக்காது. அப்பொழுது அவை ஒய்ந்துபோகும்.

இது தவிர வேதம் முழுவதும் எழுதி முடிக்கப்பட்ட பின்னர் சபையில் வரங்கள் கிரியை செய்ததைச் சபை சரித்திரத்தில் காண்கிறோம். எனவே வேதம் எழுதி முடிந்ததும் நிறைவானது வந்துவிட்டது என்பதும், இனி வரங்கள் இல்லை என்பதும் தவறுகளாகும்.

செடியில் பழுத்திருக்கும் திராட்சைப் பழத்தைக் குதித்துத் தின்ன முடியாத ஒரு நரி, "இந்தப் பழம் புளிக்கும்" என்று கூறுவதுபோன்று இப்படிப்பட்டவர்கள் கூறுகிறார்கள். அதாவது, தங்களுக்குக் கிடைக்காத எதையும் இல்லையென்று கூறுவது இவர்கள் வழக்கமாகிவிட்டது. இவர்கள் திருப்பிப் போடப்படாத அப்பங்களுக்குச் சமமானவர்கள் (ஓசியா 7:8). தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் உண்டு (2 தீமோ.3:5). இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு என்று வேதம் கூறுகிறது.

**வரங்களைக்குறித்து கவனமின்மை**

வரங்களைக்குறித்து அசதியாக இருக்கக்கூடாது என்று வேதம் கூறுகிறது (1 தீமோ.4:14). நாம் பெற்ற வரங்களை அனல் மூட்டி எழுப்ப வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது (2 தீமோ.1:6). எனவே, வரங்களைப் பெறுவதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் கவனமாக இருப்போமாக.

**வரங்கள் எதற்காகத் தேவை?**

a) உலக முழுவதிலும் நற்செய்திப்பணி இன்னும் முடியவில்லை. வரங்களின்றி நற்செய்திப்பணியை முழுத்திறமையுடன் செய்ய இயலாது. நற்செய்தி அறிவிப்பவர்களுக்கு வரங்கள் தேவை.

b) எலியா வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்துப் பலியைப் பட்சிக்கும்படி செய்தது (1 இராஜா.18:36,37), தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், தான் கூறும், ஆராதிக்கும் தெய்வமே உண்மையான தேவனென்றும், தான் அவருக்கு ஊழியம் செய்கிறவர்களென்றும், தேவன் தம்மிடமாகத் தங்கள் இருதயத்தைத் திருப்புகிறவர் என்றும் மக்கள் அறிவதற்காகவே. இதே நோக்கத்திற்காக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்வதற்கு வரங்கள் தேவைப்படுகின்றன. எலியா செய்த அற்புதத்தைக் கண்ட இஸ்ரவேலர் எலியாவின் காலத்தில் கர்த்தரிடம் திரும்பியதுபோல இக்காலத்திலும் கிராமங்களிலும், நகரங்களிலும், மாவட்டங்களிலும், மாநிலங்களிலும், நாடுகளிலும் மக்கள் தேவனை அறிந்துகொள்ளும்படியாக வரங்கள் அவசியம் தேவை.

c) தேவனுடைய சபையைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவும், தேவனுடைய மக்களின் ஆவிக்குரிய, சரீர தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும், பிசாசின் பிடியினின்று மக்கள் விடுவிக்கப்படும்படியாகவும், சபையைச் சரியாக வழி நடத்துவதற்குத் தேவ ஆலோசனைகளைக் கூறவும் வரங்கள் தேவை. பல தரப்பட்ட அவயவங்களாயுள்ள சபையின் உறுப்பினரை ஒருங்கே இணைத்துச் செயல்படுத்துவதற்கும் வரங்கள் தேவை.

d) தவறான போதகங்களும், வஞ்சிக்கிற ஆவிகளும் சபைகளைக் கெடுத்துப்போடாதபடி அவற்றை அடையாளங்கண்டு விலக்குவதற்கு வரங்கள் தேவை.

**வரங்கள் அருளப்படுவதற்குக் கைகளை வைத்து ஜெபித்தல் முறைதானா?**

மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் தீமோத்தேயுவிற்கு வரங்கள் அருளப்பட்டதை 1 தீமோ.4:14 இல் காண்கிறோம். பவுல் கைகளை வைத்ததாலும் இவ்விதம் தீமோத்தேயுவிற்கு வரம் அருளப்பட்டதை 2 தீமோ.1:6 இல் காண்கிறோம். மேலும் ரோமாபுரியிலுள்ள சீடர்களுக்கு ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும்படி அவர்களிடம் வருவதற்குப் பவுல் விரும்பியதை ரோமர் 1:10 இல் வாசிக்கிறோம். ஆவிக்குரிய வரங்களைத் தருபவர் ஆவியானவரே. எனவே, பவுல் கைகளை வைப்பதின் மூலமும் ஆவியானவர் வரம் ஈந்தார் என்று புரிந்து கொள்கிறோம். இக்காலத்திலும் வரங்களை அருளுவதற்காகக் கைகளை வைக்கும்படி ஆவியானவர் தெளிவாக ஏவினால் அவ்வாறு ஏவப்பட்டவர்கள் கைகளை வைத்து ஜெபிக்கலாம். ஆனால், தெளிவான ஏவுதல் இல்லாமல் இவ்வாறு செய்தல் நல்லதல்ல.

**எல்லா வரங்களும் செயல்பட்ட சபை உண்டா?**

கொரிந்து சபையில் எல்லா வரங்களும் இருந்ததை 1 கொரி.1:7 இலிருந்து அறிந்துகொள்ளலாம். இவ்விதமாக இக்காலத்துச் சபைகளும் இருந்தால் தேவனுடைய நாமம் மகிமைப்படும் அல்லவா? இனிவரும் நாட்களில் உலகிலுள்ள எல்லா ஊர்களிலும் உள்ள எல்லாச் சபைப்பிரிவுகளிலும் அனைத்து வரங்களும் கிரியை செய்யும்படி ஊக்கமாக வேண்டிக்கொள்வோமாக.

**வரங்களைப் பெறுவதற்கு விசுவாசமும் ஜெபமும் தேவை**

எந்த ஒரு விசுவாசிக்கும் ஆவியின் வரங்கள் அருளப்படலாம். புதிய ஏற்பாட்டுக் காலமான இக்காலத்தில் பொதுவாகப் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்களுக்கே வரங்கள் அருளப்படுகின்றன. விசுவாசத்தோடு கூடிய ஜெபத்தினாலே வரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வரங்கள் கிரியை செய்தனவா?**

ஆம். பழைய ஏற்பாட்டில் பலர் தீர்க்கதரிசன வரம் பெற்றுத் தீர்க்கதரிசனம் உரைத்ததை நாம் வாசிக்கிறோம். எலியாவும் எலிசாவும் அற்புதங்களைச் செய்யும் சக்தியை உடையவர்களாயிருந்தனர். மரித்தவர்களையும் இவர்கள் எழுப்பினார்கள். மோசே செய்த அற்புதங்களையும் நாம் அறிந்திருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்ததைவிட இக்காலத்தில் வரங்கள் செயல்படுவது அதிகமாக இருக்கவேண்டும். கிறிஸ்து வரங்களைப் பெற்று மனிதராகிய நமக்கு அளித்துள்ளார் என்று ஏற்கனவே பார்த்தோம். தாம் செய்ததைவிடப் பெரிய கிரியைகளை நாம் செய்வோம் என்று கர்த்தரே உரைத்துள்ளார் (யோவா.14:12). எனினும், இக்காலத்தில் அவ்விதமாகப் பெரிய அளவில் வரங்கள் கிரியைசெய்வதுபோன்று தோன்றவில்லை. எனவே, நாம் விசுவாசத்துடன் ஜெபித்து வரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுவது மட்டுமல்லாது, உலகெங்குமுள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய வரங்களைப் பெற்று பலத்த கிரியைகளைச் செய்யுமாறு ஜெபிக்க வேண்டியதும் நமது கடமை.

**வரம் இல்லாத விசுவாசி இல்லை**

வரங்கள் இல்லாத விசுவாசி ஒருவரும் கிடையாது. ஏதேனும் ஒரு அளவில் ஆவிக்குரிய வரங்கள் ஒவ்வொரு விசுவாசியின் மூலமும் செயல்பட முடியும். ஆனால் ஒரு குறிப்பிட்ட வரம் ஒரு விசுவாசியின் மூலம் அதிக அளவில் தொடர்ந்து செயல்படுமானால் அந்த விசுவாசியை அவ்வரத்தைப்

பெற்றவர் என்று கூறுகிறோம். மற்றவர்கள் அவ்வரத்தைப் பயன்படுத்த முடியாது என்று கிடையாது.

எடுத்துக்காட்டாக ஒரு நோயாளியைச் சந்திப்பதற்கு ஒரு விசுவாசி சென்றால் "குணமாக்கும் வரம் எனக்கு இல்லை. எனவே நான் ஜெபித்துப் பலன் இல்லை" என்று கருதக்கூடாது. எந்த விசுவாசியின் மூலமாகவும் குணமாக்கும் வரம் தேவைக்கேற்ப செயல்படமுடியும். இவ்விதமாக எந்த ஒரு விசுவாசியின் மூலமாகவும் எந்த ஒரு ஆவிக்குரிய வரமும் செயல்பட முடியும். எனவே ஊழியத்தில் விசுவாசத்தோடு வரங்களைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். வரம் பெற்றவர் என்று ஒருவரைக் குறிப்பிடும்பொழுது ஒரு குறிப்பிட்ட வரம் அவர் மூலம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்று பொருள். இவ்விதமாக நாம் வெவ்வேறு வரங்களை உடையவர்களாக இருக்கிறோம் (ரோம.12:6). பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படி வரங்களை நமக்குப் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி.12:11).

**நமக்கிருக்கும் வரத்தைக் கண்டுகொள்வது எப்படி?**

நமக்கு என்ன வரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுகொள்வதற்கு, சில ஆலோசனைகள் தருகிறோம்.

(i) ஊழியத்தின் எப்பகுதியில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்று முதலாவது கண்டுபிடியுங்கள். நோயாளிகளைச் சந்திக்கும் ஊழியம் செய்பவர்கள் குணமாக்கும் வரம் செயல்பட எதிர்பாருங்கள். போதகராக அழைப்புப் பெற்றவர்கள் தங்களுக்கு ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அறிவை உணர்த்தும் வசனமும் அளிக்கப்பட்டிருக்கிறதென்று விசுவாசிக்கலாம். புறமதத்தினர் மத்தியில் செயல்படுகிற ஊழியர்கள் தங்களுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எதிர்பார்த்து ஊழியம் செய்யலாம். இவ்வாறு செயல்பட்டு உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரத்தைக் கண்டுபிடியுங்கள்.

(ii) நீங்கள் மற்றவர்களைவிட ஊழியத்தின் எப்பகுதியில் சிறப்பாகச் செயல்படுகிறீர்கள் என்று கண்டுபிடித்து அதற்கேற்ற வரம் உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளுங்கள்.

(iii) உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரத்தைக் கண்டுபிடிப்பதற்காகச் செயல்படுங்கள். நோயாளிகளைச் சந்தித்து ஜெபியுங்கள். அடிக்கடி சிறு குழுக்களாகக் கூடி ஜெபியுங்கள். அவ்விதம்

ஜெபிக்கும்போது அந்நிய மொழி வரமும் வியாக்கியான வரமும் தீர்க்கதரிசன வரமும் செயல்படுவதை அறிந்துகொள்ளலாம். அற்புதங்களுக்காக ஜெபித்து அதைப் பெற்றுக்கொள்வதின்மூலம் அற்புதங்களைச் செய்யும் சக்தி என்னும் வரத்தை அறிந்து கொள்ளலாம்.

(iv) ஒரு குறிப்பிட்ட வரத்திற்காக நாம் ஜெபிக்கும்போது அதை நமக்குத் தந்திருப்பதை ஆவியானவர் நமது உள்ளத்தின் ஆழத்தில் வெளிப்படுத்தக்கூடும். சில வேளைகளில் தீர்க்கதரிசனத்தின் மூலமாகவும் நமக்கு ஆவியானவர் வெளிப்படுத்துவார் (1 தீமோ.4:14). பலர் தங்களால் நடக்கும் செயல்களின் மூலமாகவே அறிந்துகொள்கின்றனர்.

சகோதரனே, தேவன் உமக்கு அளித்துள்ள வரங்களை அறிந்து கொள்ளக் கிருபை தரும்படி ஜெபித்து, அறிந்துகொண்டு, பயன்படுத்து வீராக. தேவனுடைய வரங்கள் நம்மூலம் செயல்பட ஜெபமும், விசுவாசமும் (மத்.17:19–21) கிரமமான வேதத்தியானமும் அவசியம்.

தேவை நிறைந்த இடங்களுக்குப் போவீராக. அங்கு உமது மூலம் வரங்கள் செயல்படுவதை நீரே காண்பீர்.

**வரமும் தாழ்மையும்**

வரம் பெற்றவர் வாயிலாகப் பெரிய செயல்கள் நடப்பதால் அநேகர் அவரைப் பாராட்டுவார்கள். வரம் பெற்றவர் பெருமையடைவதற்கு இது வழிவகுக்கும். வரம் பெற்ற யாராயினும் 'எனது தகுதியினாலோ திறமையாலோ அல்ல, தேவனுடைய கிருபையால் எனக்கு வரம் அருளப் பட்டிருக்கிறது' என்று உணர்ந்து அதை அவ்வப்பொழுது அறிக்கையிடுவது அவசியம். மனத்தாழ்மையுடையவராயிருப்பதற்கும் தாழ்மையுள்ளவராக நடந்து கொள்வதற்கும் கவனமாயிருக்கவேண்டும்.

**ஜெபிக்க:**

உலகெங்கும் கர்த்தருடைய பிள்ளைகள் ஆவியின் வரங்களால் பலத்த செயல்கள் நடப்பிக்க ஜெபியுங்கள்.

**தியானிக்க :** 1 கொரி.12; மத்.25:14–30; யோவா.14:12.

# அதிகாரம் 11

# வரங்களைப் பயன்படுத்துதல்

### யாருடைய உபயோகத்திற்காக வரங்கள் அருளப்படுகின்றன

தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு வரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை அந்த மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைக்குப் பயன்படுவதற்காக ஏற்படுத்தப்பட்டவை அல்ல. அவ்வரங்களின்மூலம் சபை முழுவதும் பயனடைவதற்கென்றே அவை அருளப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, குணமாக்கும் வரம் பெற்ற தேவனுடைய பிள்ளைக்கு, தன்னையும் தன் குடும்பத்தினரையும் மட்டும் குணமாக்குவதற்காக அந்த வரம் தரப்படவில்லை. சபையிலுள்ள சுகவீனர் யாவருக்கும், இரட்சிக்கப் படுவதற்கேதுவான மற்ற மக்களுக்கும் அவ்வரம் பயன்பட வேண்டும். இன்னொரு எடுத்துக்காட்டாக, தீர்க்கதரிசனம் சொல்கிறவன் தனக்குத் தானே சொல்வதற்காக மட்டும் அவ்வரம் தரப்படவில்லை; சபையின் பக்தி விருத்திக்காகவும் அந்நியர் தேவனை அறிந்துகொள்வதற்காகவும் அவ்வரம் தரப்பட்டுள்ளது (1 கொரி.14:3,4,24,25). சபையின் பக்திவிருத்திக்கென்றும், குழப்பம் விளைவிக்காமலும் வரங்கள் பயன்படுத்தப்படவேண்டும் (1 கொரி.14:39–40).

### வரங்கள் செயல்பட அவசியமானது எது?

வரங்கள் செயல்படுவதற்கு அன்பும் மனதுருக்கமும் மிகவும் தேவை. எனவேதான் வரங்களைப்பற்றி வேதத்தில் கூறப்பட்டுள்ள முக்கியமான பகுதியான 1 கொரி.12,14 அதிகாரங்களின் இடையில் அன்பைப்பற்றிய 13 ஆம் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது என்று கருதலாம்.

வரம் பெற்ற யாவரும் பெருமை, பொறாமை போன்றவை இன்றி, தாழ்மையும் அன்பும் சகிப்புத் தன்மையும் ஒரு மனப்பாடும் கொண்டவர்களாக இருப்பது மிகவும் தேவையானது. வரம் பெற்றவர்களில் பெரியவன் சிறியவன்

என்றில்லை. ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு மிகவும் தேவையானவர்கள். 1 கொரி.12:12–30 பகுதியை நன்கு ஆராய்ந்து பாருங்கள். பக்திவிருத்தி உண்டாவதற்காக வரங்களைப் பயன்படுத்த வேண்டும். குழப்பங்கள் எதுவும் வராதபடி காத்துக்கொள்ளவேண்டும் (1 கொரி.14:40).

**வரங்களைப் பயன்படுத்தும்போது கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்பு**

எல்லாவற்றிலேயும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே நாம் நடந்துகொள்ள வேண்டும். மனிதனின் (குறிப்பாக வரங்களைப் பயன்படுத்தும் மனிதனின்) மகிமைக்கென்று எந்தக் காரியத்தையும் செய்யலாகாது (1 பேது.4:10,11).

இக்காலத்தில் வரங்களைப் பெற்ற தேவ ஊழியர்களை அளவிற்கு மிஞ்சிப் புகழ்வது, வணங்குவது போன்றவை நடைபெற்று வருகின்றதை நாம் அடிக்கடி காண்கிறோம். இதைக்குறித்து வரங்களைப் பெற்றவர்களும் மற்றவர்களும் கவனமாக இருக்கவேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் தேவன் தந்தருளும் பெலத்தின்படி உதவி செய்யவேண்டும். வேத வாக்கியங்களின்படியே போதிக்கவேண்டும். தாழ்மையோடு நடந்துகொள்ளவேண்டும்.

**போலியான வரங்களும் செயல்களும் உண்டா?**

கள்ளச் சகோதரரும் கள்ளப் போதகரும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளக் கிறிஸ்துக்களும் இருக்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். இவர்களில் ஒரு வகையைச் சேர்ந்தவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காகவும் தங்களின் பெயர் பிரபலமடையவேண்டும் என்றும் வரங்கள் பெற்றிருப்பது போன்று நடிப்பார்கள். இவர்களைச் சாத்தான் பயன்படுத்துவதும் உண்டு. இன்னொரு வகையைச் சார்ந்தவர்கள் சாத்தானின் நேரிடையான கையாட்கள். இவர்கள் அற்புதங்களைச் செய்யக்கூடும். அந்நிய மொழிகளில் பேசக்கூடும்; தீர்க்கதரிசனம் உரைப்பதுபோன்று பேசக்கூடும். எடுத்துக் காட்டாக, மோசேக்கு எதிராகப் பார்வோனின் மந்திரவாதிகள் அற்புதங்களைச் செய்ததை யாத்.7:10–12, 20–22; 8:6,7 இல் வாசிக்கிறோம். அவர்கள் கடைசியில் தோற்றுப்போனார்கள் என்பதை யாத்.8:18–19; 9:11 இல் காணலாம். குறிசொல்கிற பெண்ணைப்பற்றி அப்.16:16 இல் வாசிக்கிறோம். வருங்காலத்திலும் அவ்வாறு நடக்கப்போவதைக்குறித்து வெளி.13:13,14 கூறுகிறது.

இத்தகைய கள்ளப் போதகர்களையும் கள்ளத் தீர்க்கதரிசிகளையும் ஒளியின் தூதனுடைய வேடந்தரித்தவர்கள் என்று 2 கொரி.11:13–15 இல் கூறப்பட்டுள்ளது.

**வரங்களைத் தவறாகப் பயன்படுத்த முடியுமா?**

ஒரு மனிதனுக்கு ஆவியானவர் வரங்களை அருளிச்செய்த பின்னர் அவற்றை எவ்விதம் எந்த அளவிற்குப் பயன்படுத்துவது என்பது பெரும்பாலும் அவனுடைய பொறுப்பாக அமைகிறது. அதாவது, தன் விருப்பப்படி வரங்களைப் பயன்படுத்த ஓரளவு சுதந்திரம் உண்டு. தவறாகவும் பயன்படுத்த முடியும் (1 கொரி.14:26). எனவே வரங்களைச் சரியாகப் பயன்படுத்தும் கிருபைக்காக வரம் பெற்றவர்கள் அடிக்கடி ஜெபிக்கவேண்டும்.

**பெற்ற வரங்களைப் பயன்படுத்தாவிடில் என்ன நேரிடும்?**

பெற்ற வரங்களைப் பயன்படுத்தாது விட்டுவிடக் கூடாது. அவ்வாறு ஒருவன் செய்தால் தேவ ஊழியம் பாதிக்கப்படுவதோடு தாலந்தைப் புதைத்து வைத்த ஊழியக்காரன் அடைந்த தண்டனையை அவன் அடைய நேரிடும் (மத்.25:30). தான் பெற்ற வரங்களைப் பயன்படுத்துவது அவற்றைப் பெற்றவன்மீது விழுந்த முக்கியமான கடமையாகும். நமக்களிக்கப்பட்ட வரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடவேண்டும் என்று 1 தீமோ.4:14; 2 தீமோ. 1:6 இல் காண்கிறோம்.

**வரம் பெற்றவர்கள் சிறந்தவர்களா?**

இலவசமாக, கிருபையினால் வரம் அருளப்படுகிறது. வரம் பெற்றவரின் தகுதியினால் வரங்கள் அருளப்படவில்லை. எனவே, தான் பெற்ற வரத்தைக் குறித்தும் தன்னைக்குறித்தும் மேன்மையாக எண்ணவோ, மேன்மையாகப் பேசவோ கூடாது. வரம் பெற்றவர்கள் தாழ்மையாக இல்லாமல், தங்கள் செயல்களைக்குறித்து மேன்மைபாராட்டினால் பரலோகம் செல்லமுடியாமற் போக நேரிடும் (மத்.7:22–23).

**வரங்களின் முக்கிய நோக்கம் என்ன?**

தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதே வரங்களின் முக்கிய நோக்கமாகும். இதை மாற்.16:20; ரோம.15:18,19; எபி.2:3,4 இலிருந்து புரிந்து கொள்ளலாம். வரங்கள் எதற்காகத் தேவை என்று கடந்த அத்தியாயத்தில் படித்தோமல்லவா? அவற்றையும் நோக்கங்களாகக் கருதலாம்.

## அதிகாரம் 12

# ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம்

**வரங்களைக் குழுக்களாகப் பகுத்தல்**

ஆவிக்குரிய ஒன்பது வரங்களையும் (1 கொரி.12:8–10) பல விதங்களில் பகுத்துப்பார்த்தல் நடைமுறையில் உள்ளது. அநேக வேதவல்லுநர்கள் கீழ்க்கண்டவாறு பிரித்துள்ளனர்.

**i. பகுத்தறியும் வரங்கள் (Discerning gifts)**

இக்குழுவில் 1) ஞானத்தைப் போதிக்கும் வசனம் 2) அறிவை உணர்த்தும் வசனம் 3) ஆவிகளைப் பகுத்தறிதல் என்பவை உள்ளன. இவற்றை வெளிப்பாடுகளின் வரங்கள் **(gifts of revelation)** என்றும் கூறுவார்கள்.

**ii. செயல்கள் நடப்பிக்கும் வரங்கள் (Dynamic gifts)**

இதில் 1)விசுவாச வரம் 2) குணமாக்கும் வரங்கள் 3) அற்புதங்களைச் செய்யும் சக்தி என்பவை உள்ளன. இவ்வரங்களை வல்லமை வரங்கள் என்றும் கூறலாம் **(Gifts of Power)**.

**iii. அறிவிக்கும் வரங்கள் (Declarative gifts)**

1) தீர்க்கதரிசனம் உரைத்தல் 2) பற்பல மொழிகளைப் பேசுதல் 3) மொழிகளை வியாக்கியானம்பண்ணுதல் என்ற வரங்கள் இக்குழுவில் அமைகின்றன. இவற்றை அருளப்பட்ட பேச்சு வரங்கள் **(gifts of inspired utterances)** என்றும் கூறலாம்.

**ஞானமும் அறிவும்**

ஞானத்திற்கும் அறிவிற்கும் உள்ள வேறுபாடுகளைக் காண முயற்சிப்போம். எடுத்துக்காட்டாக, கணிதப் பாடத்தைப் பார்ப்போம். ஒரு கணக்கிற்கு ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட தீர்வுமுறையைப் படித்துப் புரிந்து

கொள்வது அறிவு (knowledge). புரிந்து கொண்ட தீர்வு முறையை அதைப் போன்ற, அதைச் சார்ந்த கணக்குகளுக்குச் சரியான முறையில் துரிதமாகப் பயன்படுத்துவது திறமை (skill). ஆனால் அந்தக் கணக்கிற்குப் புதிய வழியில் தீர்வு காண்பது ஞானம் (wisdom).

இதைப்போலவே ஆவிக்குரிய காரியங்களிலும் கூறமுடியும். ஏற்கனவே வெளியாக்கப்பட்ட காரியங்களை அறிந்திருப்பது அறிவாகும். புதிய கருத்துகளும் விளக்கங்களும் தருவது ஞானமாகும். எடுத்துக்காட்டு: ஆதியாகமம் 40 ஆம் அதிகாரத்தில் வரும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்வோம். பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் தாங்கள் கண்ட கனவுகளை அறிந்திருந்தனர். ஆனால் அவற்றின் பொருளை அறிந்து கொள்ளும் ஞானம் அவர்களுக்கு இல்லை. அவர்களின் கனவுகளைக் கேட்டவுடன் அவற்றிற்கான அர்த்தங்களை (விளக்கங்களை) யோசேப்பு கூறினார். ஏனெனில் யோசேப்பு ஞானம் உடையவராயிருந்தார்.

**ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரம்**

நம் எல்லோருக்கும் ஞானம் ஒரளவு உண்டு. ஆனால், அது அதிகமாகத் தேவைப்படுகிறது. ஞானத்தில் குறைவுள்ள யாரேனும் விசுவாசத்தோடு தேவனிடம் கேட்டால் அது அவனுக்கு அருளப்படும் (யாக்.1:5). ஆனால், ஞானம் ஒரு ஆவிக்குரிய வரம் என்று வேதத்தில் எழுதப்படவில்லை.

ஞானத்தைப் போதிக்கும் வசனத்தையே வரம் என்று காண்கிறோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வெளிப்படும் புதிய கருத்துகளையும் புதிய விளக்கங்களையும் மற்றவர்கள் புரியும்படியாகக் கூறும் திறமை ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரம் ஆகும்.

**எடுத்துக்காட்டு** : கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோக அரசைக் குறித்துச் சொன்ன உவமையும் அதின் விளக்கமும் ஞானத்தைப் போதிக்கும் வசனத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது (லூக்.8:4–15).

கோதுமை மணி செத்தால் மட்டுமே பயன்தரும் என்று கூறிய சொற்களின் மூலமாக, கிறிஸ்துவும் அவருடைய சீடர்களாகிய நாமும் பாடுகள் அனுபவிக்கவேண்டிய அவசியத்தைக் கர்த்தர் நன்கு உணர்த்தினார் (யோவா.12:24,25). இதுவும் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தினால் அருளப்பட்டது என்று கருதலாம்.

உவமைகள் மட்டுமன்றி கர்த்தர் உரைத்த அநேக வார்த்தைகளில் இந்த வரம் செயல்படுவதை நாம் காணலாம். எடுத்துக்காட்டாக மத்.5:33–48 ஐக் காணலாம். இப்பகுதியை இன்று தியானியுங்கள்.

**அறிவை உணர்த்தும் வசனமாகிய வரம்**

பலவித கருத்துகளையும் வேதத்தின் இரகசியங்களையும் அறிந்திருப்பது நல்லது. ஆனால், இந்த அறிவு ஒரு வரமல்ல.

அறிவை மற்றவர்கள் புரியும்படி உணர்த்துவதற்காக ஆவியானவர் அளிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையே அறிவை உணர்த்தும் வசனமாகும்.

**எடுத்துக்காட்டு :** இச்சை, விபசாரம், கொலை முதலியவை பாவங்கள் என்ற அறிவு இருந்தும் தாவீது இவற்றைச் செய்தார். பத்சேபாளைப் பார்த்து, இச்சித்து, விபசாரம் செய்து, தன் மனைவியாக்கிக்கொள்வதற்காக அவளுடைய கணவனாகிய உரியாவைக் கொன்று, அவளை மணந்தார். இதைக் கர்த்தர் நாத்தான் என்ற தீர்க்கதரிசிக்கு அறிவித்து தாவீதிடம் சென்று பேசுமாறு அனுப்பினார்.

ஒரு கதையின் மூலம் தாவீதையே அதற்கு மரண தண்டனை வழங்குமாறு செய்து, தாவீதின் பாவத்தின் கொடுமையை உணர்த்தினார் நாத்தான். இதில் அறிவை உணர்த்தும் வசனம் என்ற வரம் செயல்பட்டதை நாம் காண்கிறோம் (2 சாமு.12:1–9). இப்பகுதியைத் தியானியுங்கள்.

**இவ்வித வரங்களின் விளைவுகள்**

ஞானத்தை உணர்த்தும் வசனம் அப்போஸ்தல ஊழியத்திற்கும், அறிவை உணர்த்தும் வசனம் போதக ஊழியத்திற்கும் **(teaching ministry)** பயன்படுமாறு அமைந்துள்ளன என்று கருதப்படுகிறது. சில இடங்களில் இவ்விரு வரங்களில் எது செயல்படுகிறது என்று கூறமுடியாத அளவிற்கு இவை இணைந்து (சேர்ந்து) செயல்படும் குணமுடையன. பவுலின் நிருபங்களை ஆராய்ந்தால் இதைக் காணலாம்.

சபைக்கு உபதேசிப்பதற்கும் பாவிகள் மனந்திரும்புவதற்கும் விளக்கங்கள் அறிவுரைகள் கூறவும், கேட்போர் பக்தி விருத்தியடையும் விதத்தில் இவ்வரங்கள் அமைவதால், மிகமுக்கியமானவை என்று கருதி இவை முதல் இரண்டு வரங்களாகக் கூறப்பட்டுள்ளன என்று கருதலாம்.

விசுவாசிகள், ஞானமும் தெளிவும் அருளும் ஆவியையும் தேவனுடைய மகத்துவங்களை அறியும்படிப் பிரகாசமான மனக்கண்களையும் அடையும்படிப் பவுல் வேண்டிக்கொண்டதை எபே.1:17–19 இல் காண்கிறோம். இவற்றைப் பெறுதல் மட்டும் போதாது. மற்றவர்களுக்குப் போதித்து அவர்களையும் உணர்த்துவிப்பது நமது கடமை. இதைச் சரிவரச் செய்வது நமது திறமைக்கு அப்பாற்பட்டது. எனவேதான் இவ்வரங்களைத் தேவன்

சபையில் சிலருக்கு அளித்துள்ளார். ஞானமும் அறிவும் பெற்றிருக்கும் விசுவாசியே இவ்வரங்களுக்காக ஜெபிப்பீராக.

**வரங்களும் முயற்சியும்**

இந்த வரங்களைப் பெற்றிருப்பவர்கள் வேதத்தை நன்கு ஆராய்கிறவர்களாகவும் தியானிக்கிறவர்களாகவும் இருத்தல் வேண்டும். வரங்களைப் பெற்றிருக்கிறோம் என்ற எண்ணத்தில் இம்முயற்சிகளைக் கைவிடுதல் சரியல்ல. மேலும் அடிக்கடி ஜெபத்தினால் தேவனோடு உள்ள நெருக்கமான தொடர்பைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

**ஜெபிக்க**

(i) ஞானமும் அறிவும் ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரமும் அறிவை உணர்த்தும் வசனமாகிய வரமும் தேவை என்பதைக் காண்கிறோம். இவற்றிற்காக ஊக்கமாக ஜெபிப்போமாக.

(ii) உலகெங்குமுள்ள இரட்சிக்கப்பட்ட சபைப்போதகர்கள், நற்செய்தியாளர்கள், வேதாகமக் கலாசாலை ஆசிரியர்கள் போன்ற தேவ ஊழியர் யாவரிடமும் இவ்வரங்கள் நன்கு செயல்படும்படியாக ஊக்கமாக ஜெபியுங்கள்.

**தியானிக்க :** மத்.5:33–48; 2 சாமு.12:1–9; யாக்.1:5,6

# அதிகாரம் 13

# ஆவிகள்

**குறிப்பு :** ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தைப்பற்றிப் படிப்பதற்கு முன்பாக ஆவிகளைப்பற்றிய சில காரியங்களைப் படிப்போம்.

### மூன்றுவித ஆவிகள்

அசுத்த ஆவிகள், மனிதனின் ஆவி, பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்றும் வெவ்வேறு ஆகும். ஒன்றின் செயலை மற்றொன்றிற்கு மாற்றிக் கூறுவது தவறாகும்.

தாங்கள் செய்த பாவத்திற்கு அசுத்த ஆவிகளே காரணம் என்று குறை கூறும் வழக்கம் சில மனிதர்களிடம் இருக்கின்றது. ஒரு மனிதனுக்கு அதிகமாகக் கோபம் வருகிறதென்றால் அதற்கு அவனே காரணம். அதைத் தன்னுடைய குறையென்று ஒத்துக்கொள்ளாமல் அதற்கும் பிசாசுதான் காரணம் என்று கூறுதல் சரியன்று. அசுத்த ஆவிகள் பாவம் செய்யத் தூண்டுவது உண்டு என்றபோதிலும், தனது பாவங்களுக்கு மனிதன் பொறுப்பு ஏற்றுத்தான் ஆகவேண்டும். மனிதனுடைய இணங்குதல் இல்லாமல் அவன் பாவம் செய்வதில்லை. எடுத்துக்காட்டாக, பாவம் செய்யும்படி சாத்தான் ஒரு பாம்பின்மூலம் ஏவியபோதிலும், தனது இச்சையாலும் பெருமையாலும்தான் ஏவாள் கட்டளையை மீறிப்பாவம் செய்தார். ஆதி.3:1–6 காண்க. ஆனால் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்ட ஒரு மனிதன் அலைக்கழிக்கப்படுதல் போன்றவற்றிற்கு அந்த அசுத்த ஆவியே காரணம்.

### அசுத்த ஆவிகள் உண்டா?

அசுத்த ஆவிகள் உண்டு என்பதை நம்பாத அநேகர் இந்தக் காலத்தில் இருக்கின்றனர். அசுத்த ஆவிகள் உண்டு என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது (மத்.4:24; 8:16; 9:32; 10:1; மாற்.5:2; அப்.19:12; 1 கொரி.10:20

இன்னும் பல இடங்களில்). இவை பிசாசுகள் என்றும் பேய்கள் என்றும் பொல்லாத ஆவிகள் என்றும் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

அசுத்த ஆவிகள் ஒரு மனிதனைப் பிடித்துக்கொள்ளமுடியும் என்பதையும் அவன் மூலமாகப் பேசமுடியும் என்பதையும் வேதத்தின் பல இடங்களில் வாசிக்கலாம் (எடுத்துக்காட்டு மாற்.5:2,6,7). அசுத்த ஆவிகளுக்குப் பெயர்கள் உண்டு என்றும் அநேக அசுத்த ஆவிகள் உண்டு என்றும் மாற்.5:8,9 இல் காண்கிறோம். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களில் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்துவதாகும். எனவே பிசாசுகள் இருக்கின்றன என்பது வேதத்தில் கூறப்பட்டுள்ள உண்மையாகும். அசுத்த ஆவிகளால் அலைக்கழிக்கப்படுகிறவர்களிலிருந்து அவற்றைத் துரத்துவது இன்றும் நடைபெற்று வருகிறது.

**அசுத்த ஆவிகள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறோம்?**

ஆசீர்வதிக்கப்பட்ட கேருபாகப் படைக்கப்பட்ட லூசிபர் பெருமை கொண்டு தேவனுடைய சிங்காசனத்தைப் பிடிப்பதற்காக வானத்திற்கு ஏறினான். பல தேவதூதர்களும் தேவனுக்கு விரோதமாக அவனுடைய கூட்டாளிகளாக மாறினார்கள். இவர்கள் லூசிபரோடு சேர்ந்து தேவனுக்கு எதிராகப் போரிட முயற்சித்தபோது கீழே தள்ளப்பட்டார்கள். மிக அழகு வாய்ந்த லூசிபர், சாத்தான் என்ற பெயர் கொண்ட பிசாசாக மாறினான். ஏசா.14:12–17; எசே.28:12–19 என்ற பகுதிகளில் இந்நிகழ்ச்சியைக் காணலாம். அவனுடன் சேர்ந்திருந்த தூதரும் தள்ளப்பட்ட தேவதூதர் களாக, அசுத்த ஆவிகளாக, பிசாசுகளாக மாறினார்கள்.

விபத்து, தற்கொலை போன்ற காரணங்களால் தங்களுக்குக் குறிக்கப்பட்ட காலத்துக்கு முன்பு இறந்து போனவர்களின் ஆவிகள் அசுத்த ஆவிகளாக இருக்கின்றன என்று பலர் நம்புகிறார்கள். இது வேதத்திற்கு ஒத்தது அல்ல. அசுத்த ஆவிகள் சில, இவ்விதம் தங்களைப் பற்றிப் பொய்யாகக் கூறி மக்களை ஏமாற்றுகின்றன. அவற்றை நம்பாதீர். வேறு பல விதங்களில் அசுத்த ஆவிகள் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கருதுகிறார்கள். அதற்கும் வேதத்தில் ஆதாரம் இல்லை.

பலவிதமான ஆவிகள் இருப்பதை மாற்.9:29 இலிருந்து புரிந்து கொள்ளலாம். சில ஆவிகளின் பாவங்கள் கொடியதாக இருந்ததால் அவை அந்தகாரத்தில் கட்டிவைக்கப்பட்டுள்ளன (யூதா 6; 2 பேது.2:4).

**வஞ்சக ஆவிகள்**

சில அசுத்த ஆவிகள் வெளிப்படையாகச் செயல்படுவதில்லை. மனிதரின் மூலமாகத் தவறான போதகங்களைப் பரப்புவதும், பரிசுத்த ஆவியானவரின் செயலைப்போன்று போலியாகச் செய்வதும், அற்புதங்கள் அடையாளங்கள் மூலம் மக்களை ஏமாற்றுவதும், ஒளியின் தூதனின் வேடத்தைத் தரித்துக்கொள்வதும் இவற்றின் சில செயல்களாகும் (2 கொரி.11:14,15). ஒளியின் தூதன் என்பது ஒரு அசுத்த ஆவியின் பெயர் அல்ல என்பதையும் ஒளியின் தூதனைப்போன்று நடித்து மக்களை ஏமாற்றும் வஞ்சக ஆவி உண்டு என்பதையும் இந்த வேதப்பகுதியில் காண்கிறோம்.

எல்லா அசுத்த ஆவிகளும் சரமாரியாகப் பொய்களைப் பேசும். சாத்தான் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் என்று கர்த்தர் கூறியதை யோவா.8:44 இல் காண்கிறோம்.

**பிசாசுகளின் இறுதி முடிவு என்ன?**

பிசாசுகளின் இறுதி முடிவு நரகத்தில் தள்ளப்படுதல் ஆகும் (வெளி.20:10; மத்.25:41). இதற்கென்று நரகம் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. இது அவற்றிற்குத் தெரியும். எனவே கொஞ்சக்காலம்தான் உண்டென்று அறிந்ததும் பயங்கரமான செயல்களை நடப்பிக்கச் சாத்தான் முற்படுவான் என்று வேதம் கூறுகிறது (வெளி.12:12). சாத்தானும் அசுத்த ஆவிகளும் நரகத்தில் ஆட்சி செய்யவோ, நரகத்தில் தள்ளப்படும் மக்களுக்குத் தொல்லை தரவோ முடியாது. அங்கு அவை வேதனைக்குட்படுத்தப்படும்.

**அசுத்த ஆவியின்மேல் அதிகாரம்**

பிசாசுகளின் சகல வல்லமையையும் மேற்கொள்வதற்குக் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது (லூக்.10:19). எவ்வளவு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது என்று சற்று தியானிக்கவும்.

பிசாசுகளைத் துரத்துவதற்கு நமக்கு அதிகாரம் உண்டு என்பது மட்டுமல்ல, அவ்வாறு செய்வது நமது ஊழியத்தின் ஒரு பகுதியாகும். மத்.10:7,8 இலிருந்து இதைக் காண்கிறோம். கர்த்தரை விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களில் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது இதுதான் (மாற்.16:17).

கட்டுவதற்கும் கட்டவிழ்ப்பதற்கும் மத்.18:18 இல் தரப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பிசாசின் செயல்களைக் கட்டுவதும் நம்மால் முடியும். மேலும் பிசாசின் பிடியிலிருப்பவர்களையும் அதின் தொல்லைகளில்

இருப்பவர்களையும் கட்டவிழ்க்கவும் நமக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது நமது கடமையாகும்.

**ஜெபிக்க**

(i) பிசாசுகள் தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரிகளாகச் செயல் படுகின்றன. எனவே அவற்றின் செயலுக்கு ஒத்துப்போகாமல் எதிர்த்து நிற்கவேண்டியது நமது கடமையாகும்.

(ii) விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்கள் (மாற்.16:17,18) உலகெங்கும் நடைபெற ஜெபிப்போமாக.

**சிந்திக்க**

பிசாசுகளின் இறுதி முடிவு என்ன? பிசாசுகளோடு பங்கடைபவர்கள் யார்? மத்.25:41–43; யோவா.3:3,5; 6:53; வெளி.20:15.

**தியானிக்க :** ஏசா.14:12–17; எசே.28:12–19; லூக்.10:19,20

**கவனமாயிருக்க :**

(i) சில போதகர்கள் தங்கள் சொந்த ஆவியினாலும், வஞ்சக ஆவிகளால் ஏவப்பட்டுப் பேசுகிறார்கள். ஆவிக்குரிய போதகர் களாகவும் இவர்களில் பலர் காட்சியளிக்கிறார்கள். இவர்களை இவர்களின் வாழ்க்கையில் காணப்படும் கனிகளால் அடையாளம் கண்டு விலக அல்லது விலக்க வேண்டும்.

(ii) ஆவிக்குரிய கூட்டங்கள் ஆராதனைகள் என்று கூறி ஆவியில் நிரம்புவதுபோன்று காண்பித்து ஒருவிதமாகச் சிரிப்பதும், வாந்தி பண்ணுவதும், பலவித காரியங்களைச் செய்வதும் பரவி வருகின்றன. வேதத்தின்படியுள்ளவையே ஆவிக்குரியவைகள். ஆவிக்குரிய தோற்றமளிப்பவை எல்லாம் வேதத்திற்குரியவைகள் அல்ல. விழிப்புடன் இருங்கள்.

**குறிப்பு :**

சாத்தான் ஒரு நேரத்தில் ஓரிடத்தில் மட்டுமே இருக்கமுடியும். உலகெங்கும் அவனது ஆட்சியிலுள்ள அசுத்த ஆவிகள் பரவியிருக்கின்றன.

## அதிகாரம் 14

# அசுத்த ஆவிகளின் செயல்கள்

### அசுத்த ஆவிகளால் பிடிக்கப்படுதல்

கர்த்தருடைய பிள்ளையாக இல்லாத ஒரு மனிதனை அசுத்த ஆவி ஆட்கொண்டு தன் விருப்பப்படி அவனை நடத்துவதைக் கண்டு, அவனை அசுத்த ஆவி பிடித்தவன், பிசாசு பிடித்தவன், பேய் பிடித்தவன், அசுத்த ஆவியுடையவன் என்று பலவிதமாகக் கூறுவார்கள்.

ஒரு மனிதன் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டால் அவன் தன் விருப்பம்போல அன்றி அவனைப் பிடித்திருக்கிற ஆவியின் விருப்பப்படியே நடப்பான். அநேக சமயங்களில் தான் செய்கிறது இன்னதென்றும் தான் பேசுகிறது இன்னதென்றும் அவனுக்குத் தெரியாது. அசுத்த ஆவி அவன் மூலமாகப் பேசும், அவனை அலைக்கழிக்கும், உளரச் செய்யும், பல கொடிய காரியங்களைச் செய்யவைக்கும், கல்லறைகளில் குடியிருக்கச் செய்யும், சங்கிலிகளை முறித்துப்போடச் செய்யும், உடம்பைக் காயப்படுத்திக் கொள்ளச் செய்யும் (மாற்.5:2–5).

தாங்கள் பிடித்துள்ள மனிதனைக் கொலைசெய்வதற்கும் அசுத்த ஆவிகள் முயற்சி செய்யும் (மாற்.9:22; யோவா.10:10). மற்றவர்களைக் கொலை செய்யுமாறு அசுத்த ஆவிகள் ஒரு மனிதனை ஏவுவதும் உண்டு (1 சாமு. 19:9,10). பலவீனப்படுத்தும் ஆவிகளும் செவிடும் ஊமையுமான ஆவிகளும் உண்டு என்பதை மாற்.9:25; லூக்.13:11–13 இலிருந்து அறிகிறோம். ஒரு மனிதனுக்குள் பல அசுத்த ஆவிகள் இருக்கமுடியும் (மாற்.5:8–10).

ஒரு மனிதனிடமிருந்து வெளியே போகும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு அசுத்த ஆவிக்குக் கட்டளையிட்டார் (மாற்.9:25). இதிலிருந்து அசுத்த ஆவிகள் ஒரு மனிதனைப் பிடித்திருப்பதை அவனுக்குள்ளிருப் பதாகக் கருதலாம் என்று நாம் அறிந்துகொள்கிறோம்.

**தேவபிள்ளைகளை அசுத்த ஆவிகள் பிடிக்கக்கூடுமா?**

இரட்சிக்கப்பட்டவர்களை அசுத்த ஆவிகள் பிடிக்கமுடியாது. அவர்களுக்குச் சில தொல்லைகளைத் தரமுடியும். அவ்வாறு தொல்லைகளைத் தந்தபோதிலும் அவர்களைச் சேதப்படுத்தமுடியாது (லூக்.10:19). இதை முற்றிலும் விசுவாசித்தால், உமது விசுவாசத்தின்படி உமக்கு ஆகும்.

ஆனால், பின்மாற்றமாயிருப்பவர்களுக்குத் தொல்லைகள் தரமுடியும் என்பதைச் சவுலின் சரித்திரத்திலிருந்து காண்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் எப்போதும் கர்த்தரோடு நிலைத்திருப்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று இதிலிருந்து காண்கிறோம்.

**அசுத்த ஆவிகளால் தொல்லைகளுக்குள்ளாதல்**

அசுத்த ஆவிகளால் பிடிக்கப்படுவதற்கும் **(possessed)** அவைகளால் தொல்லைகட்குள்ளாவதற்கும் **(oppressed)** வேறுபாடுகள் உண்டு. சோதனைகள், பாடுகள், உபத்திரவங்கள் மூலமாக அசுத்த ஆவிகள் நம்மைத் தொல்லைகட்குட்படுத்துகின்றன. யோபு சாத்தானால் தொல்லைக் குள்ளானார் என்பது இதற்குச் சான்றாகும்.

**மனநோய்**

சிலர் மூளைக்கோளாறு காரணமாக மனநோய் உள்ளவர்களாக இருக்கின்றனர். வேறுசிலர் அசுத்த ஆவிகளால் பிடிக்கப்பட்டிருப்பதை மனநோய் என்று மற்றவர்கள் கருதுகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக மத்.17:15–18 என்ற பகுதி அமைகிறது. இப்பகுதியில் சந்திரரோகி **(lunatic)** என்பது மனநோய் உள்ளவர்களைக் குறிக்கும் சொல். ஏற்கனவே மூளைக்கோளாறு உள்ளவர்களில் சிலரிடம் பிசாசின் கிரியைகளும் சேர்ந்து காணப்படுவதும் உண்டு.

**பிசாசுகள் ஒரு மனிதனிடம் வருவதின் நோக்கம் என்ன?**

மனிதனிடம் பிசாசுகள் வருவதற்கான நோக்கங்கள் பின்வருமாறு.

**1. திருடுவது :** அவனுடைய நிம்மதி, மகிழ்ச்சி, சுகம், செல்வம், போன்றவற்றைத் திருடுவது.

**2. கொல்வது :** பல வழிகளில் மரணத்தை ஏற்படுத்த முயற்சிப்பது. இரண்டாம் மரணமாகிய நரகத்திற்கு நடத்துவதும் இதில் அடங்கும்.

**3. அழிப்பது :** திரும்பவும் கிடைக்காவண்ணம் அழிப்பதும் பிசாசுகளின்

நோக்கமாகும். திருடப்பட்ட பொருள் திரும்பவும் கிடைக்கலாம். அழிக்கப்பட்ட பொருள் திரும்பவும் கிடைக்காது.

இவை அனைத்தையும் பிசாசுகள் செய்யக்கூடும். இவற்றைச் செய்வதே அவற்றின் நோக்கம். வேறுவித நோக்கம் அவற்றிற்கு இல்லை (யோவா.10:10).

**அஞ்சனம் பார்த்தல்**

செத்துப்போனவர்களின் ஆவிகளோடு தொடர்புகொண்டு செய்திகளைத் தருவதாகச் சிலர் செய்வது உண்டு (1 சாமு.28:7–19). இவர்கள் தொடர்புகொள்வது செத்துப்போனவர்களின் ஆவிகள் அல்ல. அவற்றைப் போன்று பேசி மக்களை ஏமாற்றும் அசுத்த ஆவிகளே. இவ்விதமாகச் செய்வதும் இவ்வாறு செய்பவர்களிடம் தொடர்புகொள்வதும் பாவங்களாகும் (1 நாளா.10:13). 1 சாமு.28:7–19 இல் வந்ததாகக் கூறப்பட்டுள்ள ஆவி சாமுவேலின் ஆவியல்ல, அதைப்போன்று நடித்து ஏமாற்றிய அசுத்த ஆவி. ஏனெனில், தேவனுடைய மனிதரான சாமுவேலின் ஆவியை எழும்பிவரச் செய்வதற்கு அஞ்சனம் பார்க்கும் பெண்ணிற்கு அதிகாரம் இல்லை.

**பில்லி சூனியம்**

மந்திரங்கள்மூலம் பிசாசுகளோடு தொடர்புகொண்டு அவற்றை ஏவி அவற்றின்மூலம் மற்றவர்களுக்கு இன்னல் விளைவிக்கும் மந்திரவாதிகள் அந்தக் காலம் முதல் இக்காலம்வரை இருந்துவருகின்றனர். இவ்வாறு செய்வது சூனியம், பில்லிசூனியம், செய்வினை என்று அழைக்கப்படுகிறது. இதைச் செய்வதும் இதில் ஈடுபடுவதும் கொடிய பாவங்களாகும் (வெளி.21:8).

இவ்வாறு பில்லிசூனியத்தினால் வேதனையுறும் மக்களுக்காக உபவாசித்து ஜெபித்து அவர்களை விடுவிப்பது கர்த்தருடைய பிள்ளைகளால் முடியும்.

**பிசாசுகளுக்கு யார் மேல் வல்லமை இல்லை**

பலவிதத் தொல்லைகளைக் கொடுக்கவும் வியாதியையும் மரணத்தையும் கொண்டுவரவும் பிசாசினால் முடியும் (யோவா.10:10). ஆனால் விசுவாசத்தோடு இருக்கும் தேவ பிள்ளைகளின்மேல் அவற்றிற்கு அதிகாரம் இல்லை.

மேலும், எவனை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம்போலச் சுற்றித் திரிகிறவன் பிசாசு (1 பேது.5:8). அவன் சிங்கம் அல்ல, சிங்கம்போலச் சுற்றி அலைகிறான். சிங்கம்போல நடிப்பவனுக்கு நாம் பயப்படவேண்டியது இல்லை.

ஏனெனில் யூதா கோத்திரத்துச் சிங்கமாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருக்கிறார். உண்மையான சிங்கம் நம் பக்கம் இருக்கும்போது போலிச் சிங்கத்திற்குப் பயப்படவேண்டியதில்லை.

கர்த்தரில் நிலைத்திருக்கவேண்டியதின் அவசியத்தைச் சிந்திக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். வேதத்தியானம், ஜெபம், ஆவிக்குரிய ஐக்கியம், ஊழியம் ஆகியவற்றின்மூலம் தேவனோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர்களைப் பிசாசினால் நெருங்கமுடியாது. இவற்றைச் செய்யக் கவனமாயிருப்பீராக. பரிசுத்த ஜீவியத்தை நாடுவீராக.

**பிசாசுகளும் விலங்குகளும்**

மனிதரோடு மட்டுமல்லாது விலங்குகளிடமும் பிசாசுகள் புகுந்து கொள்வது உண்டு என்று வேதத்திலிருந்து அறிந்துகொள்கிறோம் (மாற்.5:12,13). ஏதேனும் ஒரு சரீரத்தோடு தொடர்புகொள்வதற்குப் பிசாசுகள் விரும்புவதையும் இப்பகுதியில் காண்கிறோம்.

**சிந்திக்க**

(i) அசுத்த ஆவி ஒரு மனிதனைப் பிடிப்பது என்றால் என்ன?

(ii) அசுத்த ஆவிகள் ஒரு மனிதனைப் பிடிப்பதின் நோக்கம் என்ன?

(iii) அஞ்சனம் பார்த்தல், குறி சொல்லுதல், குறி கேட்டல், பில்லி சூனியம் போன்ற கொடிய பாவங்களுக்கு விலகி ஓடுவீராக.

**ஜெபிக்க**

தேவ வல்லமையினால் தேவ பிள்ளைகள் பிசாசை எவ்விடத்திலும் மேற்கொள்ளும்படியாக ஜெபிக்கவும்.

பிசாசுக்குப் பயப்படாதீர். அதற்கு எதிர்த்து நிற்பீராக(யாக்.4:7).

**தியானிக்க** : மாற்.9:17–29; யோவா.10:10.

## அதிகாரம் 15

# ஆவிகளைப் பகுத்தறியும் வரம்

**அசுத்த ஆவிகள் ஒரு மனிதனைப் பிடித்திருப்பதைக் கண்டுபிடிப்பது எப்படி?**

1. அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதன் கர்த்தருடைய பிள்ளைகளை (குறிப்பாகப் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை) நேருக்கு நேர் நன்கு பார்க்க முடிவதில்லை. தன் பார்வையை உடனடியாக வேறு பக்கம் திருப்பிக்கொள்வான். இதிலிருந்து அசுத்த ஆவியுடையவர்களை ஓரளவு கண்டுபிடிக்க முடியும்.

2. நாம் ஜெபிக்கும்போது, ஆவிக்குரிய பாடல்களைப் பாடும்போது அல்லது கர்த்தரின் நாமத்தைக் கூறி அதட்டும்போது ஒரு மனிதன் ஒரு விதமாக ஆடுகிறான் என்றால் அவனைக் கவனித்துப் பார்த்துக் கண்டு பிடிக்கலாம். பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களும் குடித்திருப்பவர்களைப் போன்று நடந்துகொள்வது வேதத்தில் கூறப்பட்டுள்ளது (அப்.2:13). ஆனால் அவர்களின் அசைவும் பிசாசு பிடித்தவனின் அசைவும் நன்கு வித்தியாசமாகத் தெரியும். அனுபவத்தில் இதைக் கண்டுகொள்ள முடியும்.

3. கர்த்தராகிய இயேசுவைச் சபிக்கப்பட்டவரென்று கூறும் ஆவிகள் அசுத்த ஆவிகளே. மேலும் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடாத ஆவி அசுத்த ஆவியென்று கண்டுகொள்ளலாம் (1 கொரி.12:3). இதை ஒரு தேர்வாக (test) வைத்து, அதாவது இவற்றை அந்த மனிதன் சொல்கிறானா என்று பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

4. இவ்வாறே மாம்சத்தில் இந்த இயேசுவை அறிக்கைபண்ணாத ஆவிகள் அசுத்த ஆவிகளே (1 யோவா.4:1–3). ஒரு குழுவாக இருப்பவர்கள் கூடியிருக்கும்போது ஒவ்வொருவரும் மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கையிட்டு அதன் மூலம் ஏதேனும் அசுத்த ஆவிகள் இருப்பின்

அடையாளம் கண்டுகொள்ளலாம் (இம்முறையைப் பின்பற்றி ஒரு பிரச்சனையை ஒரு குழுவினர் தீர்த்து வைத்ததை இதை எழுதியவர் கண்டிருக்கின்றார்).

5. ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் மூலமும் அறியலாம். இந்நூலின் ஆசிரியரின் சாட்சி : ஒரு குழுவினருடன் கிராம ஊழியம் செய்து கொண்டிருந்தபோது ஒரு மனிதர் பல கேள்விகளை என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தார். எங்களோடு ஊழியத்திற்கு வந்த ஒரு சகோதரன் அந்த மனிதரிடம் பேசவேண்டாம் என்று என்னிடம் கூறினார். அம்மனிதரிடம் அசுத்த ஆவியின் கிரியை இருப்பதையும் தெரிவித்தார். எனவே நான் பேசுவதை நிறுத்தினேன். சிறிதுநேரத்தில் நாங்கள் ஜெபிக்க ஆரம்பித்த போது அந்த மனிதர் ஆட ஆரம்பித்தார். அவருக்குள் அசுத்த ஆவி இருப்பதை அதன் பின்னர்தான் நான் கண்டுகொண்டேன். பின்னர் அந்த அசுத்த ஆவியைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் துரத்தினோம். என்னோடு ஊழியத்திற்கு வந்து என்னை அம்மனிதனிடம் பேசாதவாறு தடுத்த சகோதரனுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் இருப்பதை நான் உணர்ந்துகொண்டேன். விடுதலை பெற்ற மனிதர் இயேசுவை ஏற்றுக்கொண்டார். பின்னர் கர்த்தருக்குள் வளர்ந்து ஓர் ஆவிக்குரிய சபையின் மூப்பராக மாறினார். அல்லேலூயா.

**ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட இடத்தில் செயலாற்றுவது தேவனுடைய ஆவியானவரா, மனிதனுடைய ஆவியா, அல்லது அசுத்த ஆவியா என்று இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உணர்ந்துகொள்ளும் திறமை இது.

**வெளியே தெரியாவண்ணம் செயல்படும் ஆவிகளை அறிந்து கொள்வது**

அநேக ஆவிகள் வெளியே தெரியாவண்ணம் செயல்படுவதுண்டு. இவை ஒரு மனிதனைப் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்யாமல், அவனுக்குள்ளிருந்து கள்ளப்போதகம், வஞ்சகம் போன்றவற்றின் மூலம் செயல்படுகின்றன. இவற்றைச் சரியாக அடையாளம் கண்டுகொள்வதற்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் தேவை.

மந்தை மந்தையான மக்கள் கள்ளப் போதகர்களையும் அவர்களால் நடைபெறும் அற்புதங்களையும் கண்டு மயங்கி ஏமாறும் காலம் இது (மத்.24:24; 1 தீமோ.4:1). அநேக ஊழியரும் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, ஆவிகளைப் பகுத்தறியும் வரம் உலகிலுள்ள சபை ஒவ்வொன்றிலும்

அநேகருக்குத் தேவை. இவ்வரம் தேவனுடைய பிள்ளைகள்மீது மிகுதியாக ஊற்றப்படும்படி ஜெபிப்போமாக.

**வேஷத்தைத் தரித்துக்கொள்ளும் வஞ்சக ஆவிகள்**

சில வஞ்சக ஆவிகள் மரித்துப்போனவர்களின் பெயரைச் சொல்லி, தாங்கள் அவர்களின் ஆவிகள் என்று பொய் சொல்லி ஏமாற்றுகின்றன. இவ்விதமாக நமது உறவினர்களின் பெயர்களை மட்டுமல்ல, வேதத்தில் கூறப்பட்டுள்ள பரிசுத்தவான்கள் அல்லது தேவதூதர்களின் (குறிப்பாக இயேசுவின் தாயாகிய மரியாளின்) பெயரைச் சொல்லி, தாங்கள் அவர்களின் ஆவிகள் என்று ஏமாற்றும் பிசாசுகள் உண்டு. இவந்றை 1 கொரி.12:3; 1 யோவா.4:1–3 இன் மூலம் சோதித்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

இப்படிப்பட்ட ஆவிகளை நம்பிவிடாதபடி மிகவும் கவனமாக இருக்கவேண்டும். சகோதரனே வஞ்சிக்கிற ஆவிகளைக்குறித்துக் கவனக்குறைவாக இராதீர்.

**கர்த்தரின் அற்புதங்களைப்பற்றிப் பேசும் அசுத்த ஆவிகள்**

சில அசுத்த ஆவிகள் கர்த்தராகிய இயேசுவின் போதனைகளையும் அற்புதங்களையும் குறித்து உயர்வாகப் பேசுவதுண்டு. இயேசு நல்ல போதகர், அற்புதங்களைச் செய்பவர், தேவனுடைய குமாரர், பரிசுத்தர் என்றெல்லாம் சொல்வதுண்டு. ஆனால் கர்த்தரின் சிலுவை மரணத்தைக் குறித்தும் அவருடைய இரத்தத்தினால் பாவமன்னிப்பு உண்டாகியிருக்கிறதைக்குறித்தும் அவை பேசுவதில்லை. வஞ்சக ஆவிகளை இதன் மூலமும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

**மந்திரக் கயிறுகள் தாயத்துகள்**

தேவனை எந்த மந்திரத்தாலும் அடிபணிய வைக்கவும், ஏவவும் முடியாது. மந்திரித்த கயிறுகள், முடிச்சுகள் போட்ட கயிறுகள், தாயத்துகள், படிகாரத்தைத் தலைமயிரில் கட்டி வைத்தல், எலுமிச்சம் பழத்தை முடியில் கட்டி வைத்தல், தீ சுற்றிப்போடுதல், தகடுகள் போன்ற யாவும் பிசாசுகளோடே தொடர்பு உடையன. இவை அனைத்தையும் உம்மிலிருந்தும் உம் வீட்டிலிருந்தும் அகற்றுவீராக. இவற்றைத் தயாரிக்கும், பயன்படுத்தும் மக்களோடு ஐக்கியம்கொள்ளாதீர்.

**ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் செயலுக்கு எடுத்துக்காட்டு**

அப்.16:16–18 வரை நன்கு கவனித்து வாசியுங்கள். ஒரு பெண் பவுலையும் அவருடைய குழுவினரையும் பின்தொடர்ந்து அவர்களைப் பற்றிய

உண்மையை யாவரும் கேட்கும்படி உயர்வாக, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர். இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று கூறினாள். அவள் கூறியதைப் பார்த்தால் அவள் அசுத்த ஆவியுடையவள் என்று கூற இயலாது. மேலும் அவர்களை அவள் பின் தொடர்ந்ததைப் பார்த்தால் அவள் நல்ல வழியை விரும்புகிறவள்போலக் காணப்பட்டாள். ஆனால், ஆவிகளைப் பகுத்தறியும் வரம் பவுலில் செயல்பட்டதால் அந்த ஆவியின் உண்மை நிலையைப் பவுலினால் புரிந்து கொள்ள முடிந்தது. அப்பெண்ணிலிருந்த அசுத்த ஆவியைப் பவுல் துரத்தினார்.

**ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தினால் என்ன பயன் உண்டு?**

வஞ்சக ஆவிகள் அடையாளங் கண்டுகொள்ளப்பட்டு வெளியரங்கமாக்கப்படும். இதனால் அவற்றின் திட்டங்களும் சதிகளும் நொறுங்கிப் போகும். சபையில் நடக்கும் பல குழப்பங்கள் தீர்ந்துபோகும். சபை வழிதப்பிப்போனால் எச்சரிப்பை அடைந்து சீர்ப்படும். கள்ளப்போதகங்கள் கண்டுபிடிக்கப்படும். எந்த இடத்தில் எவ்விதத்தில் பிசாசை எதிர்த்து நிற்க வேண்டும் என்று புரிந்துகொள்ளவும் இந்த வரம் உதவும்.

இப்பயன்களைப் பார்த்தால் ஒவ்வொருவருக்கும் இந்த வரம் அவசியம் என்று தோன்றுகிறது அல்லவா? எனவே, இவ்வரம் சபைமக்கள்மேல் ஊற்றப்படும்படி ஊக்கமாக ஜெபிப்போமாக.

**இந்த வரத்தைப் பெற்றவர்களின் கடமை**

ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தினைப் பெற்றவர்கள் ஜெபவீரராக இருப்பது அவசியம். ஒரு அசுத்த ஆவி செயலாற்றுவதைத் தேவன் தனக்கு வெளிப்படுத்தும்போது, ஜெபத்தின் மூலம் அவ்வசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்று மேற்கொண்டு அதைத் துரத்தவேண்டும். வஞ்சக ஆவி ஒரு போதகர் அல்லது ஊழியர்மூலம் செயல்பட்டால் அதை ஜெபத்தில் மேற்கொண்டு துரத்துவது மட்டுமின்றி அந்தப் போதகர் அல்லது ஊழியருக்காக ஊக்கமாக ஜெபிக்கவேண்டும். தகுந்த இடத்தில் கள்ளப்போதகத்திற்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

**சிந்திக்க**

(i) அசுத்த ஆவி ஒரு மனிதனைப் பிடித்திருப்பதைக் கண்டுபிடிப்பது எப்படி?

(ii) வஞ்சக ஆவிகள் எப்படி மக்களை ஏமாற்றக்கூடும்? இதினின்று விடுபட ஆவிகளைப் பகுத்தறியும் வரம் கர்த்தருடைய பிள்ளைகளுக்குத் தேவையல்லவா?

(iii) ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் பயன்கள் எவை? இவ்வரத்தின் தேவையை நன்குணர்ந்து இவ்வரம் உலகெங்குமுள்ள தேவனுடைய பிள்ளைகள்மேல் ஊற்றப்படும்படியாக ஊக்கமாக ஜெபியுங்கள்.

**செயல்பட**

1. மந்திரித்த கயிறு, திருஷ்டிகழித்தல், தீ சுற்றிப்போடுதல் போன்ற யாவற்றையும் உம் எல்லையை விட்டு உடனடியாக அகற்றுவீராக.

2. நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்வது, வீட்டின் முன்பு கோலம் போடுவது போன்றவை கிறிஸ்தவ வழக்கங்கள் அல்ல. இவை தேவையா?

**தியானிக்க :** 1 யோவான் 4:1–4; அப்.16:16–18.

# அதிகாரம் 16

# பிசாசுகளைத் துரத்துதல்

## பிசாசுகளைத் துரத்துமாறு நமக்குக் கர்த்தர் கட்டளை கொடுத்துள்ளார்

பிசாசுகளைத் துரத்துமாறு தமது சீடர்களுக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுத்த கட்டளையை மத்.10:7,8 இல் வாசிக்கிறோம். கர்த்தர் மாறாதவர். அன்றைக்குத் தமது சீடர்களுக்குத் தந்த அதே கட்டளையை இன்றையச் சீடர்களாகிய நமக்கும் தருகிறார். இக்கட்டளையை நிறைவேற்றுவதற்கானவற்றைக் கற்றுக்கொள்வதே இந்த அதிகாரத்தின் நோக்கம்.

தேவனுடைய கட்டளையை நிறைவேற்றத் தீர்மானிப்போம். அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கிருபைகளுக்காக ஜெபிப்போம்.

## அசுத்த ஆவிகளைத் துரத்துவது எப்படி?

பிசாசின் சகல வல்லமையையும் மேற்கொள்ள நாம் அதிகாரம் பெற்றிருக்கிறோம் என்பதை ஏற்கனவே படித்திருக்கின்றோம் (லூக்.10:19). என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள் என்று விசுவாசிகளான நம்மைக்குறித்து கர்த்தர் கூறியிருக்கிறார் (மாற்கு 16:17). எனவே 'பிசாசே நீ இந்த மனிதனை விட்டு (அல்லது குழுவை விட்டு, அல்லது சபையை விட்டு)ப் போ என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்குக் கட்டளை கொடுக்கிறேன்' என்பவைபோன்ற கட்டளைகளைக் கூற வேண்டும். பவுல் இவ்விதமாக ஒரு அசுத்த ஆவியைத் துரத்தியதை அப்.16:16–18 இல் காணலாம். இதைப் பின்பற்றுவோமாக.

## பிசாசைத் துரத்தும்படி தேவனை நோக்கி ஜெபிக்கலாமா?

நம்முடைய சொந்த பெலத்தினால் பிசாசை மேற்கொள்ள நம்மால் முடியாது என்பது தெரிந்ததே. தேவனுடைய பெலத்தினாலேயே நாம் பிசாசுகளைத் துரத்துகிறோம். இவ்வாறு இருந்தபோதிலும் 'தேவனே இந்தப்

பிசாசைத் துரத்தும்' என்று ஜெபிப்பது சரியல்ல. ஏனெனில் பிசாசைத் துரத்தும் அதிகாரத்தை அவர் நமக்கு ஏற்கனவே தந்துவிட்டார்.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் அதிகாரி என்றும் உங்களுக்கு உதவி செய்யும்படி ஒரு வேலைக்காரனை மேல் அதிகாரி நியமித்திருக்கிறார் என்றும் வைத்துக்கொள்வோம். வேலைக்காரனை ஒரு சிறு வேலை ஏவவேண்டுமென்றால் அவனை வேலை செய்யச் சொல்லும்படி மேல் அதிகாரியைக் கேட்டுக்கொள்வீர்களா? உங்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வேலைக்காரனை நீங்களே வேலை ஏவுவீர்கள் அல்லவா? அதேபோன்று பிசாசுகளின்மேல் தேவன் நமக்கு அதிகாரம் அளித்துள்ளார். இதை முழுமனதோடு நம்பி அந்த அதிகாரத்தைப் பிசாசுகளின்மேல் பயன்படுத்தவேண்டும். இதற்கு மாறாக, 'தேவனே இந்தப் பிசாசை விரட்டும்' என்று கேட்பது தேவனுடைய வாக்குறுதியை முழுமையாக நம்பாததினால்தான். எனவே, இவ்வாறு ஜெபிப்பது சரியல்ல.

தேவனுடைய பிள்ளையாகிய ஒவ்வொருவருக்கும் பிசாசின்மேல் அதிகாரம் நிச்சயமாக உண்டு. எனவே, தேவன் தந்துள்ள இந்த அதிகாரத்திற்கு அவருக்கு நன்றிசெலுத்தவேண்டுமே ஒழிய 'தேவனே இந்தப் பிசாசை விரட்டும்?' என்று ஜெபிக்கக்கூடாது. இவ்வாறு ஜெபிக்காதீர். நீரே பிசாசைத் துரத்தும். அப்.16:18 இல் இருப்பது போன்று பிசாசுக்கு 'நீ இந்த மனிதனை விட்டுப் போகும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேன்' என்பது போன்ற கட்டளை கொடுக்கவேண்டும்.

**தோற்கடிக்கப்பட்ட சத்துரு**

சாத்தானும் அவனுடைய தூதர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் சிலுவையிலே தோற்கடிக்கப்பட்டவர்கள். எனவே, நாம் தைரியமாக அவருடைய நாமத்தில் பிசாசுகளைத் துரத்தவேண்டும்.

**பிசாசுகளைத் துரத்தினால் அவை நம்மைத் தாக்குமா?**

அநேகருக்கு இந்தப் பயம் உண்டு. இந்தப் பயம் வருவதற்கு அவிசுவாசமே காரணம். தேவனுடைய பிள்ளையாக இல்லாதவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்திப் பிசாசைத் துரத்தினால் அவை அவர்களைத் தாக்கக்கூடும். இவ்விதம் தாக்கப்பட்டு ஆடையை இழந்தவர்களைக்குறித்து அப்.19:13–16 இல் வாசிக்கிறோம். ஆனால்,

பரிசுத்தமாக வாழும் தேவனுடைய பிள்ளைகள் பிசாசைத் துரத்தினால், அவர்களைத் தாக்குவதற்குப் பிசாசினால் முடியாது. ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது என்று கர்த்தர் கூறியிருக்கிறாரே (லூக்.10:19). தேவனுடைய பிள்ளைகளாயிருந்தபோதிலும் இந்த வசனத்தை முற்றிலும் நம்பாமல் பயப்படுகிறவர்களுக்குப் பிசாசுகள் தொல்லை கொடுப்பது உண்டு. உலகத்திலிருப்பவனிலும் நம்மிடத்தில் இருப்பவர் பெரியவர் (1 யோவா.4:4) என்பதையும் தேவனுடைய பிள்ளையாகிய தன்னைச் சேதப்படுத்துவதற்குப் பிசாசினால் முடியாது என்பதையும் நம்புகிறவர்களைச் சேதப்படுத்துவதற்குப் பிசாசுக்குக் கொஞ்சமும் அதிகாரமில்லை (லூக்.10:19).

எனவே, கர்த்தருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்த முற்படுகிறவர்கள் தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று நிச்சயமும் பிசாசு தங்களைச் சேதப்படுத்தாது என்ற உறுதியான விசுவாசமும் உடையவர்களாயிருக்க வேண்டும்.

சில வேளைகளில் விசுவாசிப்பவர்களுக்குத் தொல்லைகள் தருவதற்குப் பிசாசுகள் முயன்றாலும் அவை தோல்வியையே அடையும்.

### மனச்சாட்சியைச் சரிசெய்து பிசாசுக்கு எதிர்த்து நிற்பது

மனச்சாட்சியில் பாவம் உணர்த்தப்படும்போது அதைரியத்தால் பிசாசைத் துரத்தப் பயப்படுகிறவர்கள் உண்டு. இச்சமயங்களில் தேவனிடம் பாவங்களை உடனடியாக அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்பதையும் (1 யோவா.1:7) அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார் என்பதையும் (1 யோவா.1:9) நம்பி, உடனடியாகப் பிசாசைத் துரத்த முற்படவேண்டும். ஏற்கனவே அறிக்கையிட்ட பாவங்கள் அனைத்தையும் ஆண்டவர் மன்னித்து விட்டபடியால் அவற்றைக்குறித்துக் கவலைப்படவேண்டிய தேவையில்லை.

### பிசாசுகளைத் துரத்துவதற்குக் கைகளை வைத்து ஜெபிக்கலாமா?

பிசாசு பிடித்தவர்களிடமிருந்து அவற்றைத் துரத்துவதற்காக அவர்களின் தலையில் கைகளை வைத்து ஜெபிப்பது தவறல்ல. ஆனால் பிசாசு பிடித்தவர்களின் தலைமயிரைப் பிடித்து நாமாக ஆட்டுவதும், அவர்களை அடிப்பதும், அவர்கள்மேல் துப்புவதும் சரியல்ல.

நாம் பிசாசுகளைத் துரத்துவது நமது பலத்தினாலோ, நாம் பிசாசு பிடித்தவர்களை அடிப்பதினாலோ, தள்ளுவதாலோ, இவை போன்றவற்றைச் செய்வதாலோ அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே

பிசாசுகளைத் துரத்துகின்றோம். இதை நன்கு மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

**பிசாசுகளைத் துரத்துவதற்கு என்ன செய்ய வேண்டியதில்லை?**

பிசாசு பிடித்தவர்களின் தலையில் கைவைத்தும் அல்லது தலையில் எண்ணெய் பூசியும் பிசாசுகளைத் துரத்துதல் தவறு அல்ல. பல சமயங்களில் அது தேவையில்லை. ஏனெனில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே பிசாசுகளைத் துரத்துகிறோம். மிகவும் சத்தமாகச் சொன்னால்தான் பிசாசு போகும் என்று நினைக்கவேண்டியதில்லை. நமது உரத்த சத்தத்தினால் அல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே பிசாசுகளைத் துரத்துகிறோம்.

**பிசாசுகளைத் துரத்தும்போது என்ன செய்யக்கூடாது?**

பிசாசு பிடித்தவர்களை அடிப்பது, தள்ளுவது, தலையைப் பிடித்து ஆட்டுவது, மிதிப்பது, அவர்கள்மேல் துப்புவது போன்ற காரியங்களைச் செய்வது தவறு. ஜெபமாலைகள், சிலுவை ஆகியவற்றால் பிசாசுகளைத் துரத்த முயலக்கூடாது. புண்ணிய ஸ்தலம் ஒன்றிற்குச் சென்றால் பிசாசு போகும் என்பது இல்லை. உலகின் இந்த இடத்திலும் கர்த்தருடைய பிள்ளைகள் பிசாசுகளைத் துரத்தலாம். மேலும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைத் தவிர பவுல், மரியாள், மைக்கல் (மிகாவேல்) போன்ற மற்ற பெயர்களைப் பயன்படுத்திப் பிசாசுகளைத் துரத்த முற்படுதல் தவறு.

பிசாசு பிடித்தவர்கள்மேல் தண்ணீர் தெளித்தல் போன்றவை தேவையா? தண்ணீரில் கை வைத்து, அதைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமாக மாற்றுமாறு ஜெபித்து, அத்தண்ணீரைப் பிசாசு பிடித்தவர்கள் மேல் தெளிப்பதும் அவர்களை அத்தண்ணீரைக் குடிக்கச் செய்வதும் வேதத்தில் கூறப்படவில்லை. இவை தேவையில்லை.

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலும் சாட்சியின் வசனத்தாலும் பிசாசை மேற்கொள்ளவேண்டும் என்பது உண்மை (வெளி.12:11). நன்கு நினைவில் வைத்துக்கொள்வோம்; நாம் பிசாசுகளைத் துரத்துவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்தான். இதை முழுமனதோடு விசுவாசித்துப் பிசாசுகளைத் துரத்தி அவற்றின் பிடியிலிருக்கும் மக்களை விடுவிக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

**அவிசுவாசத்தினாலே பிசாசுகளைத் துரத்த முடியாமற் போதல்**

நம்மிடத்தில் அவிசுவாசம் இருந்தால் நாம் துரத்தும்போது பிசாசுகள் போவது அரிது (மத்.17:19,20). நாம் துரத்தினால் அவை போகுமென்றும்

அவற்றைத் துரத்த நமக்கு அதிகாரம் உண்டென்றும் முழு நிச்சயமாக நம்பியே பிசாசுகளைத் துரத்துதல் வேண்டும். நமது அவிசுவாசம் நீங்குவதற்கு உபவாசமும் ஜெபமும் இன்றியமையாதவையாகும் (மத்.17:21).

**தகடுகளை எடுத்தல்**

பில்லி சூனியம் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி அவ்விதம் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் தகடுகளை எடுப்பவர்கள் உண்டு. இதுவும் வேதத்தில் இல்லை. எந்தத் தகடு அல்லது மந்திரம் இருப்பினும் அதற்கு மேலான அதிகாரம் நம்மிடத்தில் உண்டு. நமக்கு இருக்கும் அதிகாரத்தின் அளவு என்ன (லூக்.10:19)? சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளும் அதிகாரம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. எனவே விசுவாசத்தோடு துரத்தினால் பிசாசுகள் ஓடிப்போகும். தகடுகள் இருப்பதாகக் கூறினார்கள் என்றால் தகடுகளும் பில்லி சூனியங்களும் செயலிழந்துபோகுமாறு நாம் கட்டளையிட்டால் அவ்வாறே ஆகும்.

**பிசாசுகள் ஒரு மனிதனை அலைக்கழித்தல்**

பிசாசுகள் தாங்கள் பிடித்துள்ள மனிதனை அலைக்கழிப்பது உண்டு. தரையில் புரளச் செய்வதும், வாயிலிருந்து அருவருப்பான நுரை தள்ளச் செய்வதும், உளறச் செய்வதும், கூக்குரலிடச் செய்வதும் இன்னும் மற்ற விதங்களில் அலைக்கழிப்பதும் பிசாசுகளின் வழக்கமாகும்.

**பிசாசுகளோடு பேசுதல்**

பிசாசுகள் தாங்கள் பிடித்துள்ள மனிதன் வழியாகப் பேசுதலை நாம் எளிதில் காணலாம். இவ்விதம் பேசியதை வேதத்தின் பல பகுதிகளில் நாம் வாசிக்கிறோம் (மாற்கு 1:23–26 போன்ற பகுதிகள்). இதில் பேசியது அந்த மனிதனல்ல, அவனுக்குள்ளிருந்த பிசாசுகள் பேசின என்பது தெளிவு. இவ்வாறு பேசும் பிசாசுகளோடு நாமும் பேச முடியும். அதாவது அந்த மனிதனைப்பார்த்துப் பேசுவதைத் தங்களிடம் பேசுவதாகப் பிசாசுகள் ஏற்றுக்கொண்டு அவன் மூலமாகப் பதில் கூறும்.

பிசாசுகளின் பெயரைக் கர்த்தர் கேட்ட சம்பவம் வேதத்தில் உண்டு (மாற்கு 5:7–13). ஆனால், அதிகம் பேசவிடாமல் அவற்றைக் கர்த்தர் அதட்டியதைப் பல இடங்களில் நாம் வாசிக்கிறோம்.

ஒரு மனிதனைப் பிடித்திருக்கும் பிசாசிடம் 'உன்னை அனுப்பியது யார்? நீ எங்கிருந்து வருகிறாய்?...' என்றெல்லாம் பேசி, அவை தரும் பொய்யான தகவல்களை நம்பி, மற்றவர்களை விரோதிப்பவர்கள் உண்டு. எனவே,

பிசாசுகளிடம் அதிகமாகப் பேசாதிருப்பது நல்லது. ஒரு நண்பனிடம் பேசுவது போன்று பிசாசிடம் பேசுவது நல்லது என்று தோன்றவில்லை. நம்மை ஏமாற்றுவதற்கு முயற்சித்து நமது தீமையையே விரும்பும் நமது சத்துருவிடம் நாம் பேச வேண்டியதென்ன? பிசாசோடு அனாவசியமாக, அதிகமாகப் பேசாதிருத்தல் நலம்.

**பிசாசுகளை சபிக்கலாமா?**

பிசாசுகளை அவதூறாகப் பேசுவதற்கு நமக்கு அதிகாரம் இல்லை (யூதா 9,10; யாக்.3:10). தேவ பிள்ளைகளில் சிலர் (ஊழியரிலும் சிலர்) பிசாசுகளைத் திட்டுவதை நாம் கேட்கிறோம். இது தவறு. நாம் இந்தத் தவறைச் செய்யாமல் இருப்போமாக. முடிந்தால் இத்தவறைச் செய்பவர்களிடம் இதைக் கூறுதல் நல்லது.

பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்பதை வேதம் தெளிவாகப் போதிக்கிறது (யாக்.4:7). அவ்வாறு எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசுக்கு இடங்கொடுக்கவும் கூடாது (எபே.4:27). இடங்கொடுத்தால் அதன் பலனாகப் பல உபத்திரவங்களை அடைய நேரிடும். பிசாசுக்கு எதிர்த்து நிற்பது என்றால் என்ன, இடங்கொடுத்தல் என்றால் என்ன என்பதைத் தியானியுங்கள்.

**பிசாசுகள் நம்மைக்குறித்துச் சாட்சியிடுதல்**

பிசாசுகள் நம்மைக்குறித்து உயர்வாகப் பேசுதல் பல இடங்களில் நடக்கின்றது. அவ்விதம் பேசினாலும் அதை விரும்பி அவற்றுடன் பேசுதல் நல்லதல்ல. நமக்குத் தேவை தேவனால் வரும் புகழ்ச்சியும் தேவன் கொடுக்கும் சாட்சியுமே. ஒரு பிசாசு நம்மைக்குறித்துச் சாட்சி கொடுத்தாலும் அந்தப் பிசாசை அதட்டி அதையும் துரத்துவதே நமது வேலை. பவுலின் செயல் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு (அப்.16:16–18). கர்த்தராகிய கிறிஸ்துவும் தம்மைப்பற்றிக் கூறாதவாறு பிசாசுகளை அதட்டியதை மாற்.1:25,34; 3:11,12; லூக்.4:41 இல் வாசிக்கிறோம். பிசாசு உம்மைக்குறித்து மேன்மையாகப் பேசினால் சந்தோஷப்படாதீர், பெருமைப்படாதீர். இதனால் நீர் விழுந்து போக ஏதுவுண்டு. எனவே கவனமாயிருப்பீராக.

**பிசாசுகள் கீழ்ப்படிவதைக் குறித்து மகிழ்ச்சி அடையலாமா?**

பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படிவதைக்குறித்து மகிழ்ச்சி அடைவதைக் காட்டிலும் நம்முடைய பெயர் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதைக்குறித்தே மகிழ்ச்சி அடையவேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார் (லூக்.10:20).

பிசாசுகளைத் துரத்துவது நமது கடமை. நமது அடையாளமும் அதுவே. எனவே பிசாசுகளை நீர் துரத்துவீரானால் அதைக்குறித்துப் பெருமையும் அதிக மகிழ்ச்சியும் அடையாதபடி கவனமாயிருப்பீராக.

**சிந்திக்க**

(i) பிசாசுகளைத் துரத்துவது எப்படி?

(ii) தேவனே, 'இந்தப் பிசாசைத் துரத்தும்' என்று ஜெபித்தல் சரியா? ஏன்?

(iii) பிசாசுகளைத் துரத்துவதற்கு முற்படுவதில் சிலர் செய்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். இவற்றைச் செய்யாதீர்.

(iv) பிசாசுகளிடம் பேசுதல் தேவைதானா?

(v) பிசாசுகளைத் துரத்தினால் அவை நம்மைத் தாக்குமா?

(vi) கர்த்தரின் வாக்குறுதியை நம்பி, பிசாசுக்கு எதிர்த்து நிற்கவும் அவற்றைத் துரத்தவும் எழும்புவோம் வாருங்கள்.

(vii) தேவனுடைய பிள்ளைகள் பிசாசுகளைத் துரத்துவதற்குத் தைரியம் அடையத்தக்கதாக ஜெபிப்போமாக.

**தியானிக்க :** மத்.10:7,8; 12:43–45; 1 கொரி.10:19–33.

# அதிகாரம் 17

# அசுத்த ஆவிகளின் பிடியிலிருந்து மீண்டவர் செய்யவேண்டியவை

**பிசாசுகள் ஒரு மனிதனுக்குள் மீண்டும் புகாமலிருக்க இரட்சிப்பு அவசியம்**

அசுத்த ஆவி (பிசாசு) ஒரு மனிதனை விட்டுப் போனபின்பு அந்த மனிதன் இரட்சிக்கப்படவேண்டியது அவசியம். அவனுடைய இருதயத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உள்ளே வந்து தங்குவதற்கு அவன் இடம் கொடுத்து வாழவேண்டும். அப்படி இல்லையென்றால் அப்பிசாசு மீண்டும் தன் தோழர்களான பல பிசாசுகளோடு வந்து அம்மனிதனுக்குள் புகுந்து தொல்லைப்படுத்தும் என்பதை மத்.12:43–45 இலிருந்து காண்கிறோம். இது மிகவும் பயங்கரம் அல்லவா? எனவே, ஒரு மனிதனை விட்டுப் பிசாசுகளைத் துரத்தினால் உடனடியாக அவன் இரட்சிப்புக்குள் நடத்தப்படவேண்டும். இந்தக் காரியத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

**சிலைகளுக்குப் படைத்தல் கூடாது**

சிலைகளுக்குப் பலியிடுதலை வேதம் என்ன கூறுகிறது? சிலைகளுக்குப் பலியிடுதல் பேய்களுக்குப் பலியிடுதலாகும் (1 கொரி.10:19–22). வெளி.2:20 இலிருந்து சிலைகளுக்குப் படைத்த பொருட்களை நாம் உண்ணுவது தவறு என்று காண்கிறோம். அப்.15:28 இல் கொடுக்கப்பட்ட கட்டளைகளில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றிற்கு விலகியிருக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும். மேற்கண்டவற்றிலிருந்து சிலைகளுக்குப் படைக்கப் பட்டவற்றை உண்ணுதல் சரியல்ல என்று காண்கிறோம். எந்தவிதமான சிலை பூஜைகட்கும், ஆயுத பூஜைக்கும் பணம் தந்து ஆதரிக்கவும் கூடாது. மரித்துப்போன முன்னோர்கள், குடும்பத்தினர் ஆகியோரின் படத்திற்கு ஊதுபத்தி, மெழுகுவத்தி கொளுத்துதல், வணங்குதல், ஆகாரம் படைத்தல் ஆகியவையும் செய்யக்கூடாது.

**சிலை வழிபாட்டு இடத்திற்குச் செல்லலாமா?**

தேவனுடைய ஆலயத்தில் சிலைகளை வைத்தல் வேதத்திற்கு எதிர்மறையானது (2 கொரி.6:16). மரியாள், அப்போஸ்தலர், கர்த்தர் அல்லது தேவதூதரைக் குறிப்பனவாயிருந்தபோதிலும் எந்தச் சிலையையும் ஆலயத்தில் வைத்தலும், வணங்குதலும் வேதத்திற்குப் புறம்பானது. சிலைகளுக்குப் பலியிடுதல் பேய்களுக்குப் பலியிடுதல் என்று 1 கொரி. 10:19,20 இலிருந்து பார்க்கலாம். சிலைகளை உருவாக்குதலும் அவைகளைப் பணிவதும் பாவங்கள் என்று வேதம் கூறுகிறது (யாத்.20:3–5). சிலைகளை வணங்குகிறவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது (வெளி.21:8).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலை என்று கருதப்படும் சிலை, படம் ஆகியவற்றையும் வணங்காதீர். தேவன் அதைச் செய்யும்படி கூறவில்லை. கற்பனையாகவும் ஒரு சாதாரண மனிதனை மாதிரியாகவும் கொண்டு அவை உண்டாக்கப்பட்டுள்ளன. அதில் இருக்கும் சாயல் இயேசுவின் சாயலல்ல. பிசாசின் தந்திரங்களில் முக்கியமானது தேவதூதர்கள், அப்போஸ்தலர்கள், யோசேப்பு, மரியாள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பவர்களைக்குறிக்கும் சிலைகள் அல்லது படங்களை உருவாக்கச்செய்து அவற்றை வணங்கச் செய்வதே. இந்த வஞ்சகங்களை அடையாளங்கண்டு அவற்றை விட்டு விலகவேண்டும். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் உம் இருதயத்திலும் உம் சபை நடுவிலும் உலாவுகிறார். அவருக்குச் சிலை செய்து அவமானப்படுத்தாதீர். எந்தச் சிலையையோ படத்தையோ தொட்டு முத்தமிடாதீர். அவற்றை உம் கழுத்திலோ உம் விரலிலோ அணியாதீர். அவற்றிற்கு முன்பாக மெழுகுவர்த்தி, ஊதுபத்தி, சூடம் போன்றவற்றைக் கொளுத்தாதீர். அவற்றிற்கு முன்பாக எதையும் படைக்காதீர். அப்படிப் படைக்கப்பட்டதாகத் தெரியவருபவற்றை உண்ணாதீர். இப்படிப்பட்ட பாவங்கள் தேவனுக்கு எரிச்சலை உண்டாக்குகின்றன. கவனமாயிருப்பீராக (யாத்.20:3–5; வெளி.21:8; கலா.5:19–21).

**திருவிழாக்களில் பங்கேற்கலாமா?**

திருவிழாக்கள் என்ற பெயரில் தேர்களை இழுப்பது, சப்பரங்களைத் தெருவில் கொண்டுசெல்வது முதலியன வேதத்தில் கூறப்பட்டுள்ளதா? இல்லையே. சிலைகளை இவ்விதம் மகிமைப்படுத்துவதில் பங்கேற்காதீர். கர்த்தருடைய வேதப்படி நடப்பவரே உத்தம மார்க்கத்தார் (சங்.119:1).

உம் குழுவில் உள்ளவர்களுக்கும் உம் சபையில் உள்ளவர்களுக்கும் இவற்றைக்குறித்துச் சாந்தமாக, கவனமாக, ஆனால் சரியாகப் போதிக்கத் தவறாதீர்.

**குறிப்பு :** இதில் எழுதப்பட்டுள்ளவை யாரையும் தாக்கும் நோக்கம் உடையவை அல்ல. வேதத்தை ஆராய்ந்து உண்மையை உணர்ந்து கொள்ளும்படியாக எழுதப்பட்டுள்ளன. நீங்களும் வேதத்தை ஆராய்ந்து பார்த்து உங்கள் கருத்துகளை வேதத்தின்படி சரி செய்யுங்கள்!

**வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை**

அனுதினமும் வேதத்தைத் தியானிப்பதிலும் ஜெபிப்பதிலும் கர்த்தரோடு நெருங்கிய தொடர்புகொண்டு வாழவேண்டும். கர்த்தரிடம் நெருங்கியிருப் பவர்களைப் பிசாசு பிடிக்க இயலாது.

நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவிசெய்து (ரோம.8:26) சத்துருவை எதிர்த்துப் போரிடுவதற்கு (ஏசா.59:19) ஆவியானவரின் அபிஷேகம் தேவை. எனவே இரட்சிப்பைப் பெற்றதோடு நிறுத்திவிடாமல் ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று அனுதினமும் ஆவியில் நிரம்பி ஜெபிப்பது அவசியம் ஆகும்.

நல்ல ஒரு ஆவிக்குரிய ஐக்கியத்தில் இணைவது சோர்ந்து போகாதிருக்க உதவிசெய்யும். தொடர்ந்து ஆவிக்குரிய ஐக்கியத்தில் ஒழுங்காக ஈடுபட்டு சகோதரர்களுக்குள்ளே ஒருமனப்பாட்டில் நிலைத்திருப்பதும் தேவையானதாகும்.

மேலும் கர்த்தர் தந்த விடுதலையைக்குறித்து, கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியிலும் மற்றவர்களிடமும் அடிக்கடி கூறி வாழ்நாள் முழுவதிலும் கர்த்தரை மகிமைப்படுத்துவது நல்லது.

**சிந்திக்க**

சிலைகளைக்குறித்தும் பிற தவறான காரியங்களைக்குறித்தும் கூறப்பட்டுள்ளவைகளைச் சிந்தித்துப்பாருங்கள்.

**செயல்பட**

பிசாசுகளை ஒரு மனிதனைவிட்டுத் துரத்தினால் அவனை இரட்சிப்புக் குள் நடத்துவதற்கு மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இந்தக் காரியத்தைத் தவற விட்டுவிடாதீர். அவ்வாறு இரட்சிப்பிற்குள் நடத்தப்படாவிட்டால் அவனின் நிலைமை மிகவும் மோசமடைய நேரிடலாம்.

## அதிகாரம் 18

# விசுவாச வரம்

### விசுவாச வரம் என்றால் என்ன?

தேவனுடைய தாசர்கள் ஆவியானவரின் ஏவுதலால் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் தாங்கள் சொல்வது எதுவோ அல்லது செய்வது எதுவோ அது நிச்சயம் நடைபெறும் என்று சிறிதளவு சந்தேகமுமின்றி முழு நிச்சயமாக நம்புவதற்கு ஏவுவது இந்த வரம். இந்த வரையறை சில இடங்களில் (குறிப்பாகப் பழைய ஏற்பாட்டு காலத்தில்) சில சிறிய மாற்றங்களோடு பொருந்தும். இயற்கைக்கு மேற்பட்டு, செயல்பாடுகளை விசுவாசிப்பதையே இவ்வரத்தினால் குறிப்பிடுகிறோம்.

### இச்சைகளை நிறைவேற்றுவதற்காக விசுவாசித்தல்

அற்புதங்களுக்காக விசுவாசிக்கும் அநேகர், தாங்கள் இச்சிப்பவற்றிற்காக (பணம், பதவி, செல்வம் போன்றவை) விசுவாசிக்க முனைந்து தோல்வியடைகின்றனர். தேவ நாம மகிமைக்கென்றும் நமது தேவைகளுக்கென்றும் விசுவாசிக்கவேண்டும். வயிற்றுக்கு உணவு தேவைதான். எப்பொழுதும் பிரியாணி போன்ற மிக உயர்ந்த உணவுவேண்டும் என்று விரும்புவது இச்சை. இச்சைகளை நிறைவேற்றுவதற்காக விசுவாசிக்காதீர்.

### விசுவாச வரம் என்பது இரட்சிப்பிற்கான விசுவாசமா?

இரட்சிப்பிற்குரிய விசுவாசம் என்பது மீட்படைவதற்குத் தேவனுடைய வார்த்தையின் ஆதாரத்தின் பேரில் கிறிஸ்துவை நம்புவது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் பாவங்களைச் சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்றும், அவரிடம் அறிக்கையிட்டபோது என் பாவங்களை மன்னித்தார் என்றும், என் உள்ளத்தில் வருமாறு அவரை அழைத்தபோது அவர் வந்துவிட்டார் என்றும் நம்புவது இரட்சிப்பிக்குரிய விசுவாசம் ஆகும். ஆனால், இந்த இரட்சிப்பைப் பெற்றவர் இயற்கைக்கு மாறான காரியங்கள் நடப்பதற்கென்று, அற்புதங்கள் நடப்பதற்கென்று விசுவாசம் வைப்பது விசுவாச வரத்தினால்.

**ஆவியின் கனியாகிய விசுவாசம், ஆவியின் வரமாகிய விசுவாசம்**

ஆவியின் கனி என்று கலா.5:22 இல் எழுதப்பட்டுள்ள விசுவாசம் என்ற சொல் மூலமொழியில் உண்மையாயிருத்தல் **(faithfulness, fidelity)** என்ற பொருளிலும் வருவதாக வேதவல்லுநர்கள் கருதுகின்றனர். ஆனால் 1 கொரி. 12:9 இல் விசுவாச வரம் என்பதற்கு எழுதப்பட்டுள்ள விசுவாசம் என்ற மூலமொழிச் சொல்தான் கலா.5:22 இலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லிற்கு உண்மையாயிருத்தல் என்ற பொருளும் உண்டு.

வரமாகிய விசுவாசத்திற்கும் கனியாகிய விசுவாசத்திற்கும் கீழ்க்கண்ட வேறுபாடு இருப்பதாகக் கருதலாம். விசுவாசமானது அற்புதங்களைச் செய்யும் அளவில் வெளிப்படும்போது அதை வரம் என்றும் அன்றாட வாழ்க்கையின் நடைமுறைச் செயல்களிலும் சொற்களிலும் வெளிப்படும்போது அதைக் கனி என்றும் கருதலாம். உண்மையாயிருத்தலையும் கனியென்று கருதலாம்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் ஆவியின் கனியாகிய விசுவாசம் காணப்படுதல் அவசியமாகும். தேவனுடைய வாக்குறுதிகளை நம்பி, அவற்றில் சார்ந்துகொண்டு, அவற்றின்படி தனக்கு நடக்கும் என்று எண்ணி வாழ்வது ஆவியின் கனியாகிய விசுவாச வாழ்வாகும். ஆனால், எலியாவைப் போன்று வானத்திலிருந்து அக்கினியை ஜெபத்தின்மூலம் வரவழைப்பது ஆவியின் வரமாகிய விசுவாசம் ஆகும். மோசே செங்கடலைப் பிளந்தது விசுவாச வரத்தின் செயலினால்தான். பல சமயங்களில் விசுவாச வரமானது மற்ற வரங்களோடு இணைந்து செயல்படும்.

ஜியார்ஜ் முல்லர் என்ற தேவ மனிதரின். வாழ்க்கையின் பல கட்டங்களில் விசுவாச வரம் செயல்பட்டதை நாம் உணரலாம். 2000 அநாதைக் குழந்தைகளைப் பாதுகாத்து உணவளித்தபோதிலும், அதற்குத் தேவையான அனைத்தையும் மனிதர் எவரிடமும் கேட்காமல் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொண்டது விசுவாச வரத்தின் இக்கால எடுத்துக்காட்டு. "பார்திமேயுவின் கண்களைத் திறந்த ஆண்டவரே என் வாகனத்தைச் சோதனையிடும் அதிகாரிகள், நான் கொண்டு செல்லும் வேதாகமங்களைக் காணாதவாறு அவர்களின் கண்களைக் குருடாக்கும்" என்ற ஜெபத்துடன் கம்யூனிச நாடுகளுக்குள் வேதாகமங்களைக் கடத்திச்சென்று விநியோகித்த **Bro.** ஆண்ட்ருவின் செயல்களில் விசுவாச வரத்தின் முத்திரையைக் காணலாம். (ஜியார்ஜ் முல்லரின் வாழ்க்கை வரலாற்று நூலையும் 'தேவனின் கடத்தல்காரர்' என்ற நூலையும் வாங்கி வாசியுங்கள். இவை மிகவும் பயனுள்ள நூல்கள். எல்லா கிறிஸ்தவ நூல்நிலையங்களிலும் தமிழில் கிடைக்கும்).

வேதத்திலிருந்தும் இக்காலச் சரித்திரத்திலிருந்தும் இன்னும் அநேக எடுத்துக்காட்டுகள் கூற முடியும்.

**விசுவாச வரம் செயல்பட்டதற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு**

ஒருமுறை இஸ்ரவேலரோடு போரிடுவதற்காகப் பெலிஸ்தர் வந்தார்கள். இஸ்ரவேலருக்கு இக்கட்டான நிலைமை உண்டாயிற்று. தோற்றுப்போனால் அநேகர் உயிரிழக்கவும் அடிமைகளாய் மாறவும் நேரிடும் சூழ்நிலை இருந்தது. இந்நிலையில் பெலிஸ்தரின் சேனையில் கோலியாத் என்ற பெரிய அரக்கன் இருந்தான். அவனைத் தோற்கடித்தால்தான் இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைக்கும் என்ற நிலை உண்டாயிருந்தது. அவனோடு போரிட்டு அவனைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கை இஸ்ரவேலரின் அரசரான சவுலுக்கும் அவருடைய சேனையில் இருந்த யாருக்கும் இல்லை. கோலியாத்துக்குப் பயந்து ஒடினார்கள் (1 சாமு.17:24). இந்தச் சமயத்தில் இராணுவப் பயிற்சி பெறாத தாவீது என்ற ஒரு சிறுவன் அந்தப் போர்க்களத்திற்கு வந்தான். சூழ்நிலையைக் கேள்விப்பட்ட அவன், தான் நம்பியிருக்கிற தேவனின் நாமத்தினாலே தன்னால் அந்த அரக்கனாகிய கோலியாத்தை வீழ்த்த முடியும் என்று நம்பினான். 'ஜீவனுடைய தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்' என்று முழங்கிய தாவீதின் சொற்களில் தொனித்த விசுவாசத்தை 1 சாமு.17:26 இல் வாசிக்கிறோம். அரசனாகிய சவுலோ அவிசுவாசம் உடையவராயிருந்ததை 1 சாமு.17:33 இலிருந்து அறிகிறோம்.

தாவீதின் விசுவாசத்தை மீண்டும் 1 சாமு.17:36,37,45–47 இல் வாசிக்கிறோம். இந்த விசுவாசத்தினாலே தாவீது கோலியாத்தை வீழ்த்தினார் (எபி.11:32,33). ஒரு சிறு கூழாங்கல்லினால் மட்டும் அல்ல; தாவீதின் விசுவாசத்தினால்தான் அந்தக் கல்லினால் கோலியாத்தைக் கொல்ல முடிந்தது. சிறு கூழாங்கல்லினால் பெரிய அரக்கனை வீழ்த்தியது விசுவாச வரத்தின் செயலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சூழ்நிலைகளுக்கேற்ப விசுவாசிப்பது சரியான விசுவாசம் அல்ல. சூழ்நிலைகள் எதிர்மறையாகத் தோன்றியபோதிலும், எல்லோரும் விசுவாசமிழந்து காணப்பட்டாலும் தேவன்மீது அசையாத நம்பிக்கையினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல் நடப்பிப்பது விசுவாச வரமாகும். இதற்கு முன்பு இப்படிப்பட்ட அற்புதம் நடந்திராதபோதிலும், விசுவாசிப்பதற்கு இவ்வரம் செயல்படும்.

## விசுவாச வரத்தின் பலன் யாருக்குக் கிடைக்கும்?

ஒரு மனிதன் அல்லது ஒருசில மனிதரின்மூலம் செயல்படும் விசுவாச வரத்தினால் பொதுவாக அநேகர் பயனடைகிறார்கள். செங்கடல் பிளந்தது, கோலியாத்தை வென்றது, சூரியனையும் சந்திரனையும் நிலைத்து நிற்கச்செய்தது (யோசு.10:12–14) போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

## தேவன் நேரிடையாகப் பேசினால்தான் விசுவாசமா?

'எலியா, மோசே என்பவர்களோடு தேவன் பேசியதுபோல எங்களிடமும் பேசினால் நாங்கள் விசுவாசிப்போம்' என்று கூறுவோர் உண்டு. தாவீதிடம் தேவன் நேரிடையாகப் பேசாவிடினும் தாவீது கோலியாத்தை வீழ்த்தத்தக்க விசுவாசம் வைக்கவில்லையா? நாமும் அவ்வாறு செய்யலாமே. மேலும் தேவன் நம்மிடம் பேசுவதைப்போன்றே அவர் எழுதித் தந்திருக்கும் வேதம் ஆதாரம் உடையது அல்லவா? எனவே, தேவனுடைய வார்த்தையான வேதத்தை அதிகமாக விசுவாசிப்போமாக.

## விசுவாச வரமும் மற்ற வரங்களும்

அநேக வரங்கள் விசுவாச வரத்தைச் சார்ந்து இருக்கின்றன. குறிப்பாக, அற்புதங்களைச் செய்யும் சக்தியும் குணமாக்கும் வரங்களும் விசுவாச வரத்தை மிகவும் சார்ந்திருக்கின்றன. விசுவாச வரமின்றி இவ்வரங்கள் செயல்படுவது அரிது. விசுவாச வரமே மற்றெல்லா வரங்களுக்கும் அடிப்படையாக அமைந்திருக்கிறது என்று கருதுபவர்களும் உண்டு. ஒரு மனிதனில் பல வரங்கள் அதிகமான அளவில் செயலாற்ற முடியும் என்று ஏற்கனவே பார்த்தோம். விசுவாச வரம் மட்டும் தனியாகப் பெற்றிருக்கும் ஒருவனைக் காட்டுதல் மிகவும் கடினமானது.

## யாவருக்கும் விசுவாசம் உண்டா?

தேவனுடைய பிள்ளைகளான யாவருக்கும் ஓரளவு விசுவாசம் உண்டு (ரோம.12:3). ஆனால் யாவருக்கும் விசுவாச வரம் இல்லை என்று கருதலாம். அதாவது, வரம் என்று குறிப்பிடும் அளவிற்கு விசுவாசம் எல்லோருக்கும் இருப்பதுபோன்று தோன்றவில்லை.

## தியானிக்க

எபி.11:1–40; மாற்.11:23; யோவா.14:12; மாற்.16:17,18; யோவா.20:29. விசுவாசத்தினால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை இப்பகுதிகளினின்று ஆராய்க.

**சிந்திக்க :** யார் பாக்கியவான்கள்? யோவா.20:29

**ஜெபிக்க**

உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் உள்ள தேவனுடைய பிள்ளைகளில் அநேகர் விசுவாச வரத்தை உடையவர்களாக இருப்பது நல்லதல்லவா? எனவே விசுவாச வரம் நம்மிலும் உலகெங்கிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள்மேலும் அதிக அளவில் ஊற்றப்பட ஜெபிப்போமாக.

# அதிகாரம் 19

# அற்புதங்களைச் செய்யும் சக்தி

**நமது தேவன் அற்புதங்களைச் செய்கிறவர்**

ஒன்றுமில்லாமையிலிருந்து வானத்தையும் பூமியையும் தேவன் உண்டாக்கின விதத்தை நாம் தியானித்துப்பார்த்தால் அவருடைய அற்புதங்களைச் செய்யும் சக்தியைச் சிறிதளவேனும் உணரமுடியும். தன்னுடைய வார்த்தையினாலேயே இவற்றைச் செய்துமுடித்தார் என்பது அவருடைய வல்லமையையும் மகத்துவத்தையும் விளக்குகின்றது. ஒரு கடற்கரைக்குச் சென்று, தண்ணீரண்டையில் நின்று, கடலைப் பார்த்து, அதை உண்டாக்கினவரைத் தியானித்துப் பாருங்கள். அவருடைய கிரியைகள் அற்புதங்கள் அல்லவா? பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருப்பது ஒரு அதிசயம் அல்லவா (யோபு 26:7)? மனிதனையும் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கியிருக்கிறார் (சங்.139:14). அவருடைய அற்புதங்கள் அனைத்தும் ஆராய்ந்து முடியாது. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத பெரிய அதிசயங்களையும் செய்கிறார் நமது தேவன் (யோபு 9:10). ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிற நமது தேவன் மகத்துவமுள்ளவர் (சங்.136:4; 86:10). எகிப்திலே பெரிய அற்புதங்களைத் தேவன் செய்தார் (சங்.78:43). செங்கடலைப் பிளந்தபோது அவருடைய மகிமையை இஸ்ரவேலர் நன்றாக உணர்ந்தனர். அவரைக் குறித்து மோசே துதித்துப் போற்றியதிலும் "...அற்புதங்களைச் செய்வதிலும் உமக்கு ஒப்பானவர் யார்" என்று கூறியிருப்பதைக் காணலாம் (யாத்.15:11). எரேமியா 32:27 இல் "இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ" என்று சவாலாகக் கர்த்தர் கூறியிருப்பதைக் காண்க. இதை வாசிக்கும் சகோதரனே, நமது பிதாவாகிய தேவனைப்போன்று அவருடைய பிள்ளைகளான நாம் அற்புதங்களைச் செய்கிறவர்களாக இருக்க வேண்டாமா? நமது பிதாவின் பண்புகள் நம்மில் காணப்படுவது அவசியம்

அல்லவா? எனவே அற்புதங்களைச் செய்யும் சக்தி என்ற வரத்திற்காக ஜெபிப்பீராக. அதுமட்டுமல்ல எந்த அற்புதம் தேவையானாலும் அதைத் தேவன் செய்வார் என்று விசுவாசித்துப் பெற்றுக்கொள்வீராக.

**நமது கர்த்தராகிய இயேசுவும் அற்புதங்களைச் செய்கிறவர்**

கர்த்தர் செய்த முதலாம் அற்புதம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின தாகும் (யோவா.2:11). ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்துக்கும் அதிகமான பேருக்கு உணவளித்தார் (யோவா.6:5–13). இது உருவாக்கும் அற்புதமாகும். இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார் (யோவா. 11:47). அவருடைய நாமம் அதிசயமானவர் அல்லவா (ஏசா.9:6)? இன்றைக்கும் தம்மால் மீட்கப் படுபவர்களின் மூலம் அற்புதங்களைச் செய்கிறார். ஏனெனில் அவர் மாறாதவர் (எபி.13:8). அற்புதங்களைச் செய்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்ட சகோதரரே, அவரைப் பின்பற்றுகிறவரே, நீரும் அவ்விதம் செய்யும்படி நாடுவீராக.

**இக்காலத்தில் அற்புதங்கள் நடப்பதில்லை என்பது சரியா?**

இக்காலத்தில் அற்புதங்கள் நடப்பதில்லை என்று சொல்வது பிசாசினால் உண்டான கள்ளப்போதகமாகும். இவ்வாறு கூறுகிறவன் தேவனுடைய மகத்துவத்தை அறியாதவனும் மறுதலிக்கிறவனுமாக இருக்கிறான். தேவன் மாறவில்லை. எனவே அவர் அற்புதங்களைச் செய்வதும் மாறவில்லை. அற்புதங்களை நம்பாதவர்கள் ஜெபிப்பது மாய்மாலமாகும்.

**எதற்காக அற்புதங்கள்?**

தேவனாகிய கர்த்தரே உண்மையான தேவன் என்றும் அவருடைய ஊழியர் யார் என்றும் மக்கள் அறிந்துகொள்ளும்படியாகத் தேவன் அற்புதங்களைச் செய்கிறார் (1 இரா.18:36–38). தேவனுக்குக் கீர்த்தி உண்டாவதற்காகவும் அற்புதங்கள் நடைபெறுகின்றன (நெகே.9:10). கர்த்தராகிய இயேசுவை வெளிப்படுத்தவும் அற்புதங்கள் செய்யப்படுகின்றன (அப்.2:22). தேவனுடைய மனிதரின் வார்த்தைகளை உறுதிப்படுத்தவும் (மாற்.16:20) மக்களுடைய பாவங்களைச் சுட்டிக்காண்பிக்கவும் அற்புதங்கள் தேவை (1 சாமு.12:16–19). தேவனுடைய மக்களைப் போராட்டங்கள், பிரச்சனைகள், வியாதி, அடிமைத்தனம் போன்றவற்றினின்று மீட்பதற்கும் அற்புதங்கள் தேவை (எரே.32:21,22; 2 இரா.6:18). இரட்சிப்பை உறுதிப்படுத்தவும் அற்புதங்கள் தேவைப்படுகின்றன (எபி.2:4). அற்புதங்களைக் காணாவிட்டால் விசுவாசியாத மக்கள் அநேகம் உண்டு (யோவா.4:48). இவர்கள் விசுவாசிப்பதற்கு அற்புதங்கள் அவசியம்.

யோவா.2:23; 12:18, அப்.4:10 இலிருந்து இன்னும் சில குறிப்புகளைத் தியானியுங்கள்.

**அற்புதங்கள் மக்களைக் கர்த்தரிடம் சேர்க்கின்றன**

வானத்திலிருந்து அக்கினி வந்து எலியா ஆயத்தம்பண்ணின பலியின்மீது இறங்கியதைக் கண்ட இஸ்ரவேலர் தேவனைப் பணிந்துகொண்டு 'கர்த்தரே தெய்வம்' என்று கூறினர் (1 இரா.18:36–39). சமாரியாவிலே பிலிப்புவின் ஊழியத்தில் அற்புதங்கள் நடந்ததால் மக்கள் விசுவாசித்தனர் (அப்.8:6–8,12). இன்றும் அற்புதங்களைக் கண்டு இரட்சிக்கப்படுவோர் உண்டு.

**தேவன் நேரடியாகச் சொன்னால்தான் அற்புதத்திற்காக ஜெபிக்க வேண்டுமா?**

எலியாவின் ஜெபத்தைக் கவனித்துப் பார்த்தால் (1 இரா.18:36,37) இவ்வாறு தோன்றுகிறது. சில நேரங்களில் தேவன் முன்கூட்டியே ஒரு குறிப்பிட்ட அற்புதத்தைச் செய்யும்படி கூறுவது உண்டு. மோசேயையும் இவ்வாறு நடத்தினார் (யாத்.14:15,16,26,27). ஆனால் பல சமயங்களில் அவ்வாறின்றி தன்னுடைய ஊழியரின் வேண்டுதலின்படி கர்த்தர் அற்புதங்களைச் செய்ததை நாம் வாசிக்கலாம். 1 சாமு.12:16–19; 2 இரா.20: 8–11; 2 இரா.6:18–20 என்பவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

இதுவுமல்லாமல் ஜெபம் ஏதுமின்றி அற்புதங்கள் நடந்திருப்பதையும் வேதத்தில் வாசிக்கிறோம் (அப்.3:6–8, 2 இரா.5:9–14 போன்ற பகுதிகள்). அற்புதங்களைச் செய்யும் சக்தி என்ற வரம் பெற்ற தேவதாசர்கள் பலவிதங்களில் பல அற்புதங்களைச் செய்யமுடியும் என்று இவற்றிலிருந்து காண்கிறோம். கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அவர் செய்த காரியங்களைத் தானும் செய்வான்; அவற்றைவிடப் பெரிய காரியங்களையும் செய்வான் (யோவா.14:12). இப்பகுதியில் கூறப்படும் வேதப்பகுதிகளை வாசித்துத் தியானியுங்கள்.

**மனிதன் அற்புதம் செய்ததாகக் கூறப்படுகிறதே!**

தேவனுடைய வல்லமையின்றி தேவனுடைய தாசர்கள் அற்புதங்களைச் செய்ய இயலாது. தேவனுடைய வல்லமையினால் அற்புதங்கள் நடந்தபோதிலும் யார் நடப்பித்தார்களோ, அவர்கள் செய்ததாக வேதம் கூறுகிறது (யாத்.11:10; உபா.34:11 இன்னும் பல). அற்புதங்களைச் செய்வதில் தேவதாசர்களுக்கு மிகுந்த பங்கு உண்டு என்பதை இதினின்று உணரலாம்.

## தேவனுடைய அற்புதங்களுக்காக ஏங்குதல், ஜெபித்தல்

கிதியோனின் ஏக்கத்தை நியா.6:13 இல் வாசிக்கிறோம். இந்த ஏக்கம் நமக்கு இன்றைக்கு இருப்பதாக. அப்.4:30 இல் ஆதி சபையினர் செய்த வேண்டுதலைத் தியானித்துப் பாருங்கள். ஊழியர்மூலம் அற்புதங்களுக் காகவும் குணமாகுதலுக்காகவும் ஊக்கமாக ஜெபித்தனர். இதைப் போன்ற ஜெபத்தை அடிக்கடி (கூடுமானால் தினந்தோறும்) செய்வதற்கு இன்றைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## அற்புதங்களும் குணமாக்குதலும்

தேவன் நம்மை அற்புதமாகக் குணமாக்குதலைக்குறித்துப் பின்னர் படிப்போம். அவ்வாறு குணமாக்குதல் ஒவ்வொன்றும் அற்புதந்தான். ஆனால் எல்லா அற்புதங்களும் குணமாக்குதல் அல்ல. தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியது, தண்ணீரின்மேல் நடந்தது போன்றவை அற்புதங்கள். இவை குணமாக்குதல் அல்ல. ஆனால் குணமாக்குதலை அற்புதங்கள் என்று குறிப்பிட்டுள்ளதை யோவா.4:52–54; 6:2; அப்.4:22 இல் வாசிக்கிறோம்.

## குடும்பத்தோடு அற்புதங்களாக இருக்க அழைப்பு

ஏசாயா தன் குடும்பத்தோடு இஸ்ரவேலில் அற்புதங்களாகவும் அடையாளங்களாகவும் இருந்ததை ஏசா.8:18 இல் வாசிக்கிறோம். இவ்விதம் இருக்குமாறு நாமும் அழைக்கப்படுகிறோம். சகோதரரே உமது வாழ்க்கையும் உமது பிள்ளைகளின் வாழ்க்கையும் அற்புதங்களாகவும் அடையாளங் களாகவும் இருக்குமாறு ஊக்கமாக ஜெபியுங்கள்.

## கள்ளப்போதகரும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் அற்புதம் செய்தல்

மந்திரவாதிகளும் கள்ளப்போதகரும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் பிசாசும் அற்புதங்களைச் செய்யக்கூடும். இதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. யாத்.7:9–12,22; 8:7; மத்.24:24; மாற்.13:22; வெளி.13:13,14; 16:14; 19:20 இல் இருந்து இதைப் புரிந்துகொள்ளலாம். இப்படி யாரையேனும் நீர் கண்டால் அவர்கள் யாருடைய நாமத்தில் அற்புதங்கள் செய்கிறார்கள் என்று கவனித்துப் பார்க்கவேண்டும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் செய்தால் அதைத் தடுக்கக்கூடாது என்று கர்த்தரே கூறியிருக்கிறார் (மாற்.9:38,39). இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் செய்கிறவர்களிலும் களைகளைப் போன்ற சிலர் இருக்கக்கூடும்.

அற்புதங்கள் செய்கிறவர்கள் யாவரும் தேவனிடமிருந்து செய்கிறார்கள் என்று நம்பாதீர். அவர்களில் யாரையேனும் பின்பற்ற, அவர்களுக்கு உதவி

செய்ய, நீர் விரும்பினால் அவர்களின் வாழ்க்கையைக் கவனிக்கவேண்டும். அற்புதங்களால் அல்ல, அவர்களுடைய வாழ்க்கையில் ஆவியின் கனி காணப்பட்டால் மட்டுமே அவர்களைப் பின்பற்றவேண்டும் (மத்.7:15–20). இல்லையேல் அவர்களை விட்டு விலகவேண்டும். போலி அற்புதங்கள் இருப்பதினால் கர்த்தருடைய நாமத்தில் அற்புதம் செய்பவர்கள் அதிகமாகத் தேவை. எனவே, இவ்வரத்திற்காக ஊக்கமாக மன்றாடுவோமாக.

தேவனாகிய கர்த்தர் அற்புதங்களைச் செய்கிறவர். அவருடைய பிள்ளைகளான நாமும் அவ்வாறு அற்புதங்கள் செய்வது நல்லதல்லவா? எனவே அற்புதங்களைச் செய்யும் சக்தி என்னும் ஆவிக்குரிய வரம் தேவமக்கள் மீது ஊற்றப்பட ஜெபிப்போமாக.

**விசுவாசத்தினாலே அற்புதங்கள் நடைபெறுகின்றன**

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல; விசுவாசத்தினாலே அற்புதங்கள் நடைபெறுகின்றன (கலா.3:5). எனவே, நமது விசுவாசத்தின் அளவும் அற்புதங்கள் நடைபெறுவதற்கு ஒரு ஏதுவாகும். விசுவாசவரம் அற்புதங்களைச் செய்யும் வரத்தோடு இணைந்து செயல்படுகிறது என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும்.

**தேவனுடைய அற்புதங்களைக்குறித்து என்ன செய்யவேண்டும்?**

தேவனுடைய அற்புதங்களை நினைவுகூரவேண்டும் என்று வேதத்திலிருந்து காண்கிறோம் (1 நாளா.16:12,13; சங்.77:11; 105:2,6). இதற்காக வேதத்தை நன்கு வாசிக்கவேண்டும். இஸ்ரவேலர் இவ்வாறு நினைவுகூராமற்போனதினால் கலகம்பண்ணுகிறவர்களாக மாறியதை வேதத்தில் வாசிக்கிறோம் (சங்.106:7). எனவே தேவன் செய்த அற்புதங்களை (வேதத்திலுள்ளவற்றையும், மற்றவர்களுக்கும் நமக்கும் செய்தவற்றையும்) அடிக்கடி நினைவுகூருவது நல்லது. தேவன் செய்த அற்புதங்களை நன்கு தியானிக்கவேண்டும். வேதத்திலுள்ளவற்றை மட்டுமல்லாது நமக்குச் செய்தவற்றையும் தியானிக்கவேண்டும் (சங்.119:27; 1 நாளா.16:9). அவற்றைக் குறித்து அடிக்கடி பேசுதல் நல்லது. அற்புதங்கள் தற்செயலாக நடந்தன என்றும் நாம் செய்தோம் என்றும் நினைக்காமல் அதைத் தேவன் செய்தார் என்பதை மனமார ஒத்துக்கொள்ளவேண்டும் (உபா.26:7–9).

தேவன் செய்த அற்புதங்களை நினைத்து அவரைத் துதிக்கவேண்டும் என்பதை சங்.136:4; 107:8,9,15,16,21,22,31 இலிருந்து புரிந்துகொள்ளலாம். அற்புதங்களைத் தியானிப்பது மட்டும் போதாது அவற்றைக்குறித்துப் பேசவும் மற்றவர்களுக்கு அறிவிக்கவும் விவரித்துச் சொல்லவும் (1 நாளா.16:9;

சங்.71:17; அப்.15:12), பிரசித்தப்படுத்தவும் வேண்டும் (தானி.4:2,3). தாவீது இவ்வாறு செய்வேன் என்று வாக்குப்பண்ணினார் (சங்.145:5). பின்வரும் சந்ததிக்கு அறிவித்தல் அவசியம் (சங்.78:4). நமது வாழ்க்கையில் கர்த்தர் செய்த அற்புதங்களையும் அதிசயங்களையும் நமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நமது உற்றார் உறவினரும் அறிவது மிகவும் அவசியம். மேலும் மற்றவர்களால் தேவன் அற்புதம் நடத்தினார் என்று சொல்லப்படுவதையும் நன்கு கேட்கவேண்டும். அவ்வாறு கேட்டு தேவனை மகிமைப்படுத்தவேண்டும் (அப்.15:12).

**தேவன் யார் மூலம் அற்புதங்கள் செய்திருக்கிறார்?**

நேரிடையாகத் தேவன் அற்புதங்களைச் செய்ததை வானத்தையும் பூமியையும் படைத்ததினின்று உணரலாம். மேலும் பல இடங்களில் அவர் நேரிடையாக அற்புதங்களைச் செய்ததைக் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் காணலாம். சோதோம் கொமோராவை அழித்தது (ஆதி.19:23–25); மோசேயின் கையில் தொழுநோய் (குஷ்டம்) உண்டாகவும் நீங்கவும் செய்தது (யாத்.4:6,7), எகிப்தியரின் தலைப்பிள்ளைகளையும் விலங்குகளின் தலையீற்றையும் அழித்தது (யாத்.12:29,30), வானத்திலிருந்து மன்னாவை அளித்தது (யாத்.16:14,15,31), காடைகளை அனுப்பியது (எண்.11:31) போன்ற இன்னும் அநேக நிகழ்ச்சிகள் உண்டு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்ததை நாம் நற்செய்தி நூல்களில் வாசிக்கிறோம்.

இதைத் தவிர மோசே, சாமுவேல், எலியா, எலிசா, ஏசாயா போன்ற தன்னுடைய ஊழியர் மூலமாக அநேக அற்புதங்களைத் தேவன் செய்துள்ளார். அப்போஸ்தலரால் அற்புதங்கள் நடந்ததையும் (அப்.2:43; 5:12) ஸ்தேவான் மூலமாக அற்புதங்கள் நடந்ததையும் (அப்.6:8), பிலிப்பினால் அற்புதங்கள் நடந்ததையும் (அப்.8:6–8,13), பவுல் பர்னபா மூலம் அற்புதங்கள் நடந்ததையும் (அப்.19:11,12) நாம் காண்கிறோம். தேவன் இவர்கள்மூலம் இவற்றை நடப்பித்தார். இன்னும் பல வேதப்பகுதிகளிலும் அற்புதங்களை வாசிக்கிறோம். தேவனால் அற்புதங்கள் செய்கிற பலர் இன்றும் உண்டு.

**எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறார்களா?**

இந்தக் கேள்வியை 1 கொரி.12:29 இல் காண்கிறோம். இதன் பதில் இல்லை என்பதாகும். ஆனால் ஆத்தும ஆதாயம் செய்கிற ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்யும் சக்தியைப் பெற்றிருந்தால் அநேகர் தொடப் படுவார்கள். அற்புதங்களைச் செய்கிறவர்கள் அப்போஸ்தலரைவிட மேன்மையானவர்கள் அல்ல. அற்புதங்கள் நடப்பிப்பவர்கள் சபையில்

நான்காவது இடத்தையே பெறுகிறார்கள் (1 கொரி.12:28). அற்புதங்களைச் செய்வதின் மூலம் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும். தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்துவதே அற்புதங்களின் விளைவாக அமைய வேண்டும் (மாற்.16:19,20).

**கடினமான இருதயங்கள்**

அற்புதங்களைக் கண்டும் அனுபவித்தும் அவற்றை நடப்பித்த தேவனைப் புறக்கணிக்கும் மக்கள் இவ்வுலகில் இருந்தனர் (சங்.78:32; 106:7; மத்.21:15; யோவா.6:26; 12:37–39). இன்றும் இப்படிப்பட்டவர்கள் உண்டு. இவர்களுக்கு ஐயோ! ஆனால் பொதுவாக அற்புதங்கள் அநேகரை ஆண்டவரின் வசமாகத் திருப்புகின்றன. எனவே இக்காலத்திலும் அற்புதங்கள் தேவை.

**அற்புதங்களைச் செய்யும் சக்தி**

எல்லாரும் அற்புதங்களைச் செய்வதில்லை என்று பார்த்தோம். அற்புதங்கள் இக்காலத்தில் மிகவும் அவசியம் என்றும் பார்த்தோம். அற்புதங்களைச் செய்வதற்கு அற்புதங்களைச் செய்யும் சக்தி என்ற வரம் தேவை. இந்த வரம் உலகெங்குமுள்ள தேவனுடைய பிள்ளைகள்மேல் ஊற்றப்படும்படியாக ஜெபிக்கவேண்டும்.

**வருங்காலத்தில் அற்புதங்கள் நடக்கும்**

இந்தக் கடைசிக் காலத்தில் அநேக அற்புதங்கள் நடைபெற இருக்கின்றன (யோவேல் 2:27–31). வெளிப்படுத்தின விசேஷத்திலும் இதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. பெரிய அற்புதங்களை எதிர்பார்ப்போம். ஊக்கமாக ஜெபிப்போம். அற்புதம் செய்கிறவர்களாக நாம் மாறுவோம். இதற்குத் தேவையான வரங்களுக்காக ஊக்கமாக ஜெபிப்போமாக. யோவா.14:12 நம்மில் நிறைவேறுவதாக.

**அற்புதங்களைச் செய்கிற யாவரும் பரலோகம் செல்லமுடியுமா?**

“உம்முடைய நாமத்தில் அதிசயங்கள் செய்தோமே” என்று கூறும் சில மக்களைப் பார்த்து கர்த்தர் “நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்” என்று கூறுவார் (மத்.7:21–23). அற்புதங்களைச் செய்கிறவர்களில் சிலர் மட்டுமே பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று இதன் மூலம் அறிகிறோம். ஏன்? அற்புதங்களைச் செய்வது ஒரு மனிதனைப் பரலோகத்திற்குத் தகுதிப் படுத்தாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவங்கள் மன்னிக்கப் பட்டதை விசுவாசிப்பதே தகுதிப்படுத்தும்.

**அற்புதங்களைச் செய்யும் சக்தியைப் பெற்றவரின் கடமைகள்**

அற்புதங்களைச் செய்யும் சக்தி என்ற வரத்தைப் பெற்றவர்கள் அதைப் பயன்படுத்தக் கவனமாக இருக்கவேண்டும் (யாத்.4:21). தாழ்மையோடு வாழ்ந்து ஆவியின் கனி கொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

**குறிப்புகள்**

(1) தேவனுடைய அற்புதங்களைக் குறித்துத் தியானிக்கிறீரா? அவற்றைக்குறித்துப் பேசுகிறீரா? துதிக்கிறீரா? அறிவிக்கிறீரா? இவற்றைச் செய்யும் கிருபைக்காக ஜெபிப்போமாக. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதங்களை எழுதித் தியானியுங்கள்.

(2) அநேக ஊழியர் மூலமாக அற்புதங்களை நடப்பித்த தேவன் இன்று நமது மூலம் அவ்வாறு செய்ய விரும்புகிறார். இதற்காக ஜெபித்து இதற்கான வரத்தைப் பெற்றுக்கொள்வோமாக.

(3) பரலோகம் செல்வதற்கு அற்புதங்கள் செய்தால் போதுமா? என்ன செய்ய வேண்டும்?

(4) இன்று அற்புதங்களை நடப்பிக்கும் சிலர் பெருமை, பொறாமை போன்றவற்றால் நிறைந்திருக்கின்றனர். இவர்களுக்காக ஜெபியுங்கள்.

(5) எவ்வாறாயினும் பரலோகம் செல்வதற்குத் தீர்மானித்து அதற்காக வாழ்வீராக.

(6) எதற்காக அற்புதங்கள் தேவை என்று தியானித்து ஜெபியுங்கள்.

**தியானிக்க :** சங்.136:1–26; நியா.6:13; எண்.11:1–35; எரே.32:17,27.

# அதிகாரம் 20

# குணமாக்கும் வரம்

### அநேகர் விரும்பும் வரம்

அநேக தேவனுடைய பிள்ளைகள் குணமாக்கும் வரத்தை விரும்புகிறார்கள். இதற்காக ஜெபிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில் இவ்வரம் உடையவர்கள் பிரபலமடைவதுதான். வியாதியால் துக்கமும் வேதனையும் அடைபவர்களைக்குறித்து மனதுருக்கம் இல்லாதவர்கள் இவ்வரத்தைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள். எனவே இவ்வரம் வேண்டுமென்று விரும்புவீரானால் சுகவீனமாயிருப்போரைச் சந்திக்கச் சென்று அவர்களின் நிலையை நினைத்து ஜெபிக்க ஆரம்பித்து அதன்பின் இவ்வரத்தைக் கேட்பீராக. ஆவியானவர் அருளுவார்.

### அற்புத சுகம் அளிப்பது தேவனுக்கு இயல்பானது

ஒரு இயந்திரத்தை உருவாக்கியவனுக்கு அதின் பகுதிகளும் அவற்றின் செயல்களும் நன்கு தெரியும். எனவே அதைப் பழுது பார்க்க அவனால் முடியும். இது போன்றே, நம்மையும் நம் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் உருவாக்கிய தேவனுக்கு நமது உடலில் உள்ள கோளாறுகள் அனைத்தையும் சரி செய்ய முடியும். எனவே எல்லா அற்புதங்களிலும் மிகவும் இயல்பானதும் எளிதில் எதிர்பார்க்கக் கூடியதுமாக இருப்பது சரீரம் குணமாகுதல் ஆகும்.

மருந்தின்றி உடனடியாகக் குணமாக்குதல் ஒரு அற்புதம் என்றாலும் குணமாகுதலின் தேவையையும் முக்கியத்தையும் காட்டும்வண்ணம் அதைத் தனியாகக் குணமாக்கும் வரம் என்று குறிப்பிட்டுள்ளார் தேவன்.

### எப்படிப்பட்ட நோய்கள் உடனடி சுகம் பெற்றன?

கால் ஊனமுற்றோர் நடந்தனர் (அப்.8:7). திமிர்வாதக்காரரும் எழும்பி நடந்தனர் (மத்.9:6,7). உதிரப்போக்கு இருந்த பெண் சுகம் பெற்றார் (மாற்.5:25–29). காய்ச்சல் (ஜுரம்) சுகமாயிற்று (மத்.8:14,15). குஷ்டம் (தொழுநோய்) நீங்கிற்று (மத்.8:2,3; லூக்.17:12–19). கூன் நிமிர்ந்தது

(லூக்.13:11–13). செவிடர் கேட்டனர், ஊமையர் பேசினார்கள் (மாற்.7:31–37). பிறவிக்குருடனின் கண்கள் திறவுண்டன (மாற்.10:46–52). மரித்தோர் எழும்பினர் (மாற்.5:35–42; லூக்.7:11–16; யோவா.11:38–44). சூம்பின கை நீண்டது (மாற்.3:1–5). நீர்க்கோவை வியாதி நீங்கிற்று (லூக்.14:2–4). இன்னும் பல வியாதிகள் உடனடியாக நீங்கின.

**அற்புதங்களும் குணமாகுதலும்**

மருந்தின்றி ஜெபத்தினால் நடைபெறும் எல்லாக் குணமடைதலும் அற்புதங்கள்தான். ஆனால் எல்லா அற்புதங்களும் குணமடைதல் அல்ல என்று ஏற்கனவே பார்த்துள்ளோம். சில இடங்களில் குணமாக்கும் வரமும் அற்புதங்களைச் செய்யும் சக்தியும் இணைந்து செயல்படுவதை நாம் காணலாம். மரித்துப்போன லாசருவை எழுப்பியதில் நாம் இதை உணரலாம்.

**இரட்சிக்கப்பட்டவன் சுகவீனமடைந்தால் என்ன செய்ய வேண்டும்?**

யாக்.5:14–18 ஐத் தியானிப்போம்.

**சுகவீனமானவன் என்ன செய்யவேண்டும்?** சபையின் மூப்பரை வரவழைக்க வேண்டும்.

**சபையின் மூப்பர் வந்தவுடன் அவன் என்ன செய்யவேண்டும்?** பாவங்கள் செய்திருந்தால் அறிக்கையிட வேண்டும்.

**மூப்பர் என்ன செய்யவேண்டும்?** கர்த்தரின் நாமத்தில் சுகவீன மானவன் மீது எண்ணெய் பூசி கைகளை வைத்து விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

**கர்த்தர் என்ன செய்வார்?** அவனை எழுப்புவார்.

**முடிவு என்ன?** பாவமன்னிப்பும் பரிபூரண சுகமும் உண்டாகும். **பிணியாளியை இரட்சிப்பதற்கு என்ன தேவை?** விசுவாசமுள்ள ஜெபம்.

**நம் ஜெபம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?** விசுவாசமுள்ளதாக இருக்க வேண்டும்.

ஊக்கமாக வேண்டுதல் செய்யவேண்டும். அது அதிக பெலனுள்ள தாயிருக்கிறது. நீதிமானாக இருந்து இவற்றைச் செய்யும்படி சபையாரைக் கர்த்தர் அழைக்கிறார்.

**தேவன் நமது பரிகாரி**

நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று தேவன் கூறியிருக்கிறார் (யாத்.15:26). மேலும் கர்த்தராகிய இயேசு நமது பெலவீனங்களையும் சுகவீனங்களையும் துக்கங்களையும் பாடுகளையும் சிலுவையின்மேல் சுமந்து

தீர்த்துவிட்டார் (ஏசா.53:4; மத்.8:17). அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம் (1 பேது.2:24). நாம் அவருடைய எலும்புகளுக்கும் மாம்சத்திற்கும் உரியவர்களாக இருக்கிறோம் (எபே.5:30). எனவே இயேசுவின் தழும்புகளிலுள்ள குணமாகுதலில் நமக்கு உரிமை உண்டு. தேவனிடத்திலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்வது நமது உரிமை.

**பிள்ளைகளின் அப்பம்**

தேவனிடமிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்வதைப் பிள்ளைகளின் அப்பம் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (மத்.15:26). வீட்டிலுள்ள ஆகாரத்தில் பிள்ளைகளுக்கு உரிமை உண்டு. அதற்காக அந்தப் பிள்ளை ஏதேனும் வேலை செய்யவேண்டியதில்லை. பெற்றோரிடம் கேட்டால் ஆகாரம் உடனே கிடைக்கும். அவ்வாறே தேவனுடைய பிள்ளையான யார் கேட்டாலும் அவர்களுக்கு வியாதியிலிருந்து விடுதலை உண்டு. இந்த வசனத்தை விசுவாசத்துடன் அறிக்கையிட்டு ஆண்டவரிடமிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இயேசுவின் தாயாகிய மரியாள் குணமாக்கியது உண்டா?**

இயேசுவின் தாயாகிய மரியாள் யாரையும் குணமாக்கியதாக வேதத்தில் இல்லை. எனவே ஆரோக்கியமாதா என்று மரியாளை அழைப்பது வேதத்திற்குப் புறம்பானது. மரியாள் அற்புதங்களைச் செய்ததாகவும் வேதத்தில் இல்லை. இயேசு அதிசயமானவர். இயேசுவின் நாமமே அற்புதங்களைச் செய்வதற்குப் பயன்படும். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்றுள்ளது கர்த்தராகிய இயேசுவே; மரியாள் அல்ல (மத்.28:17–20). எல்லா நாமத்துக்கும் உயர்ந்த நாமம் இயேசுவின் நாமமே (பிலி.2:9–11). வேறொரு நாமமும் கட்டளையிடப்படவில்லை (அப்.4:12). மரியாள் பரிசுத்தமான தாய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மரியாள் சுகமாக்கியதாக வேதத்தில் கூறப்படவில்லை.

**குணமாக்கும் வரம் இல்லாத மூப்பர் ஜெபிக்கலாமா?**

எந்த விசுவாசியும் சபையின் மூப்பராக இருப்பவரும் ஜெபிக்கலாம் என்பதை ஏற்கனவே பார்த்தோம். குணமாக்கும் வரம் இல்லையென்று சொல்லி ஜெபிக்காமல் இருக்கக்கூடாது. இவ்வாறே எந்த விசுவாசியும் அற்புதங்களுக்காக ஜெபிக்கலாம். தேவன் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்களைச் செய்வார் அல்லவா?

**மீண்டும் ஒரு அறிவுறுத்தல்**

குணமாக்கும் ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகரும் போலியாகக் குணமாக்கக் கூடும். எனவே கர்த்தருடைய உத்தமமான ஊழியரை அவர்களின் கனிகளால்தான் அறிய முடியும்.

**அற்புதங்களும் குணமாக்குதலும் எளிதில் நற்செய்தி பரவச் செய்கின்றன**

உண்மையான தெய்வத்தை மக்கள் உடனடியாகக் கண்டுகொள்ள அற்புதங்களும் குணமாக்குதலும் வழிவகுக்கின்றன.

கர்த்தர் தெய்வமானால் கர்த்தரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் பாகாலைப் பின்பற்றுங்கள் என்று எலியா கூறியபோது மக்கள் பதில் சொல்லவில்லை (1 இராஜா.18:21). ஆனால், வானத்திலிருந்து அக்கினி இறங்கியதைக் கண்டபோது முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம் என்று மக்கள் கூறியதை 1 இராஜா.18:38,39 இல் காண்கிறோம். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் அற்புதங்களையும் அடையாளங்களையும் குணமாக்குதலையும் கண்டு மக்கள் விசுவாசித்ததைப் பல இடங்களிலும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, இயேசு லாசருவை உயிரோடு எழுப்பினதைக் கண்ட யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர் களானார்கள் (யோவா.11:43–45). ஐனேயா என்ற மனிதன் குணமாக்கப்பட்ட போது அநேகர் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் (அப்.9:32–35). பேதுரு தபீத்தாளை உயிரோடு எழுந்திருக்கச் செய்தபோது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (அப்.9:40–42). சகோதரனே, உலகம் நற்செய்தி மயமாக்கப்பட அற்புதங்களைச் செய்யும் சக்தியும் குணமாக்கும் வரமும் அதிகமாகத் தேவை.

**மூப்பர் யாவருக்கும் குணமாக்கும் வரம் உண்டா?**

விசுவாசியாயிருக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ள அடையாளங்களில் ஒன்று நோயுற்றோர்மேல் அவர்கள் கைகளை வைக்கும்போது நோயுற்றோர் குணமாகுதலாகும் (மாற்.16:17–18). மேலும் மூப்பர் எண்ணெய் பூசி ஜெபித்தால் தேவன் சுகவீனமாயிருப்பவனை எழுப்புவார் என்றும் பார்த்தோம்.

இவை குணமாக்கும் வரம் என்ற அளவில் செயல்படுவதில்லை. குணமாக்கும் வரம் பெற்றவர்கள் மூலம் அநேகர் குணமடைவார்கள்.

அவர்கள் நிழல்கூட குணமாக்கும் வல்லமை உள்ளதாகக் காணப்படும் (அப்.5:15). அவர்களின் கைக்குட்டைகளும் கச்சைகளும் (belts) ஒருவர் மேல் போடப்பட்டால் அவர் சுகமாகக்கூடும் (அப்.19:12). அவர்களைத் தொடுபவர்களும் அவர்களால் தொடப்படுபவர்களும் குணமாவார்கள். அவர்களின் ஆடையின் தொங்கலினாலும் சுகமடைய முடியும். அவர்கள் ஒரு வார்த்தை சொன்னால் குணமாவதும் உண்டு. இந்த அளவில் குணமாக்கும் வரம் இன்று காணப்படவில்லை. இதற்காக ஏங்குவோம். தேவனுடைய இராஜ்யம் எளிதில் பரவுவதற்காகவும் வேதனையிலிருப்போர் விடுதலை யடையவும் குணமாக்கும் வரம் தேவையாயிருக்கிறது அல்லவா? இதற்காக ஜெபியுங்கள்.

**கர்த்தருடைய காலத்திலும் அப்போஸ்தலரின் காலத்திலும் அற்புத சுகம்**

கர்த்தரிடத்தில் வந்த எல்லா நோயாளிகளும் குணமானார்கள் என்பதையும் யாரும் சுகமாகாமல் திரும்பிப்போகவில்லை என்பதையும் நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய காலத்திலும் அவர்களிடத்திற்கு வந்த எல்லா நோயாளிகளும் குணமானார்கள் என்பதை வாசிக்கிறோம் (அப்.5:16).

இக்காலத்தில் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டங்களில் ஒரு சிலர் மட்டும் சுகமடைகிறார்கள். இந்நிலை மாறி, கூட்டங்களுக்கு வரும் ஒவ்வொருவரும் சுகமாகும் காலம் மீண்டும் வருவதற்காக ஊக்கமாக ஜெபிப்போமாக.

## அதிகாரம் 21

# தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம்

**தீர்க்கதரிசனம் என்றால் என்ன?**

1 கொரி.12:10; 13:2; ரோம.12:6 இல் வரும் தீர்க்கதரிசனம் என்ற சொல் மூலமொழியில் 'Prophetico' ஆகும். இதன் வினைச்சொல் 'Propheterio' ஆகும். இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள மற்ற இடங்களைக் கவனித்துப் படித்துத் தீர்க்கதரிசனம் என்பதின் பொருளை உணர்ந்துகொள்ளலாம்.

'பின்வரும் காரியங்களை முன் அறிவித்தல்' என்ற பொருளில் இச்சொற்கள் வரும் இடங்கள் மத்.13:14; மாற்.7:7; லூக்.1:67; யோவா.11:51,52; 1 பேது.1:10,11; 2 பேது.1:20,21; யூதா 14,15; வெளி.1:3; 22:18,19 ஆகும். இரகசியங்களை வெளிப்படுத்துதல் என்ற பொருளில் இச்சொற்கள் லூக்.22:64; 1 கொரி.14:24,25 என்ற பகுதிகளில் காணப்படுகின்றன. ஆவிக்குரிய வரங்களில் எவை அருளப்பட்டுள்ளன என்று கூறவும் தீர்க்கதரிசனம் பயன்பட்டது (1 தீமோ.1:18; 4:14). மேற்கூறிய யாவற்றிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு ஒன்று இருப்பதைத் தெளிவாகக் காணலாம். இவைகளினின்று தீர்க்கதரிசனம் என்றால் என்ன என்பதைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

"இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வருங்கால நிகழ்ச்சிகளை முன்கூட்டியே உரைப்பதும், மனிதரின் இதயத்தின் இரகசியங்களையும் அம்மனிதன் பெற்றுள்ள ஆவிக்குரிய வரங்களையும் உரைப்பதும் தீர்க்கதரிசனம் ஆகும்." இதைப் பரிசுத்த ஆவியானவரின் ஈவாகப் பெற்றிருப்பவர்கள் தீர்க்கதரிசன வரம் உடையவர்கள் ஆவார்கள்.

**நல்ல பிரசங்கம் செய்வது தீர்க்கதரிசன வரத்தால் அல்ல**

போதனை செய்வதையும், நற்செய்தி அறிவிப்பதையும் குறிப்பதாக வேதத்தில் வரும் மூலமொழிச் சொற்கள் மேலே கூறப்பட்டுள்ளவை அல்ல;

வேறு பல சொற்களே கையாளப்பட்டுள்ளன. ஆவிக்குரிய அருளுரைகளைச் சரிவரச் செய்வதற்கேற்ற வரங்கள் ஞானத்தைப் போதிக்கும் வசனம் என்ற வரமும், அறிவை உணர்த்தும் வசனம் என்ற வரமும் ஆகும். சிந்தித்துப் பார்த்தால் தீர்க்கதரிசன வரம் என்பது நன்கு பிரசங்கம் செய்யும் திறமை அல்ல என்பது நன்கு புரியும். தனக்கு ஒரு வரம் இல்லாவிட்டால் அது யாருக்குமே இல்லை என்று கூறுபவர்கள் முன் அறிவித்தலான தீர்க்கதரிசனத்தை மறுப்பதற்காக இவ்வாறு கூறுகிறார்கள்.

**தீர்க்கதரிசிகளும் பிரசங்கங்களும் (அருளுரைகளும்)**

அநேக தீர்க்கதரிசிகள் பிரசங்கம் செய்பவர்களாகவும் இருந்ததை வேதத்தில் காண்கிறோம். ஆனால் அவர்கள் செய்யும் அருளுரைகள், விளக்கங்கள் யாவற்றையும் தீர்க்கதரிசனமாகக் கருதக்கூடாது. அவ்வருளுரைகளில் வரும் முன் அறிவித்தலையும், இரகசியங்களை வெளியாக்குதலையுமே தீர்க்கதரிசனங்கள் என்று கூறவேண்டும்.

மேலும் எல்லா அருளுரைஞர்களும் தீர்க்கதரிசிகள் அல்ல. இன்றைய அநேக அருளுரைஞர்கள் இரட்சிப்பைக்கூடப் பெறாத நிலையில் இருக்கின்றனர். இவர்களுக்கும் தீர்க்கதரிசனத்துக்கும் சம்பந்தமில்லை.

**வேதத்தில் முன் அறிவித்தவர்கள் உண்டா?**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகள் அநேகக் காரியங்களைக் குறித்து முன் அறிவித்துள்ளதை நாம் அறிவோம். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் அவ்விதம் அறிவித்துள்ளனர். கர்த்தராகிய இயேசு முன் அறிவித்தவை ஏராளம். அதன் பின்னர் அப்.11:27,28; அப்.21:10,11 இல் முன் அறிவித்தலை நாம் காண்கிறோம். இப்பகுதிகளில் உள்ள முன் அறிவித்தவை எவை? அந்த நாட்களில் உலகெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்பதும் பவுல் சிறைப்படுத்தப்படுவார் என்பதும் ஆகும். இவை நிறைவேறின. பவுல் எழுதியுள்ள 1 கொரி.15:51,52; 1 தீமோ.4:1 போன்ற அநேகம் பகுதிகள் முன் அறிவிப்பான தீர்க்கதரிசனங்கள். பேதுருவின் முன் அறிவிப்பான தீர்க்கதரிசனங்களும் உண்டு (2 பேது.3:10). வெளிப்படுத்தின விசேஷம் என்ற நூல் முழுவதிலும் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் அடங்கியிருப்பது யாவருக்கும் தெரிந்ததே.

இவ்விதம் இருந்தும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசனம் என்பது பிரசங்கிப்பதை மாத்திரம் குறிக்கும் என்று கூறினால் அதைக் கள்ளப்போதகம் என்று உடனே ஒதுக்கலாம் அல்லவா?

**மீண்டும் மீண்டும் ஒரே தீர்க்கதரிசனம் சொல்கிறார்களே?**

எடுத்துக்காட்டாக 'இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்' என்று இக்காலத்தில் அநேகர் கூறுவது தீர்க்கதரிசனம்தானா என்ற சந்தேகம் அநேகருக்கு உண்டு.

ஒரே தீர்க்கதரிசனத்தைப் பலமுறை பலர் மூலமாகக் கூறுதல் வேதத்தில் உள்ளது. எடுத்துக்காட்டாக 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்' என்ற தீர்க்கதரிசனம் வேதத்தில் பல இடங்களில் உண்டு. காலம் நெருங்கிவிட்டபடியால் இக்காலத்திலும் இத்தீர்க்கதரிசனம் அடிக்கடி கூறப்படுவது நடக்கக்கூடியதே. அதில் சந்தேகப்படுவதற்கு எதுவுமில்லை.

**குறிப்பான தெளிவான தீர்க்கதரிசனங்கள்**

இக்காலத்தில் தீர்க்கதரிசனங்கள் (போன்று) கூறுபவர்களில் பலர் (தேவன் உங்களை ஆசீர்வதிக்கிறார், தேவன் உங்கள் நடுவில் இருக்கிறார் என்பவை போன்ற) பொதுவான காரியங்களை மட்டுமே கூறுவதைக் கேட்க முடிகிறது. ஆனால் 1 சாமு.10:1–16; 12:17,18; 1 இராஜா.17:14–16; அப்.21:10,11 என்பவைபோன்ற குறிப்பான, தெளிவான தீர்க்கதரிசனங்களும் தேவை அல்லவா? இந்த வேதப்பகுதிகளை வாசித்துத் தியானியுங்கள்.

மேலும் தீர்க்கதரிசன வரம் பெற்ற தேவனுடைய மனிதர் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது 1 கொரி.14:24,25 இல் கூறியவாறு மக்களின் அந்தரங்கங்கள் வெளியரங்கமாக்கப்பட்டால் அது தேவனுடைய நாமத்திற்கு மகிமையை வரப்பண்ணும் அல்லவா? எனவே, இவ்வாறான தெளிவான தீர்க்கதரிசனங்களும் பெருகுமாறு நாம் வேண்டிக்கொள்வோமாக.

பெயர் சொல்லிக் கூப்பிட்டு தீர்க்கதரிசனம் சொல்வது இக்காலத்தில் சிலருடைய ஊழியத்தில் காணமுடிகிறது. ஆவியானவரின் தெளிவான ஏவுதலால் இவ்வாறு செய்வது தவறு இல்லை. ஆனால் பக்திவிருத்திக் கென்று கூறுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

**சாட்சி :** வெளிநாடு செல்ல இருந்த எனக்கு அதற்கு எதிரான பிரச்சனை ஒன்று இருந்தது. அச்சமயத்தில் அதுவரை நான் அறிந்திராத ஒரு ஊழியர் எனக்கு தீர்க்கதரிசனம் கூறினார். அவர் கூறியது, 'வேறு பாஷை பேசும் மக்களிடத்திற்கு உன்னைக் கொண்டுபோகப்போகிறேன்; தயாராகு' என்பதாகும். என்னை அறியாத அவர் நான் கேட்காமலேயே அவ்விதம் கூறியது தீர்க்கதரிசன வரத்தினால்தான். அவர் கூறியவாறு நடந்தது. அது மட்டுமின்றி, வெளிநாட்டில் புதிய பிரச்சனைகள் வந்தபோது அந்தத்

தீர்க்கதரிசனத்தை நினைத்து, தேறுதலும் தைரியமும் அடைந்தேன். எனவே குறிப்பான, தெளிவான, தனிப்பட்ட மனிதனுக்குப் பயன்படுகிற தீர்க்கதரிசன வரம் உண்டு என்பதற்கு நான் சாட்சி (Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன்).

**எச்சரிக்கும் தீர்க்கதரிசனங்கள்**

ஆசீர்வாதங்களைக்குறித்து மட்டும் பேசி மக்களை மகிழ்விக்கும் மனிதன் சரியான தீர்க்கதரிசிதானா என்று ஐயப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும், கடிந்துகொள்வதும், வரப்போகும் பயங்கரங்களை முன் அறிவிப்பதும் தீர்க்கதரிசியின் செயல் ஆகும். இவ்வாறு செய்யும்போது மக்கள் பகைப்பார்கள். மேலும், இழிவாகப் பேசப்படுதல், வெறுத்து ஒதுக்கப்படுதல், விசாரிக்கப்படுதல், அடிக்கப்படுதல், கல்லெறியப் படுதல், கொலை செய்யப்படுதல் முதலியன தீர்க்கதரிசிகளுக்கு நேரிடக் கூடும். இதற்கான எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. தேவனுக்காகப் பாடுபட இவர்களுக்கு வாய்ப்பு அதிகம். தேவன் தங்கள் மூலம் பேசுகிறார் என்ற நிச்சயம் இவர்களுக்கு இருப்பதால் எதற்கும் இவர்கள் அஞ்சமாட்டார்கள். ஏனெனில் தேவனுடைய சித்தம் இன்றி இவர்களுக்குத் தீங்கு நேரிடாது. பாடுகள் அனுபவிக்கும்படி தேவன் அனுமதித்தால் அதற்கேற்ற பரிசுகள் இவர்களுக்கென்று காத்திருக்கும்.

**தீர்க்கதரிசியின் குடும்பம்**

தீர்க்கதரிசியின் ஊர்மக்கள், குறிப்பாக அவருடைய குடும்பத்தினர் அவரைச் சரிவர மதிக்காமல் வெறுப்பார்கள். தேவனுடைய மகத்துவத்தை அறியாதவர்களும் அறிய மறுப்பவர்களும் அவரைப் பகைப்பதும் நடக்கும். வெளியூர்க்காரரே அவரை மதிப்பார்கள் என்று கர்த்தர் கூறியிருக்கிறாரே (மத்.13:57).

**தீர்க்கதரிசனத்தை அடக்கி வைத்தால் என்ன நடக்கும்?**

தேவன் தரும் தீர்க்கதரிசனத்தைக் கூறக்கூடாது என்று தீர்மானித்து அதை அடக்கி வைத்த எரேமியா உணர்ந்தது என்ன? அவருடைய வார்த்தை இருதயத்தில் அக்கினியைப்போன்று இருந்தது, அதைச் சகித்ததால் இளைப்பு வந்தது, பொறுக்கக்கூடாமற்போயிற்று (எரே.20:9). ஆவியானவர் தரும் தீர்க்கதரிசனம் இவ்வாறு இருக்கும். அதைச் சகிக்க மிகவும் சிரமமாயி ருக்கிறபடியால் தீர்க்கதரிசி தன் வாயைத் திறந்து தீர்க்கதரிசனம் உரைப்பார். எந்த எதிர்ப்பையும் தாங்கும் பெலன் பரிசுத்த அக்கினியினால் கிடைக்கும்.

**தீர்க்கதரிசனம் சொல்வதைத் தடுத்தால் என்ன நேரிடும்.**

தீர்க்கதரிசனம் கூறிய தீர்க்கதரிசியைத் தடை பண்ணியதால் பெத்தேலில் ஆசாரியனான அமத்சியாவுக்கு வந்த தீமைகள்: (1) அவன் மனைவி பட்டணத்தில் வேசியானாள், (2) அவன் குமாரரும், குமாரத்திகளும் பட்டயத்தால் விழுந்தார்கள், (3) அவன் வயல் மற்றவர்களால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது, (4) அவன் அசுத்தமான தேசத்திலே செத்துப்போனான். இதை ஆமோஸ் 7:15–17 இல் காண்கிறோம். உண்மையான தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறுவதைத் தடுத்ததே இவை நேரிடக் காரணம் ஆகும். எரே.11:20–23 இல் கூறப்பட்டுள்ள தீமைகள் என்ன? கர்த்தரால் விசாரிக்கப்படுதல், பரிதாபமான அகால மரணம், ஆபத்து ஆகியவை.

சகோதரரே, தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவர் தீர்க்கதரிசனம் உரைப்பதைத் தடைபண்ணாதபடி எச்சரிக்கையாயிருப்பீராக. தேவனுடைய தீர்க்கதரிசிக்கு எந்தத் தீங்கையும் செய்யாதீர் (சங்.105:15). சபையிலும் கூட்டங்களிலும் வெளியேயும் கர்த்தருடைய ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு உற்சாகப்படுத்துவீராக.

**பெண் தீர்க்கதரிசிகள் உண்டா?**

மிரியாம் (யாத்.15:20), தெபோராள் (நியா.4:4), உல்தாள் (2 இராஜா.22:14), அன்னாள் (லூக்.2:36), பிலிப்பின் குமாரத்திகள் நால்வர் (அப்.21:8,9) என்ற பெண் தீர்க்கதரிசிகள் வேதத்தில் கூறப்பட்டுள்ளனர். பெண்கள் தீர்க்கதரிசனம் கூறும்போது தலையை மூடிக்கொள்ளவேண்டும் என்று 1 கொரி.11:5 இல் காணலாம். இதிலிருந்தும் பெண்கள் தீர்க்கதரிசனம் கூறுவது வேதத்தின்படி சரிதான் என்று அறிந்துகொள்கிறோம்.

**தீர்க்கதரிசியும் தேவனும்**

தேவனின் உள்ளத்திலுள்ளதை மக்களுக்கு உரைப்பவர் தீர்க்கதரிசி. எனவே இவர் ஜெபத்தினால் தேவனோடு நெருங்கிய தொடர்புள்ளவராக இருப்பது அவசியம்.

**தீர்க்கதரிசி தேவனின் சார்பாக மனிதனிடம் பேசுகிறார்.**

தீர்க்கதரிசி பேசுவதினிமித்தம் சபை பக்திவிருத்தியடைகிறது. அந்நிய மொழிகளைப் பேசுகிறவனைக் காட்டிலும் தீர்க்கதரிசி மேன்மையுள்ளவர் (1 கொரி.14:5). தீர்க்கதரிசனத்தால் மனுஷருக்குப் பக்திவிருத்தியும் புத்தியும் ஆறுதலும் உண்டாகும் (1 கொரி.14:3). தேவன் நம்மோடிருப்பதை இரட்சிக்கப்படாத ஒருவனுக்கு உடனடியாக உணர்த்தி அவனைத்

தேவனிடத்தில் இழுப்பதற்குத் தீர்க்கதரிசனம் மிகவும் உதவுகிறது (1 கொரி.14:24).

**எல்லோரும் தீர்க்கதரிசிகளானால் நலமாயிருக்கும்**

இவ்விருப்பத்தை மோசேயும் பவுலும் வெளிப்படுத்தினார்கள் (எண்.11:29, 1 கொரி.14:5). இவ்வாறு சபை மக்கள் மாறுவதற்காக ஜெபிப்பது நமது கடமை. இவ்வாறு இருப்பின் நாம் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனம் கூறலாம் (1 கொரி.14:31). இச்சியாதிருப்பாயாக என்று கூறுகின்ற தேவன் தீர்க்கதரிசனம் கூறுதலை மட்டும் நாடும்படி (இச்சிக்கும்படி) பவுலின் மூலம் கூறியுள்ளார் (1 கொரி.14:39). தீர்க்கதரிசன வரத்தை ஊக்கமாக நாடி ஜெபிப்போமாக.

**தீர்க்கதரிசிகளின் ஆவிகள் அவர்களுக்குள் அடங்கியிருக்கிறது**

சபையில் ஒரே சமயத்தில் பல தீர்க்கதரிசிகள் பேசினால் சபையினருக்கு ஒன்றும் புரியாமல் குழப்பம்தான் மிஞ்சும். எனவே தீர்க்கதரிசனம் கூறுவதற்குச் சபை நடுவில் ஏவுதல் இருந்தபோதிலும் தன்னுடைய நேரத்திற்குக் காத்திருக்கவேண்டும். இதற்கான ஒழுங்கு முறை 1 கொரி. 14:26–33 இல் உள்ளது. இவ்வாறு அடங்கியிருக்க முடியும்.

**நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனங்கள்**

பல தீர்க்கதரிசனங்கள் நிபந்தனையில்லாதவை. கர்த்தரின் இரண்டாம் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்போன்ற அநேக தீர்க்க தரிசனங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனால் வேறு சில தீர்க்கதரிசனங்கள் நிபந்தனையுள்ளவை. எரே.42:9–22 இல் இதற்கு எடுத்துக்காட்டு உள்ளது. எகிப்திற்குப் போகவேண்டாம் என்று கூறியதோடு போகாவிட்டால்வரும் ஆசீர்வாதங்களையும் போனால்வரும் தீமைகளையும் இந்தத் தீர்க்கதரிசனம் கூறியது.

**நிறைவேறும் காலங்களைக் கணித்துக் கூறும் தீர்க்கதரிசனங்கள்**

வேதத்தில் பல தீர்க்கதரிசனங்களின் நிறைவேறும் காலம் எண்ணளவில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் சில தீர்க்கதரிசனங்களுக்குக் கால வரம்பு உள்ளது. எடுத்துக்காட்டு : தானியேல் 9:24–27; 2 இராஜா.4:16; 7:1,2.

**எழுத்தின்படியான தீர்க்கதரிசனங்களும் உருவகமான தீர்க்க தரிசனங்களும்**

எழுத்தின்படி நடக்கும் தீர்க்கதரிசனங்கள் என்பவை தெளிவாகத் தெரிபவை. 2 இராஜா.4:16; 7:1,2 போன்றவை இதில் அடங்கும். ஆனால் சாதாரண மக்களால் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமல் உருவகங்களாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களும் உண்டு. எடுத்துக்காட்டு: வெளி.17:1–7.

**வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களுக்குத் தற்கால விளக்கங்கள்**

இப்பகுதியில் நாம் பார்க்கப்போவது கள்ளத் தீர்க்கதரிசனங்கள் அல்ல, கள்ளப்போதகங்களாகும். வேதத்தில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களைத் தங்கள் கொள்கைகளுக்கேற்ப வரிசைப்படுத்தி அவற்றில் கூறப்படாத வற்றைச் செயற்கையாகப் புகுத்துவோர் உண்டு. இது தவிர வேதத்திலுள்ள தீர்க்கதரிசனத்தை இன்றைய உலகத்தோடு ஒப்பிட்டு அதைக்கொண்டு விளக்கம் கூறுவோர் உண்டு. எடுத்துக் காட்டாக, 666 என்ற மிருகத்தின் எண்ணை ஹிட்லர் என்ற விளக்கம் கூறினார்கள் சிலர், போப் என்று கூறுகின்றனர் சிலர், ஒரு கம்ப்யூட்டர் என்கின்றனர் இன்னும் சிலர். இவ்விதமெல்லாம் விளக்கம் தருமாறு தேவன் கூறவில்லை. இப்படிப்பட்ட விளக்கம் தந்தவர்களின் அநேகக் கூற்றுகள் பொய்யாகிவிட்டன.

**முத்திரையிடப்பட்ட தீர்க்கதரிசனங்கள்**

சில தீர்க்கதரிசனங்களை அவை நிறைவேறும் காலம் நெருங்கும்வரை புரிந்துகொள்ள இயலாது. ஏனெனில் அவை முத்திரையிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுகள்: தானி.12:4,9; வெளி.10:4.

இவ்வாறு முத்திரையிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் செய்யவும் அவ்வாறு செய்வதை அறியவும் அநேகர் ஆசைப்படுகின்றனர். இவ்வித ஆசை தேவையற்றது. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களில் மறைபொருளானவற்றை நம் சொந்தக் கருத்தைக்கொண்டு விளக்கக் கூடாது. அவ்விதம் விளக்கும் மக்களை நம்பாதீர். ஏற்ற காலத்தில் தேவன் தன்னுடைய ஆவியானவரின் ஏவுதலால் விளக்கம் தருவார். அதுவரை காத்திருக்கவேண்டும். அவசரப்பட்டுச் சொந்தக் கருத்துகளைக் கூறக்கூடாது.

## தீர்க்கதரிசனத்தின் மூன்று பிறப்பிடங்கள்

**1) தேவனிடத்திலிருந்து வருபவை**

ஆவியானவரால் தீர்க்கதரிசன வரம் பெற்றவர்கள் உரைக்கும் மெய்யான தீர்க்கதரிசனங்கள் இவை. புதிய ஏற்பாட்டு காலத்தில் பரிசுத்த ஆவியின்

திருமுழுக்கைப் பெற்றவர்களில் சிலர் இவ்வரத்தை உடையவர்களாக இருப்பதைக் காண்கிறோம்.

தேவனுடைய தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்தக் கருத்துகளை வெளியிடுவதைத் தீர்க்கதரிசனமாக எண்ணக்கூடாது. இவ்வாறு தன் சொந்தக் கருத்தைத் தாவீதுக்கு வெளியிட்ட நாத்தான் என்ற தீர்க்க தரிசியின் சொற்களைத் தேவன் மாற்றியதை 2 சாமு.7:1–3,12,13 இல் காண்கிறோம்.

பொய் சொன்ன ஒரு தீர்க்கதரிசியை நம்பி, ஏமாந்து, மரித்துப்போன தேவனுடைய தீர்க்கதரிசியை 1 இராஜா.13:1–32 இல் காணலாம். "தேவன் தனக்குக் கூறியதை இன்னொருவருக்குத் தன் தூதன் மூலம் மாற்றிக் கூறமாட்டார்" என்ற எண்ணம், விசுவாசம் இல்லாததால் அந்தத் தீர்க்கதரிசி மரித்தார். தேவன் முன்னுக்குப்பின் முரண்படப் பேசமாட்டார் (எண்.23:19). எனவே, வேத வசனத்திற்கு முரணாக இருக்கும் எந்தத் தீர்க்கதரிசனமும் (அதை யார் உரைத்தாலும்) சரியல்ல.

இவ்வாறு தன் தீர்க்கதரிசிகள் தவறுதலாகக் கூறினால் அதைச் சீக்கிரத்தில் மாற்றி, சரியானவற்றைத் தேவன் விளங்கப்பண்ணுவதை இப்பகுதிகளில் காணலாம். எவ்வாறாயினும் நமது கடமையைக் கவனித்துப் பார்ப்போம். வேத வசனத்திற்கு ஏற்ப அமைந்துள்ள தீர்க்கதரிசனங்களையே நம்பவேண்டும்.

**2) மனிதனிடத்திலிருந்து வரும் தீர்க்கதரிசனங்கள்**

தங்கள் மனதில்பட்டதைத் தீர்க்கதரிசனங்கள் என்று பொய்யாகக் கூறுபவர்கள் எல்லாக் காலத்திலும் இருந்திருக்கின்றனர், இருக்கின்றனர். கர்த்தருடைய நாமத்தினால் கூறுகிறேன் என்றும், கர்த்தர் உரைக்கிறார் என்று கூறவும் இவர்கள் தயங்கமாட்டார்கள். இவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளில் ஒரு வகையினர். எரே.23:25,26,30–32 இவர்களைக் குறித்து எழுதியுள்ள பகுதிகளாகும். இன்னும் பல பகுதிகளில் இவர்களின் செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் சூழ்நிலைக்கேற்ப அல்லது தங்களைக் கேட்பவர்கள் மகிழ்ச்சியுறுவதற்காகப் பேசுவார்கள். புகழ், பணம், செல்வாக்கு போன்றவை தங்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்வார்கள். தாங்கள் கூறிய காரியங்கள் தற்செயலாக நடந்துவிட்டால் அதைத் திரும்பத் திரும்பக் கூறி, தங்கள் பெயரைப் பிரபலமடையச் செய்ய முயற்சி செய்வார்கள். உண்மையான தீர்க்கதரிசனம் உரைப்பவர்களைப் பகைத்து அவர்களுக்கு இன்னல் விளைவிக்க முயற்சிப்பார்கள் (எரே.20:1,2; 1 இராஜா 22:24).

### 3) பிசாசினால் வரும் தீர்க்கதரிசனங்கள்

பிசாசினால் ஏவப்பட்டுக் குறிசொல்லுதல் நடைமுறையில் உள்ளது (எரே.23:13). இவ்வாறு உரைப்பவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளில் இன்னொரு வகையினர் ஆவார்கள். குறிசொல்லும் ஆவிகள் என்று அழைக்கப்படும் அசுத்த ஆவிகளால் பிடிக்கப்பட்ட மக்களும் இவ்விதம் கூறுவார்கள் (அப்.16:16). அஞ்சனம் பார்க்கும் மக்களும் வருங்காலத்தைக்குறித்துக் குறி சொல்வார்கள் (1 சாமு.28:7). இப்படிப்பட்டவர்களோடு தொடர்புகொள்வது கொடிய பாவமாகும் (லேவி.19:26,31; 20:27; உபா.18:10–12). குறிசொல்லுதல், குறிகேட்டல், நாள் பார்த்தல், நேரம் பார்த்தல், சோதிடம் சொல்லுதல், சோதிடம் கேட்டல், கைரேகை பார்த்தல், எண் சோதிடம் பார்த்தல், பெயர் சோதிடம் பார்த்தல் போன்ற அனைத்தும் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆகாது. அநேக வஞ்சக ஆவிகள் குறிசொல்வதின்மூலம் மக்களை நரகத்திற்கு இழுத்துச்சென்றுகொண்டிருக்கின்றன.

வருங்காலத்திலும் பிசாசினால் ஏவப்பட்டு கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லி மக்களை வஞ்சிப்பது அதிக அளவில் நடைபெறப்போகிறது என்று வேதம் எச்சரிக்கிறது.

**குறிப்பு :** வஞ்சக ஆவிகளை அடையாளம் கண்டுபிடிப்பது எப்படி என்று ஏற்கனவே பார்த்தோம்.

### கள்ளத்தீர்க்கதரிசிகளைக் கண்டுகொள்வது எப்படி?

கர்த்தரின் நாமத்தில் சொல்லியும் அவன் கூறுவது நடைபெறாமற்போகும் (உபா.18:22). கர்த்தரின் நாமமேயன்றி வேறே தேவர்களைப் பின்பற்ற ஏவி அற்புதங்கள் அடையாளங்கள் செய்தல் (உபா.13:1–6), மாயக்காரனா யிருத்தல், விபசாரம் செய்தல், வஞ்சகம் பண்ணுதல், பொல்லாப்பானதை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத் துதல், கர்த்தர் பேசாதிருந்தும் தீர்க்கதரிசனம் சொல்லுதல், தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தைத் தீர்க்கதரிசனமாக உரைத்தல், கர்த்தருடைய வார்த்தையைத் திருட்டுத்தனமாக எடுத்தல், பொய்களைத் தீர்க்க தரிசனமாக உரைத்தல் போன்றவை இவர்களின் அடையாளங்கள் (எரே.23:11–32). தங்கள் இருதயத்தில் இருக்கிறதைத் தீர்க்கதரிசனமாகக் கூறுதல், ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்கள் ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுதல், சொகுசாக வாழ்தல், காசுக்காகத் தீர்க்கதரிசனம் கூறுதல், நீதிமானின் இருதயத்தை வீணாய் முறியப்பண்ணுதல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பி தேவனாலே காக்கப்படாதபடிக்கு அவனுடைய

கைகளைத் திடப்படுத்தித் துன்மார்க்கத்தில் நிலைத்திருக்கப்பண்ணுதல், கட்டுப்பாடுபண்ணுதல், ஆத்துமாக்களைப் பட்சித்தல், திரவியத்தையும் விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கிக்கொள்ளுதல், அபத்தமானதைத் தரிசித்துப் பொய்ச் சாஸ்திரத்தைக் கூறுதல், கர்த்தர் உரைக்காதிருக்க கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லிச் சாரமற்ற சாந்தை மக்களுக்குப் பூசுதல் போன்றவையும் அடையாளங்கள் (எசே.13:1–19, 22:25–29). இவற்றில் சில பண்புகளேனும் ஒவ்வொரு கள்ளத்தீர்க்கதரிசியிடமும் காணப்படும்.

**நாம் பேசுவது தீர்க்கதரிசனம் என்று எப்படி அறியலாம்?**

நமக்குத் தீர்க்கதரிசனம் கூறுவதற்கு ஏவுதல் இருப்பதுபோன்று தோன்றினால் என்ன செய்ய வேண்டும் என்று சில காரியங்களைப் பார்ப்போம்.

முதலாவதாக, நமக்கு வெளிப்படுத்துகிறது தேவன்தான் என்ற நிச்சயம் நமக்கு உண்டாயிருக்கவேண்டும். அவர் வெளிப்படுத்துகின்றவற்றை மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி ஏவுதல் நிச்சயமாகவே இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். இவற்றிற்காக ஜெபிக்கவேண்டும். நமக்கு வெளிப்படுகிறவை வேதவசனத்திற்கேற்ப இருக்கின்றனவா என்று நிதானிக்க வேண்டும். அவற்றைக் கூறாவிட்டால் எரே.20:9 இல் உள்ளது போன்று இருதயத்தில் அக்கினியைப்போன்ற உணர்வும், இளைப்பும் உண்டாகி பொறுக்கக்கூடாமல் இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும் (எரே.23:29 ஐயும் தியானியுங்கள்). நாம் பேசுவதால் மனிதருக்குப் பக்திவிருத்தி, புத்தி, ஆறுதல் ஆகியவற்றில் ஒன்றேனும் உண்டாகுமா என்று நிதானிக்க வேண்டும் (1 கொரி.14:3).

**தீர்க்கதரிசனத்தைக் கேட்பவர்கள் என்ன செய்யவேண்டும்?**

சபையில் தீர்க்கதரிசனம் உரைப்பதைக் கேட்பவர்கள் அதை நிதானிக்க வேண்டும் (1 கொரி.14:29). அதாவது, அந்தத் தீர்க்கதரிசனம் சரியானது தானா என்று கண்டுபிடித்துத் தீர்க்கவேண்டும். தவறாக இருப்பின் அதை வெளிப்படுத்தவேண்டும். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தீர்க்கதரிசனத்தைச் சரிபார்க்கவேண்டும். சரியென்று கண்டால் அதன்படி நடப்பது அதைக்கேட்ட நபரின் தனிப்பட்ட பொறுப்பாகும். தன்னைக்குறித்த அல்லது தான் செய்யவேண்டியதைக்குறித்த தீர்க்கதரிசனத்தைக் கேட்டதும் ஜெபித்து கர்த்தரிடமிருந்து அதைக்குறித்து உறுதியைப் பெற்றுக்கொண்டு செயல்படுதல் நல்லது.

**கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு எவ்விதங்களில் வெளிப் படுத்துவார்?**

தரிசனங்கள் மூலமாகவும் (சக.5:1–4), கனவுகள் மூலமாகவும் (ஆதி.28:10–16; தானி.7:1), நேரிடையாகப் பேசுவதின் மூலமாகவும் (1 சாமு.3:10–14; அப்.26:14), காதில் சத்தம் கேட்கப்பண்ணுவதின் மூலமாகவும் (1 சாமு.9:15,16) தேவன் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப் படுத்துவார். இவை தவிர உள்ளத்தின் ஆழத்தில் வெளிப்படுத்துவதின் மூலம் தீர்க்கதரிசனங்கள் அருளுவதே அதிகமாக நடைபெறுகிறது என்று கருத இடமுண்டு. தீர்க்கதரிசனம் கூறுவதற்கு இசை ஒத்துழைத்ததை 1 சாமு.10:5; 1 நாளா.25:1–3; 2 இராஜா 3:15; சங்.49:4 இல் காணலாம்.

**சபையில் தீர்க்கதரிசிகளின் இடம் எது?**

தீர்க்கதரிசனம் கூறுதல் ஒரு ஊழியம் ஆகும். அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசனம் கூறுபவர்களாக இருப்பது சாத்தியமே. அப்போஸ்தலரல்லாத மற்றத் தீர்க்கதரிசிகள் அடுத்த இடத்தைப் பெறுகின்றனர் (1 கொரி.12:28). இதற்கு அடுத்த இடத்தையே போதகர்கள் பெறுகிறார்கள். இக்காலத்தில் இவ்விதம் இல்லை. இந்நிலை மாறி சபை வேதத்தின்படி இருக்கும்படி ஜெபிப்போமாக.

**சிந்திக்க :** தீர்க்கதரிசன வரம் என்றால் என்ன? இவ்வரத்தால் எவற்றைக் கூறமுடியும்? பிரசங்கம் செய்வதற்கும் தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை? தீர்க்கதரிசனம் கூறுவதைத் தடுக்கலாமா? முத்திரையிடப்பட்ட தீர்க்கதரிசனங்களை விளக்க முற்படலாமா? எந்நிலையில் அவ்வாறு செய்யவேண்டும்? கள்ளத் தீர்க்கதரிசனங்களைக் கண்டுபிடிப்பது எப்படி?

புதிய ஏற்பாட்டு காலத்திலும் முன் அறிவிக்கும் தீர்க்கதரிசனங்கள் உண்டு. தனிப்பட்ட மனிதனுக்குக் கூறப்படும் தெளிவான தீர்க்க தரிசனங்களும் உண்டு.

**ஜெபிக்க :** தீர்க்கதரிசன வரம் இன்று மிகவும் தேவையாயுள்ளது. இதை மிகவும் நாடி இதற்காக ஜெபிக்கவேண்டும். உலகெங்குமுள்ள கர்த்தருடைய பிள்ளைகள்மேல் இவ்வரம் பெரிய அளவில் ஊற்றப்பட்டு, செயல்பட ஊக்கமாக ஜெபியுங்கள்.

**தியானிக்க :** 1 சாமு.10:1–16; 1 இராஜா.13:1–32; எரே.20:1–18; 1 கொரி.14:3,39; மத்.7:15.

## அதிகாரம் 22

# பற்பல மொழிகளைப் பேசும் வரமும், மொழிகளை விளக்கும் வரமும்

**பற்பல மொழிகளைப் பேசும் வரம், மொழிபெயர்க்கும் (பாஷைகளை வியாக்கியானம் செய்யும்) வரம் என்றால் என்ன?**

தேவன் ஒரு மனிதனின்மூலம் சபையினர் அறிந்திருக்கும் மொழியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் (முன் அறிவிப்பது, இரகசியங்களை வெளியாக்குவதுபோன்ற விதத்தில்) பேசுவது தீர்க்கதரிசனம் என்று ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஆனால், சபையினர் அறியாத மொழிகளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேவன் ஒரு மனிதனின் மூலம் சபைக்குப் பேசுவதைப் பற்பல மொழிகளைப் பேசும் வரத்தினால் பேசுதல் என்றும், அவ்விதம் பேசப்பட்டதை மொழிபெயர்ப்பதை மொழிபெயர்க்கும் (மொழிகளை வியாக்கியானம் செய்யும்) வரத்தினால் செய்தல் என்றும் கூறுகிறோம். பற்பல மொழிகளால் பேசி அவற்றை மொழிபெயர்த்துச் சொல்லுதல் தீர்க்கதரிசன வரத்திற்கு ஈடானதாகும்.

**அந்நிய மொழிகளில் தேவனிடத்தில் பேசுதலும், மனிதருக்குப் பேசுதலும்**

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற யாவரும் அந்நிய மொழிகளைப் பேசுவதை அப்.2:4; 10:44–46; 19:6 இல் காண்கிறோம். இது தேவனிடத்தில் பேசுதல் ஆகும். தேவனைப் புகழ்ந்து துதித்தலும் இதில் அடங்கும். இவ்வாறு பேசுவதை மனிதர்கள் எளிதில் விளங்கிக்கொள்ள முடியாது (1 கொரி.14:2). உலகத்தின் பல மொழிகளைப் பேசும் மக்கள் கூடியிருந்தால் சில சொற்களை அவர்களில் சிலர் புரிந்துகொள்ள முடியலாம். இல்லையெனில் தேவனுக்கு மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். தேவனுக்கு எல்லா மொழிகளும் தெரியும் என்பதால் அவருக்கு விளக்கம் சொல்லத் தேவையில்லை.

ஆனால், சில வேளைகளில் தேவன் சபைக்குச் சில காரியங்களைப் பற்பல மொழிகளில் மனிதர் மூலம் வெளிப்படுத்துவார். இவ்வாறு வெளிப்படுத்தும்

போது அதைக் கூறும் மனிதரின் குரல் நன்கு வித்தியாசமாகத் தெரியும். இவ்விதமாகக் கூறுவதை அதைக் கூறும் மனிதர் அல்லது சபையில் கூடியிருக்கும் மனிதரில் ஒருவர் மொழிபெயர்த்து, கூடியிருக்கும் மக்கள் புரிந்துகொள்ளும் மொழியில் பேசுவார். சபைக்குத் தேவன் எந்த மனிதர் மூலம் பற்பல மொழிகளில் செய்தி தருகிறாரோ அந்த மனிதன் பற்பல மொழிகளைப் பேசும் வரம் பெற்றவர்; அதை மொழிபெயர்த்துக் கூறுபவர் மொழிபெயர்க்கும் வரம் உடையவர்.

எனவே, மனிதரை நோக்கிப் பேசாமல், தேவனிடத்தில் அந்நிய மொழிகளால் ஜெபித்தலும் அவரைத் துதித்தலும் பற்பல மொழிகளைப் பேசும் வரம் அல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**அந்நிய மொழிகளைப் பேசுதலும் மொழிபெயர்த்தலும்**

ஒரு சபையினரின் மொழியைத் தெரியாத ஒருவர் போதிக்கும்படி வந்து தனக்குத் தெரிந்த மொழியில் பேசுவாரானால் அது பற்பல மொழிகளைப் பேசும் வரத்தினால் அல்ல. ஏனெனில் அவர் தனக்குத் தெரிந்த மொழியில் பேசுகிறார். அவ்வாறு பேசுவதை மொழிபெயர்க்கும் மனிதரும் மொழி பெயர்க்கும் வரத்தினால் செயல்படவில்லை. ஏனெனில் அவருக்கு இரு மொழிகளும் தெரிந்திருப்பதினால்தான் மொழிபெயர்க்கிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தங்களுக்குத் தெரியாத ஒரு மொழியில் சபைக்குப் பேசுவதும் அதை மொழிபெயர்ப்பதுமே வரங்களின் செயல்களாகும்.

**தற்காலத்தில் இவ்வரங்கள் செயல்படுகின்றனவா?**

ஆம், சில சபைகளிலும் சில ஜெபக்குழுக்களிலும் இவ்வாறு நடப்பதை இந்நூலின் ஆசிரியரான நான் பலமுறை அனுபவித்துள்ளேன். இன்னும் அதிகமாக இது சபைகளில் நடைபெற இருக்கிறது. சபையினரும் போதகர்களும் இச்செயல் நடைபெறும்படி ஜெபிக்கவும் இவ்வரங்களைப் பெற்றிருப்பவர்களை உற்சாகப்படுத்தவும் வேண்டும்.

**பற்பல மொழிகளைப் பேசுதல்**

பற்பல மொழிகளைப் பேசுவது, மொழி பெயர்க்கப்பட்டால் மட்டுமே மற்றவர்களுக்குப் பயன் தரும். ஆனால், தீர்க்கதரிசன வரம் பற்பல மொழிகளைப் பேசும் வரத்திலும் மேலானது. அந்நிய மொழிகளைப் பேசும் வரம் பெற்றவர்கள், மொழிபெயர்க்கும் வரத்தையும் பெறுவதற்காக ஜெபிக்கவேண்டும் (1 கொரி.14:11–13). சபை பக்தி விருத்தியடைவதற்காக மொழிபெயர்க்கும் வரம் வேண்டும்.

சபையில் ஒருவர் பற்பல மொழிகளைப் பேசும்போது அது யாராலும் மொழி பெயர்க்கப்படாவிட்டால் அவர் அவ்விதம் பேசுவதை நிறுத்திவிட வேண்டும்; தேவனிடத்தில் பேசலாம். மொழிபெயர்க்கிற வரமும் செயல்படுமானால் இரண்டு அல்லது மூன்று முறைகள் பற்பல மொழிகளால் பேசி மொழிபெயர்ப்பு செய்யலாம். இவ்வாறே இரண்டு அல்லது மூன்று தீர்க்கதரிசனங்களுக்கு எப்பொழுதும் அனுமதி உண்டு (1 கொரி.14:27–31).

ஒருவன் அந்நிய மொழிகளில் பேசுவதைத் தடை செய்வது சரியல்ல (1 கொரி.14:39). இதைக்குறித்தும் கவனமாக இருக்கவேண்டும். அநேக தீர்க்கதரிசிகள் சபையில் இருப்பது நல்லதுதான். எல்லாருமே தீர்க்கதரிசனம் கூறுவது மிகவும் நல்லது. ஆனால், ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று தீர்க்கதரிசனங்களே கூறப்படவேண்டும். மற்ற தீர்க்கதரிசிகள் பின்வரும் கூட்டங்களில் ஏதேனும் ஒன்றில் தீர்க்கதரிசனம் கூறலாம் (1 கொரி. 14:29).

**மொழிபெயர்க்கும் வரத்தினால் நேரிடை மொழிபெயர்ப்பு இருக்குமா?**

சொற்கள் அப்படியே மொழிபெயர்க்கப்படும் என்று கூற இயலாது. ஆனால் பற்பல மொழிகளில் கூறப்பட்டதின் முழுக்கருத்தும் மொழி பெயர்ப்பினால் கிடைக்கும். சில சமயங்களில் மொழிபெயர்ப்பின் அளவு பற்பல மொழிகளைப் பேசிய அளவிற்கு வித்தியாசமாக இருப்பதின் காரணம் இதுதான்.

**வரங்களைப் பெறுவதற்காக ஜெபித்தல்**

வரங்களைக்குறித்துப் படித்த சகோதரனே, ஆவியின் வரங்கள் நமக்கும், உலகெங்குமுள்ள தேவ மனிதருக்கும் அதிகமாகத் தேவையல்லவா? எனவே, இதற்காக அனுதினமும் ஜெபியுங்கள். அதுமட்டுமல்ல உபவாச நாட்களை நியமியுங்கள். இனிவரும் விடுமுறை நாட்களில் சிலவற்றை வரங்களுக்காக உபவாசித்து ஜெபிக்கும் நாட்களாக நியமித்து, கூடி ஜெபியுங்கள். ஆவியின் வரங்களை தேவன், நம்மீதும் உலகெங்கிலுமுள்ள தேவ பிள்ளைகள்மீதும் அளவின்றி ஊற்றுவாராக, ஆமென்.

**தியானிக்க :** 1 கொரி.14:12,13.

# அதிகாரம் 23

# சபைச் சரித்திரத்தில் வரங்கள்

அப்போஸ்தலர் காலத்தில் மட்டுமின்றி அதற்குப் பின்னர் இரண்டு மூன்று நூற்றாண்டுகள்வரை வரங்களினால் சபையின் அங்கத்தினர் பலத்த செயல்கள் நடப்பித்தார்கள். அப்போஸ்தலர் காலத்திலேயே சபைகளில் ஆதி அன்பு குறைந்துபோகத் தொடங்கியது (வெளி.2:4). அனலுமின்றி குளிருமின்றி இருக்கும் நிலைமை வந்துவிட்டது (வெளி.3:15). சபைக்கு கான்ஸ்டன்டைன் என்னும் ரோமப் பேரரசரால் அரசாங்க அங்கீகாரம் அளிக்கப்பட்ட பின்னர் சடங்காசாரங்களும் பதவி மோகமும் பலவித சதிகளும் வேதத்திற்குப் புறம்பான பல காரியங்களும் சபையில் பெருகின. அதிலிருந்து வரங்களின் செயல் மிகவும் குறைந்து, இல்லாமல் போகுமளவிற்குப் போய்விட்டது. ஆனாலும் ஒரு சில உத்தம ஊழியர் ஓரளவு வரங்களோடு எப்பொழுதும் இருந்து வந்தனர். அசிசி என்ற இடத்தைச் சார்ந்த பிரான்சிஸ் **(Francis of Assisi)** என்பவர் இவர்களில் ஒருவர். முன் மாரி காலத்து மழை, அதாவது ஆதி பெந்தெகொஸ்தே சமயத்தில் ஆரம்பித்த சபையில் ஆவியானவரின் செயல்கள் வரவரக் குறைந்தன. அனலுமின்றி குளிருமின்றி, சடங்காசாரங்களில் இருந்த சபையில் மாறுதல்கள் தோன்றின. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் என்ற சத்தியத்தினால் அநேகர் ஆவிக்குரிய விடுதலை பெற்றனர். சபை வளரத் தொடங்கியது. இரட்சிப்பின் நிச்சயத்தை மக்கள் பெற ஆரம்பித்தனர். அதற்கென்று ஊழியரைத் தேவன் எழுப்பினார். கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மீண்டுமாக ஆவியானவர் சபையின் மேல் ஊற்றப்பட்டார். இது இன்றைக்கு விரிவடைந்து, அநேகர் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ளும் காலத்தில் நாம் வாழ்கிறோம். எல்லாச் சபைப்பிரிவு மக்களும் அபிஷேகம் பெறுகின்றனர்.

### இன்றைய நிலை

இக்காலத்தில் சுகமளிக்கும் கூட்டங்களில் ஒரு சிலர் சுகம் பெறுவதையும் அநேகர் சுகவீனமாகவே திரும்பிச் செல்வதையும் காண்கிறோம். இந்தப்

பரிதாபகரமான நிலையில் நாமும் சபையும் ஊழியரும் நற்செய்திப் பணியாளரும் இருந்து வருகிறோம். இந்நிலை மாறும் நாள் சீக்கிரம் வருவதற்காக ஜெபிப்போமாக. 'நம்முடைய நிழல் சுகமாக்கும் நாள், நம்முடைய கைக்குட்டையைப் பிசாசு பிடித்தவர்கள்மேல் போட்டதும் பிசாசுகள் அலறி ஓடும் நாள், சுகவீனம் உடன் நீங்கும் நாள் என்றைக்கு வரும்; நமது கச்சைகளும் ஆடைகளும் சுகவீனர்மீது போடப்பட்டதும் வல்லமை விளங்கும் காலம் எப்போது?' என்று நமது உள்ளங்கள் துடிக்காதா?

**இனிவரும் நிலை என்ன?**

இதற்கு அடுத்த கட்டம் ஆவியின் வரங்களின் பலத்த செயல்களும் ஆவியின் கனியும் காணப்படும் காலம் என்று நம்புகிறோம். பிற்கால சபையின் மகிமை முற்கால சபையின் மகிமையைவிடப் பெரிதாக இருக்கும் **(The glory of the latter church will surpass the glory of the former church).** எனவே மகத்தான அற்புதங்களும் குணமடைதலும் தீர்க்கதரிசனங்களும் வல்லமையான செயல்களும் எழுப்புதல்களும் உலகெங்கும் அதி சீக்கிரத்தில் நடக்கப் போகின்றன. அல்லேலூயா! சகோதரரே, அவல நிலையில் இருக்கும் சபை உன்னத நிலையை அடைவதற்காகக் கண்ணீர் விட்டு ஜெபியுங்கள். அற்புதங்களைச் செய்யும் சக்தியையும் குணமாக்கும் வரத்தையும் பெற்றுக் கொள்ள உபவாசித்து ஜெபியுங்கள்.

**கர்த்தருடைய மகிமை இறங்குதல்**

மோசே நிறுவின ஆசரிப்புக் கூடாரத்தைக் கர்த்தருடைய மகிமை நிரப்பவில்லையா (யாத்.40:34,35)? ஊழியம் செய்து நிற்கக்கூடாத அளவிற்குக் கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பவில்லையா (2 நாளா.5:13,14; 7:1–3)? இன்றைய சபை இவ்வாறு வானத்தின் அக்கினியினால் நிரப்பப்படவேண்டும் என்றும் கர்த்தருடைய மகிமையால் நிரம்பி வழியவேண்டும் என்றும் நீர் துடிக்கமாட்டீரா? இதற்காக அழுது புலம்புவீரா? கண்ணீரோடு ஜெபிப்பீரா?

**மோசேயின் முகத்தின் ஒளி**

மோசே தேவனோடு பேசினார். அநேக தேவதாசர்கள் தேவனோடு பேசினார்கள். அவரும் பேசினார். இன்று பல இடங்களில் பிசாசின் சத்தத்தையும் கள்ளப்போதகங்களையும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மோசேயின் முகத்தில் ஒளி வீசியது. அதைக்கண்டு மக்கள் பயந்தார்கள். மக்களின் பயத்தினிமித்தம், மக்கள் மோசேயிடம் பயமின்றி வருவதற்காக

முக்காடு போட்டுக்கொண்டார். ஆனால் தேவனோடு பேசும்போது முக்காடு இன்றிப் பேசினார் (யாத்.34:29–35; 2 கொரி.3:7–10). நம் நிலை என்ன? தேவனோடு பேசுவதற்கு நாம் முக்காடுபோடவேண்டிய நிலையில் நமது வாழ்க்கை பரிசுத்தமற்று இருக்கிறது. மக்கள் நம்மில் எந்தவித ஒளியையும் காணவில்லையே. இது அவல நிலையல்லவா? இந்த நிலை மாறுவதாக. நமது ஊழியம் மகிமையானதாக மாறுவதாக (2 கொரி.3:7–11).

**அழுகையும் களிப்பும்**

எஸ்றா 3:12,13ஐ வாசித்துப்பாருங்கள். பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்களில், சாலொமோன் கட்டின ஆலயம் இடிக்கப்படுமுன் அதைக் கண்டவர்களில் சிலர் இருந்தனர். புதிதாக ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டபோது பழைய ஆலயத்தை நினைத்து, தங்களை அடக்கமுடியாமல் இவர்கள் கதறி அழுதார்கள். பழைய ஆலயத்தைக் காணாதவர்கள் ஆலயம் கட்டப்படுவதற்காக மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். சகோதரனே இப்போது இருக்கும் சபையின் பரிதாப நிலையையும் ஆதி சபையின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து அழுது ஜெபிப்பீரா?


**கர்த்தர் தரும் பதில் என்ன?**

முந்தின ஆதி சபையின் மகிமைக்குமுன் இக்காலச் சபையின் மகிமை ஒன்றுமில்லாததுபோல் காண்கிறதல்லவா (ஆகாய் 2:3)? கலங்காதேயுங்கள். திடன் கொள்ளுங்கள். வேலையை நடத்துங்கள் (ஊழியத்தைச் செய்யுங்கள்) என்று கர்த்தர் சொல்கிறார். நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார் (ஆகாய் 2:4).முந்தின சபையின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின சபையின் மகிமை பெரிதாயிருக்கும் (ஆகாய் 2:9 இன் தழுவல்). (கர்த்தாவே இவ்விதமாக எங்கள் காலத்திலே செய்து அதை எங்கள் கண்கள் காணச் செய்யும்; சீக்கிரமாய் இதைச் செய்யும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்).

**ஜெபிக்க**

இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஜெபக் குறிப்புகளுக்காக அடிக்கடி ஜெபியுங்கள்.

**தியானிக்க :** மத்.15:21–28; அப்.5:14–16; 19:11,12; யோவா.14:12.



# பகுதி 3

# ஆவியின் கனி

## அதிகாரம் 24

# கனியென்றால் என்ன?

ஒரு செடியானது, நிலம், சூரிய வெளிச்சம், காற்று, தண்ணீர் போன்ற வற்றின் துணையோடு உணவு தயாரித்து, தான் வளர்வது மட்டுமன்றி தன் இனவிருத்திக்காகவும் மற்றவர்களுக்குப் பயன்படுவதற்காகவும் தயாரிப்பது கனி ஆகும். விளைச்சல், பலன், உற்பத்தி போன்றவற்றையும் கனி என்ற சொல் குறிக்கின்றது. நிலத்தின் கனி என்பது அந்நிலத்தின் விளைச்சலைக் குறிக்கும். கர்ப்பத்தின் கனி என்பது பிள்ளைகளைக் குறிக்கும் (உபா.7:13). மற்றவர்களுக்குப் பயன்தருவதுபோன்று நம் வாழ்க்கையின் விளைவு அமைவது நற்கனி என்று காண்கிறோம்.

**கனி எப்பொழுது உண்டாகும்?**

ஒரு மரம் அல்லது செடியானது மிகவும் சிறிதாக இருக்கும்போது கனி கொடுக்காது. ஓரளவு வளர்ந்த பின்னர் அதில் மொட்டு உண்டாகும். மொட்டு மலர்ந்து மலராகும். பின்னர் பிஞ்சாக உருவாகுவது முதிர்ந்து கனியாகும். இவ்விதம் ஓரளவு வளர்ந்த மரம் (அல்லது செடி) தரும் பலன் கனியாகும். கனி தருவதற்கு ஆரம்பித்த பின்னர் ஒரு மரமானது தொடர்ந்து ஏற்ற காலத்தில் கனிகளைத் தந்துகொண்டேயிருக்கும். கனியின் தரமும் எண்ணிக்கையும் வரவர அதிகரிக்கும்.

**கனிகளில் பல வகை உண்டு**

வாசனையுள்ள, சுவைமிகுந்த, ஊட்டச்சத்து நிறைந்த பல நற்கனிகள் இருப்பதுபோன்று விரும்பத்தகாத சுவையும் துர்நாற்றமும் கொண்ட நச்சுக் கனிகளும் உண்டு. ஒரு மரத்தின் கனி பயன் உள்ளது என்றால் அதை நல்ல மரம் என்றும் அவ்வாறில்லையெனில் நல்ல மரமில்லை என்றும் கருதுகிறோம் (மத்.7:17–18).

**கனி தருவதற்கு நிபந்தனை என்ன?**

ஒரு செடிக்கு வேர் இருந்தால் மட்டுமே அது கனிதரும் என்று நாம் அறிவோம் (2 இராஜா 19:30; ஏசா.37:31; ஓசி.9:16). ஒரு கொடியில் (செடியின் கிளையில்) கனி உண்டாகவேண்டுமெனில் அக்கொடியானது செடியில் சேர்ந்து இருக்கவேண்டும். செடியோடு இணைந்திராத கொடியினால் கனி கொடுக்க இயலாது. இதையே கர்த்தர், 'என்னில் நிலைத்திராவிட்டால் நீங்கள் கனி கொடுக்கமாட்டீர்கள்', என்று வலியுறுத்தினார் (யோவா.15:4). என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று கர்த்தர் கூறினார் (யோவா.15:5).

நீதியின் கனியானது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே வருகின்றது (பிலி.1:10) என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. எனவே நாம் கர்த்தரிலும் கர்த்தர் நம்மிலும் இருந்தால்மட்டுமே நாம் நற்கனி தரமுடியும் என்பதைத் தெளிவாகக் காண்கிறோம்.

**கனி காணப்படும் விதங்கள்**

செயல்களின் பலன் (மீகா 7:13; எரே.21:14) மட்டுமின்றி வாயின் வார்த்தைகளின் கனியும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது (ஓசி.10:13). சொற்களால் வரும் பலனை நீதி.18:21 அறிவிக்கிறது. நமது சொற்களுக்கு ஏற்ற பலன் நிச்சயம் உண்டு என்பதை நீதி.12:14; 13:2 இலும் காணலாம். மனிதனின் நினைவுகளின் பலனையும் வேதம் குறிப்பிடுகின்றது (எரே.6:19).

பாவ இச்சைகள் மரணத்துக்கேதுவான கனிகளைக் கொடுக்கும் என்பதை ரோம.7:5 இல் காண்கிறோம். தேவனுடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி சிறந்ததாகும் (எபி.13:15). நீதியின் கனி சகலவித நற்கிரியைகளின் கனி போன்ற கனிகள் முக்கியம் வாய்ந்தவை.

**நல்ல கனி கொடுக்காதவர்களின் இறுதி நிலை என்ன?**

நற்கனி கொடுக்காவிடில் அழிவு ஏற்படும் என்பதை மத்.3:10; யோவா.15:2,6 என்ற பகுதிகளினின்று காணலாம். கனிகொடாத அத்திமரத்தைக் கர்த்தர் சபித்ததை மத்.21:18–22 இல் வாசிக்கின்றோம். நற்கனி கொடாத மனிதனுக்கும் இதே கதிதான் ஏற்படும்.

**நாம் இரட்சிக்கப்பட்டதின் நோக்கங்களில் ஒன்று கனி தருதலாகும்**

நாம் கனி கொடுக்கும்படியாகவும் நமது கனி நிலைத்திருக்கும்படிக்கும் கர்த்தர் நம்மை ஏற்படுத்தியிருக்கின்றார் (யோவா.15:16). நூறாகவும்,

அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருகிறவர்களைத் தேவன் தேடிக் கொண்டிருக்கிறார் (மத்.13:23).

நற்கனிகள் என்றால் எவை? இச்சைகள் தீயகனி கொடுக்கின்றன என்பதினின்று நல்ல ஆசைகள் நற்கனிகளைத் தருவதற்கு ஏதுவாக அமைகின்றன என்பது விளங்கும். நல்ல எண்ணங்கள் நல்ல நோக்கங் களைத் தரும். நல்ல சொற்கள், நற்செயல்கள் (மற்றவர்களுக்கு உதவுதல்) போன்றவையும் நற்கனிகளாகும்.

## நம்மையே ஆராய்ந்துபார்த்தல்

**1. நம் சிந்தனைகளைச் சீர்தூக்கிப்பார்ப்போம்**

என் சிந்தனைகள் அசுத்தமான சிந்தனைகளா? பொருளாசையான சிந்தனைகளா? புகழை விரும்பும் சிந்தனைகளா? மற்றவர்களைக் குறைவாக எண்ணும் சிந்தனைகளா? உலகக் காரியங்களைக்குறித்த சிந்தனைகளா? கர்த்தரைக்குறித்தும் வேதவாக்கியங்களைக்குறித்தும் எவ்வளவு சிந்திக்கிறேன்? அழிந்துபோகும் ஆத்துமாக்களைக்குறித்தும் சபைகள் ஊழியங்கள், ஊழியரைக்குறித்தும் எவ்விதத்தில் எவ்வளவு சிந்திக்கிறேன்?

**2. நமது சொற்களைக் கவனித்துப்பார்ப்போம்**

கோபமும் எரிச்சலுமுள்ள சொற்கள் என் வாயிலிருந்து புறப்படு கின்றனவா? மற்றவர்களைக்குறித்து இழிவாகப் பேசுதல், குறைகூறுதல், புறங்கூறுதல், நச்சரித்தல், கோபமூட்டுதல் என்னிடமுண்டா? உண்மைக்குப் புறம்பாகப் பேசுதல், சபித்தல், தகாத சொற்கள் போன்றவை என்னிடம் காணப்படுகின்றனவா? மற்றவர்களைப் பரியாசம் பண்ணுகிறேனா?

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி என்னிடம் எந்த அளவிற்குக் காணப்படுகின்றது? கிருபையுள்ள அன்பின் சொற்களும் மற்றவர்களுக்குப் பயன்படும் சொற்களும் என்னில் நிறைந்துள்ளனவா?

**3. நமது செயல்களைக் கண்ணோக்கிப்பார்ப்போம்**

மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய உதவிகளைச் செய்யாமலிருக்கிறேனா? செய்யக்கூடாத காரியங்கள் எவற்றையேனும் செய்துவிடுகிறேனா? என் வாழ்க்கைத்துணை, என் பெற்றோர், என் உடன்பிறந்தோர், என் பிள்ளைகள், என் நண்பர்கள், என்னுடன் பணி செய்பவர்கள், என்னோடு பழகுகிறவர்கள் என்னைக்குறித்து எவ்வித சாட்சி சொல்வார்கள்? என்னுடைய செயல்கள் கர்த்தரின் நாம மகிமைக்காக இருக்கின்றனவா? கர்த்தருக்காக நான்

செய்கிறது என்ன? ஆத்தும ஆதாயப்பணி செய்கிறேனா? தேவனுடைய சபைக்கு என் பணி என்ன? கர்த்தரைக்குறித்துக் கேள்விப்படாத மக்களிடத்திற்கு மிஷனரிகளை அனுப்பும் பணியில் என் பங்கு என்ன? அனுதினமும் செயல்படுங்கள்.

ஒவ்வொரு நாள் காலையிலும் இன்று யாருக்கு என்ன உதவி செய்யலாம், கர்த்தரின் நாம மகிமைக்காக இன்று என்ன செய்யலாம் என்று சிந்தித்துச் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

**ஒரு எச்சரிப்பு**

நற்கனி தராத மக்களாகிய நம்மை இம்மட்டும் தமது கிருபையினால் கர்த்தர் காத்து வந்திருக்கிறார். நமக்கு இன்னும் இருக்கும் நாட்களில் நாம் கனி தராவிட்டால் நமது நிலை பரிதாபமாயிருக்கும். தொடர்ந்து கனிதராத மரம் வெட்டப்படும் என்று லூக்.13:6–7 இலிருந்து காண்கிறோம். இன்றிலிருந்து கனிதருவதற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**தியானிக்க** : யோவான் 15:1–17.

## அதிகாரம் 25

# ஆவியின் கனி - அன்பு

ஆவியின் கனி என்பதில் ஒன்பது காரியங்களைக் குறிப்பிட்டிருப்பதை கலா.5:22,23 இல் காண்கிறோம். ஒன்பது கனிகள் அல்ல, கனி ஒன்றுதான் என்பதை, 'கனி' என்று ஒருமையில் எழுதப்பட்டிருப்பதினின்று அறிகிறோம். இவ்வுலகத்திலுள்ள கனி ஒன்றை எடுத்துக்கொண்டால் அதில் சுவை, வாசனை, திடம், ஈரப்பதம், மென்மை, நிறம், உருவம், சத்துக்கள், தாதுப் பொருட்கள் ஆகியவை அடங்கியிருப்பதைப்போன்று ஆவியின் கனியில் ஒன்பது பண்புகள் ஒரு சேர அமைந்துள்ளன.

**அன்பு :** அன்பைப் பற்றி 1 கொரி.13:1–13 தெளிவாக விளக்குகின்றது. வச.1–3, அந்நிய மொழிகளையும் தூதர்களுடைய மொழிகளையும் பேசுதல், தீர்க்கதரிசன வரம் உடையவனாயிருத்தல், இரகசியங்களையும் அறிவையும் பெறுதல், மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசமுள்ளவனாயிருத்தல் போன்றவற்றை நாம் விரும்புகின்றோம், பாராட்டுகின்றோம். தன் சொத்துக்களை எல்லாம் தர்மம் செய்து தன் உடலையே தானம் செய்பவர்களை நாம் பாராட்டுகின்றோம். ஆனால் அன்பு அவற்றிலும் மிகுந்த மேன்மையுள்ளது என்பதை நாம் அவ்வளவாக உணர்வதில்லை. அன்பில்லையெனில் மற்ற எதுவும் வீண்.

**தற்பரிசோதனை :** நம்முடைய வாழ்க்கையில் அன்பு எவ்வளவு காணப்படுகிறது. நமது பெற்றோரிடம், வாழ்க்கைத் துணையிடம், குழந்தைகளிடம், உறவினரிடம் ,அயலகத்தாரிடம், நண்பரிடம், உடன் வேலை செய்பவர்களிடம், நம் எதிரிகளிடம் நாம் அன்பாக இருக்கிறோமா?

நம்முடைய செயல்கள், சொற்கள், சிந்தனை அன்பினால் நிறைந்ததாக இருக்கின்றனவா?

இவ்விதமாக நாம் மாறும்படியாக ஊக்கமாக ஜெபியுங்கள்.

அன்பு எப்படிப்பட்டது? (1 கொரி.13:4–7)

| | | |
|---|---|---|
| 1. நீடிய சாந்தம் உள்ளது | – | எனக்கு எவ்வளவு சாந்தம் இருக்கிறது? |
| 2. தயவுள்ளது (is kind) | – | நான் தயவாக இருக்கின்றேனா? இரக்கமுள்ளவனா? |
| 3. பொறாமையில்லாதது | – | யார் மீதாவது எனக்குப் பொறாமை உண்டா? |
| 4. தன்னைப் புகழாது | – | என்னையே புகழும் பழக்கமும், நான் புகழப்படவேண்டும் என்ற விருப்பமும் எனக்கு உண்டா? நான் சிறந்தவன் என்ற எண்ணம் உண்டா? |
| 5. இறுமாப்பாயிராது | – | நான் இறுமாப்பாயிருக்கிறேனா? அல்லது தாழ்மையுடன் இருக்கிறேனா? |
| 6. அயோக்கியமானதைச் செய்யாது | – | என் செயல்களில் வன்முறை, முரட்டுத்தனம் போன்றவை காணப்படுகின்றவா? |
| 7. தற்பொழிவை நாடாது | – | என் வாழ்க்கை சுயநலத்தால் நிரம்பியிருக்கின்றதா? |
| 8. சினமடையாது | – | சிறு காரியங்களுக்கும் சினமடையும் வழக்கம் எனக்கு உண்டா? யார் மீதாகிலும் கோபத்தைப் பேணி வைத்திருக்கிறேனா? |
| 9. தீங்கு நினையாது | – | என் நினைவுகள் எப்படி இருக்கின்றன? குறிப்பாக, மற்றவர்களைக் குறித்த நினைவுகள் நன்மைக்கேதுவாக இருக்கின்றனவா இல்லையேல் தீமைக்கேதுவாக இருக்கின்றனவா? |
| 10. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் | – | நம்மை எதிர்ப்பவர்களுக்கு யாரேனும் அநியாயம் செய்தால் நாம் அதற்காக மகிழ்ச்சி அடைகிறோமா? |
| 11. சத்தியத்தில் சந்தோஷப்படும் | – | நம்முடைய மகிழ்ச்சி எதில் இருக்கிறது? |
| 12. சகலத்தையும் தாங்கும் | – | நான் அவ்வாறு இருக்கிறேனா? |

13. சகலத்தையும் விசுவாசிக்கும் – வேதத்தில் உள்ள அனைத்தையும் விசுவாசிக்கிறேனா?

14. சகலத்தையும் நம்பும் – என் நம்பிக்கை எதில் உள்ளது.

15. சகலத்தையும் சகிக்கும் – என்னுடைய சகிப்புத்தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது.

**நம்மையே ஆராய்ந்துபார்க்க நேரம் செலவழிப்போமாக**

1. நம்முடைய குறைபாடுகளை மேற்கண்ட குறிப்புகளினின்று கண்டறிந்து அறிக்கை செய்வோமாக.

2. இனி இப்பண்புகள் நம்மில் காணப்படுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து எழுதுங்கள், செயல்படுங்கள்.

**அன்பாயிருக்க என்ன செய்யலாம் என்று உங்கள் தீர்மானங்கள் :**

குடும்பத்தில் ..............................................................

உறவினரிடம் ..............................................................

அயலகத்தாரிடம் ..............................................................

நண்பர்களிடம் ..............................................................

உடன் பணிபுரிவோரிடம் ..............................................................

சபை மக்களுடன் ..............................................................

எதிரிகளிடத்தில் ..............................................................

பாராட்டுகின்றேன், நன்றி, உங்களுக்கு உதவி செய்யலாமா, வருந்துகின்றேன், மன்னியுங்கள் என்பவைபோன்ற சொற்கள் என் வாயில் அடிக்கடி காணப்படுவதாக.

**தியானிக்க :**

அன்பைப்பற்றிப் புதிய ஏற்பாட்டில் உள்ள சில வசனங்களைக் கீழே குறிப்பிட்டுள்ளோம். இவ்வசனங்களின்று அன்பைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்பவற்றை எழுதுங்கள். பொருளுக்கேற்ப இவ்வசனங்களைக் கோர்த்து எழுதிப்பாருங்கள்.

மத்.5:44–46; 22:37–39; லூக்.23:34; 2 தெச.1:3

யோவா.13:34–35; 15:9,10,12,13,17 1 தீமோ.1:5; 2:15; 4:12

அப்.7:60;

ரோம.5:5; 12:9,10; 13:8,10; 14:15;

1 கொரி.8:1,9; 14:1; 16:14,22,24

கலா.5:6,13

எபே.1:15; 3:17,18; 4:2,15,16; 5:2

பிலி.1:8,9; 2:1–5,26

கொலோ.2:2; 3:13–15

1 தெச.3:6,12; 4:9; 5:8

2 தீமோ.2:22, 3:10

தீத்.2:2

எபி.13:1,2

1 பேது.2:17, 3:8,9

1 யோவா.3:14–18,23;
4:7,8,16–18,20; 5:1

3 யோவா.6

வெளி.2:4,19; 3:19.

# அதிகாரம் 26

# ஆவியின் கனி-மகிழ்ச்சி

வேதத்தில் உள்ள கருத்து ஒன்றைத் தியானிப்பது எப்படி என்று உங்களுக்குப் பயிற்சி தர விரும்புகிறோம். அதற்காக மகிழ்ச்சி.... (சந்தோஷம், களி கூருதல், ஆனந்தம்) என்ற சொல் வேதத்தில் வரும் இடங்களில் பலவற்றை இந்த அத்தியாயத்தின் இறுதியில் தருகிறோம். இந்த வசனங்களை ஒரு ஏட்டில் (நோட்டில்) வரிசையாக எழுதுங்கள். பின்னர் அதிலுள்ள கருத்துகளை வசனங்களுக்கு நேராக எழுதுங்கள். ஒரே கருத்துள்ள வசனங்களாகத் தொகுத்து, கருத்து அடிப்படையில் வசனங்களை மீண்டும் இன்னொரு பக்கத்தில் பகுதிகளாக எழுதுங்கள். பின்னர் ஒவ்வொரு பகுதியையும் கவனமாகப் படித்து அதிலுள்ள உபதேசத்தைத் தொகுத்து எழுதுங்கள். இந்த முறையில் பழைய ஏற்பாட்டிலுள்ள வசனங்களையும், புதிய ஏற்பாட்டில் உள்ள வசனங்களையும் தொகுத்து அறிந்த கருத்துகளை இந்த அதிகாரத்தில் தந்துள்ளோம்.

**பழைய ஏற்பாட்டிலிருந்து தொகுக்கப்பட்டவை :**

### ஆவிக்குரிய மகிழ்ச்சி யாருக்கு உண்டாயிருக்கும்?

கர்த்தரைத் தேடுகிற அனைவருக்கும், நீதிமான்களுக்கும், பரிசுத்தவான்களுக்கும், கர்த்தரை நம்புகிறவர்களுக்கும், அவருடைய நாமத்தை நேசிப்பவர்களுக்கும் ஆவிக்குரிய மகிழ்ச்சி உண்டாகும் (சங்.5:11; 32:11; 33:1; 40:16; 68:3; 70:4; 149:5). பரிசுத்தவான்களின் மகிழ்ச்சி உம்மில் காணப்படுகின்றதா? இம்மகிழ்ச்சியுடையவனாயிருக்க என்ன செய்யலாம்?

### கர்த்தருக்குள் மகிழ்ச்சி

ஒரு ஆமணக்குச் செடிக்காக மிகுந்த மகிழ்ச்சியடைந்த யோனா அதன் முடிவிற்காக வருந்தியதை யோனா தீர்க்கதரிசியின் நூலில் நாம் காண்கிறோம் (யோனா 4:6–8). அற்பமான உலகக் காரியங்கள்மேல் மிகுந்த

மகிழ்ச்சியடையாமல் பரமகாரியங்களில் மகிழ்ச்சியடையப் பழகிக் கொள்வோமா?

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதைக் குறித்து யோவேல் 2:23; சங்.9:2 போன்ற பகுதிகளில் காணலாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பது நம்மைப் பெலப்படுத்துகின்றது என்பதை நெகே.8:10 இல் வாசிக்கிறோம்.

கர்த்தரைக் குறித்துத் தியானிக்கத் தியானிக்க மகிழ்ச்சி பெருகும் (சங்.104:34). கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவதில் மகிழ்ச்சியுண்டு (சங்.42:4; 122:1). நான் கடமைக்காக ஆலயத்துக்குச் செல்கிறேனா அல்லது மகிழ்ச்சியோடே செல்கிறேனா? கர்த்தரின் பிரசன்னத்தை உணருகின்ற யாரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது (சங்.16:11; 100:2). ஜெபத்திலும் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவபிரசன்னத்தில் வாழ்வோமாக. கர்த்தரை ஆராதிக்கும்போதெல்லாம் மகிழ்ச்சியோடே ஆராதனை செய்ய உம்மை ஒப்புக்கொடுப்பீராக (சங்.100:2). கர்த்தரோடே உடன்படிக்கை பண்ணுவதில் மகிழ்ச்சியுண்டு (2 நாளா.15:15). நீர் கர்த்தரோடே ஏதேனும் உடன்படிக்கை செய்ததுண்டா? நாம் கர்த்தரில் மேன்மைபாராட்டுவதைக் கேட்டு சிறுமைப்பட்டவர்களை மகிழச்செய்ய ஒப்புக்கொடுத்து உடன்படிக்கை செய்வோமா (சங்.34:2)?

## இரட்சிப்பில் மகிழ்ச்சி

இரட்சிக்கப்படும்போது நாம் ஆவிக்குரிய மகிழ்ச்சியை அனுபவிக் கிறோம். அடிக்கடி நமது இரட்சிப்பைக்குறித்துத் தியானித்து அதற்காக மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துவது நமது கடமை (சங்.35:9; 1 சாமு.2:1). பின்மாற்றத்தில் இருந்து திரும்பவும் கர்த்தருக்குள் வரும்போது நாம் இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்கிறோம் (சங்.51:12). ஆனால், மீண்டும் மீண்டும் பின்மாற்றமடைபவர்கள் கடினப்பட்டு தேவனிடம் திரும்பாமல் போக வாய்ப்புண்டு. எனவே, கவனம் தேவை. திரளான ஜனங்கள் தேவனிடத்திற்குத் திரும்பும்போதும் பின்மாற்றத் திலிருந்து மீண்டும் உயிர்ப்பிக்கப்படும்போதும் அதைக் காணும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய மகிழ்ச்சி உண்டாகும் (2 நாளா.30:25,26; சங்.85:6).

## கர்த்தரின் வார்த்தையின்பேரில் மனமகிழ்ச்சி

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருப்பது மட்டுமின்றி (சங்.1:2), அதை மகிழ்ச்சியாகக் கொள்ளவேண்டும். தேவனுடைய வசனத்தைத் தியானிக்கும் போது அவருடைய இரகசியங்களைப் புரிந்துகொள்கிறோம். அவை நமக்கு

மகிழ்ச்சி தருகின்றன. இந்த மகிழ்ச்சியைக்குறித்து எரே.15:16; சங்.119:70,162,174 போன்ற பகுதிகள் குறிப்பிடுகின்றன. துக்கம் வரும்போது அழிந்து போகாமலிருப்பதற்குத் தேவன் நமக்கு வேதத்தின்மூலம் மனமகிழ்ச்சியை அளிக்கிறார். உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிரா திருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன் என்று சங்கீதக்காரன் சொல்கிறான் (சங்.119:92). கர்த்தருடைய சாட்சிகளின் வழிகளில் களிகூர்ந்து (சங்.119:14) வாழப் பழகிக்கொள்வோமாக. மேலும் நாம் கர்த்தருடைய வசனத்துக்குக் காத்திருக்கும்போது கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் நம்மைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள் (சங்.119:74).

**கர்த்தருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சி**

கர்த்தருக்குத் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொடுக்கும் பலர் மகிழ்ச்சியுடன் கொடுப்பது இல்லை. உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மகிழ்ச்சியோடு மக்கள் கர்த்தருக்குக் கொடுப்பதை 1 நாளா.29:9 இலும் அவ்வாறு கொடுப்பதைக் கண்டு தேவனுடைய தாசனாகிய தாவீது மகிழ்ச்சியடைவதை 1 நாளா.29:17 இலும் வாசித்துப்பாருங்கள். காணிக்கை கொடுக்கும்போதெல்லாம் மகிழ்ச்சியோடு தேவனுக்குக் கொடுப்போமாக.

**கர்த்தரின் செயல்களில் மகிழ்ச்சி**

கர்த்தரின் செயல்களைக் காணும்போதும், தியானிக்கும்போதும் மிகுந்த மகிழ்ச்சி அடையலாம். கர்த்தரின் கிரியைகளினிமித்தம் என்றைக்காவது ஆனந்த சத்தமிடும் வழக்கம் உங்களுக்கு உண்டா (சங்.92:4)? கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள் நீதிமானுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன (சங்.48:11; நீதி.21:15). இந்தப் பூமியைக் கர்த்தர் ஆள்கிறார் என்பதை உணரும்போதும் மகிழ்ச்சியடைகிறோம் (சங்.97:1). கர்த்தரின் செயல்களை விவரித்துச் சொல்லும்போது நமக்கு மகிழ்ச்சி உண்டு (சங்.107:21,22). கர்த்தரின் செயல்களை மற்றவர்களுக்கு விவரித்துச் சொல்லி மகிழ்வோமாக.

கர்த்தர் தம்முடைய ஊழியருக்கும், தமது மக்களுக்கும் செய்கிற எல்லா நற்காரியங்களுக்காகவும் மகிழ்ந்து களிகூரலாம் (சங்.35:27; 1 இராஜா.8:66). கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் மோசேயின் மாமனாகிய எத்திரோ மகிழ்ச்சியடைந்தைப்போன்று (யாத்.18:9–12) நாமும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் இன்றைய இஸ்ரவேலருக்கும் கர்த்தர் செய்கிற எல்லா நன்மைகளுக்காகவும் மகிழ்வுற்று கர்த்தரைத் துதிப்பதற்கு முன்வருவோமாக.

**கர்த்தருடைய நாமத்தில் மகிழ்ச்சி உண்டு**

கர்த்தருடைய நாமத்தைத் தியானிக்கும்பொழுது நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்கமுடியாது (சங்.89:16). கர்த்தருடைய நாமங்களில் உங்களுக்கு ஞாபகம் வருகிறவற்றை ஒரு நோட்டில் எழுதி, தியானியுங்கள். இந்தப் பெயர்களின்று உங்களுக்குக் கிடைக்கும் வாக்குறுதிகளைச் சிந்தியுங்கள். கர்த்தரின் நாமத்தில் மகிழுங்கள். எடுத்துக்காட்டாக, கர்த்தரின் நாமத்தை யாத்.34:5–7 இல் வாசியுங்கள். அவருடைய இரக்கத்தையும், கிருபையையும், நீடிய சாந்தத்தையும், மகா தயையையும், சத்தியத்தையும் தியானிப்பவர் யாராயினும் மகிழ்ச்சி அடைவர். தாவீதைப் போல் கர்த்தருடைய கிருபையில் களிகூர்ந்து மகிழக்கடவோம் (சங்.31:7).

**அறுவடையில் மகிழ்ச்சி**

இந்த மகிழ்ச்சி கர்த்தருக்கென்று ஆத்தும ஆதாயம் செய்கிற மக்களுக்கே உரியது. கண்ணீரோடே விதைக்கப் புறப்படுவீராக. கர்த்தர் கெம்பீரமாக அறுவடைசெய்ய உமக்குக் கிருபையளிப்பார் (சங்.126:5,6). உமக்கு இந்த மகிழ்ச்சிவேண்டாமா? இன்றே ஆத்தும ஆதாயம் செய்வதற்கு எழும்புவீராக.

ஊழியத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட உயர்நிலை அடையும்போதும் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாறு ஆலயப்பிரதிஷ்டையின்போதும் கர்த்தருடைய பெட்டியை எருசலேமிற்குக் கொண்டுவரும்போதும் மகிழ்ச்சி பொங்கியதை எஸ்றா 6:16; 1 நாளா.15:25 இல் காண்கிறோம். தாவீது தனக்குப்பின் இஸ்ரவேலை அரசாட்சி செய்ய சாலொமோனை இராஜாவாக ஏற்படுத்தியது மக்களில் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியதை 1 இராஜா.1:40 இல் வாசிக்கின்றோம். இவ்வாறே புதிய ஊழியர்கள் எழும்பிப் புதிய பொறுப்புகளை ஏற்கும்போதும் புதிய ஊழியங்கள் தொடங்கும்போதும் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகள் வெற்றிபெறும்பொழுதும் ஆபத்துகளினின்று பாதுகாக்கப்படும்பொழுதும் சத்துருக்களுக்கு மேலாகக் கர்த்தருடைய பிள்ளைகள் உயர்த்தப்படும்போதும் நாம் களிகூர்ந்து கர்த்தரைத் துதிக்கக் கவனமாக இருக்கவேண்டும் (1 சாமு.18:6; சங்.27:6).

**கர்த்தரில் நிலைத்திருத்தலில் மகிழ்ச்சி**

கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்துக்கொண்டால் அவர் நமது வலது பாரிசத்தில் இருப்பார். அவ்வாறு நாம் வாழும்போது அவரில்

நிலைத்திருப்போம். நாம் அசைக்கப்படுவது இல்லை. இவ்வாறு நிலைத்திருப்பவர்களின் இறுதி முடிவு பரம எருசலேம் அல்லவா? இவ்வாறு கர்த்தருக்குள் நிலைத்திருக்கும்பொழுது அவருடைய மகிழ்ச்சி நம்மீது இருக்கும் (சங்.16:8–9). அந்நிய நாட்டில் இருந்த யூதர்கள் எருசலேமைத் தங்கள் முக்கிய மகிழ்ச்சியிலும் மேலானதாகக் கருதினார்கள். இவ்வாறே கர்த்தருக்குள் நிலைத்திருப்பவர்கள் பரம எருசலேமைத் தங்கள் முக்கிய மகிழ்ச்சியிலும் மேலானதாகக் கருதி அதற்குப் போகும் நாளை எதிர்நோக்கியிருப்பார்கள் (சங்.137:6). நாம் அந்த நாளைக்குறித்துச் சிந்திக்கிறோமா? அந்த நாளுக்காக ஏங்குகிறோமா?

**ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி**

ஒவ்வொரு நாளும் கர்த்தர் உண்டுபண்ணின நாள்தான். எனவே ஒவ்வொரு நாளும் களிகூர்ந்து மகிழக்கடவோம் (சங்.118:24). நன்மையும் கிருபையும் நம்மை ஒவ்வொரு நாளும் தொடர்கின்றன என்பதால் ஒவ்வொரு நாளும் மகிழ்ந்து களிகூரவேண்டும் (சங்.23:6). காலையில் படுக்கையிலிருந்து எழும்பும்போதே கர்த்தரின் கிருபைக்காக மகிழ்ச்சியுடன் துதிக்கும் பழக்கமுடையவர்களாக இருப்போமாக (Smile Please).

**முதிர் வயதில் மகிழ்ச்சியாயிருக்க ஒரு குறிப்பு**

உமது பிள்ளைகளைச் சிறுவயதிலேயே கர்த்தருடைய இரட்சிப்பிற்குள் நடத்துவீரானால் உமது முதிர்வயதிலும்கூட நீர் மகிழ்ச்சியாயிருக்கலாம் (நீதி.23:24,25).

**எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சி**

ஆபகூக் 3:17–19 ஐ வாசித்துப்பாருங்கள். எந்த இழப்பு நேர்ந்தாலும் என்னதொல்லை வந்தாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்து தேவனுக்குள் களிகூருவது, ஆவியின் கனியாகிய மகிழ்ச்சியின் அறிகுறியாகும். எனக்காக யாவையும் தேவன் செய்வார் என்பதையும் (சங்.138:8) சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது (ரோமர் 8:28) என்பதையும் என் ஜீவனுள்ள நாளெல்லாம் (இன்றைக்கும்) நன்மையும் கிருபையும் என்னைத் தொடருகிறது (சங்.23:6) என்பதையும் முழு நிச்சயமாக நம்பும் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

**நடுக்கத்துடனே களிகூருதல்**

நம்முடைய கர்த்தர் மகாமேன்மையும் சர்வ வல்லமையும் உள்ள மிகப்பெரிய தேவன் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. எனவே அவருடைய சமுகத்தில் நடுக்கத்துடனே களிகூரவேண்டும் (சங்.2:11).

**எதைக்குறித்துச் சந்தோஷப்படக் கூடாது**

நமக்குத் தொல்லை தரும் மக்கள் தொல்லைகளில் மாட்டிக்கொண்டு திணறும்போதும் பாடுகளில் சிக்கிக்கொள்ளும்போதும் நாம் அதைக்குறித்து மகிழ்ச்சியடையக் கூடாது (நீதி.24:17). அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். முடிந்தவரை அவர்களுக்கு உதவி செய்யலாம், ஆறுதல் கூறலாம்.

**நமது முன்னோடியான கர்த்தரின் மகிழ்ச்சி**

நமக்கு முன்னோடியான கர்த்தர் ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் ஆவார் (சங்.45:7). அவரைப் பின்பற்றும் நாமும் ஆனந்தமாக இருப்பது அவருடைய சித்தமாகும். சகோதரரே, மகிழ்ச்சி என்னும் ஆவியின் கனி உம்மில் காணப்படும்படி இனி நடந்துகொள்ள இன்றே தீர்மானிப்பீராக.

**நித்திய மகிழ்ச்சி**

ஒருநாள் வரும், நாம் பரம சீயோனுக்குள் சேருவோம். அப்பொழுது நித்திய மகிழ்ச்சி நமது தலைமேல் இருக்கும் (ஏசா.35:10; 51:11). அல்லேலூயா!

## புதிய ஏற்பாட்டிலிருந்து தொகுக்கப்பட்டவை

தம்முடைய சந்தோஷம் நம்மில் நிலைத்திருக்கவும் நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கவும் கர்த்தர் வாஞ்சையாயிருக்கிறார் (யோவா.15:11). தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது தேவனுடைய சித்தமாகும் (பிலி.4:4). ஏனெனில் தேவனுடைய அரசு புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியானாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17). எப்போதும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதைக் (பிலி.3:1) கீழே காண்போம்.

**கர்த்தர் பிறந்ததற்காக மகிழ்ச்சி**

கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தது எல்லா மனிதருக்கும் மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் நற்செய்தியாகும் (லூக்.2:10–12). ஏன்? பாவம், வியாதிகள், வேதனைகள், போராட்டங்கள் ஆகியவற்றில் சிக்கியிருக்கும் மனிதனுக்கு "விடுதலை உண்டு" என்பது நற்செய்தி அல்லவா? நரகத்தில் துடிக்க இருந்த மனிதனுக்குப் பேரானந்தமான மோட்சம் திறக்கப்படுவது எவ்வளவு பெரிய பேறு! எனவே இயேசு இந்த உலகில் மனிதனாகப் பிறந்ததற்காக நாம் மகிழ்ந்து களிகூரக்கடவோம்.

### இரட்சிப்பினிமித்தம் மகிழ்ச்சி

கர்த்தரை ஏற்றுக்கொள்வதற்குப் பலர் தயங்குகின்றனர். மற்றும் பலர் கடமைக்காக ஏற்றுக்கொள்வதைப்போன்று காணப்படுகின்றனர். ஆனால் கர்த்தரை வாஞ்சையோடு ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருடைய உள்ளமும் மிகுந்த சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அடையும். இம்மகிழ்ச்சியைச் சகேயுவிலும் (லூக்.19:6), கந்தாகே என்ற அரசியின் அமைச்சரிடத்திலும் (அப்.8:39) நாம் காண்கிறோம். கர்த்தர் என்னை இரட்சித்து, தமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டதை அனுதினமும் நித்திய காலமாக நினைவு கூர்ந்து மகிழ்வேனாக.

கர்த்தர் இருந்த வீட்டிற்குத் தங்களை வழி நடத்திய நட்சத்திரத்தைக் கண்டு சாஸ்திரிகள் மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள் அல்லவா (மத்.2:10)? நாம் கர்த்தரைக் கண்டுபிடிக்க வழி நடத்திய கர்த்தரின் பாத்திரங்களுக்காக மகிழ்ச்சியடைகிறோமா, நன்றி செலுத்துகிறோமா, தேவனைத் துதிக்கிறோமா, ஜெபிக்கிறோமா?

### கர்த்தரின் உயிர்த்தெழுதலில் மகிழ்ச்சி

உயிர்த்தெழுந்த கர்த்தரைச் சீடர்கள் கண்டபோது மகிழ்ச்சியடைந் தார்கள் (யோவா.20:20). கர்த்தரின் உயிர்த்தெழுதல் நமக்களிக்கும் நம்பிக்கைக்காக மகிழ்ச்சியடையவேண்டியது எவ்வளவு அவசியம்! கர்த்தரின் உயிர்த்தெழுதலால் மரணத்தின்மீது நமக்குக் கிடைத்த வெற்றிக்காக மகிழ்ச்சி கீதம் பாடக்கடவோம் (1 கொரி.15:53).

### கர்த்தரின் செயல்களுக்காக மகிழ்தல்

கர்த்தரால் நம் மூலமும் மற்ற தேவ மனிதர் மூலமும் செய்யப்படுகின்ற மகத்தான செயல்களுக்காகவும் (லூக்.13:17) அற்புதங்களுக்காகவும் (அப்.8:8) இரட்சிக்கும் கிருபைக்காகவும் (அப்.11:23) புதிதாகக் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படும் மக்கள் மனந்திரும்புவதற்காகவும் (அப்.13:47,48) மகிழ்ச்சியால் நிரம்புவது மட்டுமின்றி இக்காரியங்கள் நடைபெற நாம் ஒத்துழைப்போமாக. நாம் வேண்டிக்கொள்வதைப் பெறும்பொழுது மகிழ்கிறோம் (யோவா.16:24).

### ஊழியத்தில் மகிழ்ச்சி

ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் பவுல் சந்தோஷமாக விரும்பியதை 2 கொரி.12:15 இல் வாசிக்கிறோம். நான் ஆத்தும ஆதாயப் பணியில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுகிறேனா? ஆத்தும

ஆதாயப் பணிக்காக மகிழ்ச்சியுடன் பணம் செலவு செய்கிறேனா? எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுவதைக்குறித்துப் பவுலோடு சேர்ந்து மகிழ்ச்சியடைகிறேனா (பிலி.1:18)? அல்லது மற்ற ஊழியரைப் பார்த்துப் பொறாமைகொள்கிறேனா?

ஊழியத்தில் வார்க்கப்பட்டுப் போகவும் மகிழ்ச்சியோடே (பிலி.2:17,18) எதிர்பார்க்கிறேனா? நம் ஓட்டத்தை மகிழ்ச்சியுடன் முடிக்கவும் ஊழியத்தை நிறைவேற்றவும் கவனமாக இருப்போமாக (அப்.20:24). உத்தமமாக ஊழியம் செய்தால் நித்தியத்தில் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம் என்பதை நினைவு கூர்ந்து ஊழியம் செய்யக்கடவோம் (மத்.25:21,23). வசனத்தை விதைப்பவனுக்கும் அறுவடைசெய்பவனுக்கும் மகிழ்ச்சியான நித்திய வாழ்வு உண்டு (யோவா.4:36). நாம் கர்த்தருக்குள் கொண்டுவரும் ஒவ்வொரு ஆத்துமாவுக்காகவும் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது என்பதை உணர்ந்து ஆத்தும ஆதாயப்பணியை மிகுந்த மகிழ்ச்சியோடே செய்வோமாக (லூக்.15:6,7,9,10,32). அவ்வாறு செய்தால் "...உன் எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசி" என்று இயேசு நம்மைப் பார்த்துச் சொல்வார் (மத்.25:21,23).

**மகிழ்ச்சியாக இருப்பவர்கள் என்ன செய்யலாம்?**

ஒருவன் மகிழ்ச்சியாக இருந்தால் சங்கீதம் பாடக்கடவன் (யாக்.5:13). அடிக்கடி சங்கீதங்களினாலும் பாடல்களினாலும் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுவோமாக (எபே.5:19).

**கிறிஸ்துவினிமித்தம் பாடுகளை அனுபவிப்பதால் சந்தோஷம்**

பேதுருவும் யோவானும் யூதரால் அடிக்கப்பட்டு, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாது என்று கட்டளையிடப்பட்டு விடுதலையாக்கப் பட்டனர். கர்த்தரின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குத் தகுதியுடையவர்களாக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷத்தோடே போய், தினந்தோறும் தேவாலயத்திலும் வீடுகளிலும் உபதேசம்பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று அறிவித்தார்கள் (அப்.5:40–42). கர்த்தருக்காகப் பாடு அனுபவிக்கிறபோது முறுமுறுப்பதையும் கர்த்தரைக் குறைசொல்வதையும் செய்யாமல் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்வது சிறந்தது. பாடுகளுக்குப் பயந்து ஊழியத்தை நிறுத்தாமல் எப்படியாயினும் தொடர்ந்து ஆத்துமாக் களைக் கர்த்தரண்டை கொண்டுவரவேண்டும். கர்த்தருக்காகப் பாடுகளை அனுபவிக்கும்போது சந்தோஷப்பட்டுக் களிகூரவேண்டும். ஏனெனில் பரலோகத்தில் நமது பலன் மிகுதியாயிருக்கும் (மத்.5:11,12).

பவுல் பட்ட பாடுகளைப் பவுலின் பல நிருபங்களினின்றும் அப்போஸ்தலர் நடபடிகளினின்றும் அறிகிறோம். சபைகளைப் பற்றிய கவலையும் சபைகளின் நிமித்தமாகப் பாடுகளும் இருந்தன (கொலோ.1:24). ஆயினும் பவுல் சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருந்ததை 2 கொரி.7:4 இல் வாசிக்கிறோம். துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டபோதிலும் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும் பண்பு பவுலுக்கு இருந்தது (2 கொரி.6:10). பாடுகளின் மத்தியில் பாடுகளுக்காக நாம் மகிழ்ச்சியடைகிறோமா? கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாவது எவ்வளவு பெரிய மேன்மை (1 பேது. 4:13).

**சோதனைக்காக மகிழ்ச்சி**

நாம் சோதனைகளைச் சந்திப்பதால் பெற்றுக்கொள்வது ஜீவகிரீடம் அல்லவா (யாக்.1:12)! எனவே சோதனையினிமித்தம் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும் (யாக்.1:2–3).

**ஆவியானவர் மகிழ்ச்சி அளிக்கிறார்**

பரிசுத்த ஆவியானவரால் நாம் நிரம்பும்போது மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறோம் (அப்.13:52). இவ்விதம் மகிழ்ச்சியடைவதற்காக அனுதினமும் அடிக்கடி ஆவியில் நிறைந்து ஜெபிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்வோமாக. மேலும் திருவசனத்தைக் கேட்கும்போது பரிசுத்த ஆவியின் சந்தோஷத் தோடே ஏற்றுக்கொள்ளவேண்டும் (1 தெச.1:6).

**சபையைக்குறித்துச் சந்தோஷம்**

சபையார் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தும் (ரோம.16:19) மனந்திரும்புவதற்கேற்ற துக்கப்பட்டதற்காகவும் (2 கொரி.7:9) தன் உடன் ஊழியனை ஏற்றுக்கொண்டு சந்தோஷப்படுத்தியதற்காகவும் (2 கொரி.7:13) சுவிசேஷத்திற்கு உடன்பட்டு உதவி செய்ததற்காகவும் (பிலி.1:3,4; 4:10) பவுல் மகிழ்ச்சியடைந்ததை நாம் காண்கிறோம். சபை இவ்விதம் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு ஊழியர் மகிழ்ச்சியடையும் நிலை சபையாருக்கும் ஊழியருக்கும் ஏற்படும்படி (1 தெச.3:9) ஊக்கமாக ஜெபிப்போம். மேலும் சபை மக்கள் தன்னைவிடப் பலவான்களாவதைக் குறித்து மகிழ்ச்சியடையும் பக்குவத்தை நமது ஊழியர்கள் அடையும்படி (2 கொரி.13:9) ஜெபிப்போமாக.

**பிள்ளைகள் சத்தியத்திலே நடப்பதற்காகச் சந்தோஷம்**

குடும்பத்தினர் சத்தியத்தில் வாழ்கிறதைக் கண்டு சந்தோஷப்படுவதை 2 யோவா.4; 3 யோவா.4 இல் காண்கிறோம். நீங்கள் சந்தோஷப்படும்

அளவிற்கு உங்கள் குடும்பம் அமைந்துள்ளதா? அவ்வாறு அமைவதற்கு என்ன செய்யலாம்? அப்.16:31; ஏசா.54:13,17; சங்.128:1,3 ஆகியவற்றை உரிமை பாராட்டி ஜெபியுங்கள். இந்த வசனங்களை எடுத்து வாசியுங்கள்.

**பலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்ட சந்தோஷம்**

பொதுவாக யாவரும் தங்கள் செயல்கள், பெலன், செல்வம், கல்வி, குடும்பம், இனம், அழகு, பதவி போன்ற காரியங்களைக்குறித்து மேன்மை பாராட்டுவார்கள். இதன் மூலம் பெருமைகொண்டு தங்கள் பிரதாபங்களைப் பறை சாற்றுவார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ நமது பெலவீனங்களைக்குறித்து சந்தோஷத்துடன் மேன்மைபாராட்டவேண்டும் (2 கொரி.12:9). இதன் மூலம் நம்மை நாம் தாழ்த்துவதோடு, நம்மை ஏற்றுக்கொண்ட, நமது பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கிற, நமது பலவீனங்களில் தனது பலத்தைப் பூரணமாக விளங்கச் செய்கிற கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம். மேலும் இவ்வித மேன்மைபாராட்டுதல் நம்மைப் போன்ற பலவீனரைக் கர்த்தரிடம் சேருவதற்கும் அவரை முற்றிலும் சார்ந்து கொள்வதற்கும் அவர்மீது நம்பிக்கைகொண்டு உற்சாகப்படுவதற்கும் ஏவுகின்றது. இன்றிலிருந்து உமது பலவீனங்களுக்காக மகிழ்ந்து மேன்மை பாராட்டுவீரா?

**எதற்காகச் சந்தோஷப்பட வேண்டும்?**

நம்முடைய பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதற்காகச் (லூக்.10:19,20) சந்தோஷப்படவேண்டும்; சத்தியத்தில் சந்தோஷப்பட வேண்டும் (1 கொரி.13:6). இவற்றின் பொருள் என்ன என்று சிந்தியுங்கள். சதித்திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றின் முன்னேற்றத்திலும் ஆவிக்குரிய காரியங்களை வேடிக்கை பார்ப்பதிலும் சந்தோஷமடைய முயற்சிப்பவர்கள் மனந்திரும்பாவிடில் அவற்றின் பலனை அனுபவிப்பார்கள் (லூக்.22:5; 23:8). இந்த மகிழ்ச்சி தவறானது.

**நம்பிக்கையில் மகிழ்ச்சி**

நமக்கு ஒரு நம்பிக்கையுண்டு. "ஒரு நாள் கர்த்தர் வருவார், நம்மை அவரோடே சேர்த்துக்கொள்வார்" என்ற நம்பிக்கைக்காக எப்பொழுதும் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாமே (ரோம.12:12). ஆட்டுக்குட்டியானவரின் திருமணவிருந்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு கலந்துகொள்ளப்போகிறோம் அல்லவா (வெளி.19:7)? இதைக்குறித்து அடிக்கடி நினைத்து மகிழ்ச்சி யடையலாம். அனுதினமும் கர்த்தர் நம்மை நடத்துகிறார் என்பதற்காகவும் எப்பொழுதும் நம்முடனிருக்கிறார் என்பதற்காகவும் எப்பொழுதும்

மகிழ்ச்சியோடிருக்கலாமே.

**யாரோடு மகிழ்ச்சியடைய வேண்டும்?**

சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படவேண்டும் (ரோம.12:15). கர்த்தருடைய பிள்ளைகளில் யார் மகிமைப்பட்டாலும் அதற்காகப் பொறாமை கொள்ளாமல் சந்தோஷப்படுவதற்குக் கவனமாக இருப்போமாக (1 கொரி.12:26). பிறர் மகிழ்ச்சியடைவதால் மகிழ்ச்சியடையும் மகிழ்ச்சியே மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சியாகும் **(The joy of joy is the joy that joys in the joy of others).**

**மகிழ்ச்சியின் விளைவு**

உபத்திரவத்தின் மத்தியிலும் தேவனுக்கென்று தாராளமாகக் கொடுப்பது சந்தோஷத்தின் விளைவாகும் (2 கொரி.8:2). ஊழியத்திற்கென்று சந்தோஷமாகக் கொடுக்கிறீரா? கொடுப்பதினால் உண்டாகும் மகிழ்ச்சி உடையவர்களாக எப்பொழுதும் காணப்படுவோமாக.

**கர்த்தரின் மகிழ்ச்சி**

நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தால் இறுதியில் கர்த்தர் மகிழ்ச்சியோடு நம்மை ஏற்றுக்கொள்வார் (யூதா 24,25). நித்திய மகிழ்ச்சியில் வாழும் பாக்கியத்தை எண்ணி மகிழ்வோமாக. ஏசா.35:1–10 ஐத் தியானித்து மகிழுங்கள்.

**செயல்படுவதற்காகச் சில குறிப்புகள்**

“சந்தோஷம் பொங்குதே” என்ற பாடலை உணர்ந்து பாடுங்கள். பாடுகளுக்காகவும் சந்தோஷப்படப் பழகுங்கள். சோதனைகளுக்காகவும் சந்தோஷப்படுங்கள். உங்கள் குடும்பம் சத்தியத்திலே நடப்பதற்கு வேண்டியவற்றைச் செய்யுங்கள். பலவீனங்களைக்குறித்துச் சந்தோஷமாக மேன்மைபாராட்டுங்கள். நம்பிக்கையில் மகிழ்ச்சியாயிருங்கள். சந்தோஷமாக ஊழியத்தைத் தாங்குங்கள். இப்புத்தகத்திற்காகவும் சந்தோஷப்பட்டுத் தேவனைத் துதியுங்கள்.

அநியாயத்தில் சந்தோஷப்படாதேயுங்கள். உங்களை விரோதிக்கிறவர்களுக்குத் துன்பம் வருவதைக் கண்டு சந்தோஷப்படக்கூடாது.

**தியானிக்க : பழைய ஏற்பாட்டிலுள்ள வசனங்கள்**

யாத்.18:8–12, 34:5–7; 1 சாமு.2:1; 18:6; 1 இராஜா.1:40; 8:66; 1 நாளா. 15:25; 29:9,17; 2 நாளா.15:15; 30:25,26; எஸ்றா 6:16; நெகே.8:10; சங்.2:11;

5:11; 9:2; 16:8,9,11; 27:6; 31:7; 32:11; 33:1; 34:2; 35:9,27; 40:16; 42:4; 45:7; 48:11; 51:12; 68:3; 70:4; 85:6; 89:16; 92:4; 97:1; 100:2; 104:34; 107:21,22; 118:24; 119:14,70,74,92,162,174; 122:1; 126:5,6; 137:5,6; 138:8; 149:2,5; நீதி.21:15; 23:24,25; 24:17; ஏசா.35:1,2,10; எரே.15:16; யோவேல் 2:23; யோனா 4:6; ஆபகூக் 3:17–19.

**புதிய எற்பாட்டிலுள்ள வசனங்கள்**

மத்.2:10; 5:11,12; 25:21,23; லூக்.2:10; 10:19,20; 13:17; 15:6,7,9,10,32; 19:6; 22:5; 23:8; யோவா.4:36; 15:11; 16:24; 20:20; அப்.5:40–42; 8:8,39; 11:23; 13:47,48,52; 16:31; 20:24; ரோம.12:12,15; 14:17; 16:19; 1 கொரி.12:26; 13:6; 2 கொரி.6:10; 7:4,9,13; 8:2; 12:9,15; 13:9; எபே.5:19; பிலி.1:4,18; 2:17,18; 3:1; 4:4,10; கொலோ.1:24; 1 தெச.1:6; 3:9; யாக்.1:2,3; 5:13; 1 பேது.4:13; 2 யோவான் 4; 3 யோவான் 4; வெளி.19:7.

**குறிப்பு:**

மகிழ்ச்சியைக் குறித்து வேதத்தில் உள்ள வசனங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்து வாரியாகப் பிரித்து எழுதி, பின்னர் கருத்துகளைக் கற்று, அதின் வாயிலாக இந்த அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. வேதத்திலுள்ள ஒரு கருத்தைத் தியானிப்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இந்த வசனங்களைக்கொண்டு நீங்களாக இந்தக் கருத்தை ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதிப்பாருங்கள்.

**ஜெபிக்க**

(i) மகிழ்ச்சிக்காகச் சிற்றின்பங்களையும் போதை மருந்துகளையும் குடியையும் நாடும் மக்கள் அவற்றை விட்டுவிட்டு, கிறிஸ்துவில் பேரின்பத்தைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போமாக.

(ii) பணம் சேர்ப்பதிலேயே மகிழ்ச்சியிருப்பதாக எண்ணி, பணத்துக்காக வாழ்கின்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

(iii) பதவி, புகழ் போன்றவற்றில் மகிழ்ச்சியைத் தேடி அலையும் மக்களுக்காக ஜெபியுங்கள்.

(iv) கர்த்தருடைய வருகை சீக்கிரம் இருக்கும்படியாக ஜெபியுங்கள்.

## அதிகாரம் 27

# ஆவியின் கனி - சமாதானம்

**சமாதானம்**

மனம் நொறுங்குண்டு பாவ மன்னிப்பிற்காகக் கெஞ்சும்போதுள்ள சந்தேகங்களும் பயங்களும் கலக்கங்களும் நீங்கி, மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட நிச்சயத்தை அடையும்போது உண்டாகும் சலனமற்ற, உள்ள அமைதியை ஆத்தும சமாதானம் எனலாம். இதைப்பெற்றுக் கொண்டவர்கள் குழப்பங்கள், தொல்லைகள், பாடுகள், சோதனைகள், போராட்டங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் சலனமற்ற, பதற்றமற்ற, அமைதியான, இளைப்பாறும் மனநிலையோடு இருப்பதை ஆவியின் கனி வெளிப்படுவதாகக் கருதலாம்.

**சமாதானத்தின் தேவன்**

நம்முடைய தேவன் சமாதானத்தின் தேவன் (ரோம.15:33). அவர் அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் (2 கொரி.13:11). அவர் நம்மோடு இருப்பது மட்டுமல்ல சமாதானத்தைக் குலைக்கிற சாத்தானை சீக்கிரமாய் நமது காலின் கீழ் நசுக்கிப்போடுகிறவர் (ரோம.16:20). தேவனுடைய சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமல் இருக்கும் (ஏசா.54:10).

**சமாதான கர்த்தர்**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் சமாதான கர்த்தராகவும் (ஆதி.49:10), சமாதான பிரபுவாகவும் இருக்கிறார் (ஏசா.9:6). சமாதான காரணராகத் திகழவும் செய்கிறார் (எபே.2:14). நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது (ஏசா.53:5). தன்னுடைய சமாதானத்தைக் கர்த்தர் நமக்கு வைத்துப்போயிருக்கிறார் (யோவா.14:27).

**நமக்குச் சமாதானம்**

நாம் பாவிகளாக இருக்கையில் சமாதானமின்றி வாழ்ந்துவந்தோம் (ஏசா.48:22). நமது பாவங்களுக்கேற்ற ஆக்கினைத் தீர்ப்பை அடைந்த பின்னர்தான் நமக்குச் சமாதானம் உண்டாகவேண்டும். ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினையைத் தம்மீது ஏற்றுக்கொண்டார் (ஏசா.53:5). அவர் சிலுவையிலே சிந்திய இரத்தத்தினாலே பிதாவிடம் நமக்குச் சமாதானம் உண்டாகியிருக்கிறது (கொலோ.1:20; ரோம.5:1). அன்றைக்குத் தன் சீடரைப்பார்த்து "உங்களுக்குச் சமாதானம்", என்று கூறிய கர்த்தர் இன்று நம்மைப் பார்த்து "உங்களுக்குச் சமாதானம்", என்று கூறுகிறார் (யோவா. 20:19,21). கர்த்தர் தந்திருக்கும் சமாதானத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துவோமாக. "நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை", என்கிற சத்தியம் (யோவா.3:18) நமக்கு மிகுந்த சமாதானத்தை அளிக்கிறது அல்லவா?

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

இவ்விதமாக ஆத்தும சமாதானத்தைப் பெற்றுக்கொண்ட நாம் கர்த்தருடைய பிள்ளைகளாயிருக்கும் ஒவ்வொருவரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் (மாற்.9:50; 2 கொரி.13:11; 1 தெச.5:13). சில வேளைகளில் சகோதரர் என்னப்பட்டவரால் சில இழப்புகள் ஏற்பட்டாலும் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளவும் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளவும் வேண்டும் (1 கொரி.6:7). கூடுமானால் எல்லா மனிதரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் (ரோம.12:18). இவ்விதமாக நம் இருதயத்தில் உள்ள சமாதானம் மற்றவர்களுக்கும் சமாதானம் தருவதாக அமைய வேண்டும்.

ஆத்தும சமாதானமின்றி வாழ்கிறவர்களை நிலையான சமாதானம் அளிக்கும் சமாதான பிரபுவாகிய இயேசுவண்டை வழிநடத்தி அவர்களும் ஆத்தும சமாதானம் பெற வழிவகுப்பதும், சண்டையிட்டுக்கொள்ளும் மக்களுக்கிடையில் சமாதானம் செய்து வைக்கும் பணியாற்றுவதும் நமது கடமைகளாகும் (நீதி.12:20; மத்.5:9).

**சமாதான வாழ்த்துதல் கூறுதல்**

ஒரு வீட்டிற்குள் பிரவேசிக்கும்போது நாம் அவ்வீட்டாரைச் சமாதானத்தைக் கூறி வாழ்த்தவேண்டும் (லூக்.10:5,6). எங்கும் சமாதானத்தைக் கூறவேண்டும் (ஏசா.52:7). நாம் கடிதங்கள் எழுதும்போது, அப்போஸ்தலர்கள் தங்கள் கடிதங்களில் எழுதுவது போன்று "...கிருபையும்

சமாதானமும் உண்டாவதாக" என்று வாழ்த்தி எழுதும் பழக்கத்தைக் கைக்கொள்வது சிறந்தது (ரோம.1:3; 1 கொரி.1:3; 2 கொரி.1:2; 1 பேது.1:2).

**சமாதானத்தோடு வாழ்வதற்கான இரகசியம் என்ன?**

மெய்யான சமாதானத்தோடு வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியவை.

(1) வேதத்தை நேசிக்கவேண்டும் (சங்.119:165).

(2) கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் (ஏசா.48:18).

(3) நன்மை செய்கிறவர்களாகவும் ஆவியின் சிந்தையுடைவர்களாகவும் வாழவேண்டும் (ரோம.2:10; 8:6).

**எச்சரிக்கை**

துன்மார்க்கனுக்குச் சமாதானமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.48:22; 57:21).

(1) உம் வாழ்க்கையை ஆராய்ந்து பாரும்.

(2) உம் வாழ்க்கையில் சமாதானமுண்டா? மற்றவர்களுக்கு ஆத்தும சமாதானம் உண்டாவதற்கான பணியில் ஈடுபடுகிறீரா?

(3) கர்த்தருடைய பிள்ளைகளோடும் மற்றவர்களோடும் சமாதானமாக வாழ்கிறீரா? யாருடனோடும் சண்டையிட்டிருந்தால் இன்றே சமாதானம் செய்துகொள்வீராக.

(4) கர்த்தரையும் பிறரையும் நேசித்தால் கர்த்தரோடும் பிறரோடும் சமாதானமாக இருக்கலாம்.

(5) யாருக்காவது மன்னிக்காமல் இருந்தால் இன்றே மன்னிப்பீராக.

**ஜெபிக்க**

கிறிஸ்தவர்களின் மத்தியில் சமாதானம் நிலவ ஜெபிக்கலாம். கிறிஸ்து தரும் ஆத்தும சமாதானத்தை உலகெங்குமுள்ள மக்கள் பெற்றுக் கொள்ளும்படி ஜெபிக்கலாம். சமாதான கர்த்தர் நமக்குத் தந்திருக்கும் சமாதானத்திற்காக அவரைத் துதிப்போம்.

**தியானிக்க :** யோவா.14:27; 1 கொரி.6:1–11.

## அதிகாரம் 28

# ஆவியின் கனி - நீடிய பொறுமை

### நீடிய பொறுமை என்றால் என்ன

மற்றவர்கள் நமக்கு எரிச்சலூட்டுவதையும் நம்மைத் துன்புறுத்துவதையும் அவர்களின் குறைகளையும் பொறுமையோடு நீண்டகாலம் சகித்தல் என்று இதைக் குறிப்பிடலாம்.

### தேவன் நீடிய பொறுமையுள்ளவர்

தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இல்லாதிருந்தால் நாம் பாவம் செய்தபோது நம்மை அழித்திருப்பார். ஆனால், நாம் மனந்திரும்புவதற்கு அநேக வாய்ப்புகளைத் தந்துகொண்டிருக்கிறார். ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேது.3:9). மேலும் தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயம் செய்து அவர்கள் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார் (லூக்.18:7). யாத்.34:6,7; எண்.14:17; சங்.86:15; ரோம.2:4; 1 பேது.3:20; 2 பேது.3:9,15 ஆகிய வசனங்கள் தேவன் நீடிய பொறுமையுள்ளவர் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீடிய பொறுமையை நாம் அறிந்திருக்கிறோம். தம்மால் உருவாக்கப்பட்ட மனிதன் தம்மை அவமதித்து, பாடுபடுத்தி, சிலுவையில் அறைந்தபோதும் அவர் நீடிய பொறுமையோடு சகித்தார் (1 பேது.2:22,23; எபி.12:2).

### நீடிய பொறுமையோடு சகித்த பரிசுத்தவான்கள்

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் யோபு நீடிய பொறுமையைத் தன் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். தன்னுடைய பொருள்கள் யாவும் அழிந்து போன போதிலும், தன் பிள்ளைகள் யாவரும் சடுதியில் மரணமடைந்த

போதிலும், தன் உடல் முழுவதும் வியாதியால் வேதனைப்படுத்தப்பட்ட போதிலும் தேவனைக் குறைகூறாமல் முறுமுறுக்காமல் பொறுமையோடு சகித்ததை (யாக்.5:11) நாம் அறிவோம். தான் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டபோதிலும், அரசராக இருந்த சவுலின் கொடுமைகளைப் பொறுமையுடன் சகித்ததுமின்றி சவுலைக் கொல்வதற்குத் தனக்குக் கிடைத்த இரு வாய்ப்புகளையும் வெறுத்துத் தள்ளிப் பரதேசியாக வாழ்ந்த தாவீது பொறுமையோடு காத்திருப்பதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு. கர்த்தருடைய நாமத்தில் பேசின தீர்க்கதரிசிகள் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றார்கள் (யாக்.5:10).

**நமக்கு நீடிய பொறுமை இருக்க வேண்டும்**

நாம் கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருக்கவேண்டும் என்று வேதம் கூறுகிறது (யாக்.5:7). நம்முடைய செயல்களின் (ஊழியங்களின்) பலன் காணப்படுவதற்கும், சகோதரர் செய்யும் தீமைகளுக்கும் நீடிய பொறுமையோடிருக்கவேண்டும் (யாக்.5:7–11). தேவன்மேல் பற்றுதலா யிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் நாம் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையோடு சகிப்பது தேவனுக்கு விருப்பமான தொன்றாகும் (1 பேது.2:19–23).

**எப்பொழுது நாம் பொறுமையை இழக்கிறோம்**

தேவனைப் பார்க்காமல் சூழ்நிலைகளைப் பார்க்கும்போதும் (சங்.106: 32,33; எண்.20:3–11), தேவனை முழுமையாக நம்பாமல் மாமிசத்திற்கு இடங்கொடுக்கும்போதும் (ஆதி.16:2–4), கோபத்திற்கு இடங்கொடுக்கும் போதும் பொறுமையை இழக்கிறோம் (பிர.7:8,9). பெருமையுள்ள வனாயிருத்தல் பொறுமையற்றவனாக்கும் (பிர.7:8).

**பொறுமையின்மையின் விளைவுகள்**

பொறுமையை இழப்பதால் பகையும், பிரிவினைகளும், சண்டைகளும், கொலைகளும் அவற்றின் விளைவுகளும் ஏற்படுகின்றன. குடும்பங்களில் பிரிவினைகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் பொறுமையின்மையே.

**நீடிய பொறுமையினால் வரும் ஆசீர்வாதங்கள்**

பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம் (நீதி.25:15). நமது ஆத்துமாக் களைக் காத்துக்கொள்ளலாம் (லூக்.21:19). பலன் கொடுக்கிற வாழ்க்கை நடத்துவதற்கு உதவுகிறது (லூக்.8:15). ஒன்றிலும் குறையுள்ளவர்

களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது நம்மில் பூரண கிரியை செய்யும் (யாக்.1:4). ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள உதவுகிறது (எபே.4:1–3).

நீடிய பொறுமையைத் தரித்துக்கொள்ளும்படி நாம் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம். நம்முடைய தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பதுபோல நாமும் இருப்போம். இந்த உன்னதமான நற்பண்பை நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலும் (கியூ வரிசையில் நிற்கும்போது, ஆகாரம் அருந்தும்போது, கடைகளில் பொருட்கள் வாங்கும்போது, பிறர் நம்மை ஏளனம்பண்ணிக் குறைகூறும்போது, போன்ற எல்லாச் சூழ்நிலைகளிலும்) வெளிப்படுத்துவோமாக.

# அதிகாரம் 29

# ஆவியின் கனி - தயவு

**தயவு என்றால் என்ன?**

இது ஆங்கிலத்தில் **kindness, gentleness** என்று கூறப்பட்டுள்ளது. பெருந்தன்மை, மென்மை, இன்சொல்லுடைமை, இரக்கம் பாராட்டுதல் என்று இதற்குப் பல விளக்கங்கள் உண்டு.

**சில எடுத்துக்காட்டுகள்**

தன்னைப் பகைத்துத் துன்புறுத்திய தன் சகோதரர் தன்னுடைய ஆளுகையின் கீழ் வந்தபோது யோசேப்பு தன் சகோதரரிடத்தில் தயவாயும் பெருந்தன்மையுள்ளவராகவும் நடந்துகொண்டார். இதை ஆதியாகமம் 50:15–21 இல் வாசிக்கிறோம்.

தாவீது சவுலின் வீட்டாருக்குத் தயை செய்தார். யோனத்தானின் மகன் மேவிபோசேத்திற்குச் சவுலின் நிலங்களைத் திரும்பக் கொடுத்து ஒரு இளவரசன் போன்று அனுதினமும் தன்னுடைய பந்தியில் விருந்துண்ணும் வாய்ப்பைக் கொடுத்தார் (2 சாமு.9:1–13).

ரோமப் போர்ச்சேவகரும் கைதிகளும் பிறரும் கப்பற்சேதமுற்று மெலித்தா தீவில் சேர்ந்தபோது அந்நியராகிய அந்தத் தீவின் மக்கள் அவர்கள்மேல் பாராட்டிய அன்பும் காண்பித்த தயவும் கொஞ்சமல்ல. தேவன் அந்தத் தீவின் மக்களுக்கு அநேக ஆசீர்வாதங்களைப் பவுல் மூலமாகக் கொடுத்தார் (அப்.28:1,2,7–9).

**தயவுள்ளவர்களாயிருக்க என்ன செய்யலாம்?**

நம்முடைய குறைகளைக் கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு மன்னித்தது போல நாமும் மற்றவர்களுடைய குறைகளை மிகைப்படுத்தாமல் அவற்றை மன்னிப்போம் (மத்.18:21–35; கொலோ.3:12,13). மற்றவர்களிடம் கடுமையான

சொற்களைப் பயன்படுத்தாமல் (நீதி.31:26; எபே.6:9) எப்போதும் இனிமையான சொற்களைப் பேசுவோமாக (நீதி.25:15; ஆதி.49:21).

குரூரமாயிராமல் மென்மையாயிருப்போம் (புல.4:3). நல்ல சமாரியனைப் போல் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுவோமாக (மத்.5:7; லூக்.10:29–37).

**சிந்திக்க**

நாம் இப்படி இருக்கிறோமா என்று அடிக்கடி நம் வாழ்க்கையைச் சீர்தூக்கிப்பார்த்து நம்மைச் சரி செய்துகொள்வோமாக.

## அதிகாரம் 30

# ஆவியின் கனி - நற்குணம்

**நற்குணம் (Goodness) :** தீங்காகத் தோன்றுகின்ற யாவற்றையும் விட்டு விலகுவதற்கான வாஞ்சைமட்டுமின்றி, நம்மால் இயன்ற அளவு மற்றவர்களின் சரீர, ஆத்தும தேவைகளுக்கேற்ப உதவி செய்வதும் நற்குணம் ஆகும். நன்னடத்தையும் நன்மை செய்தலும் இதில் அடங்கும்.

நற்குணம் மறைந்திருக்காது, யாவருக்கும் தெரியவரும் என்பது மட்டுமல்ல, நற்குணத்தை உடையவர்களுக்கும் தேவனுக்கும் அது புகழ்ச்சியைக் கொண்டுவரும்.

**நற்குணத்திற்கு எடுத்துக்காட்டு**

நற்குணத்திற்கு எடுத்துக்காட்டாக ரூத்தின் பண்புகளைக் காண்போம்.

மாமியாரைக்குறித்துக் கவலைப்படாமல் தன் இனத்தாரிடம் சென்று மறுமணம் புரிந்து வசதியாக வாழ ரூத் விரும்பவில்லை. வேதனையின் மத்தியிலும் தன் மாமியாரை நேசித்து மாமியாரின் வாழ்நாள் முழுவதும் ஆதரவளிக்கத் தீர்மானிக்கும் நற்குணம் ரூத்திற்கு இருந்தது (ரூத்.1:15–18; 2:11).

சோம்பலாயிருந்து நகோமிக்குப் பாரமாக இருக்காமல் சுறுசுறுப்பாக வேலை செய்து தனக்கு மட்டுமின்றி தன் மாமியாருக்கும் ஆகாரம் தேடினார் (ரூத் 2:2). தான் வயலில் சாப்பிட்டபோது சிறிது எடுத்து வைத்திருந்து அதைக் கொண்டுவந்து கொடுத்ததின் மூலம் தன் மாமியாரின் தேவைகளைக்குறித்துக் கவனமாயிருந்ததைக் காண்கிறோம் (ரூத்.2:14,18).

தனக்குத் துணையைத் தானே தேடிக்கொள்ளாமல் தேவனுடைய வழியின் பிரகாரம் செல்வதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார் (ரூத் 3:10). ரூத்தின் நற்குணம் பிரபுவாகிய போவாசின் மனைவி என்ற பதவியை அளித்தது. நற்குணமுள்ளவள், குணசாலி என்று ரூத்தின் பெயர் ஊரெல்லாம் பரவியது (ரூத்.3:10,11). மேலும் தாவீது அரசனையும்

கர்த்தராகிய இயேசுவையும் தன் வாரிசாகப் பெறும் பாக்கியம் கிடைத்தது. இன்றுவரையிலும், இனி எப்பொழுதும் அழிக்க முடியாத நற்பெயரை ரூத் பெற்றுக்கொண்டார்.

**நற்குணத்தை வெளிப்படுத்துதல்**

நமது நண்பர்களை மட்டுமின்றி, நம்முடைய சத்துருக்களையும் சிநேகித்து, சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து, ஜெபித்து, நம்முடைய நற்குணத்தை வெளிப்படுத்தலாம் (மத்.5:38–48).

பசி, தாகம், வியாதி போன்ற தேவையிலிருக்கும் மக்களுக்கு ஆகாரம் அளித்தல், தாகம் தீர்த்தல், விசாரித்தல், ஜெபித்தல் போன்ற காரியங்களைச் செய்து நமது நற்குணத்தை வெளிப்படுத்தலாம் (நீதி.25:21; ரோம.12:20; யாத்.23:4–6).

வேதத்தை நன்கு தியானித்துச் செயல்படும்போது நாம் எந்த நற்செயலையும் செய்யத் தகுதியுள்ளவர்களாகிறோம் (2 தீமோ.3:16,17).

நாம் சகல நற்குணத்தாலும் நிரப்பப்பட்டிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (ரோம.15:14). நம்மிடத்தில் நற்குணங்களைக் காணும்போது தேவனை மற்றவர்கள் மகிமைப்படுத்துவார்கள் (மத்.5:16). அவ்வாறு நாம் வாழவில்லையெனில் தேவனுடைய நாமம் நம் மூலம் பழிக்கப்படும் (ரோம.2:24).

**சிந்திக்க :**

என்னில் நற்குணம் உண்டா?

என் வாழ்க்கையைக் காண்கிறவர்கள் என்னுடைய நற்குணத்தைக் கூறும் அளவிற்கு நான் வாழ்கிறேனா?

என் வாழ்க்கையால் தேவனுடைய திருப்பெயர் மகிமைப்படுத்தப்படுகிறதா (மத்.5:16)?

## அதிகாரம் 31

# ஆவியின் கனி - விசுவாசம்

**ஆவியின் கனியாகிய விசுவாசம்**

அனுதின வாழ்வின் தேவைகளுக்காக, வழிநடத்துதலுக்காக நாம் தேவனைச் சார்ந்திருப்பதை வெளிப்படுத்தும்போது நமது விசுவாசம் கனியாக வெளிப்படுகிறது. நமது வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனையிலும் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துவோமாக. நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் (1 யோவா.5:4).

'என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்கு
என்ன குறைவுண்டு நீ சொல் மனமே!'

என்று விசுவாசத்துடன் பாடி மகிழ்வோமாக.

நான் உன்னை விட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று கிறிஸ்து கூறியிருப்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருந்தால் (எபி.13:5), நாம் விசுவாசத்துடனிருப்போம். சகலமும் நமது நன்மைக் கேதுவாக நடக்கிறது (ரோம.8:28) என்ற வாக்குறுதியை நம்பி வாழ்வோமாக.

விசுவாசம் (Faith) என்ற சொல் உண்மையாயிருத்தல் **Faithfulness** என்ற பொருள் கொண்டதாகவும் அமைகிறது. நாம் மற்றவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள், நம்முடைய கடமைகள், நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்புகள், நம்மை நம்பி நம்மோடு பகிர்ந்து கொள்ளப்பட்ட இரகசியங்கள், பணக்கணக்குகள் ஆகிய எல்லாவற்றிலும் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

**உண்மையாயிருக்க வேண்டிய பகுதிகள்**

| | |
|---|---|
| நமது சொற்களில் | (சக.8:16; மத்.5:37) |
| நமது அந்தரங்க வாழ்க்கையில் | (மத்.6:6,18) |

| | |
|---|---|
| சிறிய காரியங்களிலும் | (லூக்.16:10,11) |
| தேவனுடைய வீட்டில் | (எபி.3:2,5,6) |
| மற்றவர்களின் காரியங்களில் | (லூக்.16:11) |
| தேவனுடைய ஊழியத்தில் | (கொலோ.4:7; 2 தீமோ.2:2) |
| தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதில் | (எரே.23:28) |
| நாம் பெற்றிருக்கிற தாலந்துகளைப் பயன்படுத்துவதில் | (மத்.25:21,23,26–30) |
| நம்முடைய குடும்பத்தில் | (மல்.2:14,16) |
| நம்முடைய பொறுப்புகளில் | (லூக்.12:42–48) |
| நமது உலகப்பிரகாரமான வேலைகளில் | (நீதி.22:29) |
| ஆவியில் | (நீதி.11:13) |

உண்மையுள்ளவர்களாயிருக்க வேதம் நம்மை ஏவுகிறது.

**உண்மையுள்ளவர்களாயிருக்க அழைப்பு**

தேவன் உண்மையுள்ளவர் (1 கொரி.10:13; 1 தெச.5:24; 2 தெச.3:3; எபி.10:23; 1 யோவா.1:9;). அவருடைய பிள்ளைகளாகிய நாமும் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நமக்கு முன்னோடியாக மோசேயும் (எபி.3:5) தாவீதும் (1 சாமு.22:14) தானியேலும் (தானி.6:4) தீகிக்குவும் (கொலோ.4:7). சில்வானும் (1 பேது.5:12) கிறிஸ்துவும் (எபி.3:6) உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். நாமும் உண்மையுள்ளவர்களாக வாழ்வோமாக.

**உண்மையுள்ளவர்களுக்கு ஆசீர்வாதங்கள்**

உண்மையுள்ளவனைக் கர்த்தர் காக்கிறார் (சங்.31:23). உண்மையுள்ள மனிதன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி.28:20).

## அதிகாரம் 32

# ஆவியின் கனி - சாந்தம்

**சாந்தம் என்பது எதைக் குறிக்கிறது?**

ஆங்கிலத்தில் **Meekness** என்று குறிப்பிடப்படும் இச்சொல் அடக்கம், பணிவு, அமரிக்கை, எதிர்ப்பற்ற தன்மை என்ற பண்பை விளக்குகிறது. கோபத்திற்கு எதிரான குணம் இது. சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் சகோதரிகள் என்று குறிப்பிடலாம். சாந்தகுணம் நம் வாழ்க்கையில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுதல்வேண்டும். சாந்தகுணமின்றி இருப்பதற்குப் பெருமையும் 'நான்' என்கிற ஆணவமும் காரணங்களாக அமைகின்றன. நாம் சாந்த குணத்தைக் கற்றுக்கொள்வதற்கு மிகவும் சிறந்த நபர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே (மத்.21:4). 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்... என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்', என்று அவர் கூறியிருக்கிறார் (மத்.11:29).

**எக்காரியங்களில் நாம் சாந்த குணத்தோடு செயல்படவேண்டும்?**

1) ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு (எபே.4:2,3)
2) தேவ வசனத்தை ஏற்றுக்கொள்ளும்போது (யாக்.1:20,21)
3) நம்முடைய நடக்கைகளிலும் செயல்களிலும் (யாக்.3:13)
4) நம்முடைய நம்பிக்கையைக்குறித்துக் கேட்பவர்களிடத்தில் பதில் கூறும்போது (1 பேது.3:15)
5) திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களிடத்தில் அவர்களின் மனைவிகள் (1 பேது.3:1–4)
6) குற்றத்தில் அகப்பட்ட சகோதரர்களைச் சீர்பொருந்தப் பண்ணும்போது (கலா.6:1)

7) பிசாசின் பிடியில் அகப்பட்டவர்களுக்கு உபதேசிக்கும்போது (2 தீமோ.2:26) சாந்தத்துடன் செயல்படவேண்டும்.

**சாந்த குணமுள்ளவர்கள் அடையும் ஆசீர்வாதங்கள்**

சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள் (சங்.22:26). பூமியைச் சுதந்தரித்து மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் (சங்.37:11; மத்.5:5). தேவன் அவர்களை உயர்த்துகிறார் (சங்.147:6), இரட்சிப்பினால் அலங்கரிப்பார் (சங்.149:4), தமது நியாயத்திலே நடத்தி தமது வழியை அவர்களுக்குப் போதிப்பார் (சங்.25:9). நம்முடைய வாழ்க்கையில் சாந்தம் காணப்பட்டு அதனால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக. இதற்காக நாம் சாந்தகுணத்தை நாடவேண்டும் (1 தீமோ.6:11). நம்முடைய சாந்தகுணம் எல்லோருக்கும் தெரிந்திருப்பதாக (பிலி.4:5).

# அதிகாரம் 33

# ஆவியின் கனி - இச்சையடக்கம்

**இச்சையடக்கம்**

இச்சொல் ஆங்கிலத்தில் **Temperance** என்பதாகும். உண்ணுதல், உறங்குதல், வேடிக்கை பார்த்தல் போன்றவற்றிலும் அளவோடு ஈடுபடுதலை இது குறிக்கிறது.

விளையாட்டுப் பந்தயத்தில் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாக இருப்பார்கள். அழிவுள்ள கிரீடத்தை(வெற்றியை)ப் பெறுகின்ற அவர்களே இச்சையடக்கமாக இருக்கும்போது அழிவில்லாத கிரீடத்தைப் பெறப்போகிற நாம் எவ்வளவு இச்சையடக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும் (1 கொரி.9:24,25)!

கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவை பிதாவினால் உண்டானவையல்ல; உலகத்தால் உண்டானவை (1 யோவா.2:16). இவற்றிற்கெதிராக வெற்றியுடன் வாழவேண்டும். ஏசா மாம்ச இச்சைக்கு இடம் கொடுத்து ஒருவேளை ஆகாரத்திற்காக (பயிற்றங் கூழுக்காக)த் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டார். அவரைச் சீர்கெட்டவன் என்றும் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள ஆகாதவன் என்று தள்ளப்பட்டவன் என்றும் வேதம் குறிப்பிடுகின்றது (எபி.12:16,17). நமது மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைவோமாக (கலா.5:24).

இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருப்பவர்களைத் தேவன் தொடர்ந்து பயன்படுத்தமாட்டார். பவுல் அப்போஸ்தலனும் தான் ஆகாதவன் என்று போகாதபடிக்குத் தன் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவதைக் கவனியுங்கள் (1 கொரி.9:27). நாம் எவ்வளவு விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதை இது காட்டுகிறது.

மாம்ச சிந்தை மரணம் என்றும், மாம்சத்திற்கு உட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாக இருக்கமாட்டார்கள் என்றும், மாம்சத்தின்படி பிழைக்க நாம் மாம்சத்திற்குக் கடனாளிகள் அல்ல என்றும் வேதம் கூறுகிறது (ரோம.8:6,8,12). தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருந்தால் நாம் மாம்சத்திற்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்போம். நாம் எப்பொழுதும் ஆவியில் நிறைந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நாம் பெற்றுக்கொண்ட கிருபைகளை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தி, ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போது மாம்ச இச்சைகளை நிறைவேற்றாமல் இருப்போம்.

பணத்திலும், பொருட்களிலும், ஆகாரத்திலும், இன்னும் உலகப் பிரகாரமான எல்லாக் காரியங்களிலும் இச்சையடக்கம் என்ற ஆவியின் கனியை வெளிப்படுத்துவோமாக. பிறனுடைய யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்கிற தேவனுடைய கற்பனையை (10 கற்பனைகளில் கடைசிக் கற்பனை) நாம் முழுமையாகப் பின்பற்றுவோம்.

அந்தந்த மரம் அதினதின் கனியினால் அறியப்படும் என்று கர்த்தர் கூறினார் (மத்.7:16–20). ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற நாம் கனியை வெளிப்படுத்தவேண்டும். இல்லையேல் தேவனுடைய நாமத்திற்கு அவகீர்த்தி ஏற்படுவதற்கும் மற்றவர்கள் இடறிப்போவதற்கும் நாம் காரணமாக அமைவோம்.

**செயல்பட**

ஆவியின் கனியைப் பற்றிப் படித்திருக்கிற நாம் நம் வாழ்க்கையில் ஆவியின் கனி காணப்படும்படி நடந்துகொள்வோமாக.

மீண்டும் மீண்டும் இந்நூலை வாசிப்பதினால் பலனடைவீர்கள், கனி கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

நாம் ஒவ்வொருவரும் ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று, ஆவியின் வரங்களால் நிரப்பப்பட்டு, ஆவியானவரால் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தப்பட்டு, கனியுள்ள வாழ்க்கை நடத்தி, கர்த்தருடைய இராஜ்யத்திற்குச் சென்றடைய கர்த்தர்தாமே வழிநடத்துவாராக.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

**Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் விளக்கங்கள் எழுதியுள்ள**
**வாழ்வியல் விளக்க வேதாகமம்**




*வேதத்தின் பேருண்மைகளை அறிந்து கொள்ளவும்*
*தேவன் விரும்புகிறபடி வாழவும்*
*தேவனுக்கு ஊழியம் செய்யவும்*
*வழிகாட்டியாக அமைவது*

# வாழ்வியல் விளக்க வேதாகமம் – 4ஆம் பதிப்பு

**வாழ்வியல் விளக்க வேதாகமத்தின் சிறப்புகள்**

**விளக்கக் கட்டுரைகள்:** 80 இற்கும் மேலான விளக்கக் கட்டுரைகளில் வேதத்தின் எல்லா முக்கிய கருத்துகளும் எளிதில் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளன. 'திரித்துவம்' போன்ற கடினமான தலைப்புகளிலும், வாழ்வியல் சார்ந்த தலைப்புகளிலும், தேவத்துவம், இரட்சிப்பு, திருமுழுக்கு (ஞானஸ்நானம்), ஆவியினால் திருமுழுக்கு (அபிஷேகம்), ஆவியின் வரங்கள், ஆவியின் கனி, நற்செய்திப்பணி போன்ற பல தலைப்புகளிலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன

ஆபிரகாமின் காலத்திலிருந்து இன்றுவரையுள்ள எருசலேமின் வரலாறு, படைப்பின் வரலாறு, ஆதாம்வரை ஆண்டுக் கணக்கு போன்ற வரலாற்றுக் கட்டுரைகளில் பல முக்கிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் வேதாகமத்தின் வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது.

**இணைப்பு:** 'டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கொள்கை தவறானது' என்பதற்கான அறிவியல் (Scientific) ஆதாரங்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன.

**வாழ்க்கை வரலாறு ஆய்வு :** 75 இற்கும் மேலான வேதாகம மனிதர்களின் வாழ்க்கை ஆய்வுக் குறிப்புகளின் தொகுப்புகள் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணைகள்:** வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நகரங்களின் தூரங்களைக் கூறும் அட்டவணைகளும், எபிரெய மாதங்கள், எடைகள், அளவுகள், தீர்க்கதரிசிகளின் காலங்கள் போன்ற பல தலைப்புகளில் அட்டவணைகளும் பட்டியல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

**அறிமுகங்கள்:** வேதத்தின் ஒவ்வொரு நூலுக்கும் பல குறிப்புகளுடன் அறிமுகம் தரப்பட்டுள்ளது. மேலும், வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, ஐந்தாகமங்கள், தீர்க்கதரிசிகளின் நூல்கள், நிருபங்களுக்கான அறிமுகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**விளக்கக் குறிப்புகள்:** இறையியல், வரலாறு, சமூக வாழ்க்கை, விளக்கங்கள் போன்ற வற்றுடன் ஜெபத்திற்கும் தியானத்திற்கும் துதிப்பதற்கும் வாழ்க்கைப் பயனீட்டிற்கும் ஏற்ற குறிப்புகள் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முரண்பாடுகளாகக் கருதப்படும் வசனங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. உன்னதப்பாட்டிற்குச் சிறப்பான அறிமுகம் உள்ளது.

**ஒத்த வாக்கியங்கள், கடினமான சொற்கள்:** ஒவ்வொரு பக்கத்திலும் ஒத்தவாக்கியங்கள், வேதத்தின் இறுதியில் ஒத்தவாக்கிய அகராதி, கடினமான சொற்களுக்குப் பொருள் தரும் பட்டியல் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

**படங்கள்:** ஆங்காங்கே விளக்கப்படங்களும் இறுதியில் பலவண்ண தேசப்படங்களும் தரப்பட்டுள்ளன.

மேலும், **வேதவாசிப்பு திட்டங்கள்**, நற்செய்தி நூல்களின் நிகழ்ச்சிகள் தொகுப்பு போன்ற பல சிறப்பம்சங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

**எல்லா கிறிஸ்தவப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்**

## Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் எழுதியுள்ள பிற நூல்கள்

**வேதத்தைத் தியானிப்பது எப்படி (தமிழ்)**
**HOW TO MEDITATE ON THE BIBLE (English)**

வேதத்தைத் தியானிப்பதற்கான, எளிதில் பின்பற்றக்கூடிய முறைகளும் எடுத்துக்காட்டுகளும் அடங்கிய நூல். பல மொழிகளில் 30,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**நற்செய்திப்பணி செய்வது எப்படி (தமிழ்)**
**HOW TO DO GOSPEL WORK (English)**

நற்செய்திப்பணிக்கு நம்மை உற்சாகப்படுத்தி வழிகாட்டும் சிறந்த நூல். பல மொழிகளில் 25,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**கடவுளைக் காண்பிக்கிறேன் வாருங்கள் (Tamil)**
**COME I'LL HELP YOU SEE GOD (English)**

கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தும் நூல். 65,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி (தமிழ்)**
**How to be prepared for the Lord's coming (English)**

கிறிஸ்துவின் வருகைக்கு கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்தும் நூல். புதிய நூல். விரைவில் வெளிவர இருக்கின்றது.

**ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி (தமிழ்)**
**BAPTISM IN THE SPIRIT, GIFTS AND FRUIT OF THE SPIRIT (English)**

சகோதரர் லயணலுடன் இணைந்து எழுதிய வேத ஆய்வு நூல். மூன்றாம் பதிப்பு.

**இதோ சீக்கிரம் வருகிறார் (தமிழ்)**

கர்த்தரின் வருகையைக்குறித்த உபதேச நூல். மூன்றாம் பதிப்பு

**தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஊழியர் (தமிழ்)**

ஊழியர்களும் சபை மக்களும் அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் அடங்கிய நூல்.

குறிப்பு:

கல்லூரிப் பேராசிரியராகவும் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வ பெற்ற **Dr.** ஆல்ஃப்ரட் தேவதாசன் ஆவிக்குரிய நூல்கள் எழுதும் ஊழியத்தையும் வாலிபர் மத்தியிலும், சபைகளிலும், ஆசிரியர் கூட்டங்களிலும், பொதுவான கூட்டங்களிலும் தேவசெய்தி அளிக்கும் ஊழியத்தையும், மருத்துவமனை ஊழியத்தையும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்குள் நடத்துப் ஊழியத்தையும் செய்வதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்டு வருகிறார். இவரின் ஊழியத்தில் பலர் அபிஷேகம் பெற்றுள்ளனர்.

பொறியாளராகப் பணிபுரியும் சகோ.லயணல் அநேக இடங்களில் வாலிபர் மத்தியிலும், சபைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் வேதத்தைப் போதிப்பதற்கும் எழுப்புதல் கூட்டங்கள் நடத்துவதற்கும் தேவனால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறார். இவர் மூலமாக அநேகர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மிஷனரி ஊழியத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகவும் நிகழ்கிறார்.

பல ஆண்டுகளாகப் பல விதங்களில் இணைந்து செயல்படும் இவர்கள் சேர்ந்து எழுதிய நூல் இது. ஆவியானவரைக்குறித்த பல கேள்விகளுக்கு இந்நூல் விடையளிக்கிறது.

ஆவியானவரைப் பற்றி அநேக உபதேசங்கள் உருவாகியிருக்கின்றன. எது சரியென்று தெரியாமல் குழம்புகிறவர்கள் அநேகர். பல கருத்துகள் இருப்பதால் எதையும் தெரிந்துகொள்ள விரும்பாமல் வெறுத்துத் தள்ளுகிறவர்களும் உண்டு ஆனால் யாவற்றையும் கற்று எது சரியென்று நிதானித்து அறிவது ஒவ்வொருவரின் கடமையாகும். இந்நுலைக் கருத்துடன் படித்து நிதானிக்க நீங்கள் அழைக்கப் படுகிறீர்கள்.

Published by
**WORD OF CHRIST**
#100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys, Chennai

REHOBOTH
BIBLE BOOK CENTRE
350..